பதினொன்றாந் திருமுறை.

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர்.

விலை ரூபாய். 1 4 0.

உ

கணபதி துணை.

திருவாலவாயுடையார் திருமுகப்பாசுரம் முதலிய

பிரபந்தங்கள் அடங்கிய

பதினோந்திருமுறை.

இது

புத்தூர் இராமநாதச்செட்டியார் குமாரர்

வேங்கடாசலச்செட்டியார்

கேட்டுக்கொண்டபடி

நல்லூர்

ஆறுமுகநாவலரவர்கள்

பலபிரதிரூபங்களைக்கொண்டு ஒருவாறுராய்ந்து,

சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத்

தருமபரிபாலகர்

Mudlr. G. சுப்பிரமணியம் J. P. அவர்களால்

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

4-ம் பதிப்பு.

கரஹரு புரட்டாசிமீ.

1951.

விலை ரூபாய் 1—4—0.

சிறப்புப்பாயிரம்.

மதுரைத்திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகளாதீனத்து

வித்துவான் குறுக்கை

குமாரசுவாமிப்பிள்ளை

இயற்றியது.

உலகுதொழு திருமதுரைச் சிவபெருமான் வாக்கா
லுரைத்தருளுந் திருமுகப்பா சுரமுதலாப் பொருந்திக்
குலவுதெருட் பதினொரா நிருமுறையைப் புத்தூர்க்
குணமருவு மிராமநா தச்செட்டி யார்பா
னிலவுசிவ பத்தியொடு தனதெனைத் தோன்றி
நேயநிறை வேங்கடா சலக்குரிசி லச்சி
லலவில்புகழ் மோயியற்றித் தருகவெனச் சோதித்
தாறுமுக நாவலனச் சிற்பதிப்பித் தனனே.

தேவாரத்திற்போலவே பதினொராந்திருமுறைப் பிரபந்தங்களிற் சிலவற்றினும் சில செய்யுள்களும் அடிகளும் சீர்களும் இறந்துபோயின. இறவாதுள்ளவைகளினும் பல மிகப் பிறழ்ந்திருக்கின்றன. பலவிடங்களினின்றும் வருவிக்கப்பட்ட பிரதிரூபங்களெல்லாவற்றினும் இக்குறைவுபாடு ஒத்திருக்கின்றது. ஆதலாற் சிற்றறிவினையுடைய பசுவர்க்கத்துட்பட்ட சிறியேன் சிவாநுபூதிப் பெருவாழ்வுடையோர் திருவாக்கிலே இறந்தவற்றைப் பூர்த்திசெய்தற்கும், பிறழ்ந்தவற்றை வேறு பிரதிரூபங் காணுது திருத்திவிடுதற்கும் அதிகாரியல்லேன்.

சூசிபத்திரம்.

க. திருவாலவாயுடையார்.

பக்கம்.

க. திருமுகப்பாசுரம். க

உ. காரைக்காலம்மையார்.

க. திருவாலங்காட்டுமூத்ததிருப்பதிகம். உ
உ. திருவிரட்டைமணிமாலை. ஈ
ஊ. அற்புதத்திருவந்தாதி. ஊ

ங. ஐயடிகள்காடவர்கோனையனார்.

க. க்ஷேத்திரத்திருவெண்பா. உடு

ச. சேரமான்பெருமாணையனார்.

க. பொன்வண்ணத்தந்தாதி. உக
உ. திருவாரூர்மும்மணிக்கோவை. ஈடு
ஊ. திருக்கைலாயஞானவுலா. டுஊ

ஞ. நக்கீரதேவர்.

க. கைலைபாதிகாளத்திபாதியந்தாதி. எக
உ. திருவீங்கோய்மலையெழுபது. அஎ
ஊ. திருவலஞ்சுழிமும்மணிக்கோவை. கூஈ
ச. திருவெழுகூற்றிருக்கை. கஅஅ
ஞ. பெருந்தேவபாணி. கஅஉ
ட. கோபப்பிரசாதம். கஅஞ
ண. காரெட்டு. கஅக
அ. போற்றித்திருக்கலிவெண்பா. ககஅ

பக்கம்.

க. திருமுருகாற்றுப்படை. ககச
கo. திருக்கண்ணப்பதேவர் திருமறம். கஉள

கூ. கல்லாடனார்.

க. திருக்கண்ணப்பதேவர் திருமறம். ககங

எ. கபிலதேவர்.

க. மூத்தபாயனார் திருவிரட்டைமணிமாலை. கஙச
உ. சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை. கஙஅ
ங. சிவபெருமான் திருவந்தாதி. கசங

அ. பரணதேவர்.

க. சிவபெருமான் திருவந்தாதி. கதிஅ

கூ. இளம்பெருமானடிகள்.

க. சிவபெருமான் திருமும்மணிக்கோவை. களங

கo. அதிராவடிகள்.

க. மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை. கஅo

ககூ. பட்டணத்துப்பிள்ளையார்.

க. கோயிலுன்மணிமாலை. கஅஙி
உ. திருக்கழுமலமும்மணிக்கோவை. உoச
ங. திருவிடைமருதூர்மும்மணிக்கோவை. உகஉ
ச. திருவேகம்பமுடையார் திருவந்தாதி. உஙச
ஞ. திருவொற்றியூரொருபாவொருபது. உசக

கஉ. நம்பியாண்டார்நம்பி.

க. விநாயகர் திருவிரட்டைமணிமாலை. உஞள
உ. கோயிற்றிருப்பண்ணியர்விருத்தம். உகo

		பக்கம்.
க.	திருத்தொண்டர்திருவந்தாதி.	உஎ0
ச.	ஆருடையபிள்ளையார்திருவந்தாதி.	உஅச
ஞ.	,, திருச்சண்பைவிருத்தம்.	கூ0க
ட.	,, திருமும்மணிக்கோவை.	கூ0டு
ண.	,, திருவுலாமாலை.	கூகஞ
த.	,, திருக்கலம்பகம்.	கூஉடு
ந.	,, திருத்தொகை.	கூசூஉ
ப0.	திருநாவுக்கரசுதேவர்திருவேகாதசமாலை.	கூசச

ஆக பிரபந்தங்கள் ப0.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

பதினொன்றாந் திருமுறை.

திருவாலவாயுடையார்

அருளிச்செய்த

திருமூகப்பாசுரம்.

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதியிசை நிலவு பாணிற வரிச்சிற
கன்னம் பயில்பொழி லால வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்ச்
சுரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
றன்போ லென்பா லன்பன் றன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடப் பதுவே.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

காரைக்காலம்மையார்

அருளிச்செய்த

திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம்.

பண் நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

கொங்கைதிரங்கிரம்பெழுந்து குண்டுகண்வெண்பற் குழிவ
யிற்றுப், பங்கிசிவந்திருபற்கணீண்டு பரடுயர்நீள்கணைக்காலோர்
பெண்பேய், தங்கியலறியுலறுகாட்டிற் முழ்சடையெட்டுத்திசை
யும்வீசி, யங்கங்குளிர்ந்தனலாடுமெங்க ளப்பனிடந்திருவாலங்
காடே. (க)

கள்ளிக்கவட்டிடைக்காலைநீட்டிக்கடைக்கொள்ளிவாங்கிமசித்
தூமையை, விள்ளவெழுதிவெடிவெடென்ன நக்குவெருண்டுவி
லங்குபார்த்துத், துள்ளிச்சுடலைச்சுடுபிணத்தீச் சுட்டிடமுற்றுஞ்
சுளிந்துபூழ்தி, யள்ளியவிக்கின்முடுமெங்க ளப்பனிடந்திருவா
லங்காடே. (உ)

வாகைவிரிந்துவெண்ணெற்முலிப்பமயங்கிருள்கூர்நடுநாளை
யாங்கே, கூகையொடாண்டலைபாடவாந்தைகோடதன்மேற்குதித்
தோடவீசி, யீகைபடர்தொடர்கள்ளிநீழலீமமிடுகாட்டகத்தே,
யாகங்குளிர்ந்தனலாடுமெங்க ளப்பனிடந்திருவாலங்காடே. (ங)

குண்டிலோமக்குழிச்சோற்றைவாங்கிக் குறுநரிதின்னவதனை
முன்னே, கண்டிலோமென்றுகனன்றுபேய்கள் கையடித்தோடிடு
காடரங்கா, மண்டலநின்றங்குளாளமிட்டு வாதித்துவீசியெடுத்த
பாத, மண்டமுறநிமிர்ந்தாடுமெங்க ளப்பனிடந்திருவாலங்காடே.

விழுதுநிணத்தைவிழுங்கியிட்டு வெண்டலைமாலைவிரவப்பூட்
டிக், கழுதுதன்பிள்ளையைக்காளியென்று பேரிட்டுச்சீருடைத்தா

வனர்த்துப், புழுதிதுடைத்துமூலைகொடுத்துப் போயினதாயை வரவுகாணு, தழுதுறங்கும்புறங்காட்டிலாடு மப்பனிடந்திருவாலங் காடே. (இ)

பட்டடிநெட்டுகிர்ப்பாறுகாற்பேய்பருந்தொடுகூகைபகண்டை யாந்தை, குட்டியிடமுட்டைகூகைபேய்கள் குறுகாரிசென்றணங் காடுகாட்டிற், பிட்டடித்துப்புறங்காட்டிலிட்டபிணத்தினைப்பேரப் புரட்டியாங்கே, யட்டமேபாயகின்றுடுமெங்களப்பனிடந்திருவா லங்காடே. (ஈ)

சுழலுமழல்விழிக்கொள்ளிவாய்ப்பேய்சூழ்ந்துதுணங்கையிட் டோடியாடித், தழலுளரியும்பிணத்தைவாங்கித் தான்றடிதின் றணங்காடுகாட்டிற், கழலொலியோசைச்சிலம்பொலிப்பக்காலுயர் வட்டணையிட்டுநட்ட, மழலுமிழ்ந்தோரிகதிக்கவாடு மப்பனிடந் திருவாலங்காடே. (எ)

காடுகருந்திரிந்துசென்றுகன்னெறிகாடிநயந்தவரை மூடிமுதுபிணத்திட்டமாடேமுன்னியபேய்க்கணஞ்சூழச்சூழக் காடுங்கடலுமலையுமண்ணும்விண்ணுஞ்சுழலவனல்கையேந்தி யாடுமரவப்புயங்கனெங்களப்பனிடந்திருவாலங்காடே. (அ)

தூத்தங்கைக்கிள்ளைவிளரிதார முழைபிளியோசைபண்கெழு மப்பாடிச், சச்சரிகொக்கரைதக்கையோடு தகுணிதந்துந்துபி தாளம்வீணை, மத்தளங்கரடிகைவன்கைமென்சீரும் றமருகங்குட முழாமொந்தைவாசித், தத்தனவிரவினோடுமெங்களப்பனிடந் திருவாலங்காடே. (கு)

புத்திகலங்கிமதிமயங்கியிறந்தவரைப்புறங்காட்டிலிட்டுச் சுற்றியில்வைத்துக்கடமைசெய்துதக்கவரிட்டசெந்தீவிளக்கா முற்றியமார்முழவினோசைதிசைதுவச்சிலம்பார்க்கவார்க்க வுற்றியின்மாடமாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (கூ)

ஒப்பினையில்லவன்பேய்கள்கூடி யொன்றினையொன் றடித் தொக்கலித்துப், பப்பினையிட்டுப்பகண்டைபாடப் பாடிருந்தங்கரி

யாழமைப்ப, வப்பனையணி திருவாலங்காட்டுளடிகளாச்செடிதலைக்
காரைக்காற்பேய்,செப்பியசெந்தமிழ்பத்தும்வல்லார்சிவகதிசேர்ந்
இன்பமெய்துவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

மூத்ததிருப்பதிகம் பண் இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

எட்டியிலவமீகைகுரைகாரைபடர்ந்தெருஞ்
சுட்டசுடலைசூழ்ந்தகள்ளிசோர்ந்தகுடர்கௌவப்
பட்டபிணங்கள்பரந்தகாட்டிற்பறைபோல்விழிகட்பேய்
கொட்டமுழவங்கூளிபாடக்குழகனூடுமே. (க)

கிணந்தாணுருகிநிலந்தானேப்பநெடும்பற்குழிகட்பேய்
தூணங்கையெறிந்துகூடுநோக்கிச்சுடலைவிழித்தெங்குங்
கணங்கள்கூடிப்பிணங்கண்மாந்திக்களித்தமனத்தவா
பணங்குகாட்டினல்கையேந்தியழகனூடுமே. (உ)

புட்கள்பொதுத்தபுலால்வெண்டலையப்புறமேநரிகவ்வ
வட்கென்றழைப்பவாந்தைவீசவருகேசிறகூகை
புட்கவிழிக்கவூமன்வெருட்டவோரிகதித்தெங்கும்
பிட்கநட்டம்பேணுமிறைவன்பெயரும்பெருங்காடே.. (ங)

செத்தபிணத்தைத்தெளியாதொருபேய்சென்றுவிரல்சுட்டிக்
கத்தியுறுமிக்கனல்விட்டெறிந்துகடக்கப்பாய்ந்துபோய்ப்
பத்தல்வயிற்றைப்பதைக்கமோதிப்பலபேயிரிந்தோடப்
பித்தவேடங்கொண்டுநட்டம்பெருமானூடுமே. (ச)

மூள்ளிநீண்முளரிகருகிமூளைசொரிந்துக்குக்
கள்ளிவற்றிவெள்ளில்பிறங்குகடுவெங்காட்டுள்ளே
புள்ளியுழைமான்றோலொன்றுடுத்துப்புலித்தோல்பியற்கிட்டுப்
பள்ளியிடமுமதுவேயாகப்பரமனூடுமே. (ஞ)

வாலாக்கிளரவ்வாவளையிற்றுவண்ணச்சிறுகூகை
மூலைத்தலையும்பிணமும்விழுங்கிமூலமுதுகாட்டிற்
ருளிப்பனையினிலேபோல்மயிர்க்கட்டழல்வாயழல்கட்பேய்
கூளிக்கணங்கள்குழலோடியம்பக்குழகனுமே. (கூ)

கொந்திக்கிடந்தசடலேதடவிநகரும்புழுக்கின்றிச்
சித்திரிருந்தங்குறங்குஞ்சிறுபேய்சிரமப்படுகாட்டின்
மூந்தியமார்முழவினுசைமுறைமைவழுவாமே
யந்திருத்தமனல்கையேந்தியழகனுமே. (எ)

வேய்களோங்கிவெண்முத்துதிரவெடிகொள்சுடலேயு
னோயுமுருவிலுலறுகூந்தலலறுபகுவாய
பேய்கள்கூடிப்பிணங்கண்மாந்தியணங்கும்பெருங்காட்டின்
மாயனுடமேலயான்மகளுமருண்டுநோக்குமே. (அ)

கடவனுகளுங்கழைசூழ்பொதும்பிற்கழுகும்பேயுமா
யிடுவெண்டலையுமீப்புகையுமெழுந்தபெருங்காட்டிற்
கொடுவெண்மழுவும்பிறையுந்ததும்பக்கொள்ளென்றிசைபாடப்
படுவெண்டியும்பறையுங்கறங்கப்பரமனுமே. (கூ)

குண்டைவயிற்றுக்குறியசிறியநெடியபிறங்கற்பே
யிண்டுபடர்ந்தவிருள்சூழ்மயானத்தெரிவாயெயிற்றுப்பேய்
கொண்டுகுழவிதடவிவெருட்டிக்கொள்ளென்றிசைபாட
மிண்டியிளிர்ந்தசடைகடாழவிமலனுமே. (கஎ)

சூடுமதியுஞ்சடைமேலுடையார்சுழல்வார்திருநட்ட
மாடுமரவமரையிலார்த்தவடிகளருளாலே
காடுமலிந்தகனல்வாயெயிற்றுக்காரைக்காற்பேய்தன்
பாடல்பத்தும்பாடியாடப்பாவநாசமே. (கஅ)

தீருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

காரைக்காலம்மையார்

அருளிச்செய்த

திருவிரட்டைமணிமாலை.

இளர்ந்துந்துவெந்துயர்வந்தடும்போதஞ்சிநெஞ்சமென்பாய்
தளர்ந்திங்கிருத்தறவிர்திகண்டாய்தளராதுவந்தி·
வளர்ந்துந்துகங்கையும்வானத்திடைவளர்கோட்டுவெள்ளா
யிளந்திங்களும்மெருக்கும்மிருக்குஞ்சென்னியீசனுக்கே. (க)

சனவனல்லாதில்லையெனினீனந்து
கூசிமனத்தகத்துக்கொண்டிருந்து—பேசி
மறவாதுவாழ்வாரைமண்ணுலகத்தென்றும்
பிறவாமைக்காக்கும்பிரான். (உ)

பிரானெண்ணுதன்னைப்பன்னுள்பரவித்தொழுவாரிடர்கண்
டிராவனென்னநிற்கின்றவீசன்கண்டீரினவண்டுகிண்டிப் [வ
பொராகின்றகொன்றைப்பொதும்பர்க்கிடந்துபொம்மென்றுரை
யராகின்றிரைக்குஞ்சடைச்செம்பொனீண்முடியந்தணனே. (ங)

அந்தணனேத்தஞ்சமென்றூட்பட்டாராழாமே
வந்தணைந்துகாத்தளிக்கும்வல்லாளன்—கொந்தணைந்த
பொன்கண்டாற்பூணுதேகோணகம்பூண்டானே
யென்கண்டாய்நெஞ்சேயினி. (ச)

இனிவார்சடையினிற்கங்கையென்பாலையங்கத்திருந்த
தனிவாய்மலைமங்கைகாணிலென்செய்திகையிற்சிலையான்
முனியார்திரிபுரமூன்றும்வெந்தன்றுசெந்தீயின்மூழ்கத்
தனிவார்கணையொன்றினுன்மிகக்கோத்தவெஞ்சங்கரனே. (ஞ)

சங்கரனேத்தாழ்ந்தசடையானையச்சடைமேற்
பொங்கரவம்வைத்துகந்தபுண்ணியனே—யங்கொருநா
ளாவாவென்றூழாமைக்காப்பானேயெப்பொழுது
மோவாதுநெஞ்சேயுரை. (ட)

உரைக்கப்படுவதுமொன்றுண்டுகேட்கிற்செவ்வான்றொடைமே[ங்
கிரைக்கின்றபாம்பினையென்றுந்தொடேலிழிக்தோட்டத்தெங்கு
திரைக்கின்றகங்கையுந்தேனின்றகொன்றையுஞ்செஞ்சடைமேல்
விரைக்கின்றவன்னியுஞ்சென்னித்தலைவைத்தவேதியனே. (எ)

வேதியனேவேதப்பொருளானேவேதத்துக்
காதியனேயாதிரைஞன்ஞளானேச்—சோதிப்பான்
வல்லேனமாய்ப்புக்குமாலவனுமாட்டாது
இல்லேனமாவென்றுன்கீழ். (அ)

கீழாயினதுன்பவெள்ளக்கடற்றள்ளியுள்ளுறப்போய்
வீழாதிருந்தின்பம்வேண்டுமென்பீர்விரவார்புரங்கள்
பாழாயிடக்கண்டகண்டனெண்டோளன்பைம்பொற்கழலே
தாழாதிறைஞ்சிப்பணிந்துபன்னுளுந்தலைநின்மினே. (கூ)

தலையாயவைந்தினையுஞ்சாதித்துத்தாழ்ந்து
தலையாயினவுணர்ந்தோர்காண்பர்—தலையாய
வண்டத்தாஞதிரையாஞலாலமுண்டிருண்ட
கண்டத்தான்செம்பொற்கழல். (கo)

கழற்கொண்டசேவடிகாணலுற்றுர்தம்மைப்பேணலுற்றுர்
கிழற்கண்டபோழ்தத்துநில்லாவினைநிகரேதுமின்றித்[தீ
தழற்கொண்டசோதிச்செம்மேனியெம்மானைக்கைம்மாமலர்தூய்
தொழக்கண்டுநிற்கிற்குமோதுன்னிரும்மடந்தொல்வினையே. (கக)

தொல்லைவினைவந்துசூழாமுன்றுழாமே
யொல்லைவணங்கியுமையென்னு—மெல்லியலோர்
கூற்றுனைக்கூற்றுருவங்காய்ந்தானைவாய்ந்திலங்கு
நீற்றுனைநெஞ்சேநினை. (கஉ)

நினையாதொழுதிகண்டாய்நெஞ்சமேயிங்கோர்தஞ்சமென்று
மனையாளையுமக்கடம்மையுந்தேறியோராறுபுக்கு

கனையாச்சடைமூடிநம்பனந்தாதைநொந்தாதசெந்தீ
யனையானமர்பிரானண்டவாணனடித்தலமே. (கக)

அடித்தலத்தினன்றரக்கனைந்தான்குதோளு
முடித்தலமூன்மூரித்தவாறென்—முடித்தலத்தி
லாரூடியாறுவனலாடியவ்வனலி
னீரூடிநெய்யாடினீ. (கச)

நீனின்றுதானவர்மாமதின்மூன்றுநிரந்துடனே
தீனின்றுவேவச்சிலைதொட்டவாறென்றிரங்குவல்வாய்ப்
பேய்நின்றுபாடப்பெருங்காடரங்காப்பெயர்ந்துகட்டம்
போய்நின்றுதந்தொழச்செய்யுமொய்கழற்புண்ணியனே. (கஞ)

புண்ணியங்கள்செய்தனவும்பொய்ந்நெறிக்கட்சாராமே
யெண்ணியோரைந்துமிசைந்தனவாற்—றிண்ணிய
கைம்மாவினீரூரிவைமூவுருவும்போர்த்துகந்த
வம்மானுக்காட்பட்டவன்பு. (கசு)

அன்பாலடைவதெவ்வாறுகொன்மேலதோராடரவந்
தன்பாலொருவரைச்சாரவொட்டாததுவேயுமன்றி
முன்பாயினதலையோடுகள்கோத்தவையார்த்துவெள்ளை
யென்பாயினவுமணிந்தங்கோரேறுகந்தேறுவதே. (கஎ)

ஏறலாலேறுமற்றில்லையேயெம்பெருமா
னூறெலாம்பாயுமலிர்சடையார்—வேலெரூர்
படங்குலவுநாகமுமிழ்பண்டமரர்சூழ்ந்த
தடங்கடனஞ்சுண்டார்தமக்கு. (கஅ)

தமக்கென்றுமின்பணிசெய்திருப்பேமுக்குத்தாமொருநா
ளெமக்கொன்றுசொன்னலருளுங்கொலாமீனையாதுமின்றிச்
சுமக்கின்றபிள்ளைவெள்ளெரூப்பதொன்றுதொண்டைக்கனிவா
யுமைக்கென்றுதேடிப்பெரிதுடனேகொண்டவுத்தமரே. (கக)

உத்தமராய்வாழ்வாருலந்தக்காலுற்றூர்கள்
செத்தமரமடுக்கித்தீயாமு—னுத்தமனுய்
ளோழிருஞ்சுண்டநெய்யாடிதன்றிறமே
கேளாழிநெஞ்சேகிளர்ந்து. (๔๐)

திருச்சிற்றம்பலம்.

காரைக்காலம்மையார்
அருளிச்செய்த

அற்புதத்திருவந்தாதி.

பிறந்துமொழிபயின்றபின்னெல்லாங்காதல்
சிறந்துநின்சேவடியேசேர்ந்தே—னிறந்திகழு
மைஞ்ஞான்றகண்டத்துவானோர்பெருமானே
யெஞ்ஞான்றுதீர்ப்பதிடர். (க)

இடர்களையாரேனுமெமக்கிரங்காரேனும்
படருநெறிபணியாரேனுஞ்—சுடருருவி
லென்பருக்கோலத்தெரியாடுமெம்மானுர்க்
கன்பருதென்னெஞ்சவர்க்கு. (உ)

அவர்க்கேயெழுபிறப்புமாளாவோமென்று
மவர்க்கேநாமன்பாவதல்லாற்—பவர்ச்சடைமேற்
பாகாப்போழ்சூடுமவர்க்கல்லான்மற்றொருவர்க்
காகாப்போம்மெஞ்ஞான்றுமாள். (ங)

ஆளானேமல்லலறியமுறையிட்டாற்
கேளாததென்கொலோகேளாமை—நீளாகஞ்
செம்மையானுகித்திருமிடறுமற்றொன்று
மெம்மையாட்கொண்டவிறை. (ச)

இறைவனேயெவ்வுயிருந்தோற்றுவிப்பான்மூற்றி
யிறைவனேயீண்டிறக்கஞ்செய்வா—னிறைவனே

யெந்தாயெனவீரங்குமெங்கண்மேல்வெந்துயரம்
வந்தாலதுமாற்றுவான்.1 (இ)

வானத்தானென்பாருமென்கமற்றும்பர்கோன்
ரூனத்தானென்பாருந்தாமென்க—ஞானத்தான்
முன்னஞ்சத்தாலிருண்டமொய்டொளிசேர்கண்டத்தா
னென்னெஞ்சத்தானென்பன்யான். (ஈ)

யானேதவமூடையேனென்னெஞ்சேனென்னெஞ்சம்
யானேபிறப்பறுப்பானெண்ணினேன்—யானேயக்
ரைகம்மாவுரிபோர்த்தகண்ணுதலான்வெண்ணீற்ற
வம்மானுக்காளாயினேன். (எ)

ஆயினேனுள்வானுக்கன்றேபெறற்கரிய
ஞயினேனஃதென்றேயாமாறு—ஆய
புனற்கங்கையேற்ரூனேர்பொன்வரையேபோல்வா
னனற்கங்கையேற்ரூனருள். (அ)

அருளேயுலகெலாமாள்விப்பதீச
னருளேபிறப்பறுப்பதானு—லருளாலே
மெய்ப்பொருளேநோக்கும்விதியுடையேனெஞ்ஞான்று
மெப்பொருளுமாவதெனக்கு.2 (கூ)

எனக்கினியவெம்மானீசனேயானென்று
மனக்கினியவைப்பாகவைத்தே—னெனக்கவனைக்
கொண்டேன்பிரானுகக்கொள்வதுமேயின்புற்றே
னுண்டேயெனக்கரியதொன்று. (கூ)

ஒன்றேநினைந்திருந்தேனுன்றேதுணிந்தொழிந்தே
னுன்றேயென்னுள்ளத்தினுள்ளுடைத்தே—னுன்றேகாண்
கங்கையான்றிங்கட்கதிர்முடியான்பொங்கொளிசே
ரங்கையாற்காளாமது. (கூ)

அதுவேபிரானுமாறட்கொள்ளுமாறு
மதுவேயினியறிந்தோமானு—மதுவே
பனிக்கணங்குகண்ணியாரொண்ணுதலின்மேலோர்
தனிக்கணங்குவைத்தார்தகவு. (கஉ)

தகவுடையார்தாழுளரேற்றுரதலஞ்சாரப்
புகவிடுதல்பொல்லாதுகண்டீர்—மிகவடர
ஓர்ந்திடுமாகாகமொருநாண்மலைமகளோச்
சார்ந்திடுமேலேபாவந்தான். (கஊ)

தானேதனிநெஞ்சந்தன்னேயுயக்கொள்வான்
றானேபெருஞ்சேமஞ்செய்யுமாற்—றானேயோர்
பூணுகத்தாற்பொலிந்துபொங்கழல்சேர்ஞ்சுமிழு
நீணுகத்தானேநினைந்து. (கஎ)

நினைந்திருந்துவானவர்கணீண்மலராற்பாதம்
புனைந்துமடிபொருந்தமாட்டார்—நினைந்திருந்து
மின்செய்வான்செஞ்சடையாய்வேதியனேயென்கின்றேற்
கென்செய்வான்கொல்லோவினி. (கஏ)

இனியோகாமுய்ந்தோமிறைவன்றாள்சேர்ந்தோ
மினியோரிடரில்லோநெஞ்சே—யினியோர்
வினைக்கடலேயாக்குவிக்குமீளாப்பிறவிக்
கனைக்கடலேநீந்திலேங்கான். (கஐ)

காண்பார்க்குங்காணலாந்தன்மையனேகைதொழுது
காண்பார்க்குங்காணலாங்காதலாற்—காண்பார்க்குச்
சோதியாய்ச்சிந்தையுளேதோன்றுமேதொல்லுலகுக்
காதியாய்நின்றவரன். (கஐ)

தானென்கோநான்முகனென்கோவரிய
பானென்கோபண்புணரமாட்டேன்—மூரணழியத்
தானவனைப்பாதத்தனிவிரலாற்செற்றானை
டானவனையெம்மானையின்று. (கஅ)

இன்றுமக்கெளிதேமாலுக்குஞான்முகற்கு
மன்றுமளப்பரியனனே—யென்றுமோர்
மூவாமதியானேமூவேழுலகங்க
ளாவானேக்காணுமறிவு. (கக)

அறிவானுந்தானேயறிவிப்பான்றானே
யறிவாயறிகின்றான்றானே—யறிகின்ற
மெய்ப்பொருளுந்தானேவிரிசுடர்ப்பாராகாச
மப்பொருளுந்தானேயவன். (உ0)

அவனேயிருசுடர்தீயாகாசமாவா
னவனேபுவிபுனல்காற்றுவா—னவனே
யியமானனையட்டமூர்த்தியுமாய்ஞான
மயனுகின்றானும்வந்து. (உக)

வந்தினைக்கொள்வதேயொக்குமிவ்வாளரவின்
சிந்தையதுதெரிந்துகாண்மினே—வந்தோ
ரிராநீரிருண்டனேயகண்டத்தீரெங்கள்
பிரானீருஞ்சென்னிப்பிறை. (உஉ)

பிறையும்புனலுமனலரவுஞ்சூடி
மிறைவரெமக்கிரங்காரேனுங்—கறைமிடற்ற
வெந்தையார்க்காட்பட்டேமென்றென்றிருக்குமே
யெந்தையாவுள்ளமிது. (உங)

இதுவன்றேயீசன்றிருவுருவமாமா
றிதுவன்றேயென்றனக்கோர்சேம—மிதுவன்றே
மின்னுஞ்சுடருருவாய்மீண்டாயென்சிந்தினைக்கே
யின்னுஞ்சுழல்கின்றதிங்கு. (உச)

இங்கிருந்துசொல்லுவதெனெம்பெருமானெண்ணுதே
யெங்கும்பலிதிரியுமெத்திறமும்—பொங்கிரவி

லீமவனத்தாடுவதுமென்னுக்கென்றாய்வோர்
காமவனைக்காணலுற்றனன்றா. (உகி)

ஞான்றகுழற்சடைகள்பொன்வரைபோன்மின்னுவன
போன்றகறைமிடற்றுன்பொன்மார்பின்—ஞான்றெங்கு
மிக்கயலேதோன்றவிளங்கிமிளிருமே
யக்கயலேவைத்தவரவு. (உக)

அரவமொன்றுகத்துநீநயந்தபூணேல்
பரவித்தொழுதிரந்தேம்பன்னுண்—மூரணழிய
வொன்னுதாமூவெயிலுமோரம்பாலெய்தானே
பொன்னுரமற்றொன்றுபூண். (உச)

பூணுகவொன்றுபூனந்தொன்றுபொங்கதளி
னுணுகமேன்மிளிரநன்கமைத்துக்—கோணுகம்
பொன்முடிமேற்சூடுவதுமெல்லாம்பொறியிலியேற்
கென்முடிவதாகவிவர். (உசி)

இவரைப்பொருளுணரமாட்டாதாரெல்லா
மிவரையிகழ்வதேகண்டீ—ரிவர்தமது
பூக்கோலமேனிப்பொடிபூசியென்பணிந்த
பேய்க்கோலங்கண்டார்பிறர். (உக)

பிறரறியுலாகாப்பெருமையருந்தாமே
பிறரறியும்பேருணர்வுந்தாமே—பிறருடைய
வென்பேயணிந்திரவிற்றீயாடுமெம்மானூர்
வன்பேயுந்தாமுமகிழ்ந்து. (கூ)

மகிழ்திமடநெஞ்சேமானுடரினீயுந்
திகழ்திபெருஞ்சேமஞ்சேர்ந்தா—யிகழாதே
யாரென்பேயெனுமணிந்துழல்வார்க்காட்பட்ட
பேரன்பேயின்னும்பெருக்கு. (கூக)

பெருகொளியசெஞ்சடைமேற்பிள்ளைப்பிறையி
னொருகதிரேபோன்தொழுகிற்றுக்குங்—தெரியின்
முதற்கண்ணுன்முப்புரங்களன்றெரித்தான்மூவா
முதற்கண்ணுன்றன்மார்பினால். (கூஉ)

நலறிவுபேசிநுழைவிலாதார்திரிக
நீலமணிமிடற்றுனீர்மையே—மேலுலந்த
தெக்கோலத்தெவ்வுருவாயெத்தவங்கள்செய்வார்க்கு
மக்கோலத்தவ்வுருவேயாம். (கூக)

ஆமாறறியாவேவல்வினைகளந்தரத்தே
காமாளென்றேறத்தார்நகர்மூன்றும்—வேமா
றொருகணையாற்செற்றுனையுள்ளத்தாலுள்ளி
யருகணையாதாரையடும். (கூச)

அடுங்கண்டாய்வெண்மதியென்றஞ்சியிருள்போற்
கிடங்கொண்டிருக்கின்றதொக்கும்—படங்கொ
ளணிமிடற்றபேழ்வாயரவசைத்தான்கோல
மணிமிடற்றினுள்ளமறு. (கூஎ)

மறுவுடையகண்டத்தீர்வார்சடைமேனுகத்
தெறுமென்றுதேய்த்துழலுமாவா—வுறுவான்
றளரமீதோடுமேற்றுனதனையஞ்சி
வளருமோபிள்ளைமதி. (கூ)

மதியாவுடலவுணர்மாமதின்மூன்றட்ட
மதியார்வளர்சடையினுனே—மதியாலே
யென்பாக்கையாலிகழாதேத்துவரேலிவ்வுலகி
லென்பாக்கையாய்ப்பிறவாரீண்டு. (கூஏ)

ஈண்டொளிசேர்வானத்தெழுமதியைவாளரவம்
நீண்டச்சிறுகியதேபோலாதே—பூண்டதோர்

தாரேறுபாம்புடையான்மார்பிற்றழைந்திலங்கு
நூரேறுகாரேனக்கொம்பு. (௬அ)

கொம்பினையோர்பாகத்துக்கொண்டகுழகன்ற
னம்பவளமேனியதுமுன்னஞ்—செம்பொ
னணிவரையேபோலும்பொடியணிந்தால்வெள்ளி
மணிவரையேபோலுமறித்து. (௬க)

மறித்துமடநெஞ்சேவாயாலுஞ்சொல்லிக்
குறித்துத்தொழுதொண்டர்பாதங்—குறித்தொருவர்
கொள்ளாததிங்கட்குறுங்கண்ணிகொண்டார்மாட்
கொள்ளத்தார்கூட்டமொருவு. (௭ம)

ஒருபாலுலகளந்தமாலவனுமற்றை
யொருபாலுமையவளாமென்று—மிருபாலு
நின்னுருவமாகநிறந்தெரியமாட்டோமா
னின்னுருவோமின்னுருவோநேர்ந்து. (௭க)

கோர்ந்தரவங்கொள்ளச்சிறுகிற்றீயதனை
மீர்ந்தளவேகொண்டிசையவைத்தாயோ—பேர்ந்து
வளங்குழவித்தாய்வளரமாட்டாதேவென்னே
விளங்குழவித்திங்களிது. (௭உ)

திங்கள்சூடிச்சில்பலிக்கென்றூர்தியே
யெங்கள்பெருமானேயென்றிரந்து—பொங்கொளிய
வானோர்விலக்காரேல்யாம்விலக்கவல்லமே
தானேயறிவான்றனக்கு. (௭ங)

தனக்கேயடியனுய்த்தன்னடைந்துவாழு
மெனக்கேயருளாவாறென்கொன்—மனக்கினிய
சோளன்கங்கைமணவாளன்செம்மேனிப்
பேராளன்வானோர்பிரான். (௭ச)

பிரானவனே நோக்கும்பெருநெறியேபேணிப்
பிரானவன்றன்பேரருளேவேண்டிப்—பிரானவனே
யெங்குற்றானென்பீர்களென்போல்வார்சிந்தையினு
மிங்குற்றான்காண்பார்க்கெளிது. (சுநி)

எளியதிதுவன்றேயழகாள்யாது
மளியீரறிவிலீராவா—வொளிகொண்மிடற்
றெந்தைராப்பூண்முலுமெம்மானுண்ணினைந்த
சிந்தையராய்வாழுந்திறம். (சுசு)

நிறத்தான்மடநெஞ்சேசென்றடைவதல்லாற்
பெறத்தானுமாதியோபேதாய்—நிறத்த
வீருவடிக்கணேழைக்கொருபாகமீந்தான்
றிருவடிக்கட்சேருந்திரு. (சுள)

திருமார்பிலேனச்செழுமருப்பைப்பார்க்கும்
பெருமான்பிறைக்கொழுந்தைநோக்கு—மொருநா
ளிதுமதியென்றொன்றுகவின்றளவுந்தோ
ததுமதியொன்றில்லாவரா. (சுஅ)

அராவிவளைத்தனேயவங்குழவித்திங்கள்
விராவுகதிர்விரியவோடி—விராவுதலாற்
பொன்னூடுவெள்ளிப்புரிபுரிந்தாற்போலாவே
தன்னூடேயொப்பான்சடை. (சுஆ)

சடைமேலக்கொன்றைதருகளிகள்போந்து
புடைமேவித்தாழ்ந்தனவேபோலு—முடிமேல்
வலப்பாலக்கோலமதிவைத்தான்றன்பங்கின்
குலப்பாவைநீலக்குழல். (சுஇ)

குழலார்சிறுபுறத்துக்கோல்வளையைப்பாகத்
தெழிலாகவைத்தேகவேண்டா—கழலார்ப்பப்

பேரிரவிலீமபபெருங்காட்டிற்பேயோடு
மாரழல்வாய்நீயாடுமங்கு. (இக)

அக்கண்முழுமதியஞ்செக்கரகல்வானத்
தெங்குமினிதெழுந்தாலொவ்வாதே—செங்கட்
டிருமாலேப்பங்குடையான்செஞ்சடைமேல்வைத்த
சிரமாலேதோன்றுவதோர்சீர். (இஉ)

சோர்ந்தகொன்றைமலர்தழைப்பச்சேணுலவி
நேர்ந்தபேரியாறூடீத்தமாய்ப்—போரார்ந்த
காண்பாம்புகொண்டசைத்தாடுமீசன்பொன்முடிதான்
காண்பார்க்குச்செவ்வேயோர்கார். (இங)

காருருவக்கண்டத்தெங்கண்ணுதலேயெங்கொளித்தா
யோருருவாய்நின்னெழிலதருவா—னீருருவ
மேகத்தாற்செய்தனையமேனியாளின்னுடைய
பாகத்தான்காணுமேபண்டு. (இச)

பண்டமரராஞ்சப்படுகடலினஞ்சுண்டு
கண்டங்கறுத்ததுவுமன்றியே—யுண்டு
பணிபுரிவார்செஞ்சடைமேற்பான்மதியினுள்ளே
மணிமறுவாய்த்தோன்றுமவ. (இஎ)

வெண்றெனக்கருதிமதித்தியாயிற்
சென்னெண்பொடிநிறத்தாய்சொல்லாய்—படுவெண்
புலோற்றலையினுள்ளுண்புறம்பேசக்கேட்டோ
மலாத்தலையிற்சூடுவாய்நீ. (இசு)

நீலமெல்லாமிரப்பினுன்னுடைய
நீலமொழியச்செல்கண்டாய்—நீல
மடவரலார்வந்துபலியிடாரஞ்சி
விடவரவமேலாடுமிக்கு. (இஏ)

உ

மிக்கமுழங்கெரியும்வீங்கியபொங்கிருளு
மொக்கவுடனிருந்தாலொவ்வாதே—செக்கர்போ
லாகத்தான்செஞ்சடையுமாங்கவன்றன்பொன்னுருவிற்
பாகத்தாள்பூங்குழலும்பண்பு. (இஅ)

பண்புணரமாட்டேனீயேபணித்துக்காண்
கண்புணருநெற்றிக்கறைக்கண்டா—பெண்புணரு
மவ்வுருவோமாலுருவோவானேற்றுயர்தீறணிவ
தெவ்வுருவோநின்னுருவமேல். (இக)

மேலாயமேகங்கள்கூடியோர்பொன்விலங்கல்
போலாமொளிபுதைத்தாலொவ்வாதே—மாலாய
கைம்மாமதக்களிற்றுக்காருரிவைபோர்த்தபோ
தம்மான்றிருமேனியன்று. (கூ0)

அன்றுந்திருவுருவங்காணுதையாட்பட்டே
னின்றுந்திருவுருவங்காண்கிலே—னென்றுந்தா
னெவ்வுருவோனும்பிரானென்பார்கட்கென்னுரைக்கே
னெவ்வுருவோநின்னுருவமேது. (கூக)

எதொக்குமேதொவ்வாதேதாகுமேதாகா
தேதொக்குமென்பதனையாரறிவார்—பூதப்பால்
வில்வேடனாகிவிசயனுடேற்றநாள்
வல்வேடனாவடிவு. (கூஉ)

வடிவுடையசெங்கதிர்க்குமாறுய்ப்பகலே
நெடிதுலவிநின்றெரிக்குங்கொல்லோ—கடியுலவு
சொன்முடிவொன்றில்லாதசோதியாய்சொல்லாயா
னின்முடிமேற்றிங்கணிலா. (கூங)

நிலாவிலங்குவெண்மதியைநேடிக்கொள்வான்போ
லுலாவியுழிதருமாகொல்லோ—நிலாவிருத்த

செக்கரவ்வானமேயொக்குந்திருமுடிக்கே
புக்கரவங்காலேயேபோன்று. (௫௮)

காலேயேபோன்றிலங்குமேனிகடும்பகலின்
வேலேயேபோன்றிலங்கும்வெண்ணீறு—மாலேயின்
றூங்குருவேபோலுஞ்சடைக்கற்றைமற்றவற்கு
வீங்கிருளேபோலுமிடறு. (௫௯)

மிடற்றில்விடமுடையீரும்மிடற்றைநக்கி
மிடற்றில்விடங்கொண்டவாறே—மிடற்றகத்து
மைத்தாமிருள்போலும்வண்ணங்காரிதாலோ
பைத்தாடரும்மார்பிற்பாம்பு. (௬௦)

பாம்புமதியுமடமானும்பாய்புலியுந்
தாம்பயின்றுதாளருவிதூங்குதலா—லாம்பொ
னுருவடிவீலோங்கொலிசேர்கண்ணுதலான்கோலத்
திருவடியின்மேயசிலம்பு. (௬௧)

சிலம்படியாளுடலத்தான்றவிர்ப்பான்வேண்டிச்
சிலம்படிமேற்செவ்வரத்தஞ்சேர்த்தி—நலம்பெற்
றெதிராயசெக்கரினுமிக்கோலஞ்செய்தான்
முதிராமதியான்முடி. (௬௨)

முடிமேற்கொடுமதியான்முக்கணனல்ல
வடிமேற்கொடுமதியோங்கூற்றைப்—படிமேற்
குனியவலமாமடிமைகொண்டாடப்பெற்றோ
மினியவலமுண்டோவெமக்கு. (௬௩)

எமக்கிதுவோபேராசையென்றுந்தவிரா
தெமக்கொருநாள்காட்டுதியோவெந்தா—யமைக்கவே
போற்தெரிபாய்ந்தண்ணபுரிசடையாய்பொங்கிரவி
லேற்தெரிபாய்ந்தாடுமிடம். (௬௪)

இடப்பாலவானத்தெழுமதியைநீயோர்
மடப்பாவைதன்னருகேவைத்தா—லிடப்பாகங்
கொண்டாண்மலைப்பாவைகூறுறுங்கண்டிலங்காண்
கண்டாயேமூக்கண்ணுய்க்கண். (எக)

கண்டெந்தையென்றிறைஞ்சிக்கைப்பணியான்செய்யேனே
லண்டம்பெறினுமதுவேண்டேன்—றுண்டஞ்சேர்
விண்ணுளந்திங்களாய்மிக்குலகமேழினுக்குங்
கண்ணுளாவீதென்கருத்து. (எஉ)

கருத்திலுனீகருதிற்றெல்லாமுடனே
திருத்தலாஞ்சிக்கெனநான்சொன்னேன்—பருத்தரங்க
வெள்ளநீரேற்றுனடிக்கமலநீவிரும்பி
யுள்ளமேயெப்போதுமோது. (எங)

ஓதநெடுங்கடல்களெத்தனையுமுய்த்தட்ட
வேதுநிறைந்தில்லையென்பரார்—பேதையர்க
ளெண்ணுதிடும்பலியாலென்னுநிறைந்தவா
கண்ணுர்கபாலக்கலம். (எச)

கலங்குபுனற்கங்கையூடாலலாலு
மிலங்குமதியியங்கலாலு—நலங்கொள்
பரிசுடையானீண்முடிமேற்பாம்பியங்கலாலும்
விரிசடையாங்காணில்விசும்பு. (எ)

விசும்பில்வியுடையவிண்ணேர்பணிந்து
பசும்பொன்மணிமகுடந்தேய்ப்ப—முசிந்தெங்கு
மெந்தாய்தழும்பேறியேபாவம்போல்லாவா
மந்தாமரைபோலடி. (எசு)

அடிபேரிற்பாதாளம்பேருமடிகண்
முடிபேரின்மாமுகடுபேருங்—கடக

மறிந்தாடுகைபேரில்வான்றிசைகள்பேரு
மறிந்தாடுமாற்றுதரங்கு. (எவ)

அரங்கமாப்பேய்க்காட்டிலாடுவான்வாளா
விரங்குமோவெவ்வுயிர்க்குமேழா—யிரங்குமே
லென்னுகவையான்றுனெவ்வுலகமீந்தளியான்
பன்னுளிரந்தாற்பணிந்து. (எச)

பணிந்தும்படர்சடையான்பாதங்கள்போதா
லணிந்தமணிந்தவரையேத்தத்—துணிந்தென்று
மெந்தையார்க்காட்செய்யப்பெற்றவிதுகொலோ
சிந்தையார்க்குள்ளசெருக்கு. (எக)

செருக்கிஞல்வெற்பெடுத்தவெத்தனேயோதிண்டோ
ளரக்கனேயுமுன்னின்றடர்த்த—திருத்தக்க
மாலயனுங்காணுதாற்றிமகிழ்ந்தேத்தக்
காலனேயும்வென்றுதைத்தகால். (அ0)

காலனேயும்வென்றேங்கநெரகங்கைகழன்றே
மேலையிருவினேயும்வேரறுத்தோங்—கோல
வரணரவிந்தழியவெந்தீயம்பெய்தான்
சரணரவிந்தங்கள்சார்ந்து. (அக)

சார்ந்தார்க்குப்பொற்கொழுந்தேயொத்திலங்கிச்சாராது
பேர்ந்தார்க்குத்தீங்கொடியின்பெற்றியவா—நேர்ந்துணிற்
றுழ்சுடரோன்செங்கதிருஞ்சாயுந்தழல்வண்ணன்
வீழ்சடையேயென்றுரைக்குமின். (அஉ)

மின்போலுஞ்செஞ்சடையான்மாலோடிமீண்டிசைந்தா
லென்போலுங்காண்பார்கட்கென்றிரேற்—றன்போலும்
பொற்குன்றுநீலமணிக்குன்றுந்தாமுடனே
விற்றின்றபோலுதெடிது. (அங)

நெடிதாயபொங்கெரியுந்தண்மதியுநேரே
கடிதாங்கடஞ்சுடரும்போலுங்—கொடிதாக
விண்டார்கண்மும்மதிலும்வெந்தீயினிலழியக்
கண்டாலுமுக்கணுங்கண்.

(அ)

கண்ணுரக்கண்டுமென்கையாரக்கூப்பியு
மெண்ணுரவெண்ணத்தாலெண்ணியும்—விண்ணோர்
னெரியாடியென்றென்றுமின்புறுவன்கொல்லோ
பெரியானைக்காணப்பெறின்.

(ஆ)

பெறினும்பிறியாதும்வேண்டேமதுமக்கே
துறினுமுறுதொழியுமேனஞ்—சிறிதுணர்த்தி
மற்றொருகணைற்றிமேல்வைத்தான்றன்பேயாய
நற்கணத்திலொன்றாயநாம்.

(இ)

நாமாலுசூடியுநம்மீசன்பொன்னடிக்கே
பூமாலைகொண்டுபுனைந்தன்பாய்—நாமோ
நறிவினையேபற்றினலெற்றேதடுமே
யெறிவினையேயென்னுமிருள்.

(ஈ)

இருளினுருவென்கோமாமேகமென்கோ
மருளின்மணிநீலமென்கோ—வருளெமக்கு
கன்றுடையாசெஞ்சடைமேனக்கிலங்குவெண்மதிய
மொன்றுடையாய்கண்டத்தொளி.

(உ)

ஒளிவிலிவன்மகனையொண்பொடியாநோக்கித்
தெளிவுள்ளசிந்தையினிற்சேர்வா—யொளிநஞ்ச
மூண்டவாயுந்திருப்பவன்னுடையகண்டமிருள்
கொண்டவாறென்னிதனைக்கூறு.

(ஊ)

கூறுமக்கிதைத்தாய்குளிர்சடையைமீதழித்திட்
டேறுமிகப்பெருகினென்செய்தி—சீறி

விழித்தாரும்வாளரவும்வெண்மதியுமீர்த்துத்
தெழித்தோங்கங்கைத்திரை. (௪0)

திரைமருவுசெஞ்சடையான்சேவடிக்கேயாளா
யுரைமருவியாமுணர்ந்தோங்கண்டீர்—தெரிவிலே
விம்மைக்குமம்மைக்குமெல்லாமமைந்தோமே
யெம்மைப்புறனுரைப்பதென். (௪௪)

என்னேயுடையானுமேகமாய்நின்றானுந்
தன்னேயறியாததன்மையனும்—பொன்னேச்
சுருளாகச்செய்தனேயதூச்சடையான்வானோர்க்
கருளாகவைத்தவன். (௪௨)

அவன்கண்டாய்வானோர்பிரானுவானென்று
மவன்கண்டாயம்பவளவண்ணன்—னவன்கண்டாய்
மைத்தமர்ந்தகண்டத்தான்மற்றவன்பானன்னெஞ்சே
மெய்த்தமர்ந்தன்பாய்நீவிரும்பு. (௪௩)

விருப்பினுனீபிரியவில்லாயோவேறு
விருப்பிடமற்றில்லேயோவென்னே—பொருப்பன்மகண்
மஞ்சுபோன்மால்விடையாய்நிற்பிரிந்துவேறிருக்க
வஞ்சுமோசொல்லாயவள். (௪௪)

அவளோர்குலமங்கைபாகத்தகலா
ரிவளோர்சலமகளுமீதே—தவளநீ
றென்பணிவீரென்றும்பிரிந்தறியீரீங்கிவரு
ளன்பணியார்சொல்லுமினிங்கார். (௪௫)

ஆர்வல்லார்காணவரனவனேயன்பென்னும்
போர்வையதனுலேபோர்த்தமைத்துச்—சீர்வல்ல
தாயத்தானுமுந்தனிநெஞ்சினுள்ளடைத்து
மாயத்தால்வைத்தோமறைத்து. (௪௬)

மறைத்துலகமேழினி லும்வைத்தாயோவன்றே
லுறைப்போடுமுன்கைக்கொண்டாயோ—நிறைத்திட்
டீளைந்தெழுந்துநீயெரிப்பமூவுலகுமுள்புக்
களைந்தெழுந்தசெந்தீயழல். (கூஎ)

அழலாடவங்கைசிவந்ததோவங்கை
யழகாலழல்சிவந்தவாறோ—கழலாடப்
பேயாடுகாணிற்பிறங்கவனலேந்தித்
தீயாடுவாயிதனைச்செப்பு. (கூஅ)

செப்பேந்திளமுலையாள்காணவோதீப்படுகாட்
டப்பேய்க்கணமவைதாங்காணவோ—செப்பெனக்கொன்
றூகத்தானங்காந்தனலுமிழுமைவாய
காகத்தாயாடுன்னடம். (கூகூ)

நடக்கிற்படிநடுங்குநோக்கிற்றிசைவே
டிடிக்கினுலகனைத்துமேங்கு—மடிக்கற்
பொருமேரூவானேரூபொன்னெப்பாய்நின்னே
றருமேரூவொன்றுவரை. (கஅ0)

உரையினுலிம்மாலையந்தாதிவெண்பாக்
கரைவினுற்காரைக்காற்பேய்சொற்—பரவுவா
ராராதவன்பினுடண்ணலைச்சென்றேத்துவார்
பேராதகாதல்பிறந்து. (கஅ௬)

திருச்சிற்றம்பலம்.

வ

திருச்சிற்றம்பலம்.

ஐயடிகள்காடவர்கோனயனார்

அருளிச்செய்த

கூடித்திரத்திருவெண்பா.

ஓடுகின்றநீர்மையொழிதலுமேயுற்றுருங்
கோடுகின்றூர்மூப்புங்குறுகிற்று—நாடுகின்ற
நல்லச்சிற்றம்பலமேநண்ணுமுனன்னெஞ்சே
தில்லைச்சிற்றம்பலமேசேர். (க)

கடிவடித்தநீர்கொடிவாகாடிதாவென்று
நடைநடித்துநாவடங்காமுன்னம்—பொடியடித்த
பாழ்க்கோட்டஞ்சேராமுன்பன்மாடத்தென்குடந்தைக்
கீழ்க்கோட்டஞ்செப்பிக்கிட. (உ)

குந்திநடந்துகுனிந்தொருகைகோலூன்றி
நொந்திருமியேங்கிநுரைத்தேறி—வந்துந்தி
யையாறுவாயாறுபாயாமுனெஞ்சமே
யையாறுவாயாலழை. (ங)

நாளைவடிவொழிந்துகையுறவோடையுறவாய்
நாளுமணுகிநலியாமுன்—பாலை
யவிழ்கமுகம்பூஞ்சோலையாரூர்காளாய்க்
கவிழ்கமுகங்கூம்புகவென்கை. (ச)

வஞ்சியனறுண்ணிடையார்வாட்டடங்கணீர்சோரக்
குஞ்சிகுறங்கின்மேற்கொண்டிருந்து—கஞ்சி
யருத்தொருத்திகொண்டுவாவென்னுமுனெஞ்சே
திருத்துருத்தியான்பாதஞ்சேர். (ஞ)

காலைக்கையிணழுயாற்கட்டித்தாங்கையார்த்து
மாலைதலைக்கணிந்துமையெழுதி—மேலோர்
பருக்கோடிமூடிப்பலராழாமுன்னந்
திருக்கோடிகாவடைந்தசென்று. (உ)

மாண்டவாயங்காவாமுன்னமடநெஞ்சே
வேண்டவாயாகிவிரைந்தொல்லைப்—பாண்டவாய்த்
தென்னிடைவாய்மேயசிவனார்திருநாம
நின்னிடைவாய்வைத்துநினை. (எ)

தொட்டுத்தடவித்துடிப்பொன்றுங்காணுது
பெட்டப்பிணமென்றுபேரிட்டுக்—கட்டி
யெடுங்களத்தாவென்னமுன்னேனைழமடநெஞ்சே
நெடுங்களத்தான்பாதநினை. (அ)

அழுகுதிரிகுரம்பையாங்கதுவிட்டாவி
யொழுகும்பொழுதறியவொண்ணை—கழுகு
கழித்துண்டலையாமுன்காவிரியின்றென்பாற்
குழித்தண்டலையானைக்கூறு. (ஈ)

படிமுழுதும்வெண்குடைக்கீழ்ப்பாரெலாமாண்ட
முடியரசர்செல்வத்துமும்மை—கடியிலங்கு
தோடேந்துகொன்றையந்தார்ச்சோதிக்குத்தொண்டுபட்
டோடேந்தியுண்பதுறும். (கo)

குழீஇயிருந்தசுற்றங்குணங்கள்பாராட்ட
வழீஇயிருந்தவங்கங்களெல்லாம்—தழீஇயிருந்து
மென்னைனக்காவாவிதுதகாவென்னமுன்
றென்னைனக்காவடைந்சென்று. (கக)

குயிலொத்திருள்குஞ்சிகொக்கொத்திருமல்
பயிலப்புகாமுன்னநெஞ்சே—மயிலத்

திருப்புண்ணியங்கானல்சிந்தியாயாகி
லிருப்பின்னியங்காந்திளைத்து. (கஉ)

காளையர்களீளையர்களாகிக்கருமயிரும்
பூளையெனப்பொங்கிப்பொலிவழிந்து—சூளையர்க
ளோகாளஞ்செய்யாமுனெஞ்சமேயுஞ்சேனை
மாகாளங்கைதொழுதுவாழ்த்து. (கங)

இல்லும்பொருளுமிருந்தமனையளவே
சொல்லுமயலார்துடிப்பளவே—நல்ல
கிளைகுளத்துநீளவேகிற்றியேநெஞ்சே
வளைகுளத்துளீசனேயவாழ்த்து. (கச)

அஞ்சனஞ்சேர்கண்ணரருவருக்குமப்பதமாய்க்
குஞ்சிவெளுத்துடலங்கோடாமுன்—னெஞ்சமே
போய்க்காகூடப்புலம்பாதுபும்புகார்ச்
சாய்க்காடுகைதொழுசீர்ந்து. (கஞ)

இட்டகுடிநீரிருகாழியோருழக்காச்
சட்டவொருமுட்டைநெய்தான்கலந்—தட்ட
வருவாச்சாசென்றங்கழாமுன்னம்பாச்சிற்
றிருவாச்சிராமமேசேர். (கட)

சிழிந்தகுரன்னெற்றுக்கட்டுவிட்டுநாறி
யொழிந்ததுடனீராவண்ண—மழிந்த
திராமலையாகொண்டுபோவென்னைமுன்னெஞ்சே
சிராமலையான்பாதமேசேர். (கஎ)

இழவாடிச்சுற்றத்தாரெல்லாருங்கூடி
விழவாடியாவிவிடாமுன்ன—மழபாடி
யாண்டானையாரமுதையன்றயன்மால்காணுமை
சீண்டானைநெஞ்சேநினை. (கஅ)

உள்ளிடத்தான்வல்லேயெஞ்சமேழ்வினைகள்
கள்ளிடத்தான்வந்துகலவாமுன்—கொள்ளிடத்தின்
றென்றிருவாப்பாடியான்றெய்வமறைநான்கினையுந்
தன்றிருவாய்ப்பாடியான்றாள். (கக)

என்னெஞ்சேயுன்னையிரந்துமுரைக்கின்றேன்
கன்னெஞ்செய்வாயாகிற்காலத்தால்—வன்னெஞ்சேய்
மாகம்பத்தானையுரித்தானைவண்கச்சி
யேகம்பத்தானையிறைஞ்சு. (உ0)

காமூன்றிக்கண்ணிடுங்கிக்கால்குலையமற்றோர்
மாமூன்றிவாய்குதட்டாமுன்னம்—பூமூன்றுந்
தீச்சரத்தாற்செற்றான்றிருப்பனந்தாட்டாடகைய
வீச்சரத்தான்பாதமேயேத்து. (உக)

தஞ்சாகமூவுலகுமாண்டதலையளித்திட்
டெஞ்சாமைபெற்றிடினும்யான்வேண்டே—னஞ்சங்
கரந்துண்டகண்டர்தம்மொற்றியூர்பற்றி
யிரந்துண்டிருக்கப்பெறின். (உஉ)

றூற்றனைத்தோர்பல்லூழிநுண்வயிரவெண்குடைக்கீழ்
வீற்றிருந்தசெல்வம்விளையாதே—கூற்றுதைத்தா
னாடரவங்கச்சாவரைக்கசைத்தவம்மான்றன்
பாடரவங்கேட்டபகல். (உங)

உய்யுமருந்திதனையுண்மினெனவுற்றோர்
கையைப்பிடித்தெதிரேகாட்டியக்காற்—பைய
வெழுந்திருமியான்வேண்டேனென்னுமனெஞ்சே
செழுந்திருமயானமேசேர். (உச)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

சோமான்பெருமாணயனார்

அருளிச்செய்த

பொன்வண்ணத்தந்தாதி.

பொன்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமேனிபொலிந்திலங்கு
மின்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணம்வீழ்சடைவெள்ளிக்குன்றந்
தன்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமால்விடைதன்னைக்கண்ட
வென்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமாகியவீசனுக்கே. (க)

ஈசனைக்காணப்பலிகொடுசெல்லவெற்றேயிவளோர்
பேயனைக்காமுறுபிச்சிகொலாமென்றுபேதையர்முன்
றூயனையீர்ப்பத்தமியேன்றளரவத்தாழ்சடையோன்
வாவெனைப்புல்லவென்றூனிமைவிண்டனவாட்கண்களே. (உ)

கண்களங்கஞ்செய்யக்கைவளைசோரக்கலையுஞ்செல்ல
வொண்களங்கண்ணுதல்வேர்ப்பவொண்கொன்றையந்தாருருவப்
பெண்களங்கம்மிவள்பேதுறுமென்பதோர்பேதைநெஞ்சம்
பண்களங்கம்மிசைபாடின்றூடும்பரமனையே. (ஊ)

பரமனையேபலிதேர்ந்துநஞ்சுண்டதுபன்மலர்சேர்
நிரயனையேசிரங்கொண்டுங்கொடுப்பதுபேரருளாஞ்
சரமனையேயுடம்பட்டமுடம்பொடுமாதிடமாம்
வரமனையேகூடியாகுமுக்கண்ணுடைமாதவனே. (எ)

தவனேயுலகுக்குத்தானேமுதறூன்படைத்தவெல்லாஞ்
சிவனேமுழுதுமென்பார்சிவலோகம்பெறுவர்செய்ய
வனையடல்விடையூர்திகடலிடைநஞ்சமுண்ட
பவனெனச்சொல்லுவாரும்பெறுவரிப்பாரிடமே. (ஏ)

இடமால்வலந்தானிடப்பாறுழாய்வலப்பாலொண்கொன்றை
வடமாலிடந்துகிரூல்வலமாழியிடம்வலமா
னிடமால்கரிதால்வலஞ்சேதிவனுக்கெழினலஞ்சேர்
குடமாலிடம்வலங்கொக்கரையாமெங்கள்கூத்தனுக்கே. (சு)

கூத்துக்கொலாமிவராடித்திரிவதுகோல்வளைகள்
பாத்துக்கொலாம்பலிதேர்வதுமேனிபவளங்கொலா
மேத்துக்கொலாமிவராதரிக்கின்றதிமையவர்த
மோத்துக்கொலாமிவர்கண்டதிண்டைச்சடையுத்தமரே. (எ)

உத்தமராயடியாருலகாளத்தமக்குரிய
மத்தமராமதிமாடம்பதிநலஞ்சீர்மைகுன்று
வெத்தமராயும்பணிகொள்ளவல்லவிறைவர்வந்தென்
சித்தமராயகலாதுடனுடித்திரிதவரே. (அ)

திரிதவர்கண்ணுள்ளுருமுள்ளத்தினுள்ளுந்திரிதரினு
மரிதவர்தன்மையறிவிப்பதாயினுமாழிநஞ்சேய்
கரிதவர்கண்டம்வெளிதவர்சாந்தங்கண்மூன்றொடொன்றும்
பரிதவர்தாமெயருள்செய்துகொள்வர்தம்பல்பணியே. (கூ)

பணிபதம்பாடிசையாடிசையாகப்பனிமலரா
லணிபதங்கன்பற்கொளப்பனெயத்தவற்கேயடிமை
துணிபதங்காமுறுதோலொடுநீறுடலூர்த்துவல்ல
தணிபதங்காட்டிடுஞ்சுலநீயென்றணிநெஞ்சமே. (கo)

நெஞ்சந்தளிர்விடக்கண்ணீர்ததும்பமுகமலர
வஞ்செங்கரதலங்கூம்பவட்டாங்கமடிபணிந்து
தஞ்சொன்மலராலணியவல்லோர்கட்குத்தாழ்சடையான்
வஞ்சங்கடிந்துதிருத்திவைத்தான்பெருவானகமே. (கக)

வானகமாண்டுமந்தாகினியாடிவந்தாவனஞ்சூழ்
தேனகமாமலர்சூடிச்செல்வோருஞ்சிதவல்சுற்றிக்

கானகத்தேயத்திரிந்திரப்போருங்கனகவண்ணப்
பானிறத்தோற்றற்கடியருமல்லாப்படிறருமே. (௫௳)

படிறுயினசொல்லிப்பாழுடலோம்பிப்பலகடைச்சென்
றிடறுதொழிதுமெழுநெஞ்சமேயெரியாடியெம்மான்
கடறுயினஞ்சமுண்டபிரான்கழல்சேர்தல்கண்டா
யுடறுளுளபயனுவசொன்னேனிவ்வுலகினுள்ளே. (௫௴)

உலகாளுறுவீர்தொழுமின்விண்ணுள்வீர்பணிமினித்தம்
பலகாமுறுவீர்நினைமின்பரமனுடொன்றலுற்றீர்
கலகாமலராலருச்சிமினுணரகத்துநிற்கு
மலகாமுறுவீரனடியாரையலமின்களே. (௫௵)

அலையார்புனலணிஞாயிறவனிமதியம்விண்கா
லுலையாவுயிருடம்பாகியசோதியைத்தொக்குமிலு
தலையாற்சுமந்துந்தடித்துங்கொடித்தேரரக்கனென்னே
கலையாலுருவிரற்றுங்கில்லாவிட்டகாரணமே. (௫௶)

காரணன்காமரம்பாடவோர்காமரம்பூறுறத்தன்
சீரணங்காகத்தளர்கின்றதையலைத்தாங்குவர்யார்
போரணிவேற்கண்புனற்படம்போர்த்தனபூஞ்சுணங்கா
சேரணிகொங்கையும்பொற்படமூடியிருந்தனவே. (௫௷)

இருந்தனமெய்தியுநின்றுந்திரிந்துங்கிடந்தலைந்தும்
வருந்தியவாழ்க்கைதவிர்த்திடுபோகநெஞ்சேமடவாள்
பொருந்தியபாகத்துப்புண்ணியன்புண்ணியல்சூலத்தெம்மான்
திருந்தியபோதவன்சீனைகளாயுகந்தீவினையே. (௫௸)

தீவினையேனின்றைவரிராப்பகற்செத்தித்தின்ன
மேவினவாழ்க்கைவெறுத்தேன்வெறுத்துவிட்டேன்வினையு
மோவினதுள்ளந்தெளிந்ததுகள்ளங்கடிந்தடைந்தேன்
பாவீனசெஞ்சடைமுக்கணனுரணன்பாதங்களே. (௫௹)

பாதம்புவனிசுடர்நயனம்பவனம்மூயிர்ப்போங்
கோதமூகிக்கையுயர்வான்முடிவிசும்பேபுடம்பு
வேதமுகந்திசைதோண்மிகுபன்மொழிகீதமென்ன
போதமிவற்கோர்மணிநிறந்தோற்பதுபூங்கொடியே. (ககூ)

கொடிமேலிடபமுங்கோவணக்கீளுமோர்கொக்கிறகு
மடிமேற்கழலுமகலத்தினீறுமைவாயரவு
முடிமேன்மதியுமுருகலர்கொன்றையுமூவிலைய
வடிவேல்வடிவுமென்கண்ணுளைப்போதும்வருகின்றவே. (உ0)

வருகின்றமூப்பொடுதீப்பிணிக்கூற்றம்வைகற்குவைகல்
பொருகின்றபோர்க்கொன்றுமாற்றகில்லேன்பொடிபூசிவந்துன்
னருகொன்றிநிற்கவருளுகண்டாயழல்வாயரவம்
வெருகொன்றவெண்மதிசெஞ்சடைமேல்வைத்தவேதியனே. ()

வேதியன்பாதம்பணிந்தேன்பணிந்துமெய்ஞ்ஞானமென்னுஞ்
சோதியென்பால்கொள்ளவுற்றுநின்றேற்கின்றுதொட்டிதுதா
னீதியென்றுன்செல்வமாவதென்றேன்மேனினைப்புவண்டே
ரோதிகின்போல்வகைத்தேயிருபாலுமொழித்ததுவே. (உஉ)

ஒழித்தேன்பிறவியையூர்ந்தேனுவகையையோங்கிற்றுள்ள
மிழித்தேனுடம்பினையேலேன்பிறரிடையிம்மனையும்
பழித்தேன்பழியேவிளக்கும்பஞ்சேந்தியக்குஞ்சரமும்
தெழித்தேன்சிவனடிசேர்ந்தேனினிமிகத்தெள்ளியனே. (உக)

தெள்ளியமாந்தரைச்சேர்ந்திலன்றீங்கவிபாடலுற்றே
னெள்ளியசொல்லும்பொருளும்பெறேனுரைத்தாருரைத்த
கள்ளியபுக்காற்கவிகளொட்டார்கடனஞ்சயின்றாய்
கொள்ளியவல்லகண்டாய்புன்சொலாயினுங்கொண்டருளே. (உச)

அருளால்வருநஞ்சமுண்டுநின்றாயையமார்குழாம்
பொருளார்கவிசொல்லயானும்புன்சொற்கள்புணர்க்கலுற்றே

னிருளாசறவெழின்மாமதிதோன்றவுமேன்றதென்ன
வெருளாதெதிர்சென்றுமின்மினிதானும்விரிகின்றதே. (உஇ)

விரிகின்றஞாயிறுபோன்றதுமேனியஞ்ஞாயிறுசூழ்ந்
தெரிகின்றவெங்கதிரொத்ததுசெஞ்சடையச்சடைக்கீழ்ச்
சரிகின்றகாரிருள்போன்றதுகண்டமக்காரிருட்கீழ்ப்
புரிகின்றவெண்முகில்போன்றுளதாலெந்தையொண்பொடியே. (ஈ)

பொடிக்கின்றிலமூலபோந்திலபற் சொற்பொருடெரியா
முடிக்கின்றிலகுழலாயினுங்கேண்மின்கண்மூரிவெள்ளங் [ணிந்த
குடிக்கொண்டசெஞ்சடைக்கொண்டலங்கண்டன்மெய்க்கொண்ட
கடிக்கொன்றைதாறுகின்றூளதியேன்பிறர்கட்டுரையே. (உஎ)

உரைவளர்நான்மறையோதியுலகமெலாந்திரியும்
விரைவளர்கொன்றைமருவியமார்பன்விரிசடைமேற்
றிரைவளர்கங்கைநுரைவளர்தீர்த்தஞ்செறியச்செய்த
கரைவளர்வொத்துளதாற்சிரமாலையெங்கண்டனுக்கே. (உஅ)

கண்டங்கரியன்கரியீருரியன்விரிதருசீ
ரண்டங்கடந்தபெருமான்சிறுமான்தரித்தபிரான்
பண்டன்பரமசிவனேரிபிரமன்சிரமரிந்த
புண்டங்கயிலன்பயிலாரமார்பனெம்புண்ணியனே. (உக)

புண்ணியன்புண்ணியல்வேலியன்வேலையஞ்சனங்கக்
கண்ணியன்கண்ணியனெற்றியன்காரணன்காரியங்கும்
விண்ணியன்விண்ணியல்பாணியன்பாணிகொளவுமையாள்
பண்ணியன்பண்ணியல்பாடலனுடல்பசுபதியே. (கூ)

பதியார்பலிக்கென்றுவந்தாரொருவர்க்குப்பாவைகல்லீர்
கதியார்விடையுண்டுகண்மூன்றுளகறைக்கண்டமுண்டு
மதியார்முழுவுண்டுகொக்கரையுண்டிறைகூத்துமுண்டு
பதியார்சடையுளமாலுளதீவதுமங்கையர்க்கே. (கூக)

மங்கைகொங்கைத்தடத்திங்குமக்குங்குமப்பங்கநுங்கி
யங்கமெங்குங்நெகச்சங்கமங்கைத்தலத்துங்கவர்வான்
கங்கைநங்கைத்திரைப்பொங்குசெங்கண்ணரவங்கள்பொங்கிப்
பங்கிதங்கும்மலர்த்திங்கடங்கும்முடிப்பண்டங்களே. (நூஉ)

பண்டங்கன்வந்துபலிதாவென்றுன்பகலோற்கிடென்றே
ணண்டங்கடந்தவனன்னமென்றுனையனூர்தியென்றேன்
கொண்டிங்குனேயம்பெய்யென்றுன்கொடித்தேரநங்கனென்றே
னுண்டிங்கமைந்ததென்றுற்கதுசொல்லவுணர்வுற்றதே. (நூங)

உற்றடியாருலகாளவோரூணுமுறக்குமின்றிப்
பெற்றமதாவதென்றேறும்பிரான்பெருவேனெடுங்கட்
சிற்றடியாய்வெண்பற்செவ்வாயிவள்சிறாமாலேக்கென்று
மிற்றிடையாம்படியாகவென்னுக்குமெலிக்கின்றதே. (நூச)

மெலிக்கின்றவெந்தீவெயில்வாயிழுதழல்வாய்மெழுகு
தலிக்கின்றகாமங்கரதலமெல்லிதுறக்கம்வெங்கூற்
றெலிக்கின்றநீருறுதீயொளியார்முக்கணத்தர்மிக்க
பலிக்கென்றுவந்தார்கடிக்கொன்றைசூடியபல்லியிரே. (நூஙி)

பல்லியிர்பாகமுடறலேதோல்பகலோன்மறல்பெண்
வில்லியோர்வேதியன்வேழநிரையேபறித்துதைத்துப்
புல்லியுஞ்சுட்டுமறுத்துமுரித்துங்கொண்டான்புகழே
சொல்லியும்பாடியுமேத்தக்கெடுநங்கள்சூழ்துயரே. (நூசு)

துயருந்தொழுமழுஞ்சோருந்துகிலுங்கலையுஞ்செல்லப்
பெயரும்பிதற்றுநகும்வெய்துயிர்க்கும்பெரும்பிணிகூர்ந்
தயருமமர்விக்குழுரிநிமிர்க்குமந்தோவிங்ஙனே
மயருமறைக்காட்டிறைக்காட்டகப்பட்டவாணுதலே. (நூஎ)

வாணுதற்கெண்ணநன்றன்றுவளர்சடையெந்தைவந்தா
ணணுதற்கெண்ணுள்பலிகொடுசென்றுநகுநயந்து

பேணுதற்கெண்ணும்பிரமன்றிருமாலவர்க்கரிய
தாணுவுக்கென்னேவிராப்பகனேந்திவடாழ்கின்றதே. (ஈஅ)

தாழுஞ்சடைசடைமேலதுகங்கையக்கங்கைகங்கை
வாழுஞ்சடைசடைமேலதுதிங்களத்திங்கட்பிள்ளை
போழுஞ்சடைசடைமேலதுபொங்கரவவ்வரவம்
வாழுஞ்சடைசடைமேலதுகொன்றையெம்மாமுனிக்கே. (ஈஆ)

முனியேமுருகலர்கொன்றையினுயென்னேமுப்பொழித்த
கனியேகழலடியல்லாற்களேகண்மற்றொன்றுமிலே
னினியேலிருந்தவஞ்செய்யேன்றிருந்தவஞ்சேர்னேந்து
தனியேன்படுகின்றசங்கடமார்க்கினிச்சாற்றுவனே. (ஈ0)

சாற்றுவன்கோயிற்றலையுமனமுந்தவமிவற்று
லாற்றுவனன்பெனுநெய்சொரிந்தாற்றியஞ்சொன்மலரா
லேற்றுவனீசன்வந்தென்மனத்தானென்றெழுந்தலரே
தூற்றுவன்றோத்திரமாயினவேயினிச்சொல்லுவனே. (ஈக)

சொல்லாதனகொழுநாவல்லசோதியுட்சோதிதன்பேர்
சொல்லாச்செவிமரந்தேறித்தொழாதகைமண்டினிந்த
கல்லாநினேயாமனம்வணங்காத்தலையும்பொறையா
மல்லாவவயவந்தானுமனிதர்க்கசேதனமே. (ஈஉ)

தனக்குன்றமாவையஞ்சங்கரன்றன்னருளன்றிப்பெற்றான்
மன்க்கென்றுநஞ்சிற்கடையாநினேவன்மதுவிரியும்
புனக்கொன்றையானருளாற்புழுவாகிப்பிறந்திடினு
மெனக்கென்றும்வானவர்பொன்னுலகோடொக்கவெண்ணுவனே

எண்ணமிறையேபிழைக்குங்கொலாமிமையோரிறைஞ்சுந்
தண்ணம்பிறைச்சடைச்சங்கரன்சங்கக்குழையன்வந்தெ
னுண்ணன்குறைவதறிந்துமொளிமாநிறங்கவர்வான்
கண்ணுமுறங்காதிராப்பகலெய்கின்றகாமனுக்கே. (ஈஈ)

காமனை முன்செற்றதென் மூளவளிவள் காலனென்னும்
தாமநன் மார்பனை முன்செற்றதென் முதன்கையெறிந்தா
ணைமுனஞ்செற்றதன் முரையென்றேற்கிருவர்க்குமஞ்சி
யாமெனக்கிற்றிலரன்றெனக்கிற்றிலரந்தணரே. (கூடு)

அந்தணராமிவராரூருறைவதென்றேனதுவே
சந்தனைதாளியென்னூர்தலையாயசலவரென்றேன்
பந்தணைகையாயதுவுமுண்டென்னுருமையறியக்
கொந்தணைதாரிருசைமினென்றேன்றுடிகொட்டினரே. (கூசு)

கொட்டுஞ்சிலபலசூழகின்னூர்க்குங்குப்புற்றெழுந்து
கட்டமறியுங்கிரீடிக்கும்பாடுகும்வெருட்டும்
வட்டம்வருமருஞ்சாரணைசெல்லுமலர்தயங்கும்
புட்டங்கிரும்பொழில்சூழ்மறைக்காட்டரன்பூதங்களே. (கூஎ)

பூதப்படையுடைப்புண்ணியரேபுறஞ்சொற்கணும்மே
லேதப்படவெழுகின்றனவாலிஃதாளொடும்மைக்
காதற்படுப்பான்கணைதொட்டகாமனைக்கண்மலராற்
சேதப்படுத்திட்டகாரணநீரிறைசெப்புமினே. (கூஅ)

செப்பனகொங்கைக்குத்தேமலர்க்கொன்றைநிறம்பணித்தான்
மைப்புரைகண்ணுக்குவார்புனற்கங்கைவைத்தான்மனத்துக்
கொப்பனவில்லாவொளிகிளருன்மத்தமுமமைத்தா
னப்பனையம்மனீயென்பெரூதூங்கின்னூர்க்கின்றதே. (கூக)

ஆர்க்கின்றநீருமனலுமதியுமைவாயரவு
மோர்க்கின்றயோகுமுமையுமுருவமருவும்வென்றி
பார்க்கின்றவேங்கையுமானும்பகலுமிரவுமெல்லாங்
கார்க்கொன்றைமாலையினர்க்குடனாகிக்கலந்தனவே. (கூ0)

கலந்தனக்கென்பலர்கட்டவிழ்வார்கொன்றைகட்டவார்
சலந்தனக்கண்ணியகானகமாடியார்சாணகமூ

நிலந்தனக்கில்லாவகதியளுகியநீலகண்டத்
தலந்தலைக்கென்னேயலந்தலையாகியழிகின்றதே. (இக)

அழிகின்றதாருயிராகின்றதாகுலமேறிடுமா
லிழிகின்றசங்கமிருந்தமுலைமேற்கிடந்தனபீர்
பொழிகின்றகண்ணீர்புலர்ந்ததுவாய்கலேபோனவந்தார்
மொழிகின்றதென்னினிதான்மறைமுக்கண்முறைவனுக்கே. (இஉ)

முறைவனை மூப்புக்குநான்மறைக்கும்முதலேழ்கடலந்
துறைவனைச்சூழ்கயிலாயச்சிலம்பனைத்தொன்மைகுன்ரு
விறைவனையெண்குணத்தீசனையேத்தினர்சித்தந்தம்பா
லுறைவனைப்பாம்பனையாம்பின்னையென்சொல்லியோதுவதே. ()

ஓதவனமுரையவன்பல்குணமுன்னேவிட்டேன்
போதவன்பின்னேபொருந்தவன்வாழ்க்கைதிருந்தச்சென்று
மாதவமாகிமாதவமாவளர்புன்சடையான்
யாதவன்சொன்னனதுகொண்டொழியினியாரணங்கே. (இசு)

ஆரணங்கின்முகமைங்கணையானகமவ்வகத்திற்
ரேரணந்தோளவன்றேரகலல்குரேன்மைக்கண்வந்த
பூரணகும்பமுலையிவைகாணப்புரிசடையெங்
காரணன்ரூடொழுமன்போபகையோகருதியதே. (இடு)

கருதியதொன்றில்லையாயினுங்கேண்மின்கள்காரிகையா
ளோருதினமும்முளளாகவொட்டாதொடுங்காரொடுங்கப்
பொருதகண்மால்விடைப்புண்ணியன்பொங்கிளங்கொன்றையின்
தருதிர்நன்ரூயிடுந்தாராவிடிற்கொல்லுந்தாழிருளே. [னே

இருளார்மிடற்ரூலிராப்பகறன்னல்வரைமறையாற்
பொருளார்கமழ்கொன்றையான்முல்லேபுற்றரவாடுதலாற்
றெருளார்மதிவிசும்பாற்பௌவந்தெண்புனரூங்குதலா
லருளாற்பலபலவண்ணமுமாலாஞயினனே. (இஎ)

ஆயினவந்தணர்வாய்மையரைக்கலைகவளாகள்
போயினவாணிகர்கண்ணுறுமைந்நீர்முலையிடையே
பாயினவேள்கைக்கரபத்திரத்துக்குச்சுத்திரம்போ
லாயினபல்சடையார்க்கன்புபட்டவெம்மாயிழைக்கே. (கிஅ)

இழையார்வனமுலைவீங்கியிடையிறுகின்றதிற்றுற்
பிழையாணமக்கிவைகட்டுண்கவென்பதுபேச்சுக்கொலாங்
கழையார்கழுக்குன்றவாணனைக்கண்டனைக்காதலித்தாள்
குழையார்செவியொடுகோலக்கயற்கண்கள்கூடியதே. (கிகூ)

கூடியதன்னிடத்தானுமையாளிடத்தானையையா
றீடியபல்சடைமேற்றெரிவண்ணமெனப்பணிமின்
பாடியநான்மறைபாய்ந்ததுகூற்றைப்படர்புரஞ்சுட்
டாடியநீறுசெஞ்சாந்திவையாமெம்மையனெனவே. (கூ0)

அயமேபலியிங்குமாடுளதாணுவோர்குக்கிக்கிடப்
பயமேமொழியும்பசுபதியேறெம்மைப்பாய்ந்திடுமாற்
புயமேய்குழலியர்புண்ணியர்போமினிரத்தல்பொல்லா
நயமேமொழியினுநக்காமமாவும்மைநாணுதுமே. (கூக)

நாணுநடக்கநலத்தார்க்கிடையில்லைநாமெழுக
வேணுரிருந்தமிழான்மறவேனுன்னினைமினென்றும்
பூணுர்முலையீர்நிருத்தன்புரிசடையெந்தைவந்தாற்
காணுவிடேன்கண்டிரவாதொழியேன்கடிமலரே. (கூஉ)

கடிமலர்க்கொன்றைதரினும்புல்லேன்கலைசாரவொட்டேன்
மூடிமலர்தீண்டின்முனிவன்முலைதொடுமேற்கெடுவ
னடிமலர்வானவரேத்தநின்றுய்க்கழகல்லவென்பன்
றொடிமலர்த்தோடொடுமேற்றிருவாணைதொடங்குவனே. (கூங)

தொடங்கியவாழ்க்கையைவாளாதுறப்பர்துறந்தவரே
யடங்கியவேட்கையரன்பாலிலராறுகாற்பறவை

மூடங்கியசெஞ்சடைமுக்கணனர்க்கன்றியிங்குமன்றிக்
கிடங்கினிற்பட்டகராவனையார்பலகேவலரே. (கூ)

வலந்தான்கழலிடம்பாடகம்பாம்புவலமிடமே
கலந்தான்வலநீறிடஞ்சாந்தெரிவலம்பந்திடமென்
பலந்தார்வலமிடமாடகம்வேல்வலமாழியிடஞ்
சலந்தாழ்சடைவலந்தண்ணங்குழலிடஞ்சங்கரற்கே. (கூ)

சங்கரன்சங்கக்குழையன்சரணரவிந்தன்னை
யங்கரங்கூப்பித்தொழுதாட்படுமின்மூண்டீர்நமனூர்
இங்கரர்தாஞ்செய்யுங்கீழாயினமிறைகேட்டலுமே
யிங்கரமாயிரமீரவென்னெஞ்சமெரிகின்றதே. (கூ)

எரிகின்றதீயொத்துளசடையீசற்கத்தீக்கிமையோர்
சொரிகின்றபாற்கடல்போன்றதுசூழ்புனலப்புனலிற்
சரிகின்றதிங்களோர்தோணியொக்கின்றதத்தோணியுய்ப்பான்
றெரிகின்றதிண்கழைபோன்றுளதாலத்திறலாவே. (கூ)

அரவமுயிர்ப்பவழலுமங்கங்கைவளாய்க்குளிருங்
குரவங்குழலுமையூடற்குரைத்துருகும்மடைந்தோர்
பரவும்புகழண்ணலீண்டலும்பார்வானவைவிளக்கும்
விரவுமிடரின்பமெம்மிறைசூடியவெண்பிறையே. (கூ)

பிறைத்துண்டஞ்சூடலுற்றீரபிச்சைகொண்டனலாடலுற்றீர
மறைக்கண்டம்பாடலுற்றீரவென்புநீறுமருவலுற்றீர
கறைக்கண்டம்புல்லலுற்றீரகடவாயரவாடலுற்றீர
குறைக்கொண்டிவளரன்பின்செல்வதென்னுக்குக்கூறுமினே. ()

கூறுமினீசனைச்செய்ம்மின்குற்றேவல்குளிர்மின்கண்க
ளேறுமின்சித்தந்தெளிமின்சிவனைச்செறுமின்செற்ற
மாறுமின்வேட்கையறுமினவலமிவைநெறியா
வேறுமின்வானத்திருமின்விருந்தாயிமையவர்க்கே. (எ)

இமையோர்கொணர்ந்திங்கிழித்திடநீர்மைகெட்டேந்தல்பின்போ
யமையாதெறிச்சென்றேராழ்ந்தசலமகளாயணைந்தே
யெமையாளுடையான்றலைமகளுவங்கிருப்பவென்னே
யுமையாளவள்கீழுறைவிடம்பெற்றேவுறைகின்றதே. (எக)

உறைகின்றனரைவரொன்பதுவாயிலோர்மூன்றுளதான்
மறைகின்றவென்புநரம்போடிறைச்சியுதிரமச்சை
பறைகின்றதோல்போர்சுரம்பையபயனில்லைபோயடைமி
னறைகின்றதெண்புனல்செஞ்சடைக்கொண்டோன்மலரடிக்கே. (

அடிக்கண்ணிணைதொழுதார்க்கன்ஞாலங்கொடுத்தடிநாய்
வடிக்கண்ணிநின்னேத்தொழவேகொண்டனைவண்டிண்கொன்
கடிக்கண்ணியாயெமக்கோரிரண்டகங்காட்டினையாற் [றைக்
கொடிக்கண்ணிமேனல்லகொல்லேறுயர்த்தகுணக்குன்றமே. ()

குன்றெடுத்தான்செவிகண்வாய்சிரங்கணெரிந்தலற
வன்றடர்த்தற்றுகச்செற்றவனற்றவர்க்கற்றசிவன்
மன்றிடைத்தோன்றியநெல்லிக்கனிநிற்பமானுடர்பொய்
யொன்றெடுத்தோதிப்புகுவர்நரகத்துறுகுழியே. (எச)

குழிகட்கொடுநடைக்கூன்பற்கவட்டடிநெட்டிடையூ
னுழுவைத்தழைசெவித்தோன்முலைச்சூறைமயிர்ப்பகுவாய்த்
தெழிகட்டிரைகுரற்றேம்பல்வயிற்றுத்திரக்குவிரற்
கழுதுக்குறைவிடம்போல்கண்டலுடுங்கடியரங்கே. (எடு)

அரங்காமணியன்றிறென்றலோர்கூற்றமதியமந்தீச்
சரங்காமனெய்யஞ்சுசந்துட்பகையாலிவடளர்ந்தா
னிரங்காமனத்தவரில்லையிரங்கானிமையவர்தஞ்
சிரங்காமுறுவானெலும்புகொள்வானென்றன்றேமொழிக்கே. ()

மொழியக்கண்டான்பழிமூளக்கண்டான்பிணிமுன்கைச்சங்க
மழியக்கண்டானன்றிலீரக்கண்டான்றென்றலென்னுயிர்மேற்

கழியக்கண்டான்றுயர்கூரக்கண்டான்றுகில்சூழ்கலையுங்
கழியக்கண்டான்றில்லைக்கண்ணுதலான்கண்டகள்ளங்களே.(எஎ)

கள்ளவளாகங்கடிந்தடிமைப்படக்கற்றவர்த
முள்ளவளாகத்துறுகின்றவுத்தமனீண்முடிமேல்
வெள்ளவளாகத்துவெண்ணுரைசூடியன்பிறையைக்
கொள்ளவளாய்கின்றபாம்பொன்றுளதுகுறிக்கொண்மினே. ()

குறிக்கொண்டிவள்பெய்தகோல்வளையேவந்துகோளிழைத்தீர்
வெறிக்கொண்டவெள்ளிலம்போதாவெலும்போவிரிசடைமே
லுறைக்கொன்றையோவுடைத்தோலோ பொடியோவுடைகலலே
சறைக்கண்டரேறுமக்கென்னேசிறுமிகடவியதே. (எக)

கடவியதொன்றில்லையாயினுங்கேண்மின்கள்காரிகையாண்
மடவியவாறுகண்டாம்பிறைவார்சடையெந்தைவந்தாற்
றிடவியநெஞ்சமிடங்கொடுத்தாட்கவலங்கொடுத்தான்
றடவியகொம்பதன்றுண்மேலிருந்துதறிக்குறுமே. (அ0)

சறித்தாயயன்றலைசாய்த்தாய்சலந்தரனேத்தழலாப்
பொறித்தாயநங்கனேச்சுட்டாய்புரம்புனலுஞ்சடைமேற்
செறித்தாய்க்கிவைபுகழாகின்றகண்டிவள்சில்வளையும்
பறித்தாய்க்கிதுபழியாகுங்கொலாமென்றுபாவிப்பனே. (அக)

பாவிக்கும்பண்டையளல்லள்பரிசறியாள்சிறுமி
யாவிக்குங்குற்குலுநாறுமகநெகவங்கமெங்குங்
காவிக்கண்சோறும்பொச்சாப்புங்கறைமிடற்றூனேக்கண்ணிற்
றூவிக்கும்வெண்ணகையாளம்மெல்லோதிக்குச்சந்தித்தவே. ()

சந்தித்தகூற்றுக்குக்கூற்றும்பிணிக்குத்தனிமருந்தாஞ்
சிந்திக்கிற்சிந்தாமணியாகித்தித்திக்குமுதுமுமாம்
வந்திக்கில்வந்தென்னேமால்செய்யும்வானோர்வணங்கநின்ற
வந்திக்கண்ணுடியினடியார்களுக்காவனவே. (அசு)

ஆவனயாரேயழிக்கவல்லாரமையாவுலகிற்
போவனயாரேபொதியகிற்பார்புரமூன்றெரித்த
தேவனேத்தில்லைச்சிவனேத்திருந்தடிகைதொழுது
தீவினேயெனிழந்தேன்கலேயோடுசெறிவளேயே. (அச)

செறிவளேயாய்நீவிரையல்குலநலங்கல்விமெய்யா
மிறையவன்ரூமரைச்சேவடிப்போதென்றெல்லோருமேத்து
நிறையுடைநெஞ்சிதுவேண்டிற்றுவேண்டியநீசர்தம்பாற்
கறைவளர்கண்டனேக்காணப்பெரிதுங்கலங்கியதே. (அஞ)

கலங்கினமால்கடல்வீழ்ந்தனகார்வரையாழ்ந்தனமண்
மலங்கினநாகமருண்டனபல்கணம்வானங்கைபோ
யிலங்கினமின்னெடுநீண்டசடையிமையோர்வியந்தா
ரலங்கனன்மாநடமார்க்கினியாடுவதெம்மிறையே. (அசு)

எம்மிறைவன்னிமையோர்தலேவன்னுமையாள்கணவன்
மும்முறையாலும்வணங்கப்படுகின்றமுக்கணக்கற்
கெம்முறையாளிவளென்பிழைத்தாட்கிறையென்பிழைத்தா
னிம்முறையாலேகவரக்கருதிற்றிழிற்கலேயே. (அஎ)

கலேதலேசூலமழுக்கனல்கண்டைகட்டங்கங்கொடி
சிலேயிவையேந்தியவெண்டோட்சிவற்குமனஞ்சொற்செய்கை
நிலேபிழையாதுகுற்றேவல்செய்தார்நின்றமேருவென்னு
மலேபிழையாரென்பரால்றிந்தோர்களிம்மானிலத்தே. (அஅ)

மானிலத்தோர்கட்குத்தேவரானயவத்தேவரெல்லா
மானலத்தாற்ரூழுமஞ்சடையீசனவன்பெருமை
தேனலர்த்தாமரையோன்றிருமாலவர்தேர்ந்துணராற்
பானலத்தாற்கவியாமெங்ஙனேயினிப்பாடுவதே. (அக)

பாடியவண்டுறைகொன்றையிஞ்ஞன்படப்பாம்புயிர்ப்ப
வோடியதீயாலுருகியதிங்களிஞாறலொத்த

தாடியநீறதுகங்கையுந்தெண்ணீர்யமுனையுமே
கூடியகோப்பொத்தாலுமைபாகமெங்கொற்றவற்கே. (கூ0)

கொற்றவனேயென்றுங்கோவணத்தாயென்றுமாவணத்தா
னற்றவனேயென்றுநஞ்சுண்டியேயென்றுமஞ்சமைக்கப்
பெற்றவனேயென்றும்பிஞ்ஞகனேயென்றுமன்மதனைச்
செற்றவனேயென்றுநாளும்பாவுமென்சிந்தனையே. (கூக)

சிந்தனைசெய்மனமமைத்தேன்செப்பநாவமைத்தேன்
வந்தனைசெய்யத்தலையமைத்தேன்கைதொழவமைத்தேன்
பந்தனைசெய்வதற்கன்பமைத்தேன்மெய்யரும்பவைத்தேன்
வெந்தவெண்ணீறணியீசற்கிவையான்விதித்தனவே. (கூஉ)

விதித்தனவாழ்நாள்பெரும்பிணிவிச்சைகள்கொண்டுபண்டே
கொதிப்பினிலொன்றுங்குறைவில்லுங்குமக்குன்றனைய
பதித்தனங்கண்டனங்குன்றம்வெண்சந்தனம்பட்டனைய
மதித்தனங்கண்டனகெஞ்சினியென்செய்யும்வஞ்சனையே. (கூங)

வஞ்சனையாலேவரிவளைகொண்டுள்ளமால்பனிப்பத்
தஞ்சம்பொழுதுமுறத்தொழுதேன்சொரிமாலருவி
யஞ்சனமால்வரைவெண்பிறைகவ்வியண்ணந்தனைய
வெஞ்சினவானையினீருரிமூடியவீரனையே. (கூச)

வீரனையரிவெற்பலர்நீரெரிபொன்னெழிலார்
காசொண்கடுக்கைகமலந்துழாய்விடைதோல்பறவை
பேரொண்பதிநிறந்தாரிவரூர்திவெவ்வேறென்பரால்
யாருமறியாவகையெங்களீசர்பரிசுகளே. (கூடு)

பரியாதனவந்தபாவமும்பற்றுமற்றும்பணிந்தார்க்
குரியானெனச்சொல்லியுன்னுடனுவனெனவடியார்க்
கரியானிவனென்றுகாட்டுவனென்றென்றிவையிவையே
பிரியாதுறையுஞ்சடையானடிக்கென்றும்பேசுதுமே. (கூசு)

பேசவதெல்லாமான்றிருநாமமப்பேதைநல்லாள்
காய்சினவேட்கையரன்பாலதுவறுகாற்பறவை
மூசினகொன்றைமுடிமேலதுமூலமேன்முயங்கப்
பூசினசாந்தந்தொழுமாலிவையொன்றும்பொய்யலவே. (கூஎ)

பொய்யாநரகம்புகினுந்துறக்கினும்போந்துபுக்கிங்
குய்யாவுடம்பிலெரிவாடப்பறப்பவென்று
கையாவிளியினுநானிலமாளினுநான்மறைசேர்
மையார்மிடற்றனடிமறவாவரம்வேண்டுவனே. (கூஅ)

வேண்டியநாள்களிற்பாதியுங்கங்குன்மிகவவற்று
ணீண்டியவெங்நோய்முதலதுபிள்ளைமைமேலதுமூப்
பாண்டினவச்சம்வெகுளியவாவழுக்காறிங்நனே
மாண்டனசேர்தும்வளர்புன்சடைமுக்கண்மாயனையே. (கூக)

மாயணன்மாமணிகண்டன்வளர்சடையாற்கடிமை
யாயினதொண்டர்துறக்கம்பெறுவதுசொல்லுடைத்தே
காய்சினவானவளருங்கனகமலையருகே
போயினகாக்கையுமன்றேபடைத்ததுபொன்வண்ணமே. (கஅ0)

ஆக்கியோன்பெயர்.

அன்றுவெள்ளானையின்மீதிமையோர்சுற்றணுகுறச்செல்
வன்றெருண்டார்பின்பரிமேற்கொண்டுவெள்ளிமலையரன்முன்
சென்றெழிலாதியுலாவரங்கேற்றியசேரர்பிரான்
மன்றிடையோதுபொன்வண்ணத்தந்தாதிவழங்கிதுவே.

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

சேரமான்பெருமாணயனார்

அருளிச்செய்த

திருவாரூர்மும்மணிக்கோவை.

அகவல்.

விரிகடல்பருகியளறுபட்டன்ன
கருநிறமேகங்கன்முகடேறி
நுண்டுளிபொழியநோக்கியொண்டொடி
பொலங்குழைமின்னப்புருவவில்லிட்
டிலங்கெழிற்செவ்வாய்கோபமூர்தரக்
கைத்தலமென்னுங்காந்தண்மலர
முத்திலங்கெயிறெனுமுல்லையரும்பக்
குழலுஞ்சுணங்குங்கொன்றைகாட்ட
வெழிலுடைச்சாயலிளமயில்படைப்ப
வுண்ணிறையுயிர்ப்பெனுமூதையூர்தரக்
கண்ணீர்ப்பெருமழைபொழிதலிஞெண்ணிறத்
தஞ்சனக்கொழுஞ்சேறலம்பியெஞ்சா
மணியும்பொன்னுமாசறுவயிரமு
மணிகிளரகிலுமாரமுமூரிஞ்சிக்
கொங்கையென்னுங்குவட்டிடையிழிதரப்
பொங்குபுயல்காட்டியோளேகங்கை
வருவிசைதவிர்த்தவார்சடைக்கடவு
ளசீவைபாகத்தண்ணலாரூ
ரெல்லையிலிரும்பலிசொரியுங்
கல்லோசென்றகாதலர்மனமே.

வெண்பா.

மனமாலுருதேமற்றென்செய்யும்வாய்ந்த
கனமால்விடையுடையோன்கண்டத்—தினமாகித்
தோன்றினகார்தோன்றிலதேர்சோர்ந்தனசங்கூர்ந்தனபீர்
கான்றனநீரேந்திழையாள்கண். (உ)

கட்டளைக்கலித்துறை.

கண்ணுர்நுதலெந்தைகாமருகண்டமெனவிருண்ட
விண்ணுலுருமொடுமேலதுகீழதுகொண்டல்விண்ட
மண்ணுர்மலைமேலிளமயிலான்மடமானனைய
பெண்ணுமிவளினியென்னுய்க்கழியும்பிரிந்துறைவே. (ஊ)

அகவல்.

உறைகழியொள்வாண்மின்னியுருமெனு
மறைகுரன்முரசமார்ப்பக்கைபோய்
வெஞ்சிலைகோலிவிரிதுளியென்னு
மின்சரந்துரந்ததுவானேநிலனே
கடியவாகியகளவநன்மலரொடு
கொடியவாகியதளவமுமந்தண்
சூலைமேம்பட்டகோடலுங்கோபமோ
டூலைமேம்பட்டகாந்தளுமிவற்றொடு
காயாவெந்துயர்தருமேலவரே
பொங்கிரும்புரிசைபோக்கறவளைஇக்
கங்குலும்பகலுங்காவன்மேவி
மாசறுவேந்தன்பாசறையோரே
யானேயின்னே
யலகிலாற்றலருச்சுனற்கஞ்ஞான்
றுலவாநல்வரமருளியவுத்தம
னந்தணரூர்சிந்தித்துமகிழா

மயரியமாக்கஃபோலத்
துயருழந்தழியக்கண்டியிலாவே. (ச)

வெண்பா.

துயிலாநோயாந்தோன்றத்தோன்றித்தீத்தோன்ற
மயிலாலவந்ததான்மாதோ—வயலாய
வண்டத்துக்கப்பாலானந்திங்கட்கண்ணியான்
கண்டத்துக்கொப்பாயகார். (ஞ)

கட்டளைக்கலித்துறை.

காருமுழக்கொடுமின்னெடுவந்ததுகாதலர்தந்
தேருக்தெருவுஞ்சிலம்பப்புகுந்ததுசில்வளைகள்
சோருஞ்சிலபலவங்கேநெரிந்தனதுன்னருநஞ்
சாருமிடற்றண்ணலாரூரனேயவணங்கினுக்கே. (சு)

அகவல்.

அணங்குறைநெடுவரையருமைபேணுது
மணங்கமழ்தெரியல்சூடிவைகலும்
விடுசுடர்நெடுவேன்முன்னடிவிளக்காக்
கடுவிசைக்கான்யாற்றுநெடுநீர்நீந்தி
யொருதனிபெயரும்பொழுதிற்புரிகுழல்
வானரமகளிர்தின்மல்வழங்ககலத்
தானுக்காதலாகுவதென்று
புலவியுள்ளமொடுபொருந்தாக்கண்ணள்
கலிபிணைதிரியக்கையறவெய்தி
மெல்விரனெரித்துவிம்மிவெய்துயிர்த்
தல்லியங்கோதையழலுற்றாங்
கெல்லையிலிருந்துயரெய்தினள்புல்லார்
திரிபுரமெரியவொருகணைதெரிந்த
வரிவைபாகத்தண்ணலாரூர்

வளமலிகமலவாண்முகத்
திளமயிற்சாயலேந்திழைதானே. (எ)

வெண்பா.

இழையார்வனமுலையீர்ந்தண்புனத்தி
னுழையாகப்போந்ததொன்றுண்டே—பிழையாச்சீ
ரம்மானனலாடியாரூர்க்கோனன்றுரித்த
கைம்மானேரன்னகளிறு. (அ)

கட்டளைக்கலித்துறை.

களிறுவழங்கவழங்காவதர்க்திர்வேறுணையா
வெளிறுவிரவருதிகண்டாய்விண்ணினின்றிழிந்த
பிளிறுசுரற்கங்கைதாங்கியபிஞ்ஞகன்பூங்கழன்மாட்
டொளிறுமணிக்கொடும்பூணிமையோர்சொல்லுமோங்கிருளே. ()

அகவல்.

இருள்புரிகூந்தலுமெழினலஞ்சிதைந்தது
மருள்புரிவண்டறைமாலையும்பரிந்தது
வொண்ணுதற்றிலகமுமழிந்துதுகண்ணு
மைந்நிறமொழிந்துசெந்நிறமெய்தி
யுள்ளறிகொடுமையுரைப்பபோன்றன
சேதகம்பரந்துசெவ்வாய்மேதகு
குழைகெழுதிருமுகம்வியப்புள்ளுறுத்தி
யிழைகெழுகொங்கையுமின்சாந்தழீஇக்
கலையுந்துகிலுநிலையிற்கலங்கி
யென்னிதுவிளைந்தவாறெனமற்றி
தன்னதுமறிகிலமியாமேசெறிபொழி
லருகுடையாரூரமர்ந்துறையமுதன்
முருகுவிரிதெரியன்முக்கண்மூர்த்தி
மாமரச்சோலைச்சிராமலைச்சாரற்

கரும்பிவர்கறும்போதுகொய்யப்
பெருஞ்செறுவனத்தில்யான்பிரிந்ததிப்பொழுதே. (கo)

வெண்பா.

பொழுதுகழிந்தாலும்பூம்புனங்காத்தெள்கி
யெழுதுகொடியிடையாயேகான்—ரெழுதமசர்
முன்னஞ்சேர்மொய்கழலான்முக்கணனென்மறையான்
மன்னுஞ்சேய்போலொருவன்வந்து. (கக)

கட்டளைக்கலித்துறை.

வந்தாரெதிர்சென்றுநின்றேறன்கிடந்தவண்டார்தழைக
டந்தாரவையொன்றுமாற்றகில்லேன்றக்கன்வேள்வீசெற்ற
செந்தாமரைவண்ணன்றீர்த்தச்சடையன்சிராமலைவாய்க்
கொந்தார்பொழிலணிகந்தாவனஞ்சூழ்குளிர்புனத்தே. (கஉ)

அகவல்.

புனமயிற்சாயற்பூங்குழன்மடந்தை
மனைமலிசெல்வமகிழாளாகி
யேதிலனெருவன்காதலனாக
விடுசுடர்நடுவுநின்றடுதலினிழலு
மடியகத்தொளிக்குமாரழற்கானத்து
வெவ்வினைவேடர்துடிக்குரல்வெரீஇ
மெய்வித்திரெறியுஞ்செவ்வித்தாகி
முள்ளிலையீந்துமுளிதாளிலவமும்
வெள்ளிலும்பரந்தவெள்ளிடைமருங்கிற்
கடுங்குரற்கதாய்நெடுந்தொடர்பிணித்துப்
பாசந்தின்றதேய்காலும்பர்
மரையதண்மேய்ந்தமயிர்ப்புன்குரம்பை
விரிநரைக்கூந்தல்வெள்வாய்மறத்தியர்
விருந்தாயினள்கொருநேதிருந்தாக்

கூற்றெனப்பெயரியகொடுந்தொழிலொருவ
னூற்றல்செற்றவண்ணலாரூர்ச்
செய்வளர்கமலச்சீறடிக்
கொவ்வைச்செவ்வாய்க்குயின்மொழிக்கொடியே. (கஉ)

வெண்பா.

கொடியேர் நுடங்கிடையாள்கொய்தாரான்பின்னே
யடியானடந்தடைந்தாளாக—பொடியாக
கண்ணுரூர்மூன்றெரித்தாகஞ்சேர்திண்சிலையான்
தண்ணுரூர்சூழ்ந்ததடம். (கக)

கட்டளைக்கலித்துறை.

நடப்பாற்புனற்சடைச்சங்கரன்றண்மதிபோன்முகத்து
மடப்பான்மடந்தைமலரணைச்சேக்கையிற்பாசம்பிரீஇ
யிடப்பாற்றிரியில்வெருவுமிருஞ்சுரஞ்சென்றனளாம்
படப்பாலனவல்லவாற்றமியேன்றையல்பட்டனவே. (கஙி)

அகவல்.

பட்டோர்பெயருமாற்றலுமெழுதி
நட்டகல்லுமூரார்கத்தும்
பரன்முரம்பதருமல்லதுபடுமழை
வரன்முறையறியாவல்வெயிற்கானத்துத்
தேனிவர்கோதைசெல்லமானின
மஞ்சிலோதிநோக்கிற்கழிந்து
நெஞ்செரிவுடைமையின்விலக்காதுவிடுக
கொங்கைக்கழிந்துகுன்றிடையடைந்த
கொங்கிவர்கோங்கமுஞ்செலவுடன்படுக
மென்றோட்குடைந்துவெயினீலுங்குன்ற
குன்றவேய்களுங்கூற்றடைந்தொழிக
மாயிருங்கடற்றிடைவைகலாயிரம்

பாவையையளர்ப்போய்நினிபாவையை
விலக்காதுபிழைத்தனைமாதோநலத்தகு
மலைபுனலாரூரமர்ந்துறையமுதன்
கலையமர்கையன்கண்ணுதலெந்தை
தொங்கலஞ்சடைமுடிக்கணிந்த
கொங்கலர்கண்ணியாயினகுரவே. (கக)

வெண்பா.

குரவங்கமழ்கோதைகோதைவேலோன்பின்
விரவுங்கடுங்கானம்வெவ்வா—யரவஞ்
சடைக்கணிந்தசங்கரன்மூர்மதனன்றன்னைக்
கடைக்கணித்தநீயிற்கடிது. (கஎ)

கட்டளைக்கலித்துறை.

கடிமலர்க்கொன்றையுந்திங்களுஞ்செங்கணரவுமவ்வே
முடிமலராக்கியமுக்கணக்கன்மிக்கசெக்ரொக்கும்
படிமலர்மேனிப்பரமனடிபரவாதவர்போ
லடிமலர்நோவநடந்தோநடந்ததெமம்மனையே. (கஅ)

அகவல்.

மனையுறைகுருவிவளைவாய்ச்சேவல்
சினைமுதிர்பேடைச்செல்விநோக்கி
நீனிலிழைக்கவேண்டியாஞ
வன்புபொறைகூறமேன்மேன்முயங்கிக்
கண்ணுடைக்கரும்பினுண்டோடுகவரும்
பெருவளர்ந்தழீஇயபீடுசால்கிடக்கை
வருபுனலூரன்பார்வையாகி
மடக்கொடிமாதர்க்குவலையாய்த்தோன்றிப்
படிற்றுவாய்மொழிபலபாராட்டி
யுள்ளத்துள்ளதுதெள்ளிதிற்காந்து

கள்ளோக்கமொடுகைதொழுதிறைஞ்சி
யெம்மிலோயேபாணவவனே
லமாருமறியாவாதிமூர்த்தி
குமான்றூதைகுளிர்சடையிறைவ
னறைகழலெந்தையாரூராவணத்
துறையிற்றூக்குமெழின்மென்காட்சிக்
கண்ணடியனேயர்மைப்
பண்ணுடைச்சொல்லியர்தம்பாலோனே. (கக)

வேண்பா.

பாலாயசொல்லியர்க்கேசொல்லுபோய்ப்பாண்மகனே
யேலாவிங்கென்னுக்கிடுகின்றாய்—மேலாய
தேந்தண்கமழ்கொன்றைச்செஞ்சடையான்றாள்சூடும்
பூந்தண்புனலூரன்பொய். (உ0)

கட்டளைக்கலித்துறை.

பொய்யாற்றெழுதினுமருளுமிறைகண்டம்போலிருண்ட
மையார்தடங்கண்மடந்தையர்கேட்கிற்பொல்லாதுவர்த்துன்
கையாலடிதொடல்செல்லனில்புல்லல்கலையேயே
லெயாவிவைவான்குகற்றாய்பெரிதுமழகியவே. (உக)

அகவல்.

அழகுடைக்கிங்கிணியடிமிசையரற்றத்
தொழிலுடைச்சிறுபறைபூண்டுதேர்த்
தொருகளிறுருட்டியொண்பொடியாடிப்
பொருகளிறனையபொக்கமொடுபிற்றூழ்ந்து
பூங்குழற்சிறுதொடுதூங்குடையபித்தி
யக்கரையுடுத்தியைம்படைகட்டி
யொக்கரையிருக்குமொளிர்புன்குஞ்சிக்
குதலையங்கிளவிப்புதல்வன்றன்னை

புள்ளச்சொரிந்தவெள்ளத்தீம்பா
லுடையவாகியதடமென்கொங்கை
வேண்டாதுபிரிந்தவிரிபுனலூரன்
பூண்டாங்ககலம்புல்குவனெனப்போய்ப்
பெருமடமுடையைவாழிவார்சடைக்
கொடுவெண்டிங்கட்கொழுநிலவேய்க்குஞ்
சுடுபொடியணிந்தவுளங்கொளியகலத்
தண்ணலாரூர்திண்ணிதிற்செய்த
சிறைகெழுசெம்புனல்போல
நிறைவொடீங்காய்நெஞ்சமேயே. (உஉ)

வெண்பா.

நீயிருந்திங்கென்போதுநெஞ்சமேநீளிருட்க
ணுயிரங்கைவட்டித்தனலாடித்—தீயரங்கத்
தையவாயரவசைத்தானன்பணைத்தோட்கன்பமைத்த
செய்வானவூரன்றிறம். (உக)

கட்டளைக்கலித்துறை.

நிறமலிசின்மொழிச்செந்துவர்வாயினையெங்கையர்க்கே
மறமலிவேலோனருளகவார்சடையான்கடவூர்த்
துறைமலியாம்பல்பல்லாயிரத்துத்தமியேயெழினு
நிறைமலிதாமரைதன்னதன்றோசொல்லுநற்கயமே. (உச)

அகவல்.

கயங்கெழுகருங்கடன்முதுகுதெருவுபட
வியக்குதிமிறடவியெறியொளிநுளையர்
நெய்ம்மீன்கவ்வல்வேண்டிக்கைம்மிகுத்
தாலவட்டமேய்ப்பமீமிசை
முடிகெழுதருவலவீசிமுந்நீர்க்
குடரெனவாங்கிக்கொள்ளுகொண்ட

சுரிமுகச்சங்குஞ்சுடர்விடுபவளமு
மெரிகதிர்நித்திலத்தொகுதியுங்கூடி
விரிகதிர்நிலவுஞ்செக்கருந்தாரகை
யுருவதுங்காட்டுமுலவாக்காட்சித்
தண்ணந்துறைவன்றடவரையகலங்
கண்ணுறக்கண்டதுமுதலாவொண்ணிறக்
காளமாசுணங்கதிர்மதிக்குழவியைக்
கோளிழைத்திருக்குங்கொள்கைபோல
மணிதிகழ்மிடற்றுவானவன்மருவு
மணிதிகழ்கலத்தண்ணலாரூ
ரார்கலிவிழவினன்னதோர்
பேரலர்சிறந்ததுசிறுகல்லூரே. (உடு)

வெண்பா.

ஊரெலாந்துஞ்சியுலகெலாநள்ளென்று
பாரெலாம்பாடவிந்தபாயிருட்கட்—சீருலா
மாந்துறைவாயீசன்மணிநீர்மறைக்காட்டுப்
பூந்துறைவாய்மேய்ந்துறங்காபுள். (உசு)

கட்டளைக்கலித்துறை.

புள்ளுந்துயின்றுபொழுதிறுமாந்துகழுதுறங்கி
நள்ளென்றகங்குலிருள்வாய்ப்பெருகியவார்பனிகாட்
டுள்ளுங்கலக்கைச்சுடர்வண்ணனைத்தொழுவார்மனம்போன்
றுள்ளுமுருகவொருவர்திண்டேர்வந்துலாத்தருமே. (உஎ)

அகவல்.

உலாநீர்க்கங்கையொருசடைக்கரந்து
புலாவீசொழுகப்பொருகளிறுரித்த
பூதாதனுதிமூர்த்தி
திருமடமலைமகட்கொருகூறுகொடுத்துத்த

னன்பினமைத்தவனூரூர்நன்பகல்
வலம்புரியடப்பாமாமுத்தரிசி
சலஞ்சலநிறையவேற்றிநலந்திகழ்
பவளச்செந்தீமூட்டிப்பொலம்பட
விப்பியந்துப்பாலொப்பத்துழாவி
யடாஅதட்டவமுதம்வாய்மடுத்
திடாஅவாயமோடெண்ணும்பொழுதிற்
றிருந்திழைப்பணைத்தோட்டேமொழிமாதே
விருந்தினடியேற்கருளுதியோவென
முலைமுகநோக்கிமுறுவலித்திறைஞ்சலி
னறைகமழெண்ணெய்ச்சிறுநுண்டுள்ளி
பொங்குபுனலுற்றதுபோலவெ
னங்கமெல்லாந்தாயினளே. (உஅ)

வெண்பா.

ஆயினவன்பாரேயழிப்பசனலாடி
போயினவன்பாரோம்பும்பேரருளான்—தீயினவ்ன்
கண்ணுளனூரூர்க்கடலார்மடப்பாவை
தண்ணருங்கொங்கைக்கேதாழ்ந்து. (உக)

கட்டளைக்கலித்துறை.

தாழ்ந்துகிடந்தசடைமுடிச்சங்கரன்ரூள்பணியா
தாழ்ந்துகிடந்துரைவார்கிளேபோலயர்வேற்கிரங்கிச்
சூழ்ந்துகிடந்தகரைமேற்றிரையென்னுங்கையெறிந்து
வீழ்ந்துகிடந்தலறித்துயிலாதிவ்விரிகடலே. (கூ)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

சேரமான்பெருமாணாயனார்

அருளிச்செய்த

* திருக்கைலாயஞானவுலா.

திருமாலுநான்முகனுந்தேர்ந்துணராதன்றங்
கருமாலுறவழலாய்நின்ற—பெருமான்
பிறவாதேதோன்றினன்காணுதேகாண்பான்
முறவாதேயாக்கைதுறந்தான்—முறைமையா
லாழாதேயாழ்ந்தானகலாதகலியா
ஞாழாலுயராதேயோங்கினன்—சூழொளிநூ
லோதாதுணர்ந்தானுணுகாதுநுண்ணியான்
யாதுமணுகாதணுகியா—ஞாதி
யரியாகிக்காப்பானயனுய்ப்படைப்பா
னரனுயழிப்பவனுந்தானே—பரனுய
தேவரறியாததோற்றத்தான்றேவரைத்தான்
மேவியவாறேவி தித்தமைத்தா—னேவாதே
யெவ்வுருவில்யாரொருவருள்குவாருள்ளத்து
ளவ்வுருவாய்த்தோன்றியருள்கொடுப்பா—னெவ்வுருவுந்
தானேயாய்நின்றளிப்பான்றன்னிற்பிறிதுருவ
மேனோர்க்குங்காண்பரியவெம்பெருமா—னேதை
சோர்சிவலோகந்தன்னுட்சிவபுரத்தி
லேசார்திருக்கோயிலுள்ளிருப்ப—வாராய்ந்து
செங்கணமர்புறங்கடைக்கட்சென்றீண்டி
யெங்கட்குக்காட்சியருளென்றிரப்ப—வங்கொருநாட்
பூமங்கையொய்தீர்தரணிபுகழ்மங்கை
நாமங்கையென்றிவர்கணன்கமைத்த—சேமங்கொண்

* இத்திருவுலா ஆதியுலாவெனவும் பெயர்பெறும்.

ஞாணக்கொழுந்துகராசன்றன்மடந்தை
தேன்மொய்த்தகுஞ்சியின்மேற்சித்திரிப்ப—ஆணமில்சீர்
நந்தாவனமலருமந்தாகினித்தடஞ்சேர்
செந்தாமரைமலர்நூறுயிரத்தா—லெந்தா
வயந்தன்முடித்தமைத்தவாசிகைசூட்டி
நயந்திகழுநல்லுறுப்புக்கூட்டிப்—பயன்கொள்
குலமகளிர்செய்தகொழுஞ்சாந்தங்கொண்டு
நலமலியவாகந்தழீஇக்—கலைமலிந்த
கற்பகமீன்றகமழ்பட்டினையுடுத்துப்
பொற்கழல்கள்கான்மேற்பொலிவித்து—விற்பகருஞ்
சூளாமணிசேர்முடிகவித்துச்சுட்டிசேர்
வாளார்நுதற்பட்டமன்னுவித்தத்—தோளா
மணிமகரகுண்டலங்கள்காதுக்கணிந்தாங்
கணிவயிரக்கண்டிகைபொன்னுண்—பணிபெரிய
வாரமைவபூண்டணிதிகழுஞ்சன்ன
வீரத்திருமார்பில்வில்லிலக—வேருடைய
வெண்டோட்குக்கேயூரம்பெய்துதரபந்தனமுங்
கண்டோர்மனமகிழக்கட்டுறீஇக்—கொண்டு
கடிசூத்திரம்புனைந்துகங்கணங்கைப்பெய்து
வடிவுடையகோலம்புனைந்தாங்—கடிநிலமே
னந்திமாகாளர்கடைகழிந்தபோழ்தத்து
வந்துவசக்களிருக்குரைப்ப—வந்தமில்சீ
ரெண்ணருங்கீர்த்தியெழுவரிருடிகளு
மண்ணன்மேலாகிடமுணர்த்த—வெண்ணிறத்த
பன்னிருவராதித்தர்பல்லாண்டெடுத்திசைப்ப
மன்னுமகத்தியன்யாழ்வாசிப்பப்—பொன்னியலு
மங்கிகமழ்தூபமேந்தியமன்வந்து
மங்கலவாசகத்தால்வாழ்த்துரைப்பச்—செங்க
ணிருதிமுதலோர்நிழற்கலன்களேந்த
வருணன்மணிக்கலசந்தாங்கத்—தெருவெலாம்

வாயுநனிவிளக்கமாமழைநீர்தெளிப்பத்
தூயசீர்ச்சோமன்குடையெடுப்ப—மேவியசீ
ரீசானன்வந்தடைப்பைகைக்கொள்ளவச்சுனிகள்
வாயார்ந்தமந்திரத்தால்வாழ்த்துரைப்பத்—தூய
வருத்திரர்கடோத்திரங்கள்சொல்லக்குபேரன்
றிருத்தகுமாதியஞ்சிந்தக்—கருத்தமைந்த
கங்காதியமூனியுள்ளுறுத்ததீர்த்தங்கள்
பொங்குகவரிபுடையிரட்டத்—தங்கிய
பைந்நாகமெட்டுஞ்சுடரெடுப்பப்பைந்தழகட்
கைந்நாகமெட்டுங்கழல்வணங்க—மெய்ந்நாக
மேகம்விதானமாய்மின்னெலாஞ்சூழ்கொடியாய்
மேகத்துருமுமுரசறையப்—போகஞ்சேர்
தும்புருநாரதர்கள்பாடத்தொடர்ந்தெங்குங்
கொம்புருவறுண்ணிடையார்கூத்தாட—வெம்பெருமான்
விண்ணோர்பணியவுயர்ந்தவிளங்கொளிசேர்
வெண்ணீர்மழவிடையைமேல்கொண்டாங்—கெண்ணூர்
கருத்துடையபாரிடங்கள்காப்பொத்துச்செய்யத்
திருக்கடைகளேழ்கழிந்தபோதிற்—செருக்குடைய
சேனைபதிமயின்மேன்முன்செல்லயானைமே
லானைப்போரிந்திரன்பின்படர—வானைத
வன்னத்தேயேறியயன்வலப்பால்கைபோதக்
கன்னவிலுந்திண்டோட்கருடன்மேன்—மன்னிய
மாலிடப்பாற்செல்லமலராள்கணையைந்து
மேலிடப்பான்மென்கருப்புவில்லிடப்பா—லேல்வுடைய
சங்கணையுமுன்கைத்தடமுலையார்மேலெய்வான்
கொங்கணையும்பூவாளிகோத்தமைத்த—வைங்கணையான்
காமன்கொடிப்படைமுன்போதக்கதக்காரி
வாமன்புரவிமேல்வந்தணைய—நாமஞ்சேர்
வேழமுகத்துவிநாயகனையுள்ளுறுத்துச் [ந்தன்
சூழ்வளைக்கைத்தொண்டைவாய்க்கெண்டையொண்சுட்—டாழ்கூ

மங்கையெழுவருஞ்சூழமடலீலி
சிங்கவடலேற்றின்மேற்செல்லத்—தங்கிய
விச்சாதரியக்கர்கின்னரர்கிம்புருட
ராச்சாரணரரக்கரோடசுர—ரெச்சாருஞ்
சல்லரிதாளந்தகுணிதந்தத்தளகங்
கல்லலகுகல்லவடமொந்தை—கல்லியத்
தட்டழிசங்கஞ்சலஞ்சலந்தண்ணுமை
கட்டழியாப்பேரிகாதாளங்—கொட்டுங்
குடமுழவங்கொக்கரைவீணைகுடல்யா
ழிடமாந்தடாரிபடக—மிடறிய
மத்தளந்துந்துபிவாய்ந்தமுருடிவற்ரு
லெத்திசைதோறுமெழுந்தியம்ப—வொத்துடனே
மங்கலம்பாடுவார்வந்திறைஞ்சமல்லருங்
கிங்கரருமெங்குங்கிலுகிலுப்பத்—தங்கிய
வாரூமிருதுவும்யோகுமருந்தவமு
மாரூதமுத்திரையுமந்திரமு—மீரூர்ந்த
காலங்கண்மூன்றுங்கணமுங்குணங்களும்
வாலகிலியரும்வந்தீண்டி—மேலை
யிமையோர்பெருமானேபோற்றியெழில்சே
ருமையாண்மணவாளாபோற்றி—யெமையாளுந்
தையாடிபோற்றிசிவனேயடிபோற்றி
மீசனேயெந்தாயிறைபோற்றி—தூயசீர்ச்
சங்கரனேபோற்றிசடாமகுடத்தாய்போற்றி
பொங்கரவாபொன்னங்கழல்போற்றி—யங்கொருகா
ளாயவிழுப்போரருச்சுனனதாற்றற்குப்
பாசுபதமீந்தபதம்போற்றி—தூய
மலைமேலாய்போற்றிமயானத்தாய்வாழ்
தலைமேலாய்போற்றிதான்போற்றி—நிலைபோற்றி
போற்றியெனப்பூமாரிபெய்துபுலன்கலங்க
காற்றிசையுமெங்குநலம்பெருக—வேற்றுக்

கொடியும்பதாகையுங்கொற்றக்குடையும்
வடிவுடையதொங்கலுஞ்சூழக்—கடிகமழும்
பூமாண்கருங்குழலாருள்ளம்புதிதுண்பான்
வாமானவீசன்வரும்போழ்திற்—சேமேலே

குழாங்கள்.

வாமானவீசன்மறுவில்சீர்வானவர்தங்
கோமான்படைமுழக்கங்கேட்டலுமே—தூமாண்பில்
வானீர்தாங்கிமறையோம்பிவான்பிறையோ
டீனமில்சூலமுடையவா—மீனமிலா
வெள்ளையணிதலால்வேழத்துரிபோர்த்த
வள்ளலேபோலும்வடிவுடைய—வெள்ளிய
மாடடுவின்மலராரமளியே
கூடியகோர்க்களமாக்குறித்துக்—கேழில்
லெம்புபறையாகச்சேயரிக்கணம்பா
லுண்டிகைகொண்மபுருவம்வில்லா—நின்றிகழ்ந்த
கூழைபின்னழகோயார்ப்பக்கைபோந்து
கேழ்கிளருமல்குலாந்தேருந்திச்—சூழொளிய
கொங்கைமாப்பொங்கக்கொழுநர்மனங்கவர
வங்கம்பொருதசைந்தவாயிழையார்—செங்கேழற்
பொற்கலசத்துள்ளான்மணிநீர்முகஞ்சேர்த்தி
நற்பெருங்கோலமிகப்புனைந்து—பொற்புடைய
பேதைமுதலாகப்பேரிளம்பெண்ணீறாக
மாதரவர்சேரமகிழ்ந்தீண்டிச்—சோதிசேர்
சூளிகையுஞ்சூட்டுஞ்சுளிகையுஞ்சுட்டிகையும்
வாளிகையும்பொற்றோடுமின்விலக—மாளிகையின்
மேலேறிநின்றுதொழுவார்துயர்கொண்டு
மாலேறிநின்றுமயங்குவார்—நூலேறு
தாமமேதந்துசடாதாரிநல்காதேல்
யாமமேலெம்மையடுமென்பார்—காமவே

ரமென்பாரன்றென்பாரையுறுவார்கையெறிவார்
தாமுன்னேநாணேடுசங்கிழப்பார்—பூமன்னும்
பொன்னரிமாலையைப்பூண்பாரப்பூண்கொண்டு
துன்னரிமாலையாச்சூட்டுவார்—மூன்ன
மொருகணெழுதிவிட்டொன்றெழுதாதோடித்
தெருவம்புகுவார்திகைப்பா—ரருகிருந்த
கண்ணுடிமேற்பஞ்சுபெய்வார்கிளியென்று
பண்ணுடிச்சொற்பந்துக்குற்றுரைப்பா—ரண்ணன்மேற்
கண்ணென்னுமாசாலாங்கோலிக்கருங்குழலார்
திண்ணநிறைத்தாடிறந்திட்டா—ரொண்ணிறத்த

பேதை.

பேதைப்பருவம்பிழையாதாள்வெண்மணலாற்
றூதைச்சிறுசோறடுதொழிலா—டீதி
லிடையாலுமெக்கழுத்தமாட்டாணலஞ்சே
ருடையாலுமுள்ளுருக்கஞ்சில்லா—ணடையாலுங்
கௌவைநோய்காலையைச்செய்யாள்கதிர்முலைக
ளெவ்வநோய்செய்யுந்தொழில்பூணுள்—செவ்வனேர்
நோக்கிலுநோய்நோக்கநோக்கடன்செவ்வாயின்
வாக்கும்பிறர்மனத்தைவஞ்சியாள்—பூக்குழலும்
பாடவந்தோன்றமுடியாளிளவேய்த்தோ
ளாடவர்தம்மையயர்வுசெய்யா—ணுடோறு
மொன்றுரைத்தொன்றுன்னியொன்றுசெய்தொன்றின்கட்
சென்றமனத்தனளாஞ்சேயிழையா—ணன்முகத்
தாலிகழுத்தணிந்துசந்தனத்தான்மெய்பூசி
லீலவறுவைவிரித்துடுத்துக்—கோலஞ்சேர்
பந்தலிற்பாவைகொண்டாடுமிப்பாவைக்குத்
தந்தையாரன்றொருருத்திதான்வினவ—வந்தமில்சீ
சீசெனரியாடியென்னவவனேயோர்
காய்சினமால்விடைமேற்கண்ணுற்றுத்—தாய்சொன்ன

விக்கணக்குநோக்காளிவள்போல்வாள்காமனு
னற்கணக்கின்மேற்சிறிதேநாட்செய்தாள்—பொற்புடைய

பெதும்பை.

பேரொளிசேர்காட்சிப்பெதும்பைப்பிராயத்தாள்
காரொளிசேர்மஞ்ஞைக்கவினியலாள்—சீரொளிய
தாமரையொன்றினிரண்டுகுழையிரண்டு
காமருகெண்டையோர்செந்தாண்டை—தாமருவு
முத்தமுரிவெஞ்சிலைசுட்டிசெம்பவளம்
வைத்ததுபோலுமதிமுகத்தா—ளொத்தமைந்த
கங்கணஞ்சேர்ந்திலங்குகையாள்கதிர்மணியின்
கிங்கிணிசேர்ந்தசிருந்தடியா—ளொண்கேழ
லந்துகிற்சூழ்ந்தசைந்தவல்குலாளாய்பொதியிற்
சந்தனந்தோய்ந்ததடந்தோளான்—வந்து
திடரிட்டதிண்வரைக்கண்செய்தமுலையாள்
கடல்பட்டவின்னமுதமன்னஞ்—மடல்பட்ட
மாலைவளாயகுழலாண்மணநாறு
சோலையிளங்கிளிபோற்றூமொழியாள்—சாலவும்
வஞ்சனைசெய்துமனங்கவரும்வாட்கண்ணுக்
கஞ்சனத்தையிட்டங்கழகாக்கி—யெஞ்சா
மணியாரம்பூண்டாழிமெல்விரலிற்சேர்த்தி
யணியார்வளைதோண்மேன்மின்ன—மணியார்த்த
நாவெண்மணற்கொண்டுதோழியருந்தானுமாய்க்
காமனுருவம்வரவெழுதிக்—காமன்
கருப்புச்சிலையுமலரம்புந்தேரு
மொருப்பட்டுடனெழுதும்போழ்தில்—விருப்பூருந்
தேனமருங்கொன்றையந்தார்த்தீர்த்தன்சிவலோகன்
வானமாலேற்றின்மேல்வந்தணையத்—தானமர
நன்றறிவார்சொன்னலந்தோற்றுநாண்டோற்று
நின்றறிவுதோற்றுநிறைதோற்று—நன்றுகக்

கைவண்டுங்கண்வண்டுமோடக்கலேயோட
நெய்வீண்டபூங்குழலாணின்றெழிந்தாண்—மொய்கொண்ட

மங்கை.

மங்கையிடங்கடவாமாண்பினுள்வானிழிந்த
கங்கைச்சுழியனேயவுந்தியா—டங்கிய
வங்ஙைகமலமடிகமலமாலேக்கி
கொங்கைகமலமுகங்கமலம்—பொங்கெழிலா
ரிட்டிடையும்வஞ்சியிரும்பணைத்தோள்வேயெழிலார்
பட்டுடையவல்குலுந்தார்த்தட்டு—மட்டவிரி
கூந்தலறல்பவளஞ்செய்யவாயவ்வாயி
லேய்ந்தமணிமுறுவலின்முத்தம்—வாய்ந்தசீர்
வண்டுவளாயவளர்வாசிகைசூட்டிக்
கண்டிகழுத்திற்கவின்சேர்த்திக்—குண்டலங்கள்
காதுக்கணிந்துகனமேகலதிருத்தித்
தீதில்செழுங்கோலஞ்சித்திரித்து—மாதராள்
பொற்கூட்டிற்பூவையையவாங்கியதலேடுஞ்
சொற்கோட்டிக்கொண்டிருந்தவேல்வைக்க—ணற்கோட்டு
வெள்ளிவிலங்கன்மேல்வீற்றிருந்தஞாயிறுபோ
லொள்ளியமால்விடையைமேல்கொண்டு—தெள்ளியநீர்
தாழுஞ்சடையான்சடாமகுடந்தோன்றுதலும்
வாழுமேமம்மர்மனத்தளாய்ச்—சூழொளியான்
றூர்நோக்குந்தன்றூருநோக்குமவனுடைய
வேர்நோக்குந்தன்னதெழிலேக்கும்—பேரருளான்
றேரேக்குந்தன்றேருநோக்குமவன்மார்பி
னீரேக்கம்வைத்துவெடிதுயிர்த்து—நாரேக்கா
துள்ளமுருகவொழியாதவேட்கையாம்
வெள்ளத்திடையழுந்திவெய்துயிர்த்தா—ளொள்ளிய

மடந்தை.

தீந்தமிழின்றெய்வவடிவாடிருந்தியசீர்
வாய்ந்தமடந்தைபிராயத்தா—ளேய்ந்தசீ
ரீசன்சிலையுமெழில்வான்பவளமுஞ்
சேய்வலங்கைவேலுந்திரண்முத்தும்—பாசிலை
வஞ்சியும்வேயும்வளர்தாமரைமொட்டு
மஞ்சில்வருமாமதிபோன்மண்டலமு—மெஞ்சாப்
புருவமுஞ்செவ்வாயுங்கண்ணுமெயிறு
முருவநுசுப்புமென்றோளு—மருவினிய
கொங்கையும்வாண்முகமுமாக்கொண்டாள்கோலஞ்சேர்
பங்கயப்போதனையசேவடியா—ளொண்கேழல்
வாழைத்தண்டன்னகுறங்கினுள்வாய்ந்தசீ
ராழித்தேர்த்தண்டனையவல்குலா—ஞாழித்
திருமதியமற்றொன்றுமென்றுமுகத்தை
யுருவுடையகாண்மீன்சூழ்ந்தாற்போற்—பெருகொளிய
முத்தாரங்கண்டத்தணித்தாளணிகலங்கண்
மொய்த்தாரவாரமிகப்பெருகி—வித்தகத்தாற்
கள்ளுங்கடாமுங்கலவையுங்கைபோந்திட்
டுள்ளும்புறமுஞ்செறிவமைத்துத்—தெள்ளொளிய
காளிங்கஞ்சோதிகிடப்பத்தொடித்தமைத்த
தாளிம்பத்தாமமுதல்சேர்த்தித்—தோளெங்கும்
தண்ணறுஞ்சந்தனங்கொண்டப்பிச்சதிர்சாந்தை
வண்ணம்பெறமிசையேமட்டித்தாங்—கொண்ணுதலா
டன்னமர்தோழியர்கள்சூழத்தவிசேறிப்
பின்னுமோர்காமரம்யாழமைத்து—மன்னு
விடவண்ணக்கண்டத்துவேதியன்மேலிட்ட
மடல்வண்ணப்பாடும்பொழுதீண்—டடல்வல்ல
வேல்வல்லான்வில்வல்லான்மெல்லியலார்க்கெஞ்ஞான்று
மால்வல்லானார்கின்றமால்விடையின்—கோல

மணியேறுகேட்டாங்குநோக்குவாள்சால
வணியேறுதோளானேக்கண்டாங்—கணியார்ந்த
கோட்டியொழியவெழுந்தருளைமுகத்தைக்
கோட்டிறுதல்சிவப்பவாய்துலக்கி—நாட்டார்க
ளெல்லாருங்கண்டாரெனக்கடவுளிங்காய
நல்லாய்படுமேற்படுமென்று—மெல்லவே
செல்லலுறுஞ்சரணங்கம்பிக்குந்தன்னுறுநோய்
சொல்லலுறுஞ்சொல்லிமுடைசெறிக்கு—நல்லாகங்
காணலுறுங்கண்கணீர்மல்குங்காண்பார்முன்
ஞாணலுறுநெஞ்சமொட்டாது—பூணுகம்
புல்லலுறுமண்ணல்கைவாரானென்றிவ்வகையே
யல்லலுறுமழுந்துமாழ்துயரான்—மெல்லியலா
டன்னுருவம்பூங்கொன்றைத்தார்கொள்ளத்தான்கொண்றைப்
பொன்னுருவங்கொண்டுபுலம்புற்றாள்—பின்னெருத்தி

அரிவை.

செங்கேழற்றாமரைபோல்சீறடியாடிலா
வங்கேழரிவைப்பிராயத்தா—ளொண்கேழற்
றிங்களுந்தாரகையும்வில்லுஞ்செழும்புயலுந்
தங்கொளிசேர்செவ்வாயுமுண்மையாற்—பொங்கொளிசேர்
மின்னுர்வான்காட்டுமுகவொளியாண்மெய்ம்மையே
தன்னுவாரில்லாத்தகைமையா—ளெந்நாளு
மில்லாரையெல்லாருமென்குவார்செல்வரை
யெல்லாருஞ்செய்வர்சிறப்பென்னுஞ்—சொல்லாலே
யல்குற்குமேகலையைச்சூழ்ந்தாளணிமூலமேன்
மல்கியசாந்தொடுபூண்புனைந்து—நல்கூ
ரிடையிடையேயுள்ளுருகக்கண்டாளெழிலார்
நடைபெடையன்னத்தையென்று—ளடியிணைமேற்
பாடகங்கொண்டுபரிசமைத்தாள்பன்மணிசேர்
சூடகமுன்கைதொடர்வித்தாள்—கேடில்சீர்ப்

பொன்னரிமாலைதலைக்கணிந்துபூண்கொண்டு
மன்னுங்கழுத்தைதமகிழ்வித்தாள்—பொன்னலை
ளின்னிசைவீணையைவாங்கியிமையவர்த
மண்ணன்மேற்றூணிட்டவாசையான்—முன்னமே
பாடலொடங்கும்பொழுதிற்பரஞ்சோதி
கேடிலாமால்விடைமேற்றோன்றுதலுங்—கூடிய
வின்னிசையுமிப்பிறப்பும்பேணுமிருந்தமிழு
மன்னியவீணையுங்கைவிட்டுப்—பொன்னனை
ரின்றன்றேகாண்பதெழினலங்கொள்ளேனை
னன்றன்றேபெண்மைநமக்கென்று—சென்றவன்த
லெண்களபமாடுமொளிவாண்முகத்திரண்டு
கண்களபமாடுவபோற்கட்டுரைத்து—மொண்சேழற்
கூந்தலவிழ்க்குமுடிக்குங்கலதிருத்துஞ்
சாந்தநிமிருமுலையார்க்கும்—பூந்துகிலைச்
சூழுமவிழ்க்குந்தொழுமழுஞ்சோர்துயருற்
றழுமழுந்துமயர்வுயிர்க்குஞ்—சூழொளிய
வங்கைவளைதொழுதுகாத்தான்கலைகாவா
ணங்கையிவளுநலந்தோற்றா—ளங்கொருத்தி

தெரிவை.

யாராவமுதமவயவம்பெற்றனைய
சீரார்தெரிவைப்பிராயத்தா—ளோரா
மருனோசையின்மழலைவாய்ச்சொலாலென்று
மிருடீர்புலரியேயொப்பா—ளருளாலே
வெப்பமிலையவர்கட்காக்குதலாலுச்சியோ
டொப்பமையக்கொள்ளுமுருவத்தாள்—வெப்பச்சீர்ச்
தந்தளிர்போற்சேவடியுமங்கையுஞ்செம்மையா
லந்திவான்காட்டுமழகினு—ளந்தமில்
சீரார்முகமியமாதலாற்சேயிழையா
ளோராரிரவினெழில்கொண்டாள்—சீராருங்

கண்ணுர்பயோதரமுநுண்ணிடையுமுண்மையாற்
றண்ணிளங்காரின்சவிகொண்டாள்—வண்ணஞ்சேர்
மாந்தளிர்மேனிமுருக்கிதழ்வாயாதலால்
வாய்ந்தவிளவேனில்வண்மையாண்—மாந்த
ரறிவுடையீர்கின்மின்களல்லார்போமென்று
பறையறைவபோலுஞ்சிலம்பு—முறைமையார்
சீரார்திருந்தடிமேற்சேர்த்திஞடோல்கு
லோராதகலலுரதென்று—சீராலே
யத்துகிலுமேகலையுஞ்சூழ்ந்தாளணிமுலைகண்
மைந்தர்மனங்கவருமென்பதனுன்—முந்துறவே
பூங்கச்சினுலடையப்பூட்டுறீஇப்பொற்றொடியாற்
காம்பொத்ததோளிணையைக்காப்பேவி—வாய்ந்தசீர்
நற்கழுத்தைநல்லாரத்தான்மறைத்துக்காதுக்கு
விற்பகருங்குண்டலங்கண்மேவுவித்து—மைப்பகருங்
காவியங்கண்ணேக்கதந்தணிப்பாள்போலத்தன்
ரூவியவஞ்சனத்தைமுன்னூட்டி—யாவரையு
மாகுலமாக்குமழகினுளன்னமுங்
கோகிலமும்போலுங்குணத்தினு—ளாகிப்
பலகருதிக்கட்டிக்கரியவாய்க்கோடி
யலர்சுமந்துசூழையவாகிக்—கலகரந்
தள்ளாதுமின்றிப்புறங்கமழ்ந்துகீழ்தாழ்ந்து
கள்ளாவிநாறுங்கருங்குழலா—டெள்ளொளிய
செங்கழுநீர்ப்பட்டுடுத்துச்செங்குங்குமமெழுதி
யங்கழுநீர்த்தாமமுதல்சேர்த்திப்—பொங்கெழிலார்
பொற்கவற்றின்வெள்ளிப்பலகைமணிச்சூது
கற்கையமாட்டிப்பொரும்பொழுதில்—விற்பகிருந்
தோளாளிலேபெறுதோற்றங்கேடாய்நின்ற
தாளான்சடாமகுடந்தோன்றுதலுங்—கேளாய
ரானூர்நடக்கலத்தார்க்கிடையில்லை

யேணொழிகவெழிலொழிக—பேணுங்
குலத்தாரகன்றிடுகுற்றத்தார்வம்பி
னலந்தீர்நினைமினென்று—சொலற்கரிய
தேவாதிதேவன்சிவனுயிற்றென்கொன்றைப்
பூவாரலங்கலருளாது—போவானேற்
கண்டாலறிவனெனச்சொல்லிக்கைசோர்ந்து
வண்டார்பூங்கோதைவளந்தோற்ரு—ளொண்டாய

பேரிளம்பெண்.

பெண்ணாசாய்த்தோன்றியபேரிளம்பெண்மையாள்
பண்ணமருமின்சொற்பணிமொழியாண்—மண்ணின்மேற்
கண்டுகேட்டுண்டுயிர்த்துற்றறியுமைம்புலனு
மொண்டொடிகண்ணேயுளவென்று—பண்டையோர்
கட்டுரையையேம்படுத்தாள்கண்ணுடிமண்டலம்போல்
வீட்டிலங்குநல்லுகிர்சேர்மெல்விரலாள்—கட்டாரவ
மஞ்சப்பரத்தகன்றவல்குலாளாய்நலத்த
வஞ்சிக்கொடிமுடங்குநுண்ணிடையா—ளெஞ்சாத
பொற்செப்பிரண்டுமுகடுமணியழுத்தி
வைத்தனபோலவளர்ந்தேந்தி—யொத்துச்
சுணங்குந்திதலையுஞ்சூழ்போந்துகண்டார்க்
கணங்குமமுதமுமாய்த்தோன்றி—யிணங்கொத்த
கொங்கையாள்கோலங்கட்கெல்லாமோர்கோலமா
நங்கையாணுதிளவேய்த்தோளினு—ளங்கையாற்
காந்தட்குலம்பழித்தாள்காமவேள்காதலாள்
சாந்தமிலங்குமகலத்தாள்—வாய்ந்துடனே
யேய்ந்துகுவிந்துதிரண்டுமெறிந்திருபா
றேய்ந்துதுடித்தசெழும்பவளங்—காய்ந்திலங்கி
மூத்தமுந்தேனும்பொதிந்துமுனிவரையுஞ்
சித்தந்திறைகொள்ளுஞ்செவ்வாயா—ளெத்து

வரிவெடுத்தஞ்சனமாடிமணிக
ளுருவமுவுடையவாகிப்—பெருகிய
தண்ணங்கயலுஞ்சலஞ்சலமுந்தோன்றுதலால்
வண்ணங்கடலனையவாட்கண்ணு—ளொண்ணிறத்த
குண்டலஞ்சேர்காதிலுள்கோலக்குளிர்மதிய
மண்டலமேபோலுமதிமுகத்தாள்—வண்டலம்ப
யோசனைநாறுகுழலாலொளிறுதன்மேல்
வாசிகைகொண்டுவடிவமைத்தாண்—மாசில்சீர்ப்
பாதாதிகேசம்பழிப்பிலாள்பாங்கமைந்த
சீதாரிகொண்டுதன்மெய்புகைத்தாண்—மாதார்ந்த
பண்கவருஞ்சொல்லார்பல்லாண்டேத்தப்பாயொளிசேர்
வெண்கவரிவெள்ளத்திடையிருந்து—வொண்கேழற்
கண்ணவனையல்லதுகாணுசவியவன
தெண்ணருஞ்சீரல்லதிசைகொள்ளா—வண்ணல்
கழலடியல்லதுகைதொழாவஃதான்
றழலங்கைக்கொண்டான்மாட்டன்பென்—றெழிலுடைய
வெண்பாவிரித்துரைக்கும்போழ்தில்விளங்கொளிசேர்
கண்பாவுநெற்றிக்கறைக்கண்டன்—விண்பா
லரியரணஞ்செற்றருங்கலைபுனலும்பாம்பும்
புரிசடைமேல்வைத்தபுராண—னெரியிரவி
லாடுமிறைவனமரர்குழாந்தற்சூழ
மாட்டமறுகில்வரக்கண்டு—கேடில்சீர்
வண்ணச்சிலம்படிமாதரார்தாமுண்ட
கண்ணெச்சிலெம்மையேயூட்டுவா—னண்ணலே
வந்தாய்வளைகவர்ந்தாய்மாலுமருந்துயருந்
தந்தாயிதுவோதகவென்று—நொந்தாள்போற்
கட்டுரைத்துக்கைசோர்ந்தகமுருகிமெய்வெளுத்து
மட்டிவரும்பூங்கோதைமால்கொண்டாள்—கொட்டிமைசேர்
பண்ணுருமின்சொற்பணைப்பெருந்தோட்செந்துவர்வாய்ப்

பெண்ணாவாரம்பெரிதன்றே—விண்ணேங்கி
மஞ்சடையுநீள்குடுமிவாணிலாவீற்றிருந்த
செஞ்சடையான்போந்தகெரு.

பெண்ணீர்மைகாமின்பெருந்தோளிணைகாமி
னுண்ணீர்மைமேகலையுமுள்படுமின்—றெண்ணீர்க்
காரேறுகொன்றையந்தார்க்காவாலிகட்டங்க
ணூரேறுபோந்ததுலா.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

கைலாபாகிகாளத்திபாதியந்தாதி.

சொல்லும்பொருளுமேதூத்திரியுநெய்யுமா
கல்லிடஞ்சிலென்னுடையநாவாகச்—சொல்லரிய
வெண்பாவிளக்காவியன்கயிலைமேலிருந்த
பெண்பாகர்க்கேற்றினேன்பெற்று. (க)

பெற்றபயனிதுவேயன்றேபிறந்தியான்
கற்றவர்களேத்துஞ்சீர்க்காளத்திக்—கொற்றவர்க்குத்
தோளாகத்தாடரவஞ்சூழ்ந்தணிந்தவம்மானுக்
காளாகப்பெற்றேனடைந்து. (உ)

அடைந்தயிம்மினம்மானையும்மாவிதன்னைக்
குடைந்துண்ணவெண்ணியவெங்கூற்றங்—கடைந்துங்
கண்ணுளேபார்க்கும்பொழுதுகயிலாயத்
தண்ணலேகண்டீரண்ண. (ங)

அரண்மொருமூன்றுமாரழலாய்வீழ
முரணம்புகோத்தமுதல்வன்—சரணமே
காணுமாலுற்றவன்றன்காளத்திகைதொழுது
பேணுமாலுள்ளம்பெரிது. (ச)

பெரியவர்காணீரென்னுள்ளத்தின்பெற்றி
தெரிவரியதேவாதிதேவன்—பெரிதுந்
திருத்தக்கோரேத்துந்திருக்கயிலைக்கோனை
யிருத்தத்தான்போந்ததிடம். (ஞ)

இடப்பாகநீள்கோட்டிமவான்பயந்த
மடப்பாவைதன்வடிவேயானல்—விடப்பாற்
கருவடிசேர்கண்டத்தெங்காளத்தியாள்வார்க்
கொருவடிவேயென்றூலுரு. (கூ)

உருவுபலகொண்டுணர்வரிதாய்நிற்கு
மொருவனெருபாலிருக்கை—மருவினிய
பூக்கையிற்கொண்டெப்பொழுதும்புத்தேளிர்வந்திறைஞ்சு
மாக்கயிலேயென்னுமலே. (எ)

மலேவரும்போல்வானவருந்தானவருமெல்லா
மலேகடல்வாய்நஞ்செழல்கண்டஞ்சி—நிலேதளராக்
கண்டமையாற்றண்காரற்காளத்தியாள்வார்நஞ்
சுண்டமையாலுண்டிவ்வுலகு. (அ)

உலகமனைத்தினுக்குமொண்ணுதன்மேலிட்ட
திலகமெனப்பெறினுஞ்சீசீ—யிலகியசீ
ரீசாதிருக்கயிலேயெம்பெருமானென்றென்றே
பேசாதிருப்பார்பிறப்பு. (கூ)

பிறப்புடையார்கற்றூர்பெருஞ்செல்வர்மற்றுஞ்
சிறப்புடையராலுலுஞ்சீசீ—யிறப்பில்
கடியார்நறுஞ்சோலைக்காளத்தியாள்வா
ரடியாரைப்பேணுதவர். (கo)

அவரும்பிறந்தாராய்ப்போவார்கொலாவி
யெவருந்தொழுதேத்துமெந்தை—சிவமன்னு
தேக்குவார்சோலைத்திருக்கயிலேயேத்தாதே
பேக்குவார்வாளாபொழுது. (கக)

வாளாபொழுதுகழிக்கின்றூர்மானுடவர்
கேளார்கொலந்தோகிறிபட்டார்—கீளாடை

பண்ணற்கணுக்கராய்க்காளத்தியுண்ணின்ற
கண்ணப்பராவார்கதை. (கஉ)

கதையிலேகளிர்கயிலாயநோக்கிப்
புதையிருட்கண்மாலோடும்போகிச்—சிதையாச்சீர்த்
தீர்த்தன்பாற்பாசுபதம்பெற்றுச்செருக்காளத்திற்
பார்த்தன்போர்வென்றிலனேபண்டு. (கஙு)

பண்டுதொடங்கியும்பாவித்துநின்கழற்கே
தொண்டுபடுவான்றொடர்வேனைக்—கண்டுகொண்
டாளத்தியாவுண்டோவில்லையோசொல்லாயே
காளத்தியாயுன்கருத்து. (கச)

கருத்துக்குச்சேயையாய்க்காண்டக்கோர்காண
விருத்திதிருக்கயிலையென்று—லொருத்த
ரறிவானுறுவார்க்கறியுமாறுண்டோ
நெறிவார்சடையாய்நிலை. (கஞ)

நிலையில்பிறவிநெடுஞ்சுழியிற்பட்டுத்
தலைவதடுமாறுகின்றேன்—றொலைவின்றிப்
போந்தேறக்கைதாராய்காளத்திப்புத்தேளிர்
வேந்தேயிப்பாசத்தைவிட்டு. (கட)

பாசத்தைவிட்டுநின்பாதத்தின்கீழையென்
னேசத்தைவைக்கநினைகண்டாய்—பாசத்தை
நீக்குமாவல்லகயிலாயாநீயென்னைக்
காக்குமாறித்தனேயகாண். (கண)

காணுதலக்கின்றூர்வாரோர்காளத்திப்
பூணுமார்பன்றன்பொற்பாத—நாணுதே
கண்டிடுவான்யானிருந்தேன்காணீர்கடனஞ்சை
யுண்டிடுவான்றன்னையொருங்கு. (கக)

ஒருங்காதுடனேநின்றூரைவரெம்மை
நெருங்காமணித்தமொருகா—னெருங்கிக்
கருங்கலோங்கும்பற்கயிலாயமேயான்
வருங்கொலோநம்பான்மதித்து. (கக)

நம்பான்மதித்துறையுங்காளத்திநண்ணுதே
வம்பார்மலர்தூய்வணங்காதே—நம்பாநின்
சிலங்களேத்தாதேதீவினையேன்யானிருந்தேன்
காலங்கள்போனகழிந்து. (உ0)

கழிந்தகழிகிடாய்நெஞ்சேகழியா
தொழிந்தநாண்மேற்பட்டுயர்ந்தோர்—மொழிந்தசீர்க்
கண்ணுதலானெந்தைகயிலாயமால்வரையே
நண்ணுதலாநன்மைநமக்கு. (உக)

நமக்கிசைந்தவாகாமூமேத்திஞானம்பர்
தமக்கழகுதாமேயறிவ—ரமைப்பொதும்பிற்
கல்லவாநீடருவிக்காளத்தியாள்வாரை
வல்லவாநெஞ்சமேவாழ்த்து. (உஉ)

வாழ்த்துவாய்வாழ்த்தாதொழிவாய்மறுசுழியிட்
டாழ்த்துவாயஃதறிவாய்நீயன்றே—யாழ்த்தகைய
வண்டார்பொழிற்கயிலைவாழ்கென்றிருப்பதே
கண்டாயடியேன்கடன். (உங)

கடநாகமூடாடுங்காளத்திக்கோனைக்
கடஞுகக்கைதொழுவார்க்கில்லை—யிடநாடி
யிந்நாட்டிற்கேவந்திங்கீண்டிற்றுக்கொண்டுபோ
யந்நாட்டிலுண்டுழலுமாறு. (உச)

மாறிப்பிறந்துவழியிடையாற்றிடை
யேறியிழியுமிதுவல்லாற்—றேறித்

திருச்சபியிலேயத்தீரேற்சேமத்தால்யார்க்கு
மிருக்கையிலக்கண்டிரினிது. (உடு)

இனிதேபிறவியினமரங்களேறிக்
கனிதேர்க்டிவன்கடம்மின்—முனிவாய்ப்
பிணங்கிவருத்தண்சாரற்காளத்திபேணி
வணங்கவல்லராயின்மகிழ்ந்து. (உசு)

மகிழ்ந்தலரும்வண்கொன்றைமேலேமனமாய்
நெகிழ்ந்துநெகிழ்ந்துள்ளேநெக்குத்—திகழ்ந்திலங்கும்
விண்ணிறங்காவோங்கும்வியன்கயிலேமேயாயென்
பெண்ணுறங்காளென்செய்கேன்பேசு. (உஎ)

பேசும்பரிசறியாள்பேதைபிறர்க்கெல்லா
மேசும்பரிசானளேபகவ—மாசுனீர்க்
காம்பையலைத்தாலிக்குங்காளத்தியென்றென்று
பூம்பசலைமெய்ம்முழுதும்போர்த்து. (உஅ)

போர்த்தகளிற்றுரியும்பூண்டபொறியரவுந்
தீர்த்தமகளிருந்தசெஞ்சடையு—மூர்த்தி
குயிலாயமென்மொழியாள்கூறுயவாறுங்
குயிலாயாயான்காணக்காட்டு. (உக)

காட்டினடமாடிக்கங்காளராகிப்போய்
காட்டிற்பலிதிரிந்துகாடோறு—மோட்டுண்பா
ரானலுமென்கொலோகாளத்தியாள்வாரை
வானேர்வணங்குமாவந்து. (ஙo)

வந்தமரேத்துமடைகூழும்வார்சடைமேற்
கொந்தவிழுமாலைகொடுத்தார்கொல்—வந்தித்து
வாலுகுத்தவண்கயிலைக்கோனர்தம்மாமுடிமேற்
பாலுகுத்தமாணிக்குப்பண்டு. (ஙக)

பண்டிதுவேயன்றுகிற்கேளீர்கொல்பல்சருகு
கொண்டிலிங்கத்தும்பினூற்கூட்டிழைப்பக்—கண்டு
நலந்திக்கெலாமேத்துங்காளத்திநாதர்
சிலந்திக்குச்செய்தசிறப்பு. (கூஉ)

செய்தசிறப்பெண்ணிலெங்குலக்குஞ்சென்றடைந்து
கைதொழுவார்க்கெங்கள்கயிலாயர்—கொய்தளவிற்
காலற்காய்ந்தாரன்றேகாணீர்கழறுழுத
பாலற்காயன்றுபரிந்து. (கூக)

பரிந்துரைப்பார்சொற்கேளாளெம்பெருமான்பாதம்
பிரிந்திருக்கில்லாமைபேசும்—புரிந்தமரர்
நாதாவாகாளத்திநம்பாவாவென்றென்று
மாதாவாவுற்றமயல். (கூச)

மயலேத்தவிர்க்கநீவாராயொருமூன்
றெயிலேப்பொடியாகவெய்தாய்—கயிலைப்
பருப்பதவாநின்னுடையபாதத்தின்கீழே
யிருப்பதவாவுற்றுளிவள். (கூஎ)

இவளுக்குநல்லவாறெண்ணுதிரேலின்றே
தவளப்பொடியிவண்மேற்சாத்தி—யிவளுக்குக்
காட்டுமின்கள்காளத்திகாட்டிக்கமழ்கொன்றை
சூட்டுமின்கடருந்துயர். (கூஅ)

துயர்க்கெலாங்கூடாயதோற்குரம்பைபுக்கு
மயக்கிவழிகாணமாட்டேன்—வியற்கொடும்போ
ரேற்றூனேவண்கயிலையெம்மானேயென்கொலோ
மேற்றூனிதற்குவினவு. (கூக)

வினவும்வினையரவின்வெய்யவிடத்தைக்
களமிலைகாளத்தியாள்வார்—வளவி

திருந்தியசீர்சன்றிருநாமமென்னு
மருந்தினைநீர்வாயிலேவைத்து. (நூஅ)

வாயிலேவைக்குமளவின்மருந்தாகித்
தியபிறவிநோய்தீர்க்குமே—தூயவே
கம்பெருமாதேவியொடுமன்னுகயிலாயத்
தெம்பெருமானைஞ்செழுத்து. (நூக)

அஞ்செழுத்துங்கண்டீரருமறைகளாவனவு
மஞ்செழுத்துங்கற்கவணித்தாகு—நஞ்சவித்த
காளத்தியார்யார்க்குங்காண்டற்கரிதாய்ப்போய்
ளைத்தேதின்றதெறி. (நூ0)

தெறிவார்சடையாய்நிலையின்மைநீயொன்
றறியாய்கொலந்தோவயர்ந்தா—ணெறியிற்
கனைத்தருவிதூங்குங்கயிலாயாகின்னை
நினைத்தருவிகண்சோரநின்று. (நூக)

நின்றுமிருந்துங்கிடந்துநடந்தும்யா
மென்றுநினைந்தாலுமென்கொலோ—சென்றுதன்
முள்வானவரிறைஞ்சுந்தண்சாரற்காளத்தி
யாள்வானருளாதவாறு. (நூஉ)

அருளாதவாறுண்டேயார்க்கேனுமாக
விருளார்கறைமிடற்றெம்மீசன்—பொருளாய்ந்து
மெய்ம்மையேயுன்னில்வியன்கயிலேமேயான்வந்
திம்மையேதீர்க்குமிடர். (நூங)

இடரீருமக்கோரிடநாடிக்கொண்டு
நடவீரோகாலத்தானுங்கள்—கடல்வாய்க்
கருப்பட்டோங்கொண்முகில்சேர்காளத்திகாண
வொருப்பட்டோங்கண்டீருணர்ந்து. (நூச)

உணருங்காலொன்றையுருத்தெரியக்காட்டாய்
புணருங்காலாரமுதேபோன்று—மிணரிற்
கனியவாஞ்சோலக்கயிலாயமேயா
யினியவாகாணின்னியல்பு. (கந)

நின்னியல்பையாரேயறிவார்நினையுங்கான்
மன்னியசீர்க்காளத்திமன்னவனே—நின்னில்
வெளிப்படுவதேழுலகுமீண்டேயொருகா
லொளிப்பதுவுமாலுலரை. (கஅ)

உரையும்பொருளுமடலுமுயிரும்
விரையுமலரும்போல்விம்மிப்—புரையின்றிச்
சென்றவாறுங்குத்திருக்கயிலையம்பெருமா
னின்றவாறெங்குநிறைந்து. (கஎ)

நிறைந்தெங்குநீயேயாய்நின்றாலுமொன்றின்
மறைந்தம்புலன்காணவாராய்—சிறந்த
கணியாருந்தண்சாரற்காளத்தியாள்வாய்
பணியாயாலென்முன்பரிசு. (கஅ)

பரிசறியேன்பற்றிலேன்கற்றிலேன்முற்றுங்
கரியுரியான்பாதமேகண்டாய்—திரியும்
புரமாளச்செற்றவனேபொற்கயிலைமன்னும்
பரமாவடியேற்குப்பற்று. (கக)

பற்றுவானெவ்வுயிர்க்குமெந்தைபசுபதியே
முற்றுவெண்டிங்கண்முளைசூடி—வற்றுவாங்
கங்கைசேர்செஞ்சடையான்காளத்தியுண்ணின்ற
மங்கைசேர்பாகத்துமன். (கo)

மன்னுகயிலாயாமாமுத்தமாணிக்கம்
பொன்னுரமாக்கொண்டுபுனைதே—யென்காளந

பின்செய்வார்செஞ்சடையாய்வெள்ளெலும்புபூண்கின்ற
தென்செய்வானெந்தாயியம்பு. (௫௪)

இயம்பாய்மடநெஞ்சேயேனேர்பாலென்ன
பயம்பார்த்துப்பற்றுவானுற்றாய்—புயம்பாம்பா
லார்த்தானேகாளத்தியம்மானேயென்றென்றே
யேத்தாதேவாளாவிருந்து. (௫௫)

இருந்தவாகாணீரிதுவென்னமாய
மருந்தண்கயிலாயத்தண்ணல்—வருந்திப்போய்த்
தாளுளும்பிச்சைபுகும்போலுந்தன்னடியார்
வாளுளமண்ணுளவைத்து. (௫௬)

வைத்தவிருநிதியேயென்னுடையவாழ்முதலே
சித்திலமேகாளத்திநீள்சுடரே—மொய்த்தொளிசே
ரக்காலத்தாசையடிநாயேன்காணுங்கா
லெக்காலத்தெப்பிறவியான். (௫௭)

யானென்றுந்தானென்றிரண்டில்லையென்பதனை
யானென்றுங்கொண்டிருப்பனுலுந்—தேனுண்
டளிகடாம்பாடுமெகன்கயிலைமேயான்
றெளிகொடான்மாயங்கள்செய்து. (௫௮)

மாயங்கள்செய்தைவர்சொன்னவழிநின்று
காயங்கொண்டாடல்கணக்கன்று—காயமே
நிற்பதன்றுதலாற்காளத்திநின்மலர்ச்சீர்
கற்பதேகண்டீர்கணக்கு. (௫௯)

கணக்கிட்டுக்கொண்டிருந்துகாலனுர்நம்மை
வணக்கிவலைப்படாமுன்னம்—பிணக்கின்றிக்
காலத்தானெஞ்சேகயிலாயமேவியுற்
சூலத்தான்பாதந்தொழு. (௬௦)

தொழுவாள்பெரு ளேதன் றோள்வளையுந்தோற் றுண்
மழுவாளன்காளத் திவாழ்த்தி—யெழுவா
ணறுமாமலர்க்கொன்றைநம்முன்னேநாளைப்
பெறுமாறுகாணீரென்பெண். (நிஅ)

பெண்ணின்றயலார்முன்பேதைபிறைசூடி
கண்ணின்றநெற்றிக்கயிலைக்கோ—னுண்ணின்ற
காமந்தான்மீதூரைவாட்குன்கார்க்கொன்றைத்
தாமந்தாமற்றிவளைச்சார்ந்து. (நிக)

சார்ந்தாரையெவ்விடத்துங்காப்பனவுஞ்சார்ந்தன்பு
கூர்ந்தார்க்குமுத்திகொடுப்பனவுங்—கூர்ந்துள்ளே
மூளத்தியானிப்பார்முன்வந்துநிற்பனவுங்
காளத்தியார்தங்கழல். (கூ0)

தங்கழல்களார்ப்பவிளக்குச்சலன்சலனென்
றங்கழல்களார்ப்பவனலேந்திப்—பொங்கலகத்
தார்த்தாடரவமகன்கயிலைமேயாய்நீ
கூத்தாடன்மேவியவாகூறு. (கூக)

கூறுய்நின்பொன்வாயாற்கோலச்சிறுகிளியே
வேறுகவந்திருந்துமெல்லெனவே—நீறுவு
மஞ்சடையுநீள்குடுமிவாளருவிக்காளத்திச்
செஞ்சடையெம்மீசன்றிறம். (கூஉ)

ஈசன்றிறமேநினைந்துருகுமெம்மைப்போன்
மாசினிறத்தமடக்குருகே—கூசி
யிருத்தியாய்நீயுமிருங்கயிலைமேயாற்
கருத்தியாய்க்காமுற்றுயாம். (கூங)

காமுற்றுயாமன்றேகாளத்தியான்கழற்கே
யாமுற்றதுற்றுயிருங்கடலே—யாமத்து

ஞாலத்துயிரெல்லாங்கண்டுஞ்சுவள்ளிருள்கூர்
காலத்துந்துஞ்சாதுன்கண். (சுசி)

கண்ணுங்கருத்துங்கயிலாயரேயெமக்கென்
றெண்ணியிருப்பன்யானெப்பொழுது—நண்ணும்
பொறியாடரவசைத்தபூதப்படையா
ரறியார்கொனெஞ்சேயவர். (சுஙி)

நெஞ்சேயவர்கண்டாய்நேரிணைவாரை
யஞ்சேலென்றூட்கொண்டருள்செய்வார்—நஞ்சேயுங்
கண்டத்தார்காளத்தியாள்வார்கழல்கண்டீ
ரண்டத்தார்சூடுமலர். (சுசு)

அலரோனெடுமாலமரர்கோன்மற்றும்
பலராய்ப்படைத்துக்காத்தாண்டு—புலர்காலத்
தொன்றுகிமீண்டுபலவாகிநிற்கின்றான்
குன்றுதசீர்க்கயிலைக்கோ. (சுஎ)

கோத்தமலர்வாளிகொண்டனங்கன்காளத்திக்
கூத்தன்மேலன்றுகுறித்தெய்யப்—பார்த்தலுமே
பண்பொழியாக்கோபத்தீச்சுற்றுதலும்பற்றற்று
வெண்பொடியாய்வீழ்ந்திலனேவெந்து. (சுஅ)

வெந்திறல்வேற்பார்த்தற்கருள்செய்வான்வேண்டியோர்
செந்தறுகட்கேழற்றிறம்புரிந்து—வந்தருளுங்
கானவனுங்கோலமியான்காணக்கயிலாய
வானவர்தங்கோமானேவா. (சுக)

வாமான்றேர்வல்லவயப்போர்விசயனைப்போற்
றூமாருலகிற்றவமுடையார்—தாமியார்க்குங்
காண்டற்கரியராய்க்காளத்தியாள்வாரைத்
தீண்டத்தாம்பெற்றமையாற்சென்று. (எ0)

சென்றிறைஞ்சும்வானோர்தஞ்சிந்தைக்குஞ்சேயரா
யென்றுமடியார்க்குமுன்னிற்பர்—நன்று
கனியவாஞ்சோலைக்கயிலாயமேயா
ரினியவாபத்தர்க்கிவர். (எக)

இவரேமுதற்றேவரெல்லார்க்குமிக்கா
ரிவரல்லரென்றிருக்கவேண்டாங்—கவராதே
காதலித்தின்றேத்துதிரேற்காளத்தியாள்வார்தீ
ராதரித்ததெய்வமேயாம். (எஉ)

ஆமென்றுநாளுளவென்றுவாழ்வீலே
தாமின்றுவீழ்கைதவமன்று—யாமென்று
மிம்மாயவாழ்வினையேபேணுதிருங்கயிலை
யம்மானைச்சேர்வதறிவு. (எங)

அறியாமலேனுமறிந்தேனுஞ்செய்து
செறிகின்றதீவினைகளெல்லா—நெறிநின்று
நன்முகில்சேர்காளத்திநாதனடிபணிந்து
பொன்முகரியாடுதலும்போம். (எச)

போகின்றமாமுகிலேபொற்கயிலைவெற்பளவு
மேகின்றெமக்காகவெம்பெருமா—னேகிஞ
லுண்ணப்படாநஞ்சமுண்டாற்கென்னுள்ளுறுநோய்
வீண்ணப்பஞ்செய்கண்டாய்வேறு. (எரு)

வேறேயுங்காக்கத்தகுவேனைமெல்லியலாள்
கூறேயுங்காளத்திக்கொற்றவனே—யேறேறு
மன்பாவடியேற்கருளாதொழிகின்ற
தென்பாவமேயன்றேவின்று. (எசு)

இன்றுதொடங்கிப்பணிசெய்வேன்யானுனக்
கென்றுமிளமதியேயெம்பெருமா—னென்றுமென்

ஐட்காதலுண்மையுயர்கயிலைமேயாற்குத்
திட்காதேவிண்ணப்பஞ்செய். (எஎ)

செய்யசடைமுடியென்செல்வனேயான்கண்டெனது
கையறவுமுண்மெலிவும்யான்காட்டப்—பையவே
காரேறுபூஞ்சோலைக்காளத்தியாள்வார்தம்
போரேறெயித்தெருவேபோது. (எஅ)

பொதுநெறியனவேபேசிநின்பொன்வாயா
லூதத்தருவளிவண்டே—காதலாற்
கண்டார்வணங்குங்கயிலாயத்தெம்பெருமான்
வண்டார்மோந்தென்குழற்கேவா. (எக)

வாவாமணிவாயான்மாவின்றளிர்கோதிக்
கூவாதிருந்தகுயிற்பிள்ளா—யோவாதே
பூமம்பொழிலுடுத்தபொன்மதில்சூழ்காளத்திக்
கோமான்வரவொருகாற்கூவு. (அ0)

கூவுதலும்பாற்கடலேசென்றவனைக்கூகிவென்
றேவினன்பொற்கயிலையெம்பெருமான்—மேவியசீ
ரன்பாற்புலிக்காலன்பாலன்பாலாசையினற்
றன்பாற்பால்வேண்டுதலுந்தான். (அக)

தானேயுலகாள்வான்முன்கண்டவாவழக்க
மானுன்மற்றுரிதனேயன்றென்பார்—வானோர்
கோகண்டாஞாய்நின்றகாளத்தியாள்வார்
வாகொண்டார்மாறந்தார்வந்து. (அஉ)

வந்தோரரக்கனர்வண்கயிலைமால்வரையைத்
தந்தோள்வலியினையேதாங்கருதி—யந்தோ
விடந்தாரிடந்திட்டிடார்க்கீழெலிபோற்
கிடந்தார்வலியெலாங்கெட்டு. (அங)

கெட்டவரக்கரேவேதியரேகேளீர்கொல்
பட்டதுவுமோராதுபண்டொருநா—ளொட்டக்
கலந்தரனூர்காளத்தியாள்வார்மேற்சென்று
சலந்தரனூர்பட்டதுவுந்தாம். (அச)

தாம்பட்டதொன்றுமறியார்கொல்சார்வரே
காம்புற்றசெந்நெற்கயிலக்கோன்—பாம்புற்ற
வாரத்தார்பத்தர்க்கருகணையார்காலனூர்
தூரத்தேபோவார்தொழுது. (அஞ)

தொழுதுமனுந்தன்றூதுவர்க்குச்சொல்லும்
வழுவில்சீர்க்காளத்திமன்னன்—பழுதிலாப்
பத்தர்களைக்கண்டாற்பணிந்தகலப்போமின்க
ளெத்தனையுஞ்சேய்த்தாகவென்று. (அக)

வென்றைந்துங்காமாதிவேரறுத்துமெல்லவே
யொன்றினைநிரேலொன்றலாஞ்—சென்றங்கை
மானுடையானென்னையுடையான்வடகயிலை
தானுடையான்றன்னுடையதாள். (அங)

தாளொன்றுற்பாதாளமூடுருவத்தண்விசும்பிற்
றூளொன்றுலண்டங்கடந்துருவித்—தோளொன்றுற்
றீக்கனைத்தும்போர்க்குந்திறற்காளிகாளத்தி
நக்கனைத்தான்கண்டகடம். (அஎ)

கடமாடுஞ்சங்கரன்றூணன்முகனுங்காணன்
படமாடுபாம்பணையான்காணன்—விடமேவுங்
காரேறுகண்டன்கயிலாயன்றன்னுருவை
யாரேயறிவாரிசைந்து. (அஅ)

இசையுந்தன்கோலத்தையான்காணவேண்டி
வசையில்சீர்க்காளத்திமன்ன—னசைவின்றிக்

காட்டுமேற்காட்டிக்கலந்தென்னைத்தன்னுடைய
கூட்டுமேற்கூடலேகூடு. (கo)

கூடியிருந்துபிறர்செய்யுங்குற்றங்க
ணூடித்தங்குற்றங்களுடாதே—வாடி
வடகயிலையேத்தாதேவாழ்த்திடுவான்வேண்டி
லடகயிலவாரமுதைவிட்டு. (கக)

விட்டாவிபோகவுடல்கிடந்துவெந்தீயிற்
பட்டாங்குவேமாறுபார்த்திருந்து—மொட்டாவாங்
கள்ளலக்கும்பூஞ்சோலைக்காளத்தியுண்ணின்ற
வள்ளலச்சென்றேத்தமனம். (கஉ)

மனமுற்றுமையலாய்மாதராற்தங்கள்
கனமுற்றுங்காமத்தேவீழ்வர்—புனமுற்
றினக்குறவரேத்துமிருங்கயிலைமேயான்
றனக்குறவுசெய்கலார்தாழ்ந்து. (கங)

தாழ்ந்தசடையுந்தவளத்திருநீறுஞ்
சூழ்ந்தபுலியதளுஞ்சூழாவுஞ்—சேர்ந்து
கெருக்கிவாளுரிதைஞ்சுங்காளத்தியாள்வார்க்
கிருக்குமாகோலங்களேற்று. (கச)

எற்றின்மணியேயமையாதோவீர்ஞ்சடைமேல்
வீற்றிருந்தவெண்மதியும்வேண்டுமோ—வாற்றருவி
கன்மேற்பட்டார்க்குங்கயிலாயத்தெம்பெருமா
னென்மேற்படைவிடுப்பாற்கீங்கு. (கஙு)

ஈங்கேவாவென்றருளியென்மனத்திலெப்பொழுது
நீங்காமனீவந்துநின்றுலுந்—தீங்கை
யடுகின்றகாளத்தியாள்வாய்நானல்ல
பணிகின்றவண்ணம்பணி. (கஞ)

பணியாதுமுன்னிவனேப்பாவியேன்வாளா
கணியாதுகாலங்கழித்தே—னணியுங்
கருமாமிடற்றெங்கயிலாயத்தெங்கள்
பெருமானதில்லைபிழை. (கூஎ)

பிழைப்புவாய்ப்பொன்றறியேன்பித்தேறிஞற்போ
லழைப்பதேகண்டாயடியே—னழைத்தாலு
மென்னுதாவேகொண்டின்பொழில்சூழ்காளத்தி
மன்னுதருவாய்வரம். (கூஅ)

வரமாவதெல்லாம்வடகயிலைமன்னும்
பரமாவுன்பாதாரவிந்தஞ்—சிரமார
வேற்றிடும்போதாகவந்தென்மனத்திலெப்பொழுதும்
வைத்திடுநீவேண்டேன்யான்மற்று. (கூக)

மற்றும்பலபிதற்றவேண்டாமடநெஞ்சே
கற்றைச்சடையண்ணல்காளத்தி—நெற்றிக்க
ணராவமுதின்றிருநாமமஞ்செழுத்துஞ்
சோராமலெப்பொழுதுஞ்சொல். (கஅ0)

திருச்சிற்றம்பலம்.

—oo:o:oo—

திருச்சிற்றம்பலம்.

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

திருவீங்கோய்மலையெழுபது.

அடியுமுடியுமரியுமயனும்
படியும்விசும்பும்பாய்ந்தேறி—நொடியுங்கா
லின்னதெனவறியாவீங்கோயேயோங்கார
மன்னதெனநின்றன்மலை. (க)

அந்தவிளமாக்குழவியாயம்பிரிந்ததற்குக்
கொந்தவிழ்தேன்றேய்த்துக்குறமகளிர்—சந்தி
னிலவிளக்கையாற்கொடுக்குமீங்கோயேமேரு
மலவிளக்கைவில்லிமலை. (உ)

அம்பவளவாய்மகளிரம்மனைக்குந்தம்மனையைச்
செம்பவளந்தாவென்னச்சீர்க்குறத்தி—கொம்பி
னிறுதலையினற்கிளைக்குமீங்கோயேமம்மேன்
மறுதலைநோய்தீர்ப்பான்மலை. (ங)

அரிகரியைக்கண்டவிடத்தச்சலிப்பாயோடப்
பிரிவரியதன்பிடியைப்பேணிக்—கரிபெரிதுங்
கையெடுத்துநீட்டிக்கதஞ்சிறக்குமீங்கோயே
மையடுத்தகண்டன்மலை. (ச)

அரியுமுழுவையுமாளியுமேயீண்டிப்
பரியிட்டுப்பன்மலர்கொண்டேறிச்—சொரிய
வெரியாடிகண்டுகக்குமீங்கோயேகூற்றந்
திரியாமற்செற்றன்சிலம்பு. (ஞ)

ஆளிதொடரவரிதொடரவாங்குடனே
வாளிகொடுதொடருமாக்குறவர்—கோளி
னிடுசிலையினுற்புடைக்குமீங்கோயேமம்மேற்
கொடுவினைகள்வீட்டுவிப்பான்குன்று. (சு)

இடுதினைதின்வேழங்கடியக்குறவர்
வெடிபடுவெங்கவண்கலூன்ற—நெடுநெடென
நீண்டகழைமுத்துதிர்க்குமீங்கோயேயெங்குமணி
பூண்டகழையேறிபொருப்பு. (எ)

ஈன்றகுறமகளிர்க்கேழைமுதுகுறத்தி
நான்றநறிக்கேறசலநற்கிழங்—கூன்றவைத்
தென்னன்னையுண்ணென்றெடுத்துரைக்குமீங்கோயே
மின்னன்னசெஞ்சடையான்வெற்பு. (அ)

ஈன்றகுழவிக்குமந்தியிறுவரைமே
னின்றநறவத்தைத்தானணுகித்—தோன்ற
விரலாற்றேன்றேரூய்த்தூட்டுமீங்கோயேமம்மேல்
வரலாநோய்தீர்ப்பான்மலை. (கூ)

உண்டிருந்தமேனியறுபதங்களுடிப்போய்ப்
பண்டிருந்தயாழ்முரலப்பைம்பொழில்வாய்த்—கண்டிருந்த
மாமயில்களாடிமருங்குவருமீங்கோயே
பூமயிலிதாதைபொருப்பு. (கூ)

ஊடிப்பிடியுறங்கவொண்கதலிவண்கனிக
ணூடிக்களிறுநயந்தெடுத்துக்—கூடிக்
குணமருட்டிக்கொண்டாடுமீங்கோயேவாலூர்
குணமருட்டுங்கோளரவன்குன்று. (கக)

எய்யத்தொடுத்தோன்குறத்திநோக்கேற்றதெனக்
கையிற்கணைகளுந்துகன்னிமான்—பையப்போ

கென்கின்றபாவனைசெயீங்கோயேதூங்கெயில்கள்
சென்றன்றுவென்றுன்சிலம்பு. (கஉ)

எழையிளமாதேயென்னைநீபோதென்று
கூழைமுதுவேடன்கொண்டுபோய்—வேழ
வினைக்குவால்வீட்டுவிக்குமீங்கோயேசுத்தம்
வினைக்குவால்வீட்டுவிப்பான்வெற்பு. (கங)

எனமுழுதபுழுதியினமணியைக்
கானவர்தம்மக்கள்கனலென்னக்—கூன
விறுக்கங்கதிர்வெதுப்புமீங்கோயேநம்மேன்
மறுக்கங்கடீர்ப்பான்மலை. (கச)

எனங்கிளைத்தவினபவளமாமணிகள்
கானலெரிபரப்பக்கண்டஞ்சி—யானை
யினமிரியமுல்லைகுமீங்கோயேநம்மேல்
வினையிரியச்செற்றுகந்தான்வெற்பு. (கஇ)

ஒருகணையுங்கேழலுயிர்செகுத்துக்கையி
லிருகணையுமானமேலெய்ய—வருகணைய
மாளரிதாளெடவரிவெருவுமீங்கோயே
கோளரிக்குங்காண்பரியான்குன்று. (கக)

ஓங்கிப்பரந்தெழுந்தவொள்ளிலவத்தண்போதைத்
தூங்குவதோர்கொள்ளியெனக்கடுவன்—மூங்கிற்
றழையிறுத்துக்கொண்டோச்சுமீங்கோயேசங்கக்
குழையிறுத்தகாதுடையான்குன்று. (கஎ)

ஓடுமுகிலெயுகிராலிறவூன்றி
மாடுபுகவான்கைமிகமடித்து—நீடருவி
மாச்சீயமுண்டுமனங்களிக்குமீங்கோயே
கோச்சீயங்காண்பரியான்குன்று. (கஅ)

கண்டகனி றுகர்ந்தமந்திகருஞ்சுனைநீ
ருண்டுகுளிர்ந்திலவெண்றூடிப்போய்க்—கொண்ட
லிறைக்கீறிவாய்மடுக்குமீங்கோயேகான்கு
மறைக்கீறுகண்டான்மலை. (கக)

கருங்களிற்றின்வெண்கொம்பாற்கல்லுரல்வாய்நல்லார்
பெருந்தினைவெண்பிண்டியிடிப்ப—வருங்குறவன்
கைக்கொணருஞ்செந்தேன்கலந்துண்ணுமீங்கோயே
மைக்கொணருங்கண்டன்மலை. (உ0)

கனையபலாங்கனிகள்கல்லிலையர்தொக்க
நனையகலத்துரத்திலேந்தி—மனைகள்
வரவிரும்பியாய்பார்க்குமீங்கோயேபாங்கார்
குரவரும்புசெஞ்சடையான்குன்று. (உக)

கடக்களிறுகண்வளரக்கார்நிறவண்டார்ப்பச்
சுடர்க்குழையார்பாட்டெழவுகேட்டு—மடக்கிளிகள்
கீதந்தெரிந்துரைக்குமீங்கோயேயாற்கீழ்நால்
வேதந்தெரிந்துரைப்பான்வெற்பு. (உஉ)

கறுத்தமுலைச்சூற்பிடிக்குக்கார்யானைசந்த
நிறுத்துக்கைநீட்டுமீங்கோயே—செறுத்த
கடதடத்ததோலுரிவைக்காப்பமையப்போர்த்த
வீடமிடற்றிஞன்மருவும்வெற்பு. (உங)

கங்குலிரைதேருங்காகோதரங்கேழற்
கொம்பினிடைக்கிடந்தகூர்மணியைப்—பொங்கி
யுருமென்றுபுற்றடையுமீங்கோயேகாமன்
வெருவொன்றக்கண்சிவந்தான்வெற்பு. (உச)

கலவிக்களிறசைந்தகாற்றெங்குங்காணு
நிலைகைக்கொண்டேந்திக்கான்வீச—வுலவிச்சென்

ரெண்பிடிகாற்றேற்றுகக்குமீங்கோயேபாங்காய
வெண்பொடிநீற்ரூன்மருவும்வெற்பு. (உஇ)

கன்னிப்பிடிமுதுகிற்கப்பருவமுட்பருகி
யன்னைக்குடிவரலாறஞ்சிப்—பின்னே
யேன்றருக்கிமாதவஞ்செயீங்கோயேந்காத
மான்றரித்தகையான்மலை. (உசு)

கள்ளமுதுமறவர்காட்டகத்துமாவேட்டை
கொள்ளென்றழைத்தகுரல்கேட்டுத்—துள்ளி
யினக்கவலைபாய்ந்தோடுமீங்கோயேந்த
மனக்கவலைதீர்ப்பான்மலை. (உஎ)

கல்லைப்புனமேய்ந்துகார்க்கொன்றைத்தார்போர்த்துக்
கொல்லையெழுந்தகொழும்புறவின்—மூல்லையங்கள்
பல்லரும்புமொய்த்தீனுமீங்கோயேமுவையிலுங்
கொல்லரும்பக்கோல்கோத்தான்குன்று. (உஅ)

கல்லாக்குரங்குபளிங்கிற்கனிகாட்ட
வெல்லாக்குரங்குமுடனீண்டி—வல்லே
யிருந்துகிராற்கற்கிளைக்குமீங்கோயேமேனிப்
பொருந்தவராப்பூண்டான்பொருப்பு. (உக)

கண்கொண்டவிர்மணியினுப்பட்கருங்கேழல்
வெண்கோடுவீழ்ந்தவியன்சார—றண்கோ
டிளம்பிறைசேர்வான்கடுக்குமீங்கோயேவேதம்
விளம்பிறைசேர்வான்கடுக்கும்வெற்பு. (ஙo)

காந்தளங்கைத்தலங்கள்காட்டக்களிமஞ்ஞை
கூந்தல்விரித்துடனேகூத்தாடச்—சாய்ந்திரங்கி
யேர்க்கொன்றைபொன்கொடுக்குமீங்கோயேசெஞ்சடைமேற்
கார்க்கொன்றையேன்ரூன்கடறு. (ஙக)

குறமகளிர்கூடிக்கொழுந்தினைகள்குத்தி
நறவமாக்கஞ்சகங்கணுடிச்—சிறுகுறவர்
கைந்நீட்டியுண்ணக்களித்துவக்குமீங்கோயே
மைந்நீட்டுங்கண்டன்மலை. (கூஉ)

கூழைமுதுமந்திகோல்கொண்டுதேன்பாய
வேழையிளமந்திசென்றிருந்து—வாழை
யிலையாற்றேனுண்டுவக்குமீங்கோயேயிஞ்சி
சிலையாற்றூன்செற்றூன்சிலம்பு. (கூங)

கொல்லையிளவேங்கைக்கொத்திறுத்துக்கொண்டுசினை
மல்லல்நீர்மஞ்சனமாநாட்டிக்கொண்—டொல்லை
யிருங்கைக்களிறேறுமீங்கோயேமேனெய்
வருங்கைக்களைவான்மலை. (கூச)

கொவ்வைக்கனிவாய்க்குறமகளிர்கூந்தல்சேர்
கவ்வைக்கடிபிடிக்குங்காதன்மையாற்—செவ்வை
யெறித்தமலர்கொண்டுவிடுமீங்கோயேயன்பர்
குறித்தவரந்தான்கொடுப்பான்குன்று. (கூடு)

கொடுவிற்சிலைவேடர்கொல்லுகாமற்
படுகுழிகள்கல்லுதல்பார்த்தஞ்சி—நெடுநாகந்
தண்டேன்றிச்செல்லுஞ்சீர்ங்கோயேதாழ்சடைமேல்
வண்டேன்றுந்தாரான்மலை. (கூசு)

கோங்கினரும்பழித்தகொங்கைக்குறமகளிர்
வேங்கைமணிமீழல்விளையாடி—வேங்கை
வரவதனைக்கண்டிரியுமீங்கோயேதீங்கு
வரவதனைக்காப்பான்மலை. (கூஎ)

சந்தனப்பூம்பைந்தழையைச்செந்தேனிற்றோய்த்தியானை
மந்தண்மடப்பிடியின்வாய்க்கொடுப்ப—வந்ததன்

கண்களிக்கத்தான்களிக்குமீங்கோயேதேங்காதே
விண்களிக்கநஞ்சுண்டான்வெற்பு. (நஅ)

சந்தினிலேயதனுட்டண்பிண்டிதேன்கலந்து
கொந்தியினிதுண்ணக்குறமகளிர்—மந்தி
யிளமகளிர்வாய்க்கொடுத்துண்ணீங்கோயேவெற்பின்
வளமகளிர்பாகன்மலை. (நக)

சாரற்குறத்தியர்கடண்மருப்பால்வெண்பிண்டி
சேரத்தருக்கிமதுக்கலந்து—வீரத்
தமினிதாவுண்ணுஞ்சீரீங்கோயேயின்பக்
குமரன்முதுதாதையார்குன்று. (ஙo)

தாயோங்கித்தாமடருந்தண்சாரலொண்கானம்
வேயோங்கிமுத்தமெதிர்பிதுங்கித்—தீயோங்கிக்
கண்கன்றித்தீவிளக்குமீங்கோயேசெஞ்சடைமேல்
வண்கொன்றைத்தாரான்வரை. (ஙக)

செடிமுட்டச்சிங்கத்தின்சீற்றத்தீக்கஞ்சிப்
பிடியட்டமாக்களிறுபோந்து—கடமுட்டி
யென்னேசீயென்னுஞ்சீரீங்கோயேயேந்தழலிற்
பொன்னேரனையான்பொருப்பு. (ஙஉ)

சுனைநீடுதாமரையின்முதலோந்துசோதிப்
புனைநீடுபொன்னிறத்தவண்டு—மனைநீடி
மன்னிமணம்புணருமீங்கோயேமாமதியஞ்
சென்னியணிந்தான்சிலம்பு. (ஙங)

செந்தினையின்வெண்பிண்டிபச்சைத்தேனுற்குழைத்து
வந்தவிருந்தூட்டுமணிக்குறத்தி—பந்தியாத்
தேக்கிலைகளிட்டுச்சிறப்புரைக்குமீங்கோயே
மாக்கலைகள்வைத்தான்மலை. (ஙச)

தடங்குடைந்தகொங்கைக்குறமகளிர்தங்க
ளிடம்புகுந்தங்கின்னறவமாந்தி—யுடன்கலந்து
மாக்குரவையாடிமகிழ்ந்துவருமீங்கோயே
கோக்குரவையாடிகொழுங்குன்று. (கஞ)

தாமரையின்ரூடகைத்தாமரைகடாடகையத்
தாமரையிற்பாய்ந்துகளுந்தண்புறவிற்—ரூமரையி
னீட்டம்புலிசிதறுமீங்கோயேயெவ்வுயிர்க்கும்
வாட்டங்கடீர்ப்பான்மலை. (கக)

தெள்ளகட்டபூஞ்சுனையதாமரையின்றேமலர்வாய்
வள்ளவட்டப்பாழிமடலேறி—வெள்ளகட்ட
காராமைகண்படுக்குமீங்கோயேவெங்கூற்றைச்
சேராமற்செற்ரூன்சிலம்பு. (கஎ)

தேன்மருவும்பூஞ்சுனைக்கட்புக்குச்செழு. (கஅ)

(கக) (நிக) (நிஉ) (நிங) (நிச) (நிநி) (நிசு) (நிஎ) (நிஅ)

(நிசு) (சூ0) (சூக)

கலைகள்வருவனகள்கண்டு—சிலையை
யிருந்தெடித்துக்கோறெரியுமீங்கோயேமானைப்
புரிந்திடத்துக்கொண்டான்பொருப்பு. (கூஉ)

மத்தக்கரிமுகத்தைவாளரிகள்பீறவொளிர்
முத்தம்பனிகிகர்க்குமொய்ம்பிற்ரு—லத்தகைய
வேனற்புனமீடுமீங்கோயேதங்குபுனல்
கூனற்பிறையணிந்தான்குன்று. (கூங)

மந்தியினங்கண்மணிவரையினுச்சிமேன்
முந்தியிருந்துமுறைமுறையே—நந்தி
யாளந்தாடியாலிக்குமீங்கோயேகூற்றம்
வாளந்தோடச்செற்ரூன்மலை. (கச)

மந்திமகவினங்கள் வண்பலவி னுண்களைக்கண்
முந்திப்பறித்தமுறியதனுட்—சிந்திப்போய்த்
தேனுறுபாயுஞ்சீரீங்கோயேசெஞ்சடைமேல்
வானுறுவைத்தான்மலை. (கூடு)

முள்ளார்ந்தவெள்ளிலவமேறிவெறியாது
கள்ளார்ந்தபூப்படியுங்கார்மயிரு—ளெள்ளா
ரெரிகடுவுட்பெண்கொடியாரேய்க்குமீங்கோயே
புரிநெடுநூன்மார்பன்பொருப்பு. (கூசு)

வளர்ந்தவிளங்கன்னிமாங்கொம்பின்கொங்கை
யளந்துவடுப்படுப்பான்வேண்டி—யிளந்தென்ற
லெல்லிப்புகுழையுமீங்கோயேதீங்கருப்பு
வில்லிக்குக்கூற்றுனென்வெற்பு. (கூஎ)

வானமதிதடவலுற்றவிளமந்தி
கானமுதுவேயின்கண்ணேறித்—தானங்
கிருந்துயரக்கைநீட்டுமீங்கோயேநம்மேல்
வருந்துயரந்தீர்ப்பான்மலை. (கூஅ)

வேய்வனத்துள்யானைதினைகவரவேறிருந்து
காய்வனத்தேவேடன்கணைவிசைப்ப—வேயினைத்து
மாப்பிடிமுன்னெட்டுமீங்கோயேமறைபரவு
பூப்பிடிபொற்றூளான்பொருப்பு. (கூக)

வழுகிதழ்க்காந்தண்மேல்வண்டிருப்பவொண்டூ
முழுகியதென்றஞ்சிமுதுமந்தி—பழுகி
யெழுந்தெழுந்துகைநெரிக்குமீங்கோயேதிங்கட்
கொழுந்தெழுந்தசெஞ்சடையான்குன்று. (எ0)

திருச்சிற்றம்பலம்.

☞ இப்பிரபந்தத்திலே சில செய்யுள்களும் அடிகளும் இறந்துபோயின.

திருச்சிற்றம்பலம்.

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

திருவலஞ்சுழிமும்மணிக்கோவை.

அகவல்.

வணங்குதும்வாழிநெஞ்சேபுணர்ந்துடன்
பொருகடன்முகந்துகருமுகிற்கணஞ்
படவரவொடுங்கமின்னிக்குடவரைப்
பொழிந்துகொழித்திழியருவிகுணகடன்
மகிக்குங்காவிரிமடந்தைவார்புன
லுடுத்தமணிநீர்வலஞ்சுழி
யணிநீர்க்கொன்றையண்ணலதடியே. (க)

வெண்பா.

அடிப்போதுதந்தலைவைத்தவ்வடிகளுன்னிக்
கடிப்போதுகைக்கொண்டார்கண்டார்—முடிப்போதா
வாணகஞ்சூடும்வலஞ்சுழியான்வாளரு
காணதசெம்பொற்கழல். (உ)

கட்டளைக்கலித்துறை.

கழல்வண்ணமுஞ்சடைக்கற்றையுமற்றவர்காணகில்லார்
தழல்வண்ணங்கண்டேதளர்ந்தாரிருவரந்தாமரையி
னிழல்வண்ணம்பொன்வண்ணநீர்நிறவண்ணமெடியவண்ண
மழல்வண்ணமுந்நீர்வலஞ்சுழியாள்கின்றவண்ணமேயே. (ங)

அகவல்.

அண்ணலதுபெருமைகண்டனங்கண்ணுதற்
கடவுண்மன்னியதடமல்குவலஞ்சுழிப்

பனிப்பொருட்பயந்துபல்லவம்பழிக்குந்
திகழொளிமுறுவற்றேமொழிச்செவ்வாய்த்
திருந்திருங்குழலியைக்கண்டு
வருந்தியென்னுள்ளம்வந்தவப்போதே. (ச)

வெண்பா.

போதெலாம்பூங்கொன்றைகொண்டிருந்தபூங்கொன்றைத்
தாதெலாந்தன்மேனித்தைவருமாற்—றீதில்
மறைக்கண்டன்வாழ்வலஞ்சுழியான்சென்னிப்
பிறைக்கண்டங்கண்டணைந்தபெண். (ஞ)

கட்டளைக்கலித்துறை.

பெண்கொண்டிருந்துவருந்துங்கொலாம்பெருமான்றிருமால்
வண்கொண்டசோலைவலஞ்சுழியான்மதிசூடிநெற்றிக்
கண்கொண்டகோபங்கலந்தனபோன்மின்னிக்கார்ப்புனத்துப்
பண்கொண்டுவண்டினம்பாடநின்றூர்த்தனபன்முகிலே. (ரு)

அகவல்.

முகிற்கணமுழங்கமுனிந்தவேழ
மெயிற்றிடையடக்கியவெகுளியாற்ற
வணிநடைமடப்பிடியருகுவந்தணைதரும்
சாரற்றண்பொழிலணைந்துசேரும்
தேனுகுதண்டழைசெறிதருவனத்திற்
சருவரிவாரலெம்பெருநீர்மல்கு
சடைமுடியொருவன்மருவியவலஞ்சுழி
யணிதிகழ்தோற்றத்தங்கயத்தெழுந்த
மணிநீர்க்குவளையன்ன
வணிநீர்க்கருங்கணியழைபொருட்டே. (எ)

வெண்பா.

பொருட்டக்கீர்சில்பலிக்கென்றில்புகுந்தீரேனு
மருட்டக்கீர்யாதுமூரென்றேன்—மருட்டக்க

மாமறையமென்ரூர்வலஞ்சுழிநம்வாழ்வென்ரூர்
தாமறைந்தார்காணேன்கைச்சங்கு. (அ)

கட்டளைக்கலித்துறை.

சங்கம்புரளத்திரைசுமந்தேறுங்கழியருகே
வங்கமலியுந்துறையிடைக்காண்டிர்வலஞ்சுழியா
தங்கம்புலனேந்துமாகியநான்மறைமுக்கணக்கன்
பங்கன்றிருவர்க்கொருவடிவாகியபாவையையே. (கூ)

அகவல்.

பாவையாடியதுறையும்பாவை
மருவொருவளர்ந்தவன்னமுமருவித்
திருவடியடியேன்றீண்டியதிறனுங்
கொடியேனுள்ளங்கொண்டசூழலுங்கள்ளக்
கருங்கண்போன்றகாவியுநெருங்கி
யவளேபோன்றதன்றேதவளச்
சாம்பலம்பொடிசாந்தெனத்தைவந்து
தேம்பல்வெண்பிறைசென்னிமிசைவைத்த
வெள்ளேற்றுழவன்வீங்குபுனல்வலஞ்சுழி
வண்டினம்பாடுஞ்சோலைக்
கண்டவம்மவக்கடிபொழிரூனே. (கo)

வெண்பா.

தானேறுமானேறுகைதொழன்றன்சடைமேற்
றேனேறுகொன்றைத்திறம்பேசேன்—வானேறு
மையாருஞ்சோலைவலஞ்சுழியானென்கொலென்
கையார்வளைகவர்ந்தவாறு. (கக)

கட்டளைக்கலித்துறை.

ஆறுகற்றைச்சடைக்கொண்டொருற்றைப்பிறைசூடிமற்றைக்
கூறுபெண்ணுயவன்கண்ணூர்வலஞ்சுழிக்கொங்குதங்கு
நாறுதண்கொம்பரன்னீர்களின்னேநடந்தேகடந்தார்
சீறுவெஞ்சிலக்கானவர்வாழ்கின்றசேணெறியே. (கஉ)

அகவல்.

நெறிதருகுழலிவிறலியொடுபுணர்ந்த
செறிதருதமிழ்நூற்சீரியாழ்ப்பாண
பொய்கையூரன்புதுமணம்புணர்தர
மூவாமூன்றுபயன்பெற்றனமேயவன்
பூணாரமாலைபொருந்தப்பாடி
யில்லதுமுள்ளதுஞ்சொல்லிக்கல்லல்
வாசகம்வழாமற்பேசவண்மையில்
வானரமகளிர்வான்பொருள்பெற்றனையவரே
லெங்கையர்கொங்கைக்குங்குமந்தழீஇ
விழையாவின்பம்பெற்றனர்யானே
லரனமர்ந்துறையுமணிநீர்வலஞ்சுழிச்
சுரும்பிவர்நறவயிற்சூழ்ந்தெழுதரும்பிற்
றீநீரன்னவாய்நீர்சோருஞ்
சிலம்புகுரற்சிறுபறைபூண்ட
வலம்புகுரற்கிங்கிணிக்களிறுபெற்றனனே. (கந)

வெண்பா.

தனமேறிப்பீர்பொங்கித்தன்னங்கம்வேரூய்
மனம்வேறுபட்டொழிந்தாண்மாதோ—வினமேறிப்
பாடாலம்வண்டலம்பும்பாய்நீர்வலஞ்சுழியான்
கோடாலங்கண்டணைந்தகொம்பு. (கஅ)

கட்டளைக்கலித்துறை.

கொம்பார்குளிர்மறைக்காடனைவானவர்கூடிநின்று
நம்பாவெனவணங்கப்பெறுவானகரெரிய
வம்பாய்ந்தவனைவலஞ்சுழியானையண்ணுமலைமேல்
வம்பார்நறுங்கொன்றைத்தாருடையானைவணங்குதுமே. (கஆ)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

திருவெழுகூற்றிருக்கை.

ஓருடம்பீருருவாயினையொன்றுபுரிந்
தொன்றிநீரிதழ்க்கொன்றைசூடினை
மூவிலைச்சூலமேந்தினை
சுடருஞ்சென்னிமீமிசை
யிருகோட்டொருமதியெழில்பெறமிலைத்தனை
யொருகணையிருதோள்செவியுறவாங்கி
மூவெயிலுற்றிசைமுரணரண்செகுத்தனை
யாற்றமுன்னெறிபயந்தனை
செறியவிரண்டுநீக்கி
யொன்றுநினைவோர்க்குறுதியாயினை
யங்ஙெறியொன்று
மனம்வைத்திரண்டுநினைவிலோர்க்கு
முன்னெறியுலகங்காட்டினையங்ஙெறி
நான்கெனவூழிதோற்றினை
சொல்லுமைந்தலையரவசைத்தசைத்தனை
நான்முகன்மேன்முகங்கபாலமேந்தினை
நூன்முகமுப்புரிமார்பி
லிருவரங்கமொருங்குடனேந்திய
வொருவரின்னுதிகாணுதிருவர்
மூவுலகுழன்றுநாற்றிசையுழிதர
வைம்பெருங்குன்றத்தழலாய்த்தோன்றினை
யாறுநின்சடையதுவைந்துநின்னிலையது
நான்குநின்வாய்மொழிமூன்றுநின்கண்ணே

யிரண்டுநின் குழையேயொன் றுநின் னேறே
யொன்றியகாட்சியுமையவணங்க
விருங்களிற்றுரிவைபோர்த்தனெருங்கி
மூத்தீநான்மறையம்புலனடக்கிய
வறுதொழிலாளர்க்குறுதிபயந்தனே
யேழிலின்னரம்பீசைத்தனே
யாறிலமுதம்பயந்தனையைந்தில்
விறலியர்கொட்டுமழுத்தவேந்தினே
யாலநீழலன்றிருந்தறநெறி
நால்வர்கேட்கநன்கினி துரைத்தனே
னன்றியில்லாமுந்நீர்ச்சூர்மாக்
கொன்றங்கிருவரையெறிந்தவொருவன்
றூதையொருமிடற்றிருவடிவாயினே
தருமமூவகையுலகமூணரக்
கூறுவனுல்வகை
யிலக்கணவிலக்கியநலத்தகமொழிந்தனே
யைங்கணேயவனுகொலனேயடர்த்தனே
யறுவகைச்சமயமுநெறிமையில்வகுத்தனே
யேழிஞைசையிராவணன்பாடத்
தாழ்வாய்க்கேட்டவன்றலையளிபொருத்தினே
யாறியசிந்தையாகியைங்கதித்
தேரொடுதிசைசெலவிடுத்தோ
னுற்றரூணலனெனத்திபிங்கிருடியென்
றேற்றபூதமூன்றுடன்பாட
விருகண்மொந்தையொருகணங்கொட்ட
மட்டவிரியலங்கன்மலைமகள்காண
கட்டமாடியநம்பவதனுற்
சிறியேன்சொன்னவறிவில்வாசகம்
வறிதெனக்கொள்ளாயாகவேண்டும்
வெறிகமழ்கொன்றையொடுவெண்ணிலவணிந்து

கீதம்பாடியவண்ணல்
பாதஞ்சென்னியிற்பரவுவன்பணிந்தே.

வெண்பா.

பணிந்தேனின்பாதம்பரமேட்டீபானீ
றணிந்தாலவாயிலமர்ந்தாய்—தணிந்தென்மேல்
மெய்யெரிவுதீரப்பணித்தருளுவேதியனே
யையபுறவொன்றின்றியமர்ந்து.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

பெருந்தேவபாணி.

சூலபாணியைசுடர்தருவடிவனே
நீலகண்டனேநெற்றியோர்கண்ணனே
பால்வெண்ணீற்றனேபரமயோகியை
காலனைக்காய்ந்தகறைமிடற்றண்ணலே
நூலணிமார்பனே நுண்ணியகேள்வியை
கோலமேனியைகொக்கரைப்பாடலே
வேலுடைக்கையனேவிண்டோய்முடியனே
ஞாலத்தீயினேநாதனைக்காய்ந்தனே
தேவதேவனேதிருமறுமார்பனே
காலமாகியகடிகமழ்தாரனே
வேதகீதனேவெண்டலையேந்தியை

பாவநாசனே பரமேச்சுவரனே
கீதம்பாடியைகிளர்பொறியரவனே
போதணிகொன்றையெம்புண்ணியவொருவனே
யாதிமூர்த்தியையமரர்கடலவனே
சாதிவானவர்தம்பெருமான்றனே
வேதவிச்சையைவிடையுடையண்ணலே
யோதவண்ணனேயுலகத்தொருவனே
நாதனேகியநன்னெறிப்பொருளினே
மாலைதானெரிமயானத்தாடியை
வேலைநஞ்சினைமிகவமுதாக்கியை
வேதவேள்வியைவிண்ணவர்தலைவனே
யாதிமூர்த்தியையருந்தவமுதல்வனே
யாயிரநூறுக்கறிவரியானேயே
யுருவுதந்தபிறையணிசடையனே
மாசறுசோதியைமலமகள்கொழுனனே
கூரியமழுவனேகொலற்கருங்காலனைச்
சீரியவடியாற்செற்றருள்சிவனே
பூதிப்பையனேபுண்ணியமூர்த்தியை
பீடுடையாற்றைப்பிராணிதலைவனே
நீடியநிமலனேநிறைமறைப்பொருளினே
யீசனேயிறைவனேயீறில்பெருமையை
நேசனேநினைப்பவர்நெஞ்சத்துள்ளனே
தாதணிமலரனேதருமனேபிரமனே
காதணிகுழையனேகளிற்றினுரியனே
சூழ்சடைப்புனலனேசுந்தரவிடங்கனே
தார்மலர்க்கொன்றைதயங்குமார்பனே
வித்தகவீதியனே
நீதமர்செய்கைத்திரிபுரமெரித்தனே
பிரமன்பெருந்தலைநிறையதாகக்
கருமன்செங்கீர்கபாலநிறைத்தனே

நிறைத்தகபாலச்செங்நீர்நின்று
மூறைத்தவுருவாரையனைத்தோற்றினை
தேவருஞ்சுரருந்திறம்படக்கடைந்த
வார்வமுணஞ்சமுதமாக்கினை
மீரமினைஞ்சத்திராவணன்றன்னை
வீரமழித்துவிறல்வாள்கொடுத்தனை
திக்கமர்தேவருந்திருந்தாச்செய்கைத்
தக்கன்வேள்வியைத்தளரச்சாடினை
வேதமுநீயேவேள்வியுநீயே
நீதியுநீயேநிமலநீயே
புண்ணியநீயேபுனிதனீயே
பண்ணியனீயேபழம்பொருணீயே
யூழியுநீயேயுலகமுநீயே
வாழியுநீயேவரதனுநீயே
தேவருநீயேதீர்த்தமுநீயே
மூவருநீயேமுன்னைறிநீயே
மால்வரைநீயேமறிகடனீயே
யின்பமுநீயேதுன்பமுநீயே
தாயுநீயேதந்தையுநீயே
விண்முதற்பூதமைந்தவைநீயே
புத்தியுநீயேமுத்தியுநீயே
சொலற்கருந்தன்மைத்தொல்லோய்நீயேயதனால்
கூடலாலவாய்க்குழகனுவ
தறியாதருந்தமிழ்பழித்தனனடியே
னீண்டியசிறப்பிலிணையடிக்கீழ்நின்று
வேண்டுமதுவினிவேண்டுவன்விரைந்தே.

வேண்பா.

விரைந்தேன்மற்றெம்பெருமான்வேண்டியதுவேண்டா
திகழ்ந்தேன்பிழைத்தேனடியேன்—விரைந்தென்மேற்

சீற்றத்தைத்தீர்த்தருளுதேவாதிதேவனே
யாற்றவுஞ்செய்யுமருள்.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

கோபப்பிரசாதம்.

தவறுபெரிதுடைத்தேதவறுபெரிதுடைத்தே
வெண்டிரைக்கருங்கடன்மேற்றுயில்கொள்ளு
மண்டவாணனுக்காழியன்றருளியு
முலகமூன்றுமொருங்குடன்படைத்த
மலரோன்றன்னேவான்சிரமரிந்துங்
கானவேடுவன்கண்பரிந்தப்ப
வானநாடுமற்றவற்கருளியுங்
கடிபடுபூங்கணைக்காமனுருடல்
பொடிபடவிழித்தும்பூதலத்திசைந்த
மானுடனுகியசண்டியை
வானவனுக்கியு
மறிகடலுலகின்மன்னுயிர்கவருங்
கூற்றுவன்றனக்கோர்கூற்றுவனுகியுங்
கடல்படுநெஞ்சங்கண்டத்தடக்கியும்
பருவரைசிலையாப்பாந்தணுணத்
திரிபுரமெரியவொருகணைதுரந்துங்
கற்கொண்டெறிந்தசாக்கியனன்பு
தற்கொண்டின்னருடான்மிகவளித்துங்

கூற்றெனத்தோன்றியுங்கோளரிபோன்றுங்
தோற்றியவாரணத்தீருரிபோர்த்து
நெற்றிக்கண்ணுளீள்புயநான்கு
நற்றுணந்தீச்சுவரார்க்கருளியு
மறிவினையோராவரக்களருட
னெறநெறவிறுதரவொருவிரலூன்றியுந்
திருவுருவத்தொடுசெங்கணேறு
மரியனதிண்டிறலசுரனுக்கருளியும்
பல்கதிருரவோன்பற்கெடப்பாய்ந்து
மல்குபிருங்கிருடிக்குமாவரமீந்துந்
தக்கன்வேள்வித்தகைகெடச்சிதைத்து
மிக்கவரநந்திமாகாளர்க்கருளியுஞ்
செந்தீக்கடவுடன்கரதலஞ்செற்றும்
பைந்தார்நெடும்படைபார்த்தற்கருளியுங்
கதிர்மதிதனையோர்காற்பயன்கெடுத்து
நிதிபயில்குபேரற்குநீணகரீந்துஞ்
சலந்தரனுடலந்தான்மிகத்தடிந்து
மறைபயின்மார்க்கண்டேயனுக்கருளியுந்
தாரகற்கொல்லமுன்காளியைப்படைத்துஞ்
சீர்மலிசிலந்திக்கின்னரசளித்துங்
கார்மலியுருவக்கருடனேக்காய்ந்து
மாலின்கீழிருந்தறநெறியருளியு
மின்னவைபிறவுமெங்களீசன்
கோபப்பிரசாதங்கூறுங்காலைக்
கடிமலரிருந்தோன்கார்க்கடற்கிடந்தோன்
புடைமுறுசோலைப்பொன்னகர்காப்போ
னுரைப்போராகிலுமொண்கடன்மாநீ
ரங்கைகொண்டிறைக்குமாதன்போன்றுள
ரொடுங்காப்பெருமையும்பர்கோனே
யடங்காவைம்புலத்தறிவில்சிந்தைக்

கிருமிநாவாற்கிளத்தும்பரமேயதா அன்
றொருவகைத்தேவருமிருவகைத்திறமு
மூவகைக்குணமுநால்வகைவேதமு
மைவகைப்பூதமுமறுவகையிரதமு
மெழுவகையோசையுமெண்வகைஞானமு
மொன்பதின்வகையுமொண்மலர்ச்சிறப்பும்
பத்தின்வகையுமாகியபரனே
யின்பனேநினேவோர்க்கென்னிடையழுதினேச்
செம்பொனேமணியினேத்தேனினேப்பாலினேத்
தஞ்சமென்றெழுகுந்தன்னடியார்த
நெஞ்சம்பிரியாநிமலனேநீயெர்
செந்தழற்பவளச்சேணுறுவரையனே
மூக்கட்செல்வனேமுதல்வனேமூர்த்தியைக்
கள்ளங்கைவிட்டுள்ளமதுருகிக்
கலந்துகசிந்துதன்கழலிணையவையே
நினைந்திடவாங்கேதோன்றுநிமலனைத்
தேவதேவனைத்திகழ்சிவலோகனைப்
பாவநாசனைப்படரொளியுருவனை
வேயார்தோளிமெல்லியல்கூறனைத்
தாயாய்மன்னுயிர்தாங்குந்தந்தையைச்
சொல்லும்பொருளுமாகியசோதியைக்
கல்லுங்கடலுமாகியகண்டனைத்
தோற்றநிலையீறுகியதொன்மையை
நீற்றிடைத்திகழுநித்தனேமுத்தனே
வாக்குமனமுமிறந்தமறையனைப்
பூக்கமழ்சடையனைப்புண்ணியநாதனை
யினையதன்மையனென்றறிவரியவன்
றனைமுன்விட்டுத்தாமற்றுநினைப்போர்
மாமுயல்விட்டுக்
காக்கைபின்போங்கலவர்போலவும்

விளக்கங்கிருப்பமின்மினிகவரு
மளப்பருஞ்சிறப்பிலாதர்போலவுங்
கச்சங்கொண்டுகடுந்தொழின்முடியாக்
கொச்சைத்தேவரைத்தேவரென்றெண்ணிப்
பிச்சரைப்போலவோ
ராரியப்புத்தகப்பேய்கொண்டுபுலம்புற்று
வட்டணைபேசுவர்மானுடம்போன்று
பெட்டினையுரைப்போர்பேதையர்நிலத்
துன்றலைமீன்றலையெண்பலமென்றுலதனை
யறுத்துநிறுப்போரொருத்தரின்மையின்
மத்திரமாகுவர்மாநெறிகிடப்பவோர்
சித்திரம்பேசுவர்தேவராகி
லின்னோர்க்காய்ந்தனரின்னோர்க்கருளினரென்றறிய
வுலகின்முன்னேயுரைப்பதில்லையாகிலு
மாடுபோலக்கூடிநின்றழைத்து
மாக்கள்போலவேட்கையீடுண்டு
மிப்படிஞானமப்படியமைத்து
மின்னதன்மையனென்றிருநிலத்து
முன்னேயறியாமூர்க்கமாக்களை
யின்னேகொண்டேகாக்கூற்றந்
தவறுபெரிதுடைத்தேதவறுபெரிதுடைத்தே.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

காரெட்டு.

அரவமரைக்கசைத்தவண்ணல்சடைபோல்
விரவியெழுந்தெங்குமின்னி—யரவினங்க
ளச்சங்கொண்டோடியணையவடைவுற்றே
கைச்சங்கம்போன்முழங்குங்கார். (க)

மையார்மணிமிடறுபோற்கருகிமற்றவன்றன்
கையார்சிலைவிலகிக்காட்டிற்றே—யையா
யழலரவம்பூண்டானவிர்சடைபோன்மின்னிக்
கழலரவங்காண்புற்றகார். (உ)

ஆலமர்கண்டத்தரன்றன்மணிமிடறுங்
கோலக்குழற்சடையுங்கொல்லேறும்—போல
விருண்டொன்றுமின்றேன்றியம்பொனவ்வானங்
கருண்டொன்றுகூறுதலிற்கார். (ங)

இருள்கொண்டகண்டத்திறைவன்றன்சென்னிக்
குருள்கொண்டசெஞ்சடைபோன்மின்னிச்—சுருள்கொண்டு
பாம்பினங்களுஞ்சிப்படமொடுங்கவார்த்ததே
காம்பினங்கடோளீயக்கார். (ச)

கோடரவங்கோடலரும்பக்குருமணிகான்
றூடரவமெல்லாமலையடைய—நீடரவப்
பொற்பகலம்பூண்டான்புரிசடைபோன்மின்னிற்றே
கற்பகலங்காண்புற்றகார். (ஞ)

பாரும்பனிவிசும்பும்பாசுபதன்பல்சடையு
மாருமிருள்கீண்டுமின்விலகி—யூரு
மரவஞ்செலவஞ்சுமஞ்சொலார்காண்பார்
கரவிந்தமென்பாரக்கார். (சு)

செழுந்தழல்வண்ணன்செழுஞ்சடைபோன்மின்னி
யழுந்தியலர்போலுயர—வெழுந்தெங்கு
மாவிசோர்நெஞ்சினரையன்பளக்கவுற்றதே
காவிசேர்கண்ணுயக்கார். (எ)

காந்தண்மலரக்கமழ்கொன்றைபொன்சொரியப்
பூந்தளவமாரப்புகுந்தின்றே—யேந்தொளிசே
ரண்டம்போன்மீதிருண்டவாதியாஞ்மணிசேர்
கண்டம்போன்மீதிருண்டகார். (அ)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

போற்றித்திருக்கலிவெண்பா.

திருத்தங்குமார்பிற்றிருமால்வரைபோ
லெருத்தத்திலங்கியவெண்கோட்டுப்—பருத்த
குறுத்தாணெழுக்கிற்குன்றிக்கணீல
நிறத்தாற்பொலிந்துநிலமே—முறத்தாழ்ந்து
பன்றித்திருவுருவாய்க்காணுதபாதங்க
ணின்றவாநின்றநிலைபோற்றி—யன்றியும்
புண்டரிகத்துள்ளிருந்தபுத்தேள்கழுகுருவா

யண்டரண்டமூடுருவவாங்கோடிப்—பண்டொருகாள்
காணுனிழியக்கனகமுடிகவித்துக்
கோணுதுனின்றகுறிபோற்றி—நாணுளும்
பேணிக்காலங்கள்பிரியாமைப்பூசித்த
மாணிக்காவன்றுமதிற்கடவூர்க்—காண
வரத்திற்பெரியவலிதொலைத்தகால
னுரத்திலுதைத்தவுதைபோற்றி—கரத்தாமே
வெற்பன்மடப்பாவைகொங்கைமேற்குங்குமத்தின்
கற்பழியும்வண்ணங்கரிவிப்பான்—பொற்புடைய
வாமன்மகனுய்மலர்க்கணெயன்றெட்டியவக்
காமனழகழித்தகண்போற்றி—தூமப்
படமெடுத்தவாளரவம்பார்த்தாடப்பற்றி
விடமெடுத்தவேகத்தான்மிக்குச்—சடல
முடங்கவலிக்குமுயலகன்றன்மொய்ம்பை
யடங்கமிதித்தவடிபோற்றி—ஙங்கத்
திருமான்முதலாயதேவாசுரர்கள்
கருமால்கடனுகம்பற்றிக்—குருமாற
நீலமுண்டநீண்முகில்போனெஞ்சழலவந்தெழுந்த
வாலமுண்டகண்டமதுபோற்றி—சாலமண்டிப்
போருகந்தவானவர்கள்புக்கொடுங்கமிக்கடர்க்குந்
தாரகன்றன்மார்பிற்றனிச்சூலம்—வீரங்
கொடுத்தெதிரியுமாகாளிகோபந்தவிர
வெடுத்தநடத்தியல்புபோற்றி—தடுத்து
வரையெடுத்தவாளரக்கன்வாயாறுதிர
நிரையெடுத்துநெக்குடலமிற்றுப்—புரையெடுத்த
பத்தனையபொன்முடியுந்தோளிருபதுங்கொரிய
மெத்தெனவேவைத்தவிரல்போற்றி—யத்தகத்த
வானவர்கடாங்கூடிமந்திரித்தமந்திரத்தை
மேனவிலவோடிவிதிர்விதிர்த்துத்—தானவருக்
கொட்டிக்குறளாயுரைத்தவயன்றிரத்தை

வெட்டிச்சிரித்தவிறல்போற்றி—மட்டித்து
வாலுகத்தானல்லிலிங்கமாவகுத்துமற்றதன்மேற்
பாலுகுப்பக்கண்டுபெதைத்தோடி—மேலுகைத்தங்
கோட்டியவன்றூதையிருதாளெறிந்துயிரை
வீட்டியசண்டிக்குவேறுக—நாட்டின்கட்
பொற்கோயிலுள்ளிருத்திப்பூமாலைபோனகமு
நற்கோலமீந்தநலம்போற்றி—நிற்க
வலந்தருமானன்முகனும்வானவருங்கூடி
யலந்தருமால்கொள்ளவடர்க்குஞ்—சலந்தரனைச்
சக்காத்தாலீர்ந்தரிதன்றூமைக்கண்சாத்துதலு
மிக்கவஃதீந்தவிறல்போற்றி—யக்கணமே
நக்கிருந்தாமகளேமூக்கரிந்தூனல்வேதந்
தொக்கிருந்தவண்ணந்துதிசெய்ய—மிக்கிருந்த
வங்கைத்தலத்தேயணிமானேயாங்கணிந்த
செங்கைத்திறத்தறல்போற்றி—திங்களைத்
தேய்த்ததுவேசெம்பொற்செழுஞ்சடைமேற்சேர்வித்து
வாய்த்திமையோர்தம்மையெல்லாம்வான்சிறையிற்—பாய்த்திப்
பிரமன்குறையிரப்பப்பின்னுமவர்க்கு
வரமன்றளித்தவலிபோற்றி—புரமெரித்த
வன்றுய்ந்தமூவர்க்கமர்ந்துவரமளித்து
நின்றுய்ந்தவண்ணநிகழ்வித்து—நன்று
கடைகாவன்மிக்கவருள்கொடுத்துக்கோயிற்
கடைகாவல்கொண்டவாபோற்றி—விடைகாவற்
றூனவர்கட்காற்றுதன்னடைந்தநன்மைவிறல்
வானவர்கள்வேண்டமயிலூருங்—கோனவனைச்
சேனபதியாகச்செம்பொன்மூடிகவித்து
வாளுளைவைத்தவரம்போற்றி—மேனு
ளதிர்த்தெழுந்தவந்தகனையண்டரண்டமுய்யக்
கொதித்தெழுந்தசூலத்தாற்கோத்துத்—துதித்தங்
கவனிருக்கும்வண்ணமருள்கொடுத்தங்கேழுழ்

பவமறுத்தபாவனைகள்போற்றி—கவைமுகத்த
பொற்பாகரைப்பிளந்துகூறிரண்டாப்போகட்டு
மெற்பாசரைப்போகமேல்விலகி—நிற்பால
மும்மதத்துவெண்கோட்டுக்கார்நிறத்துப்பைந்தறுகண்
வெம்மதத்தவேகத்தான்மிக்கோடி—விம்மி
யடர்த்திரைத்துப்பாயும்மடுகளிற்றைப்போக
வெடுத்தூரித்துப்போர்த்தவிறைபோற்றி—தொடுத்தமைத்த
நாண்மாலைகொண்டணிந்தநால்வர்க்கன்ருனிழற்கீழ்
வாண்மாலையாகும்வகையருளித்—தோண்மாலை
விட்டிலங்கத்தக்கிணைமேகோக்கிவியந்தருண
மெட்டிலங்கவைத்தவிறைபோற்றி—யொட்டி
விசையன்விசையளப்பான்வேடருவமாகி
யசையவுடறிரியகின்று—வசையிஞற்
பேசுபதப்பான்பிழைபொறுத்துமற்றவற்குப்
பாசுபதமீந்தபதம்போற்றி—நேசத்தால்
வாயினீர்கொண்டுமகுடத்துமிந்திறைச்சி
யாயசீர்ப்போனகமாவங்கமைத்துத்—தூயசீர்க்
கண்ணிடந்தகண்ணப்பர்தம்மைமிகக்காதலித்து
வீண்ணுலகமீந்தவிறல்போற்றி—மண்ணின்மேற்
காளத்திபோற்றிகயிலைமலைபோற்றியென
நீளத்திருனினைந்துநிற்பார்க—டாளத்தோ
டெத்திசையும்பன்முரசமார்த்திமையோர்போற்றிசைப்ப
வத்தனடிசேர்வார்களாங்கு.

கிருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

திருமுருகாற்றுப்படை.

இணைக்குறளாசிரியப்பா.

முதலாவது

திருப்பரங்குன்றம்.

உலகமுவப்பவலனேர்புதிரிதரு
பலர்புகழ்ஞாயிறுகடற்கண்டாஅங்
கோவறவிமைக்குஞ்சேண்விளங்கவிரொளி
யுறுகர்த்தாங்கியமதனுடைநோன்ரூட்
செறுகர்த்தேய்த்தசெல்லுறழ்தடக்கை
மறுவில்கற்பின்வாணுதல்கணவன்
கார்கோண்முகந்தகமஞ்சுன்மாமழை
வாள்போழ்விசும்பின்வள்ளுறைசிதறித்
தலைப்பெயறலையியதண்ணறுங்கானத்
திருள்படப்பொதுளியபராரைமராஅத்
தருள்பூந்தண்டார்புரளுமார்பினன்
மால்வரைநிவந்தசேணுயர்வெற்பிற்
கிண்கிணிகவையியவொண்செஞ்சீறடிக்
கணைக்கால்வாங்கியநுசுப்பிற்பணைத்தோட்
கோபத்தன்னதோயப்பூந்துகிற்
பல்காசுநிரைத்தசில்காழல்குற்
கைபுனைந்தியற்றுக்கவின்பெறுவனப்பி
னவலொடுபெயரியபொலம்புனையவிரிழைச்
சேணிகந்துவிளங்குஞ்செயிர்தீர்மேனித்
தூணையோராய்ந்தவிணையீரோதிச்

செங்கால்வெட்சிச்சிறிதழிடையிடுபு
பைந்தாட்குவளைத்தூவிதழ்கிள்ளித்
தெய்வவுத்தியொவெலம்புரிவயின்வைத்துத்
திலகந்தையியதேங்கமழ்திருநுதன்
மகரப்பகுவாய்தாழமண்ணுறுத்துத்
துவரமுடித்ததுகளறுமுச்சிப்
பெருந்தண்சண்பகஞ்செரீஇக்கருந்தகட்
டிளாப்பூமருதிலெள்ளிணரட்டிக்
கிளாக்கவின்றெழுதருகீழ்நீர்ச்செவ்வரும்
பிணைப்புறுபிணையல்வளாஇத்துணைத்தக
வண்காதுநிறைந்தபிண்டியொண்டளிர்
நுண்பூணுகந்திளாப்பத்திண்காழ்,
நறுங்குறடிரிஞ்சியபூங்கேழ்த்தேய்வை
தேங்கமழ்மருதினர்கடுப்பக்கோங்கின்
குவிமுகிழிளமுலைக்கொட்டிவிரிமலர்
வேங்கைநுண்டாதப்பிக்காண்வர
வெள்ளிற்குறுமுறிகிள்ளுபுதெறியாக்
கோழியோங்கியவென்றடிவிறற்கொடி
வாழியபெரிதென்றேத்திப்பலருடன்
சீர்திகழ்சிலம்பகஞ்சிலம்பப்பாடிச்
சூரமகளிராடுஞ்சோலை
மந்தியுமறியாமரன்பயிலடுக்கத்துச்
சூரும்புமூசாச்சுடர்ப்பூங்காந்தட்
பெருந்தண்கண்ணிமிலைந்தசென்னியன்
பார்முதிர்பனிக்கடல்கலங்கவுள்புக்குச்
சூர்முதறடிந்தசுடரிலைநெடுவே
லுலறியகதுப்பிற்பிறழ்பற்பேழ்வாய்ச்
சுழல்விழிப்பசுங்கட்சூர்த்தநோக்கிற்
கழல்கட்கூகையொடுகடும்பாம்புஞ்சுங்கப்
பெருமுலையலைக்குங்காதிற்பிணர்மோட்

திருகெழுசெலவினஞ்சுவருபேய்மகள்
குருதியாடியகூருகிர்க்கொடுவிரற்
கண்டொட்டுண்டகழிமுடைக்கருந்தலை
யொண்டொடித்தடக்கையினேந்திவெருவர
வென்றடுவிறற்களம்பாடித்தோள்பெயரா
நிணந்தின்வாயடுணங்கைதூங்க
விருபேருருவிலைருபேரியாக்கை
யறுவேறவகையினஞ்சுவரமண்டி
யவுணர்நல்வலமடங்கக்கவிழிணர்
மாமுதறடிந்தமறுவில்கொற்றத்
தெய்யாநல்லிசைச்செவ்வேற்சேஎய்
சேவடிபடருஞ்செம்மலுள்ளமொடு
நலம்புரிகொள்கைப்புலம்புரிந்துறையுஞ்
செலவுநீநயந்தனையாயிற்பலவுட
னன்னர்நெஞ்சத்தின்னசைவாய்ப்ப
வின்னேபெறுதிநீமுன்னியவினையே
செருப்புகன்றெடுத்தசேணுயர்நெடுங்கொடி
வரிப்புனைபந்தொடுபாவைதூங்கப்
பொருநர்த்தேய்த்தபோரருவாயிற்
றிருவீற்றிருந்ததீதுதீர்நியமத்து
மாடமலிமறுகிற்கூடற்குடவயி
னிருஞ்சேற்றகல்வயல்வீரிந்துவாயவிழ்ந்த
மூட்டாட்டாமரைத்துஞ்சிவைகறைக்
கட்கமழ்நெய்தலூதியெற்படக்
கண்போன்மலர்ந்தகாமர்சுனைமல
ரஞ்சிறைவண்டினரிக்கணமொலிக்குங்
குன்றமர்ந்துறைதலுமூரியனதாஅன்று.

இரண்டாவது

திருச்சீரலைவாய்.

வைந்நுதிபொருதவடிவாழ்வரிநுதல்
வாடாமாலையோடையொடுதுயல்வரப்
படுமணியிரட்டுமருங்கிற்கடுநடைக்
கூற்றத்தன்னமாற்றருமொய்ம்பிற்
கால்கிளர்ந்தன்னவேழமேல்கொண்
டைவேறுருவிற்செய்வினைமுற்றிய
முடியொடுவிளங்கியமுரண்மிகுதிருமணி
மின்னுறழிமைப்பிற்சென்னிப்பொற்ப
நகைதாழ்புதுயல்வருஉம்வகையமைபொலங்குழை
சேண்விளங்கியற்கைவாண்மதிகவைஇ
யகலாமீனினவிர்வனவிமைப்பத்
தாவில்கொள்கைத்தந்தொழின்முடிமார்
மனனேர்பெழுதருவாணிறமுகனே
மாயிருண்ஞாலமறுவின்றிவிளங்கப்
பல்கதிர்விரிந்தன்றொருமுகமொருமுக
மார்வலரேத்தவமர்ந்தினிதொழுகிக்
காதலினுவந்துவரங்கொடுத்தன்றேயொருமுக
மந்திரவிதியின்மரபுளிவழாஅ
வந்தணர்வேள்வியோர்க்கும்மேயொருமுக
மெஞ்சியபொருள்களேயெறநாடித்
திங்கள்போலத்திசைவிளக்கும்மேயொருமுகஞ்
செறுநர்த்தேய்த்துச்செல்சமமுருக்கிக்
கறுவுகொணெஞ்சமொடுகளம்வேட்டன்றேயொருமுகங்
குறவர்மடமகள்கொடிபோனுசுப்பின்
மடவரல்வள்ளியொடுநகையமர்ந்தன்றேயாங்கம்
மூவிருமுகனுமுறைநவின்றொழுகலி
னாந்தாழ்ந்தவம்பகட்டுமார்பிற்
செம்பொறிவாங்கியமொய்ம்பிற்சுடர்விடுபு

வண்புகழ்நிறைந்துவசிந்துவாங்குநிமிர்தோள்
விண்செலன்மரபினையர்க்கேந்தியதொருகை
யுக்கஞ்சேர்த்தியதொருகை
நலம்பெறுகலிங்கத்துக்குறங்கின்மிசை
யசைஇயதொருகை
யங்குசங்கடாவவொருகையிருகை
யையிருவட்டமொடைஃகுவலந்திரிப்பவொருகை
மார்பொடிவிளங்கவொருகை
தாதொடுபொலியவொருகை
கீழ்வீழ்தொடியொடுமீமிசைக்கொட்பவொருகை
பாடின்படுமணியிரட்டவொருகை
நீனிறவிசும்பின்மலிதுளிபொழியவொருகை
வானமகளிர்க்குவதுவைசூட்டவாங்கப்
பன்னிருகையும்பாற்படவியற்றி
யந்தரப்பல்லியங்கறங்கத்திண்காழ்
வயிரெழுந்திசைப்பவால்வளைகரல
வுரந்தலைக்கொண்டவுருமிடிமுரசமொடு
பல்பொறிமஞ்ஞைவெல்கொடியகவ
விசும்பாறுகவிரைசெலன்முன்னி
யுலகம்புகழ்ந்தவோங்குயர்விழுச்சீ
ரலைவாய்ச்சேறலுங்கலியபண்பேயதா அன்று.

மூன்றுவது

திருவாவினன்குடி.

சீரைதையியவுடுக்கையர்சீரொடு
வலம்புரிபுரையும்வானரைமுடியினர்
மாசறவிமைக்குமுருவினர்மானி
னூரிவைதையியனுன்கெடுமார்பி
னென்பெழுந்தியங்குமியாக்கையர்நன்பகற்

பலவுடன்கழிந்தவுண்டியரிகலொடு
செற்றநீக்கியமனத்தினரியாவதுங்
கற்றோரறியாவறிவினர்கற்றோர்க்குத்
தாம்வரம்பாகியதலைமையர்காமமொடு
கடுஞ்சினங்கடிந்தகாட்சியரிடும்பை
யாவதுமறியாவியல்பினர்மேவரத்
தூனியில்காட்சிமுனிவர்முற்புகப்
புகைமுகந்தன்னமாசிறாவுடை
முகைவாயவிழ்ந்ததகைசூழாகத்துச்
செவிதோர்புவைத்தசெய்வுறுதிவவி
னல்லியாழ்நவின்றநயனுடைநெஞ்சின்
மென்மொழிமேவலரின்னரம்புளர
நோயின்றியன்றயாக்கையர்மாவி
னவிர்தளிர்புரையுமேனியரவிர்தொறும்
பொன்னுரைகடுக்குந்திதலையரின்னகைப்
பருமத்தாங்கியபணிந்தேந்தல்குன்
மாசின்மகளிரொடுமறுவின்றிவிளங்கக்
கடவோடொடுங்கியதூம்புடைவாலெயிற்
றழலெனவுயிர்க்குமஞ்சுவருகடுந்திறற்
பாம்புபடப்புடைக்கும்பல்வரிக்கொடுஞ்சிறைப்
புள்ளணிநீள்கொடிச்செல்வனும்வெள்ளிறு
வலவயினுயரியபலர்புகழ்திணிதோ
ளுமையமர்ந்துவிளங்குமிமையாமுக்கண்
மூவெயின்முருக்கியமுரண்மிகுசெல்வனு
நூற்றுப்பத்தடுக்கியநாட்டத்துநூறுபல்
வேள்வியுமுற்றியவென்றடுகொற்றத்
தீரிரண்டேந்தியமருப்பினெழினடைத்
தாழ்பெருந்தடக்கையுயர்த்தயானை
யெருத்தமேறியதிருக்கிளர்செல்வனு
நாற்பெருந்தெய்வத்துநன்னகர்நிலைஇய

வுலகங்காக்குமொன்றுபுரிகொள்கைப்
பலர்புகழ்மூவருந்தலைவராக
வேமுறுஞாலந்தன்னிற்றோன்றித்
தாமரைபயந்ததாவிலூழி
நான்முகவொருவற்சுட்டிக்காண்வரப்
பகலிற்றோன்றுமிகலில்காட்சி
நால்வேறியற்கைப்பதினெருமூவரோ
டொன்பதிற்றிராட்டியுயர்நிலைபெறீஇயர்
மீன்பூத்தன்னதோன்றலர்மீன்சேர்பு
வளிகிளர்ந்தன்னசெலவினர்வளியிடைத்
தீயெழுந்தன்னதிறலினர்தீப்பட
வுருமிடித்தன்னகுரலினர்விழுமிய
வுறுகுறைமருங்கிற்றம்பெறுமுறைகொண்மா
ரந்தரக்கொட்பினர்வந்துடன்காணத்
தாவில்கொள்கைமடந்தையொடுசின்ன
ளாவினன்குடியசைதலுமுரியனதாஅன்று.

நான்காவது

திருவேரகம்.

இருமூன்றெய்தியவியல்பினின்வழாஅ
திருவர்ச்சுட்டியபல்வேறுதொல்குடி
யறுநான்கிராட்டியிளமைநல்லியாண்
டாறினிற்கழிப்பியவறனவில்கொள்கை
மூன்றுவகைக்குறித்தமுத்தீச்செல்வத்
திருபிறப்பாளர்பொழுதறிந்துதுவல
வொன்பதுகொண்டமூன்றுபுரிநூணுணர்ந்
புலராக்காழகம்புலரவுடீஇ
யுச்சிக்கூப்பியகையினர்தற்புகழ்ந்
தாதெழுத்தடக்கியவருமறைக்கேள்வி

காவியன்மருங்கினவிலப்பாடி
விரையுறுநறுமலரேந்திப்பெரிதுவந்
தோகத்துறைதலுமுரியனதாஅன்று.

ஐந்தாவது

குன்றுதோருடல்.

பைங்கொடிநறைக்காயிடையிடுபுவேல
னம்பொதிப்புட்டில்விரைஇக்குளவியொடு
வெண்கூதாளந்தொடுத்தகண்ணிய
னறுஞ்சாந்தணிந்தகேழ்கிளர்மார்பிற்
கொடுந்தொழில்வல்விற்கொலையகானவர்
நீடமைவிளந்தேக்கட்டேறற்
குன்றகச்சிறுகுடிக்கிழாயுடன்மகிழ்ந்து
தொண்டகச்சிறுபறைக்குரவையயர
விரலுளர்ப்பவிழ்ந்தவேறுபடுநறுங்காற்
குண்டுசுனைபூத்தவண்டுபடுகண்ணி
யினைத்தகோதையணைத்தகூந்தன்
முடித்தகுல்லையிலையுடைநறும்பூச்
செங்கான்மராஅத்தவாலினரிடையிடுபு
சுரும்புணத்தொடுத்தபெருந்தண்மாத்தழை
திருந்துகாழல்குறிளப்பவுடீஇ
மயில்கண்டன்னமடநடைமகளிரொடு
செய்யன்சிவந்தவாடையன்செவ்வரைச்
செயலைத்தண்டளிர்துயல்வருங்காதினன்
கச்சினன்கழலினன்செச்சைக்கண்ணியன்
குழலன்கோட்டன்குறும்பல்லியத்தன்
றகரன்மஞ்ஞையன்புகரில்சேவலங்
கொடியனெடியன்றெடியணிதோள
னரம்பார்த்தன்னவின்குரற்றெருதியொடு

குறும்பொறிக்கொண்டகறுந்தண்சாயன்
மருங்கிற்கட்டியநிலனேர்புதுகிலினன்
முழவுறழ்தடக்கையினியலவேந்தி
மென்றோட்பல்பிணைதழீஇத்தலைதந்து
குன்றுதோறுடனுறைந்தன்பண்பேயதாஅன்று.

ஆறுவது

பழமுதிர்சோலை.

சிறுதினைமலரொடுவிரைஇமறியறுத்து
வாரணக்கொடியொடுவயிற்படநிறீஇ
யூரூர்கொண்டசீர்கெழுவிழவினு
மார்வலரேத்தமேவருநிலையினும்
வேலன்றைஇயவெறியயர்களனுங்
காடுங்காவுங்கவின்பெறுதுருத்தியும்
யாறுங்குளனும்வேறுபல்வைப்புஞ்
சதுக்கமுஞ்சந்தியும்புதுப்பூங்கடம்பு
மன்றமும்பொதியினுங்கந்துடைநிலையினு
மாண்டலைக்கொடியொடுமண்ணியமைவ
நெய்யோடையவியப்பியைதுரைத்துக்
குடந்தம்பட்டுக்கொழுமலர்சிதறி
முரண்கொளுருவினிரண்டுடையுடீஇச்
செந்நூல்யாத்துவெண்பொரிசிதறி
மதவலிநிலையியமாத்தாட்கொழுவிடைக்
குருதியொடுவிரைஇத்தூவெள்ளரிசி
நில்பலிச்செய்துபல்பிரப்பிரீஇச
சிறுபசுமஞ்சளொடுநறுவிரைதெளித்துப்
பெருந்தண்கணவீரநறுந்தண்மாலை
தூணையுறவறுத்துத்தூங்கநாற்றி
களிமலைச்சிலம்பினன்னகர்வாழ்த்தி

நறும்புகையெடுத்துக்குறிஞ்சிபாடி
யிமிழிசையருவியோடின்னியங்கறங்க
வுருவப்பல்பூத்தூஉய்வெருவரக்
குருதிச்செந்தினைபரப்பிக்குறமகண்
முருகியநிறுத்துமுரணினருட்க
முருகாற்றுப்படுத்தவுருகெழுவியனக
ராடுகளஞ்சிலம்பப்பாடிப்பலவுடன்
கோடுவாய்வைத்துக்கொடுமணியியக்கி
யோடாப்பூட்கைப்பிணிமுகம்வாழ்த்தி
வேண்டுநர்வேண்டியாங்கெய்தினர்வழிபட
வாண்டாண்டுறைதலுமறிந்தவாறே
யாண்டாண்டாயினுமாகக்காண்டக
மூந்துகேண்டுழிமுகனமர்ந்தேத்தித்
கைதொழுஉப்பரவிக்காலுறவணங்கி
நெடும்பெருஞ்சிமயத்துநீலப்பைஞ்சுனை
யைவருளொருவனங்கையேற்ப
வறுவர்பயந்தவாறமர்செல்வ
வால்கெழுகடவுட்புதல்வமால்வரை
மலைமகண்மகனேமாற்றோர்கூற்றே
வெற்றிவெல்போர்க்கொற்றவைசிறுவ
விழையணிசிறப்பிற்பழையோள்குழவி
வானோர்வணங்குவிற்றூனெத்தலைவ
மாலைமார்பநூலறிபுலவ
செருவிலொருவபொருவிறன்மள்ள
வந்தணர்வெறுக்கையறிந்தோர்சொன்மலை
மங்கையர்க்கணவமைந்தரேறே
வேல்கெழுதடக்கைச்சால்பெருஞ்செல்வ
குன்றங்கொன்றகுன்றூக்கொற்றத்து
வின்பொருநெடுவரைக்குறிஞ்சிக்கிழவ
பலர்புகழ்நன்மொழிப்புலவரேறே

யரும்பெறன்மரபிற்பெரும்பெயர்முருக
நசையினர்க்கார்த்துமிசைபேராள
வலந்தோர்க்களிக்கும்பொலம்பூட்சேஎய்
மண்டமர்கடந்தநின்வென்றுடகலத்துப்
பரிசிலர்த்தாங்குமுருகெழுகெடுவேள்
பெரியோரேத்தும்பெரும்பெயரியவுள்
சூர்மருங்கறுத்தமொய்ம்பின்மதவலி
போர்மிகுபொருநகுரிசிலுமெனப்பல
யானறியளவையினேத்தியாஞ்சு
நின்னளந்தறிதன்மன்னுயிர்க்கருமையி
னின்னடியுள்ளிவந்தனனின்னெடு
புரைகுநரில்லாப்புலமையோயெனக்
குறித்ததுமொழியாவளவையிற்குறித்துடன்
வேறுபல்லுருவிற்குறும்பல்கூளியர்
சாறயர்களத்துவீறுபெறத்தோன்றி
யளியன்றானேமுதுவாயிரவலன்
வந்தோன்பெருமநின்வண்புகழ்நயந்தென
வினியவுநல்லவுநனிபலவேத்தித்
தெய்வஞ்சான்றதிறல்விளங்குருவின்
வான்றோய்நிவப்பிற்றான்வந்தெய்தி
யணங்குசாலுயர்நிலதழீஇப்பண்டைத்தன்
மணங்கமழ்தெய்வத்திளநலங்காட்டி
யஞ்சலோம்புமதியறிவனின்வரவென
வன்புடைநன்மொழியாஇவிளிவின்
றிருணிறமுந்நீர்வளைஇயவுலகத்
தொருநீயாகத்தோன்றவிழுமிய
பெறலரும்பரிசினல்குமதிபலவுடன்
வேறுபஃறுகிலினுடங்கியகில்சுமந்
தாரமுழுமுதலுருட்டிவேரற்
பூவுடையலங்குசினைபுலம்பவோர்கீண்டு

விண்பொருநெடுவரைபரிதியிற்றெடுத்த
தண்கமழ்மலரிறுல்சிதையநன்பல
வாசினிமுதுசுளைகலாவமீமிசை
நாகநறுமலருதிரயூகமொடு
மாமுகமுசுக்கலைபனிப்பப்பூநுத
லிரும்பிடிகுளிர்ப்பவீசிப்பெருங்களிற்று
முத்துடைவான்கோடுதழீஇத்தத்துற்று
நன்பொன்மணிநிறங்கிளரப்பொன்கொழியா
வாழைமுழுமுதறுமியத்தாழை
யிளநீர்வீழுக்குலையுதிரத்தாக்கிக்
கறிக்கொடிக்கருந்துணர்சாயப்பொறிப்புற
மடநடைமஞ்ஞைபலவுடன்வெரீஇக்
கோழிவயப்பெடையிரியக்கேழலோ
டிரும்பனைவெளிற்றின்புன்சாயன்ன
குரூஉமயிரியாக்கைக்குடாவடியுளியம்
பெருங்கல்விடரளைச்செறியக்கருங்கோட்
டாமாநல்லேறுசிலைப்பச்சேணின்
றிழுமெனவிழிதருமருவிப்
பழமுதிர்சோலைமலைகிழவோனே.

—〜〜〜—

நேரிசை வெண்பா.

குன்றமெறிந்தாய்குரைகடலிற்சூர்தடிந்தாய்
புன்றலையபூதப்பொருபடையா—யென்று
மிளையாயழகியாயேறூர்ந்தானேமே
யுளையாயென்னுள்ளத்துறை. (க)

குன்றமெறிந்ததுவுங்குன்றப்போர்செய்ததுவு
மன்றங்கமராடர்தீர்த்ததுவு—மின்றென்னைக்
கைவிடாநின்றதுவுங்கற்பொதும்பிற்காத்ததுவு
மெய்விடாவீரன்கைவேல். (உ)

வீரவேரைவேல்விண்ணோர்சிறைமீட்ட
தீரவேல்செவ்வேடிருக்கைவேல்—வாரி
குளித்தவேல்கொற்றவேல்சூர்மார்புங்குன்றுந்
துளைத்தவேலுண்டேதுணை. (கூ)

இன்னமொருகாலெனதிடும்பைக்குன்றுக்குக்
கொன்னவில்வேற்சூர்தடிந்தகொற்றவா—முன்னம்
பனிவேய்நெடுங்குன்றம்பட்டிருவத்தொட்ட
தனிவேலவாங்கத்தகும். (சு)

உன்னையொழியவொருவரையுநம்புகிலேன்
பின்னையொருவரையான்பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பாவாணர்கொடியவினைதீர்த்தருளும்
வேலப்பாசெந்திவாழ்வே. (ரு)

அஞ்சுமுகந்தோன்றிலாறுமுகந்தோன்றும்
வெஞ்சமரந்தோன்றில்வேரொன்று—நெஞ்சி
லொருகானினைக்கிலிருகாலுந்தோன்று
மூருகாவென்றோதுவார்முன். (சூ)

மூருகனேசெந்திமுதல்வனேமாயோன்
மருகனேயீசன்மகனே—யொருகைமுகன்
றம்பியேநின்னுடையதண்டைக்காலெப்பொழுது
நம்பியேகைதொழுவேனன். (எ)

வேலுமயிலுந்துணை.

திருச்சிற்றம்பலம்.

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

திருக்கண்ணப்பதேவர்திருமறம்.

திருக்கண்ணப்பன்செய்தவத்திறத்து
விருப்புடைத்தம்மவிரிகடலுலகேபிறந்தது
தேனழித்தூணுண்கானவர்குலத்தேதிரிவது
பொருபுலிகுமிறும்பொருப்பிடைக்காடேவளர்ப்பது
செங்கணுயொடுதீவகம்பலவேபயில்வது
வெந்திறற்சிலையொடுவேல்வாண்முதலிய
வந்தமில்படைக்கலமவையேயுறைவது
குறைதசையின்றுகுடம்பலநிரைத்துக்
கறைமலிபடைக்கலங்கலந்தபுல்லொடு
பீலிமேய்ந்தவைபிரிந்தவெள்ளிடை
வாலியபுலித்தோன்மறைப்பவெள்வா
ரிரவும்பகலுமிகழாமுயற்றியொடு
மடைத்ததேனும்வன்னுய்விட்டுஞ்
சிலைவிடுகணையிலுந்திண்சுரிகையிலும்
பலகிளையவையொடும்பதைப்பப்படித்துத்
தொல்லுயிர்கொல்லுந்தொழிலேவடிவே
மறப்புலிகடித்தவன்றிரண்முன்கை
திறற்படைகிழித்ததிண்வரையகல
மெயிற்றெண்குகவர்ந்தவிருந்தணைற்றி
யயிற்கோட்டென்னபெடித்தெழுகுறங்கு
செடித்தெழுகுஞ்சிசெந்நிறத்துறுகண்
கடித்தெழும்வெவ்வுரையவ்வாய்க்கருநிறத்
தடுபடைபிரியாக்கொடுவிறலதுவேமனமே

மிகக்கொலைபுரியும்வேட்டையிலுயிர்க
ளகப்படுதுயருக்ககனமர்ந்ததுவேயிதுவக்
கானத்தலைவன்றன்மைகண்ணுதல்
வானத்தலைவன்மலைமகள்பங்க
னெண்ணரும்பெருமையிமையவரிறைஞ்சும்
புண்ணியபாதப்பொற்பார்மலரினை
தாய்க்கட்கன்றெனச்சென்றுகண்டல்லது
வாய்க்கிடமுண்டிவழக்கறியானேயதாஅன்று
கட்டறல்விரித்தகனற்கதிருச்சியிற்
சுட்டடியிடந்தொறுஞ்சுறுக்கொளுஞ்சுரத்து
முதுமராமரந்தமுட்பயில்வளாகத்
தெதிரினங்கடவியவேட்டையில்விரும்பி
யெழுப்பியவிருகத்தினங்களைமறுக்குறத்
தன்னுய்கடித்திரித்திடவடிக்கணைதொடுத்
தெய்துதுணித்திடந்துணித்தவிடக்கினை
விறகினிற்கடைந்தவெங்கனற்காய்ச்சி
நறுவியவிறைச்சிநல்லதுசுவைகண்
டண்ணற்கமிர்தென்றதுவேறமைத்துத்
தண்ணறுஞ்சுனைநீர்தன்வாய்க்குடத்தான்
மஞ்சனமாகமுகந்துமலரெனக்
குஞ்சியிற்றுவர்க்குலைசொருகிக்
குளிசிலைகடுங்கணையதனைடமேந்திக்
கனல்விழிக்கருங்குரலுய்பின்றொடரயாவரும்
வெருக்கொளுற்றவெங்கடும்பகலிற்
யிருக்காளத்தியெய்தியசிவற்கு
வழிபடக்கடவமறையோன்முன்னந்
துகிலிடைச்சுற்றியிற்றூநீராட்டி
நல்லனவிரைமலர்நறும்புகைவிளக்கவி
சொல்லினபரிசிற்சுருங்கலன்பூவும்
பட்டமாலையுந்தூக்கமுமலங்கரித்

தர்ச்சனைசெய்தாங்கவனடியிறைஞ்சித்
திருந்தமுத்திரைசிறப்பொடுகாட்டி
மந்திரமெண்ணிவலமிடம்வந்து
விடைகொண்டேகினபிற்றொழிற்
பூசனைதன்னைப்புக்கொருகாலிற்
றொடுசெருப்படியானீக்கிவாயி
லிடுபுனன்மேனியிலாட்டித்
தன்றலைதங்கியதுவர்ப்பூவேற்றியிறைச்சியிற்
பெரிதும்போனகம்படைத்துப்பிராணைக்
கண்டுகண்டுள்ளங்கசிந்துகாதலிற்
கொண்டதோர்கூத்துமுன்னுடிக்குரைகழ
லன்பொடுமிறுகவிறைஞ்சியாறு
வன்பொடுகானகமடையுமடைந்த
வற்றையயலினிற்கழித்தாங்கிரவியு
முதித்தபோழ்தத்துண்ணீர்மூழ்கி
யாதரிக்குமந்தணன்வந்து
சோர்சிவற்குத்தான்முன்செய்வதோர்பொற்புடைப்
பூசனைகாணுன்முடிமிசையேற்றிய
துவர்கண்டொழியான்மறித்துமிவ்வா
றர்ச்சனைசெய்பவரியாவர்கொலென்று
கரந்திருந்தவணக்கானவன்வரவினைப்
பரந்தகாட்டிடைப்பார்த்துநடுக்குற்று
வந்தவன்செய்துபோயினவண்ணஞ்
சிந்தையிற்பொருதுசேர்விடம்புக்கு
மற்றைநாளுமவ்வழிப்பட்டிறைவ
வுற்றதுகேட்டருளுன்றனக்கழகா
நாடோறுநான்செய்பூசனைதன்னை
யீங்கொருவேடுவ
னுயொடும்புகுந்துமிதித்துழக்கித்
தொடுசெருப்படியானீக்கிவாயி

லிடுபுனன்மேனியிலாட்டித்
தன்றலைதங்கியசருகிலையுதிர்த்தோரிறைச்சியை
னின்றிருக்கோயிலிலிட்டுப்போமது
வென்றுமுன்றனக்கினிதேயெனையுருக்
காணிற்கொன்றிடும்யாவராலும்
வீலக்குறுங்குணத்தனல்லனென்னுந்
திருக்குறும்பென்றவன்சென்றவல்லிடைக்
கனவிலாதரிக்குமந்தணன்றனக்குச்
சீரார்திருக்காளத்தியுளப்பன்
பிறையணியிலங்குபின்னுபுன்சடைமுடிக்
கறையணியிடற்றுக்கனன்மழுத்தடக்கை
நெற்றிநாட்டத்துநிறைநீற்றுக
வொற்றைமால்விடையுமையொடுமருங்கிற்
றிருவுருக்காட்டியருளிப்
புரிவொடுபூசனைசெய்யுங்
குனிசிலைவேடன்குணமவையாவன
வுரிமையிற்சிறந்தருன்மாதவனென்றுண
ரவனுகந்தியங்கியவிடமுனிவனமதுவேயவன்
செருப்படியாவனவிருப்புறுதுவலே
யெழிலவன்வாயதுதூயபொற்குடமே
யதனிற்றங்குநீர்கங்கையின்புனலே
புனற்கிடுமாமணியவனிரைப்பல்லே
யதற்கிடுதூமலரவனதுநாவே
யுப்புனல்விடும்பொழுதுரிஞ்சியமீசைப்
புன்மயிர்குசையினுநம்மடிக்கினிதேயவன்றலை
தங்கியசருகிலைதருப்பையிற்பொதிந்த
வங்குலிகற்பகத்தலரேயவனுகந்
திட்டவிறைச்சியெனக்குருன்மாதவ
ரிட்டநெய்பாலவியே
யிதுவெனக்குனக்கவன்

கலந்ததோரன்புகாட்டவனலே
நலந்திகழர்ச்சனைசெய்தாங்கிருவென்
றிறையவனெழுந்தருளினனருள
மறையவனறிவுற்றெழுந்து
மனமிகக்கூசிவைகறைக்குளித்துத்
தான்முன்செய்வதோர்
பொற்புடைப்பூசனைபுகழ்தரச்செய்து
தோன்றுவண்ணமிருந்தனனகவிரவியும்
வான்றனிமுகட்டில்வந்தழல்சிந்தக்
கடும்பகல்வேட்டையிற்காதலித்தடித்த
வடும்பொடுசிலகணையுடைத்தோல்செருப்புத்
தொடர்ந்தநாயொடுதோன்றினன்றூன்றலுஞ்
செல்வன்றிருக்காளத்தியுளப்பன்றிருமேனியின்
மூன்றுகண்ணுயாங்கொருகண்ணிலு
முதிரமொழியாதொழுகவிருந்தவனகப்
பார்த்துநடுக்குற்றுப்பதைத்துமனஞ்சுழன்று
வாய்ப்புனல்சிந்தக்கண்ணீருகுவக்
கையிலுளுகணைசிலைசிந்த
நிலப்படப்புரண்டுநெடிதினிற்றேறிச்
சிலக்கொடும்படைகடுத்தெடுத்துபத்தவ
ரடுத்தவினத்துளரெனத்திரிந்தாங்
கின்மைகண்டுநன்மையிற்
றக்கனமருந்துகள்பிழியவும்பிழிதொறு
நெக்கிழிகுருதியைக்கண்டுசிலதளர்ந்தெ
னத்தனுக்கடித்தெதனத்தனுக்கடித்தெதன்னென்
றன்பொடுங்கனற்றி
யித்தனைதரிக்கிலனிதுதனைக்கண்டவென்
கண்டனையிடந்துகடவுடன்கண்ணுறு
புண்ணிலப்பியுங்காண்பனென்றொருகண்ணிடைக்
கணையதுமடுத்துக்கையில்வாங்கி

யணைதாவப்பினனப்பலுங்குருதி
நிற்பதொத்துருப்பெறக்கண்டுநெஞ்சுகந்து
மற்றைக்கண்ணிலும்வடிக்கணைமடுத்தனன்மடுத்தலு
நில்லுகண்ணப்பநில்லுகண்ணப்பவென்
னன்புடைத்தோன்றனில்லுகண்ணப்பவென்
றின்னுரையதனைடுமெழிற்சிவலிங்கந்
தன்னிடைப்பிறந்ததடமலர்க்கையா
லன்னவன்றன்கையம்பொடுமகப்படப்பிடித்
தருளினனருளலும்
விண்மிசைவானவர்
மலர்மழைபொழிந்தனர்வளையொலிபடகந்
துந்துபிகறங்கினதொல்சீர்முனிவரு
மேத்தினரின்னிசைவல்லே
சிவகதிபெற்றனன்றிருக்கண்ணப்பனே.

வெண்பா.

தத்தையாய்தாய்தந்தைநாகனந்தன்பிறப்புப்
பொத்தப்பிநாட்டுடுப்பூர்வேடுவனந்—தித்திக்குந்
திண்ணப்பனஞ்சிறுபேர்செய்தவத்தாற்காளத்திக்
கண்ணப்பனாய்நின்றுன்காண்.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

கல்லாடதேவநாயனார்

அருளிச்செய்த

திருக்கண்ணப்பதேவர் திருமறம்.

பரிவின்றன்மையுருவுகொண்டனையவன்
போழ்வார்போர்த்ததாழகச்செருப்பினன்
சூருதிபுலராச்சுரிகையெஃக
மரையிற்கட்டியவுடைதோற்கச்சையன்
ரூனெடும்பையிற்குறுமயிர்திணித்து
வாரில்வீக்கியவரிக்கைகட்டிய
னுழுவைக்கூனுகிர்கேழல்வெண்மருப்பு
மாறிபடத்தொடுத்தமாலையுத்தரிய
னீலப்பீலிநெற்றிசூழ்ந்த
கானக்குஞ்சிக்கவடிபுல்லினன்
மூடுகுரூறுகுடிலையாக்கையன்
வேங்கைவென்றுவாகைசூடிய
சங்கரன்றன்னினத்தலைவஞ்சங்கிய
வில்லுமம்புகல்லனதாங்கி
யேற்றுக்கல்வனங்காற்றினிலியங்கிக்
கணையில்வீழ்த்துக்கருமாவறுத்துக்
கோலினேற்றிக்கொழுந்தீக்காய்ச்சி
நாவில்வைத்தநாட்போனகமுந்
தன்றலைச்சொருகியதண்பளித்தாமமும்
வாய்க்கலசத்துமஞ்சனநீருங்
கொண்டுகானப்பேருறைகண்ணுதன்
முடியிற்பூசையடியானீக்கி
நீங்காக்குணத்துக்
கோசரிக்கன்றவனேசங்காட்ட

மூக்கணப்பனுக்கொருகணிலுதிரந்
தக்கிணத்திடையிழிதரவக்கண
மழுதுவிழுந்துதொழுதெழுந்தரற்றிப்
புன்மருந்தாற்றப்போகாதென்று
தன்னேமருந்தென்றுமலர்க்கணப்ப
வொழிந்ததுமற்றையொண்டிருநயனம்
பொழிந்தகண்ணீர்க்கலுழிபொங்க
வற்றதென்றுமற்றக்கண்ணேயும்
பகழித்தலேயாலகழவாண்டகை
யொருகையாலுமிருகைபிடித்து
வொல்லேநம்புண்ணெழிந்ததுபாராய்
கல்லேகல்லேயெனப்பெறுந்
திருவேட்டுவர்தந்திருவடிகைதொழக்
கருவேட்டெழில்வினைக்காரியங்கெடுமே.

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

கபிலதேவநாயனார்

அருளிச்செய்த

மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை.

திருவாக்குஞ்செய்கருமங்கைகூட்டுஞ்செஞ்சொற்
பெருவாக்கும்பீடும்பெருக்கு—முருவாக்கு
மாதலால்வாழ்ஞருமானேமுகத்தானைக்
காதலாற்கூப்புவர்தங்கை. (க)

கைக்கும்பிணியொடுகொலன்றலைப்படுமேல்வையினி
லெய்க்குங்கவலைக்கிடைந்தடைந்தேன்வெம்மைநாவலைக்கும்

பைக்குமரவரையான்றந்தபாய்மதயானைபத்துத்
திக்கும்பணிந்துதற்கட்டிருவாளன்றிருவடியே. (உ)

அடியமர்ந்துகொள்வாயேநெஞ்சமேயப்ப
மிடியவலோடெள்ளுண்டைகன்னல்—வடிசுவையிற்
சூழ்வானையாழ்வானைத்தன்னடியாருள்ளத்தே
வாழ்வானைவாழ்த்தியேவாழ். (ஊ)

வாழைக்கனிபலவின்கனிமாங்கனிதாஞ்சிறந்த
கூழைச்சுருள்குழையப்பமெள்ளுண்டையெல்லாந்துறுத்தும்
பேழைப்பெருவயிற்றோம்புகுந்தென்னுளம்பிரியான்
வேழத்திருமுகத்துச்செக்கர்மேனிவிநாயகனே. (எ)

விநாயகனேவெவ்வினையைவேரறுக்கவல்லான்
விநாயகனேவேட்கைதணிவிப்பான்—விநாயகனே
விண்ணிற்குமண்ணிற்குநாதனுமாந்தன்மையிஞ்
கண்ணிற்பணிமின்கனிந்து. (ஏ)

கனியநினைவொடுநாடொறுங்காதற்படுமடியார்க்
கினியனினியொருவின்னுங்கிலமெவரும்வணங்கும்
பனிவெண்பிறைநறுங்கொன்றைச்சடைப்பலிதேரியற்கை
முனிவன்சிறுவன்பெருவெங்கொல்யானைமுகத்தவனே. (ஐ)

யானைமுகத்தான்பொருவிடையான்சேயழகார்
மானமணிவண்ணன்மாமருகன்—மேனிகழும்
வெள்ளக்குமிழிமதத்துவிநாயகனென்
னுள்ளக்கருத்தினுளன். (ஒ)

உளதளவில்லதோர்காதலெண்ணெஞ்சில்வண்ணஞ்சமுண்ட
வளரிளமாமணிகண்டன்வண்டாடுவெண்கோதைபங்கத்
திளவளர்மாமதிக்கண்ணியெம்மான்மகன்கைம்முகத்துக்
களகளமாமதஞ்சேர்களியானைக்கணபதியே. (ஓ)

கணங்கொண்டவல்வினைகள்கண்கொண்டநெற்றிப்
பணங்கொண்டபாந்தட்சடைமேன்—மணங்கொண்ட
தாதகத்ததேன்மூரலுங்கொன்றையான்றந்தளித்த
போதகத்தின்ரூள்பணியப்போம். (க)

போகபந்தத்தந்தமின்றிநிற்பீர்புனைதார்முடிமே
லுகபந்தத்தந்தாளம்பிறையிறையான்பயந்த
மாகபந்தத்தந்தமாமழைபோன்மதத்துக்கதப்போ
சேகதந்தத்தெந்தைசெந்தாளிணைபணிந்தேத்துமினே. (கo)

ஏத்தியேயென்னுள்ளநிற்குமாலெப்பொழுது
மாத்தனிவெண்கோட்டுமதமுகத்துத்—தூத்தழல்போற்
செக்கர்த்திருமேனிச்செம்பொற்கழலங்கை
முக்கட்கடாயானைமுன். (கக)

முன்னிளங்காலத்திலேபற்றினேன்வெற்றிமீனுயர்த்த
மன்னிளங்காமன்றன்மைத்துனனேமணிநீலகண்டத்
தென்னிளங்காய்கனிறேயிமையோர்சிங்கமேயுமையா
டன்னிளங்காதலனேசரணுவன்சரணங்களே. (கஉ)

சரணுடையேனென்றுதலைதொட்டிருக்க
முரணுடையேனல்லேனுன்முன்னந்—திரணெங்கோட்
டண்டத்தானப்புறத்தானனேமுகத்தானமரர்
பண்டத்தான்ரூள்பணியாப்பண்டு. (கங)

பண்டந்தமாதரைத்தாமென்றினியனவேபலவுங்
கொண்டந்தாள்குறுகாமைக்குறுகுவர்கூருணர்விற்
கண்டந்தீண்முடிக்கார்மதவார்சடைக்கற்றையொற்றை
வெண்டந்தவேழமுகத்தெம்பிரானடிவேட்கையரே. (கச)

வேட்கைவினைமுடித்துமெய்யடியார்க்கின்பஞ்செய்
தாட்கொண்டருளுமரன்சேயை—வாட்கதிர்கொள்
காந்தாரமார்பிற்கமழ்தார்க்கணபதியை
வேந்தாவுடைத்தமர்விண். (கஙி)

விண்ணுதனுங்கியவிண்ணுமண்ணுஞ்செய்வினைப்பயனும்
பண்ணுதனுங்கடனென்பர்மெய்யன்பர்கள்பாய்மதமா
கண்ணுதனுங்கியநஞ்சமுண்டார்கருமாமிடற்றுப்
பெண்ணுதனும்பிரியாவொருபாகன்பெருமகனே. (கசு)

பெருங்காதலென்னுமொன்னுடைநெற்றி
மருங்காரவார்செவிகள்வீசி—யொருங்கே
திருவார்ந்தசெம்முகத்துக்கார்மதங்கள்சோர
வருவான்றனம்வரும். (கஎ)

வருகோட்டருபெருந்தீமையுங்காலன்றமரவர்க
ளருகோட்டருமவராண்மையுங்காய்பவன்கூர்ந்தவன்பு
தருகோட்டருமரபிற்பத்தர்சித்தத்தறியணையு
மொருகோட்டிருசெவிமுக்கட்செம்மேனியவொண்களிறே. (கஅ)

களியானைக்கன்றைக்கணபதியைச்செம்பொ
னெளியானைப்பாரோர்க்குதவு—மளியானைக்
கண்ணுவதுங்கைத்தலங்கள்கூப்புவதுமற்றவன்ரு
ணண்ணுவதுநல்லார்கடன். (கக)

நல்லார்பழிப்பிலெழிற்செம்பவளத்தைநாணநின்ற
பொல்லாமுகத்தெங்கள்போதகமேபுரமூன்றெரித்த
வில்லானளித்தவிநாயகனேயென்றுமெய்ம்மகிழ
வல்லார்மனத்தன்றிமாட்டாளிருக்கமலர்த்திருவே. (உ0)

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

கபிலதேவநாயனார்

அருளிச்செய்த

சிவபெருமான்திருவிரட்டைமணிமாலை.

அந்திமதிமுகிழானந்தியஞ்செங்கிறத்தா
னந்தியேபோலுமவிர்சடையா—னந்தியிற்
றூங்கிருள்சேர்யாமமேபோலுஞ்சுடுநீற்றான்
வீங்கிருள்சேர்நீலமிடறு. (க)

மிடற்றாழ்கடனஞ்சம்வைக்கின்றஞான்றுமெல்லோதிநல்லாண்
மடற்றாமரைக்கைகள்காத்திலவேமழுவாளதனு
லடற்றாதையையன்றுதாளெறிந்தாற்கருள்செய்தகொள்கைக்
கடற்றாழ்வயற்செங்கெலேறும்வெண்காட்டெங்கரும்பினையே. (உ)

கருப்புச்சிலையாங்கன்கட்டழகுசுட்ட
செருப்புத்திருநெற்றிநாட்டங்—திருச்சடையிற்
றிங்கள்புரையுந்திரள்பொற்றிருமேனி
யெங்களிமையோரிறைக்கு. (ங)

இறைக்கோகுறைவில்லையுண்டிறையேயெழிலாரெருக்கு
நறைக்கோமளக்கொன்றைதுன்றுஞ்சடைமுடிநக்கர்சென்னிப்
பிறைக்கோர்பிளவும்பெறுவிளிக்கொண்டெம்பிராணுடுக்குங்
குறைக்கோவணமொழிந்தாற்பின்னேயதுங்குறைவில்லையே. (ச)

இல்லைபிறவிக்கடலேறவின்புறவின்
மில்லைகமழுமுதுகுன்றிற்—கொல்லை
விடையானேவேதியனேவெண்மதிசேர்செம்பொற்
சடையானேச்சாராதார்தாம். (ஞ)

தாமரைக்கோவுநன்மாலும்வணங்கத்தலைப்பிடத்துத்
தாமரைக்கோவணத்தோடிரந்துண்ணினுஞ்சார்ந்தவர்க்குத்
தாமரைக்கோமளத்தோடிலகாளத்தருவர்கண்டீர்
தாமரைக்கோமளக்கைத்தவளப்பொடிச்சங்கரரே. (சு)

சங்குகோளெண்ணுவரேபாவையரைத்தம்மங்கம்
பங்குபோய்நின்றலும்பாய்கலுழிக்—கங்கை
வரியராப்போதும்வளர்சடையாய்நின்போற்
பெரியராவாரோபிறர். (எ)

பிறப்பாழ்குழியிடைவீழ்ந்துநைவேற்குநின்பேரருளின்
சிறப்பார்திருக்கைதரக்கிற்றியேதிரியும்புரமூன்
றறப்பாயெரியுறவான்வரைவில்வளைத்தாயிரவாய்
மறப்பாவரியரநாணிடைக்கோத்தகைவானவனே. (அ)

வானமணிமுகடாமால்வரையேதூணாக
வானபெரும்பாரரங்காகக்—கானகத்தி
லம்மாமுழவதிரவாடும்பொழுதாரூ
ரெம்மானுக்கெய்தாதிடம். (கூ)

இடப்பாகமுமுடையாள்வரையீனிளவஞ்சியன்ன
மடப்பான்மொழியென்பர்நின்வலப்பாகத்துமான்மழுவும்
விடப்பாசனக்கச்சுமிச்சைப்படநீறணிந்துமிக்க
கீட்பார்களிற்றுரிகொண்டெங்குமூடுமெங்கண்ணுதலே. (கஅ)

கண்ணியிளம்பிறையுங்காய்சினத்தமாசுணமு
நண்ணியிருந்தானலமில்லை—தண்ணலங்கற்
பூங்கொன்றையின்றேன்பொதியுஞ்சடைப்புனிதா
வாங்கொன்றையின்றேமதித்து. (கக)

மதிமயங்கப்பொங்குகோழிருட்கண்டவிண்டவர்தம்
பதியைமங்கச்செற்றகொற்றவில்வானவரற்றவர்சூ
ழதிகைமங்கைத்திருவீரட்டவாரிட்டதேனுமுண்டு
கதியைமங்கச்செல்வதேசெல்வமாகக்கருதுவதே. (கஉ)

கருதுங்கருத்துடையேன்கையுடையேன்கூப்பப்
பெரிதும்பிறதிறத்துப்பேசே—னரிதன்றே
யாகப்பிறையானினியென்னகம்புகுந்து
போகப்பெறுமோபுறம். (கஙு)

புறமறையப்புரிபுன்சடைவிட்டெரிபொன்றிகழு
நிறமறையத்திருநீறுதைந்ததுநீள்கடனஞ்
சுறமறையக்கொண்டகண்டமுஞ்சாலவுரப்படைத்தா
லறமறையச்சொல்லிவைத்தையம்வேண்டுமடிகளுக்கே. (கச)

அடியோமைத்தாங்கியோவாடையுடுத்தோ
குடியோம்பமாநிதியங்கொண்டோ—பொடியாடு
நெற்றியூர்வாளரவநீள்சடையாய்நின்னூரை
யொற்றியூராக்கிற்றுரை. (கஙி)

உரைவந்துறும்பதத்தேயுரைமின்களன்ரியினிப்பா
னரைவந்துறும்பின்னேவந்துறுங்காலனன்முத்திடறித்
திரைவந்துறுங்கரைக்கேகலம்வந்துறத்திண்கைவன்ரூள்
வரைவந்துறுங்கடன்மாமறைக்காட்டெம்மணியினையே. (கசு)

மணியமருமாமாடவாய்மூரான்றன்னே
யணியமரரோடயனுமாலுந்—துணிசினத்த
செஞ்சூட்டசேவற்கொடியானுமாய்நின்று
நஞ்சூட்டவெண்ணியவாநன்று. (கள)

நன்றைக்குறுமிருமற்பெருமூச்சுநண்ணுதமுன்னங்
குன்றைக்குறுவதுகொண்டழியாதறிவீர்செறிமின்
கொன்றைக்குறுநறுங்கண்ணியினன்றன்கொய்பூங்கயிலைக்
குன்றைக்குறுகரிதேனுமுள்ளத்திடைக்கொண்மின்களே. (கஅ)

கொண்டபலிநுமக்குங்கொய்தார்க்குமார்க்கும்
புண்டரிகமாதினுக்கும்போதுமே—மண்டி
யுயிரிழந்தார்சேர்புறங்காட்டோரிவாயீர்ப்ப
மயிரிழந்தவெண்டலைவாய்வந்து. (கக)

வந்தாறலைக்கும்வலஞ்சுழிவானவவானவர்த
மந்தார்மகுடத்தடித்தபைம்போதிலந்தேனுழக்கிச்
செந்தாமரைச்செவ்விகாட்டுந்திருவடிக்குஞ்செல்லுமே
யெந்தாயடித்தொண்டரோடிப்பிடித்திட்டவின்மலரே. (௧0)

மலர்ந்தமலர் தூவிமாமனத்தைக்கைகூப்பிப்
புலர்ந்தும்புலராதபோதுங்—கலந்திருந்து
கண்ணீரரும்பக்கசிவார்க்குக்காண்பெளியன்
றெண்ணீர்சடைக்கரந்ததேவு. (௧௧)

தேவனைப்பூதப்படையனைக்கோதைத்திருவிதழிப்
பூவனைக்காய்சினப்போர்விடைதன்னுடம்போற்றகின்ற
மூவனையீருருவாயமுக்கணனைமுன்னுமறை
காவனைநான்மறவேணிவைநான்வல்லஞானங்களே. (௧௨)

நானுமென்னல்குரவுநல்காதார்பல்கடையிற்
கானிமிர்த்துகின்றிரப்பக்கண்டிருக்கும்—வானவர்க
டம்பெருமான்மூவெயிலும்வேவச்சரந்தூர்த்த
வெம்பெருமானென்னுவியல்பு. (௧௩)

இயலிசைநாடகமாயெழுவேலைகளாய்வழுவாப்
புயலியல்விண்ணெமெண்முழுதாய்ப்பொழுதாகின்ற
மயிலியன்மாமறைக்காடர்வெண்காடர்வண்டில்லைமல்கு
கயலியல்கண்ணிபங்காரன்பர்சித்தத்தடங்குவரே. (௧௪)

அடங்காதாராரொருவரங்கொன்றைதுன்று
மட்டுங்காதலென்வாளைகொள்வார்த்தை—நுடங்கிடையீ
ருரூரன்சென்றக்காலுண்பலிக்கென்றங்ஙனே
யாரூரன்செல்லுமாறங்கு. (௧௫)

அங்கைமறித்தவராலவியுண்ணுமவ்வானவர்க
டங்கைமறித்தறியார்தொழுதேநிற்பர்தாழ்சடையின்
கங்கைமறித்தணவப்பணமாசுணக்கங்கணத்தின்
செங்கைமறித்திரவிற்சிவனுந்திருநட்டமே. (௧௬)

நட்டநீயாடும்பொழுதத்துநல்லிலயங்
கொட்டக்குழித்தொழிந்தவாகொல்லோ—வட்டுக்
கடுங்குன்றமர்ல்யானேக்காருரிவைபோர்த்த
கொடுங்குன்றபேயின்கொடிறு. (உஎ)

கொடிறுமூரித்தனன்கூரிளனல்லன்குருகினஞ்சென்
றிடறுங்கழனிப்பழனத்தாசையெழிலிமையோர்
படிறுமொழிந்துபருகக்கொடுத்துப்பரவைநஞ்ச
மிடறுதடித்ததுவும்மடியேங்கள்விதிவசமே. (உஅ)

விதிகரந்தசெய்வினையேன்மென்குழற்கேவாளா
மதுகரமேயெத்துக்குவந்தாய்—நதிகரந்த
கொட்டுக்காட்டான்சடைமேற்கொன்றைக்குறுந்தெரிய
ரொட்டுக்காட்டாய்சுழல்வாய்தொக்கு. (உக)

தொக்குவருங்கணம்பாடத்தொன்னீறணிந்தேநிலவு
நக்குவருங்கண்ணிசூடிவந்தார்நறும்புன்னேமுன்ன
மக்குவருங்கழிக்கானலையாறரைக்காணவன்பு
மிக்குவருமரும்போதரைக்காண்டலும்வெள்குவனே. (கூ0)

வெள்காதேயுண்பலிக்குவெண்டலைகொண்டீர்திரிந்தா
லெள்காரேவானவர்களெம்பெருமான்—வள்கூர்
வடதிருவீரட்டானத்தென்னதிகைமங்கைக்
குடதிருவீரட்டானங்கூறு. (கூக)

கூறுபெறுங்கண்ணிசேர்கருங்கூந்தல்சுண்ணந்துதைந்து
நீறுபெறுந்திருமேனிநெருப்புப்புரைபொருப்பொத்
தாறுபெறுஞ்சடையங்கொன்றையந்தேன்றுவலைசிந்த
வீறுபெறுஞ்சென்றுசென்றெம்பிரானுக்குவெண்ணிறமே. (கூஉ)

நிறம்பிறிதாயுண்மெலிந்துநெஞ்சுருகிவாளா
புறம்புறமேநாள்போக்குவாளோ—நறுந்தேன்
படுமுடியாப்பாய்நீர்பரந்தொழுகுபாண்டிக்
கொடுமுடியாயென்றன்கொடி. (கூங)

கொடிக்குலவும்மதிற்கோவலூர்வீரட்டகோளரவம்
பிடிக்கிலவம்முடிப்பூணலையத்தொடுமால்விடையி
னிடிக்குரல்கேட்டிடியென்றிறுகக்கடிவாளெயிற்றூற்
கடிக்கலுறுமஞ்சிநஞ்சமிருந்தநின்கண்டத்தையே. (ஙூசு)

கண்டநிறங்கறுப்பக்கவைக்கருங்கடனஞ்
சுண்டல்புரிந்துகந்தவுத்தமற்குத்—தொண்டடைந்தார்
கூசுவரேகூற்றைக்குறுகுவரேதீக்கொடுமை
பேசுவரேமற்றொருவர்பேச்சு. (ஙூஙி)

பேய்ச்சுற்றம்வந்திசைபாடப்பிணமிகாட்டயலே
தீச்சுற்றவந்துநின்றூடலென்னுஞ்செப்புமுப்பொழுதுங்
கோச்சுற்றமாக்குடைவானவர்கோனயன்மான்முதலா
மாச்சுற்றம்வந்திறைஞ்சுந்திருப்பொற்சடைமன்னவனே. (ஙூசு)

மன்னும்பிறப்பறுக்குமாமருந்துவாளரக்கன்
றன்னுஞ்சுடர்முடிகடோணெரியத்—தன்னேத்
திருச்சத்திமுற்றத்தான்சித்தத்துள்வைத்தான்
றிருச்சத்திமுற்றத்தான்றேசு. (ஙூஎ)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

கபிலதேவநாயனார்

அருளிச்செய்த

சிவபெருமான்திருவந்தாதி.

ஒன்றுமுதலாகநூறளவுமாண்டுகள்வாழ்ந்
தொன்றுமனிதருயிரையுண்—டொன்று
மதியாதகூற்றைத்தசேவடியான்வாய்ந்த
மதியானிடப்பக்கமால். (க)

மாலையொருபான்மகிழ்ந்தானேவண்கொன்றை
மாலையொருபான்முடியானே—மாலை
யொளியானேயுத்தமனேயுண்ணநஞ்சுண்டற்
கொளியானேயேத்தியுளம். (உ)

உளமால்கொண்டோடியொழியாதியாமு
முளமாகிலேத்தாவாறுண்டே—யுளமாசற்
றங்கமலமில்லாவடல்வெள்ளேறூர்ந்தழலு
மங்கமலவண்ணனடி. (ஊ)

அடியார்தமாருயிரையட்டழிக்குங்கூற்றை
யடியாலருவாகச்செற்றரு—னடியார்த
மந்தரத்தாலேத்தியகங்குழைந்துமெய்யரும்பி
யந்தரத்தார்சூடுமலர். (எ)

அலராளுங்கொன்றையணியலாரூரற்
கலராகியானுமனிவ—னலராகி
யோதத்தாலெட்டினேலுதுவன்யானேங்கொலிதீ
ரோதத்தானஞ்சுண்டானூர். (ஏ)

ஊருமதொற்றியூருண்கலனும்வெண்டலையே
யூரும்விடையொன்றுடைதோலே—யூரும்
படராகமட்டார்பணமாலையீதோ
படராகமட்டார்பரிசு. (ஐ)

பரியானேயூராதுபைங்கணேறூரும்
பரியானேப்பாவிக்கலாகா—பரியானேக்
கட்டங்கமேந்தியாக்கண்டுவாழ்நன்னெஞ்சே
கட்டங்கமேந்தியாக்கண்டு. (ஒ)

கண்டங்கரியனுமைபாலுந்தன்பாலுங்
கண்டங்கரியன்கரிகாடன்—கண்டங்கள்
பாடியாட்டாடும்பரஞ்சோதிக்கென்னுள்ளம்
பாடியாக்கொண்டபதி. (ஓ)

பதியார்பழிதீராப்பைங்கொன்றைகாவேன்
பதியான்பலநாளிரக்கப்—பதியாய
வம்மானுர்கையார்வலைகவர்ந்தாரஃதேகொ
லம்மானுர்கையாரறம். (கூ)

அறமானநோக்காதகங்களேயுஞ்செற்றங்
கறமாநஞ்சுண்டவமுத—னறமான
வோதியாள்பாகமமர்ந்தானுயர்புகழே
யோதியான்மூற்றேனெளி. (கo)

ஒளியார்சுடர்மூன்றுங்கண்மூன்றுக்கோடற்
கொளியானுலகெல்லாமேத்தற்—கொளியாய
கள்ளேற்றுன்கொன்றையான்காப்பிகந்தானன்னெஞ்சே
கள்ளேற்றுன்கொன்றைகடிது. (கக)

கடியரவர் காரிதாடுகோயில்
கடியரவர்கையதுமோர்சூலங்—கடியரவ
ரானேற்றுர்க்காட்பட்டநெஞ்சமேயஞ்சனீ
யானேற்றுர்க்காட்பட்டேம்யாம். (கஉ)

யாமானநோக்காதலர்கொன்றைத்தார்வேண்ட
யாமானங்கொண்டங்கலர்தந்தார்—யாமாவா
வாஞராஞருமழகாவனலாடி
யாஞரார்க்கென்னுரைக்கோம்யாம். (கங)

யானேன்றங்கண்ணுமலையானகம்புகுந்து
யானேன்றங்கையறிவுகுன்றுவித்து—யானேன்றங்
கார்த்தானேயாயிடினுமம்பரன்மேலங்கொன்றை
யார்த்தானேலுய்வதரிது. (கச)

அரியாரும்பூம்பொழில்சூழாமாத்தூரம்மா
னரியாரும்பாகத்தமுத—னரியாரும்
வேங்கடத்துமேயானேமேவாவுயிரெல்லாம்
வேங்கடத்துநோயால்வியந்து.

வியந்தாழிநன்னெஞ்சேமெல்லியலார்க்காளாய்
வியந்தாசையுண்மெலியவேண்டா—வியந்தாய
கண்ணுதலானெந்தைகாபாலிகழலடிப்பூக்
கண்ணுதலாநம்பாற்கடன். (கசு)

கடலுகமூராதகாரணமுங்கங்கை
கடலுகநீகவர்ந்தவாறுங்—கடலுகப்
பாரிடந்தான்மேவிப்பயிலும்பரஞ்சோதி,
பாரிடந்தான்மேயாய்பணி. (கஎ)

பணியாய்மடநெஞ்சேபல்சடையான்பாதம்
பணியாதபத்தர்க்குஞ்சேயன்—பணியாய
வாகத்தான்செய்துமேனம்மையமரர்கோ
ஞகத்தான்செய்யுமரன். (கஅ)

அரன்காயனைவேற்கரங்கவேளம்பு
மரன்காயுமந்தியுமற்றந்தோ—வரங்காய
வெள்ளில்சேர்காட்டாடிவேண்டான்களிறுண்ட
வெள்ளில்போன்றுள்ளம்வெறிது. (கக)

வெறியானேயூர்வேந்தர்பின்செல்லும்வேட்கை
வெறியார்பூந்தாரான்விமலன்—வெறியார்த
மல்லலேஞ்தீர்க்குமருமருந்தாமாரூர்க்கோ
னல்லலேநெஞ்சேயயன். (உ0)

அயமாலூணுடரவநாணதளதாடை
யயமாவதானேறாரூ—ரயமாய
வென்னக்கன்றுழ்சடையனீற்றனெரியாடி
யென்னக்கன்றுழுமிவள். (உக)

[illegible]வியுளேயுங்கையலவாற்றேனென்
[illegible]யாதே—யாழுஞ்
[illegible]சங்கக்குழையாய்
(உஉ)

தாராயதண்கொன்றையானிரப்பத்தானிதனைத்
தாராதேசங்கஞ்சரிவித்தான்—ரூராவல்
லானேமேல்வைகுமணிவயலாரூர்க்கோனல்
லானேயும்வானோர்க்கரசு. (உக)

அரசுமாயாள்விக்குமாட்பட்டார்க்கம்மா
னரசுமாமங்கொன்றுமாலுக்—கரசுமா
னூர்தியெரித்தானுணருஞ்செவிக்கின்ப
னூர்தியெரித்தானூரு. (உச)

உருவேயென்சொற்களொளிவளர்கின்னுள்ளத்
துருவேதியுற்றனகளெல்லா—முருவேபோய்க்
காவாலிதார்கினைந்துகைசோர்ந்துமெய்மறந்தாள்
காவாலிதானின்கலை. (உஞ)

கலைகாமினோர்காமின்கைவளைகள்காமின்
கலைசோர்நுதலீர்நாண்காமின்—கலையாய
பான்மதியன்பண்டரங்கன்பாரோம்புதான்மறையன்
பான்மதியன்போந்தான்பலிக்கு. (உசு)

பலிக்குத்தலையேந்திப்பாரிடங்கள்சூழப்
பலிக்குமனப்புகுந்துபாவாய்—பலிக்குநீ
யையம்பெய்யென்றுனுக்கையம்பெய்கின்றேன்மே
லையம்பெய்தானஞ்கனையந்து. (உஎ)

ஆயமழியவலர்கொன்றைத்தார்வேண்டி
யாய்மழியவயர்வேன்மே—லாயன்வாய்த்
தீங்குழலுந்தென்றலுந்தேய்கோட்டிளம்பிறையுந்
தீங்குழலுமென்னையேதேர்ந்து. (உஅ)

தேரோன்கதிரென்னுஞ்செந்தழலால்வெந்தெழுபேய்த்
தேரோன்கதிரென்னுஞ்செய்பொருணீ—தேராதே
கூடற்காவாலிகுரைகழற்காடன்னெஞ்சே
கூடற்காவாலிதரக்கூர். (உக)

கூராலமேயாக்குருகோடுமைவேற்குக்
கூரார்வேற்கையார்க்காய்க்கொல்லாமே—கூரார்
பனிச்சங்காட்டார்சடைமேற்பான்மதியைப்பாம்பே
பனிச்சங்காட்டாய்கடிக்கப்பாய்ந்து. (கூ)

பாயும்விடையூர்திபாசுபதன்வந்தெனது
பாயிற்புகுதப்பணிமுலைமேற்—பாயிலனற்
கொன்றுய்குளிர்சடையாற்கெண்ணிலைமைகூறுதே
கொன்றுயிதுவோகுணம். (கூக)

குணக்கோடிகோடாக்குளிர்சடையான்வில்லின்
குணக்கோடிக்குன்றஞ்சூழ்போகிக்—குணக்கோடித்
தேரிரவில்வாரான்சிவற்காளாஞ்சிந்தனையே
தேரிரவில்வாழுந்திறம். (கூஉ)

திறங்காட்டுஞ்சேயாள்சிறுகிளியைத்தான்றன்
றிறங்காட்டுந்தீவண்ணனென்னுங்—திறங்காட்டி
ஞாரரவமார்த்தாலுடென்னையுடன்கூட்டி
ஞாரரவஞ்சாலவுடைத்து. (கூங)

உடையோடுகாடாடியூரையமுண்ணி
யுடையாடைதோல்பொடிசந்தென்னை—யுடையானை
யுன்மத்தகமுடிமேலுய்த்தானைநன்னெஞ்சே
யுன்மத்தகமுடிமேலுய். (கூச)

உய்யாதெனுவியொளிவளையுமேகலையு
முய்யாதுடம்பழிக்குமொண்டிதலை—யுய்யா
பிறையானேயீசனேயெம்மானேநின்னை
யிறையானுங்காண்கிடாயின்று. (கூஇ)

இன்றியாமுற்றவிடருமிருந்துயரு
மின்றியாந்தீர்துமெழினெஞ்சே—பின்றியாங்
கோட்டாநஞ்சேற்றுன்காமருவெண்காட்டான்
காட்டானஞ்சேற்றுன்கலந்து. (கூசு)

கலம்பெரியார்க்காஞ்சிரங்காய்வின்மேருவென்னுங்
கலம்பெரியவாற்கீழிருக்கை—கலம்பிரியா
மாக்கடனஞ்சுண்டார்கழலேழார்க்குண்டாமோ
மாக்கடனஞ்சேரும்வகை. (கூஎ)

கையாறவாவெகுளியச்சங்கழிகாமங்
கையாறுசெஞ்சடையான்காப்பென்னுங்—கையாறு
மற்றிரண்டதோளானேச்சேர்நெஞ்சேசேரப்போய்
மற்றிரண்டதோளான்மனே. (கூஅ)

மனையாய்பலிக்கென்றுவந்தான்வண்காமன்
மனையாசறச்செற்றவானேனன்—மனையாய
வென்பாவாயென்றேனுக்கியானல்லேனீதிருவே
யென்பாவாயென்னுனிறை. (கூக)

இறையாயவெண்சங்கிவைதருவேனென்னு
மிறையாகமின்றருளாயென்னு—மிறையாய்
மறைக்காட்டாய்மாதவனேநின்னுருவமிங்கே
மறைக்காட்டாயென்னுமிம்மாது. (சஂ)

மாதரங்கத்தன்னரங்கஞ்சேர்த்திவளர்சடைமேன்
மாதரங்கச்சங்கைநீர்மன்னுவித்து—மாதரங்கத்
தேரானேயூரான்சிவற்காளாஞ்சிந்தனையே
தேரானேயூரானேத்தேர். (சக)

தேருலிலாவொன்னுவார்காவிரிவந்
தேருமருகிற்சிராமலையான்—றேரமர்க்கட்
செல்லுமதின்மூன்றெரித்தான்சேவடியேயாம்பரவிச்
செல்லுமெழினெஞ்சேதெளி. (சஉ)

தெளியாய்மடநெஞ்சேசெஞ்சடையான்பாதந்
தெளியாதார்தீநெறிக்கட்செல்வர்—தெளியாய
பூவார்சடைமுடியான்பொன்னடிக்கேயேத்துவனற்
பூவாயவாசம்புனைந்து. (சஉ)

புனைகடற்குப்பொன்கொடுக்கும்பூம்புகார்மேயான்
புனைகடுக்கைமாலைப்புராணன்—புனைகடத்து
நட்டங்கமாட்டியருநம்பன்றிருநாம
நட்டங்கமாட்டினேனக்கு. (சச)

நக்கரைசாளுநடுநாளுநாரையூர்
நக்கரைவக்கரையோநாமென்ன—நக்குரையாம்
வண்டாழங்கொன்றையான்மால்பணித்தான்மற்றவர்க்காய்
வண்டாழங்கொண்டான்மதி. (சஜ)

மதியாலடுகின்றதென்னுமால்கூரு
மதியாதேவைதுரப்பரென்னு—மதியாதே
மாதெய்வமேத்துமறைக்காடாவீதேகொன்
மாதெய்வங்கொண்டவனப்பு. (சக)

வனப்பார்நிறமும்வரிவளையுநாணும்
வனப்பார்வளர்சடையான்கொள்ள—வனப்பாற்
கடற்றிரையுமீருமிக்கங்குல்வாய்
கடற்றிரையுமீருங்கனன்று. (சஎ)

கனன்ருழிநன்னெஞ்சேகண்ணுதலார்க்காளாய்க்
கனன்ருர்களிற்றுரிமால்காட்டக்—கனன்ரு
ருடம்பட்டநாட்டத்தளென்னையுந்தன்னுளா
வுடம்பட்டநாட்டனுரு. (சஅ)

உருவியலுஞ்செம்பவளமொன்றுருடம்பி
லுருவியலுஞ்சுலமுடைய—னுருவியலு
மாலேற்றுனன்முகனுமண்ணுடிவிண்ணும்போய்
மாலேற்றுற்கீதோவடிவு. (சகூ)

வடிவாரறப்பொங்கிவண்ணக்கச்சுந்தி
வடிவார்வடம்புனைந்தும்பொல்லா—வடிவார்வேன்
முக்கூடலம்மாமுருகமருங்கொன்றையந்தார்
முக்கூடமாட்டாமுலை. (கூ0)

மூலகலஞ்சேர்கானப்பேர்முக்கணனென்னு
மூலகலஞ்சேர்மொய்சடையானென்னு—மூலகலஞ்சேர்
மாதேவாவென்றுவளர்கொன்றைவாய்சோர
மாதேவாசோரல்வளை. (கக)

வளையாழியோடகலமாறந்தானென்னும்
வளையாழிநன்னேஞ்சேகாணில்—வளையாழி
வன்னஞ்சைக்கண்டமரர்வாய்சோரவந்தெதிர்ந்த
வன்னஞ்சக்கண்டன்வரில். (கஉ)

வரிநீலவண்டலம்புமாமறைக்காட்டங்கேழ்
வரிநீர்வலம்புரிகளுந்தி—வரிநீ
ரிடுமணன்மேலன்னலங்கொண்டின்னுநோய்செய்தா
னிடுமணன்மேலீசனெமக்கு. (கங)

அக்காரமாடரவாணறுவைதோல்பொடிசாந்
தக்காரந்தீர்ந்தேனடியேற்கு—வக்காரம்
பண்டாரங்கனெந்தைபடபிணஞ்சேர்வெங்காட்டுப்
பண்டாரங்கனெங்கள்பவன். (கச)

பவனடிபார்விண்ணீர்பகலோன்மதிதீப்
பவனஞ்சேராரமுதம்பெண்ணுண்—பவனஞ்சேர்
காலங்களுழியவனேகரிகாட்டிற்
காலங்கையேந்திஞன்காண். (கஙி)

காணங்கையின்மைகருதிக்கவலாதே
காணங்கையாற்றொழுதுன்னெஞ்சே—காணங்கை
பாவனையாய்நின்றுன்பயிலும்பரஞ்சோதி
பாவனையாய்நின்றபதம். (கக)

பதங்கவரையுயர்ந்தான்பான்மகிழ்ந்தான்பண்டு
மதங்கனெயிறுபறித்தான்—பதங்கையா
லஞ்சலிகளன்பாலுமாக்குதிகாணெஞ்சேகூர்ந்
தஞ்சலிகளென்பாலுமாக்கு. (கஎ)

ஆக்கூர்பனிவாடாவாவிசோர்ந்தாழ்கின்றே
ஞக்கூரலர்தானழகிதா—வாக்கூர்
மறையோம்புமாடத்துமாமறையோர்நான்கு
மறையோம்புமாதவர்க்காய்வந்து. (இஅ)

வந்தியான்சீறினுமாழிமடநெஞ்சே
வந்தியாயுள்ளத்துவைத்திராய்—வந்தியாய்
நம்பரனையாடுகளிர்புன்சடையானை
நம்பரனைநாடோறுநட்டு. (இக)

கட்டமாகின்றனவோணசங்கநானவன்பால்
கட்டமாநன்னீர்மைவாடினே—னட்டமா
மூயானெரியாடியெம்மானிருங்கொன்றை
யீயானேலுய்வதிலம். (சுo)

இலமலரஞ்சேவடியாரேகப்பெரூரே
இலமலரேயாயினுமாக—விலமலரு
மாம்பல்சேர்செவ்வாயார்க்காடாதேயாடினே
னும்பல்சேர்வெண்டலையர்க்காள். (சுக)

ஆளானஞ்சேர்களினுந்தேருமடன்மாவு

காடகங்களாட்டியருநம்பன்றிருநாம
காடகங்களாடிநயந்து. (சுஉ)

நயந்தநாள்யானிரப்பநற்சடையான்கொன்றை
நயந்தநாணன்னீர்மைவாட—நயந்தநா
ளம்பகலஞ்செற்றனருளானநங்கவே
ளம்பகலம்பாயுமலர்ந்து. (சுங)

அலங்காரமாடரவமென்புதோலாடை
யலங்காரவண்ணற்கழகா—ரலங்கார
மெய்காட்டுவார்குழலாரென்னுவார்வெள்ளேற்றான்
மெய்காட்டும்வீடாம்விரைந்து. (சுச)

விரையார்புனற்கங்கைசேர்சடையான்பொன்னூர்
விரையார்பொழிற்புறந்தைமேயான்—விரையானீ
றென்பணிந்தானீசனிறையானெரியாடி
யென்பணிந்தானீசனெனைக்கு. (கூஙி)

எனக்குவளைநில்லாவெழிலிழந்தேனென்னு
மெனக்குவளைநில்லாநோய்செய்தா—னினக்குவளைக்
கண்டத்தாலல்வேதன்காரோணத்தெம்மானைக்
கண்டத்தானெஞ்சேகாக்கை. (கூசு)

காக்கைவளையென்பார்ப்பார்க்கன்பாப்பானையாதே
காக்கைவளையென்பார்ப்பானூர்குரக்குக்—காக்கைவளை
யாடானையீரியனுண்பெணவிர்சடைய
னாடானையானதமைவு. (கூஎ)

அமையாமென்றூண்மெலிவித்தம்மாமைகொண்டிங்
கமையாநோய்செய்தாளணங்கே—யெமையாளுஞ்
சாமத்தகண்டன்சடைசேரிளம்பிறையன்
சாமத்தனிற்நோய்செய்தான். (கூஅ)

தானக்கனக்கபிறையன்பிறைக்கோட்டுத்
தானக்களிற்றுரியன்றண்பழனன்—றூனத்
தரையனரவரையனுயிழைக்குமாற்கு
மரையனுடையானருள். (கூக)

அருணம்பாற்செஞ்சடையனுமாத்தூரம்மா
னருணம்பானல்குமமுத—னருணம்பா
லோராழித்தேரானெயிறட்டவுத்தமனே
யோராழிநெஞ்சேபுவ. (எ0)

உவவாநறுமலர்கொண்டுத்தமனேபுள்கி
யுவவாமனமகிழும்வேட்கை—யுவவா
றெழுமதிபோல்வாண்முகத்தீசனர்க்கென்னே
யெழுமதிபோலீசனிடம். (எக)

இடமால்வலமாலைவண்ணமேதம்ப
மிடமால்வலமானஞ்சேர்த்தி—யிடமாய
மூவாமதிபுரையுமுன்னிலங்குமொய்சடையான்
மூவாமதியான்முனி. (எஉ)

முனிவன்மால்செஞ்சடையான்முக்கணெனன்னு
முனிவன்மால்செய்துமுன்னிற்கு—முனிவன்மால்
போற்றூர்புரமெரித்தபுண்ணியன்றன்பொன்னடிகள்
போற்றுநாளின்றுபுலர்ந்து. (எஊ)

புலர்ந்தால்யாஞற்றேறன்புறனுரையுமஃதே
புலர்ந்தானூர்புன்கூரானென்னும்—புலர்ந்தாய
மண்டலியனம்மானவர்தம்மடியார்தம்
மண்டலியன்பின்போமனம். (எசு)

மனமாயநோய்செய்தான்வண்கொன்றைதாரான்
மனமாயவுள்ளாரவாரான்—மனமாயப்
பொன்மாலைசேரப்புனைந்தான்புனைதருப்பைப்
பொன்மாலைசேர்சடையான்போந்து. (எடு)

போந்தார்புகவணைந்தார்பொன்னேர்ந்தார்பொன்னுமை
போந்தாரொழியார்புரமெரித்தார்—போந்தா
ரிலங்கோலவாண்முகத்தீசனுற்கெல்லே
யிலங்கோலந்தோற்பதினி. (எசு)

இனியாருமாளாகவெண்ணுவர்கொலெண்ணு
ரினியானஞ்சூணிருக்கைக்குள்ளா—னினியானைத்
தாளங்கையாற்பாடித்தாழ்சடையான்றனுடைய
தாளங்கையாற்றொழுவார்தாம். (எஎ)

தாமரைசேர்நான்முகற்குமாற்குமறிவரியார்
தாமரைசேர்பாம்பர்சடாமகுடர்—தாமரைசேர்
பாணியார்தீர்ந்தளிப்பர்பாரோம்புநான்மறையார்
பாணியார்தீர்ந்தளிப்பர்பார். (எஅ)

பார்கால்வானீர்தீப்பகலோன்பனிமதியன்
பார்கோலமேனிப்பரனடிக்கே—பார்கோலக்
கோகரணத்தானறியக்கூறுதியேநன்னெஞ்சே
கோகரணத்தாலுயகோ. (எக)

கோப்பாடியோடாதேநெஞ்சமொழிகூத்தன்
கோப்பாடிக்கோகரணங்குற்றாலங்—கோப்பாடிப்
பின்னேக்காய்நின்றூர்க்கிடங்கொடுக்கும்பேரருளான்
பின்னேக்காமெம்பெருமான்பேர். (அ0)

பேரானேயீருரிவைபோர்த்தானேயாயிரத்தெண்
பேரானேயீருருவம்பெற்றானேப்—பேராநஞ்
சுண்டானேயுத்தமனேயுள்காதார்க்கெஞ்ஞான்று
முண்டாநாளல்லவுயிர். (அக)

உயிராயமூன்றெருடக்கியைந்தடக்கியுள்ளத்
துயிராயவொண்மலர்த்தாளுடே—யுயிரான்
பகர்மனத்தான்பாசுபதன்பாதம்பணியப்
பகர்மனமேயாசைக்கட்பட்டு. (அஉ)

பட்டாரண்பட்டாரங்கனம்மான்பரஞ்சோதி
பட்டாரெலும்பணியும்பாசுபதன்—பட்டார்ந்த
கோவணத்தான்கொல்லேற்றனென்றென்றுநெஞ்சமே
கோவணத்துநம்பனேயேகூறு. (அங)

கூற்றும்பொருளும்போற்காட்டியென்கோல்வளையைக்
கூற்றின்பொருண்முயன்றகுற்றாலன்—கூற்றின்
செருக்கழியச்செற்றசிவற்கடிமைநெஞ்சே
செருக்கழியாமுன்னமேசெய். (அசு)

செய்யான்கருமிடற்றூன்செஞ்சடையான்றென்பொழில்சூழ்
செய்யான்பழனத்தான்மூவலகுஞ்—செய்யாமு
ஞாட்டுணுய்நின்றூனாடுதும்போய்நன்னெஞ்சே
நாட்டுணுய்நின்றூனாம். (அடு)

காவாயகத்துளதேகாமுளமேகம்மீச
னவாய்போனன்னெறிக்கணுய்க்குமே—நாவாயாற்
றுய்க்கப்படும்பொருளேக்கூட்டுதுமற்றவர்க்காட்
டுய்க்கப்படுவதாஞ்சூது. (அசு)

சூதென்றுனக்கறியச்சொல்லினேனன்னெஞ்சே
சூதன்சொலற்கரியசோதியான்—சூதின்
கொழுந்தேன்கமழ்சோலைக்குற்றுலம்பாடிக்
கொழுந்தேயிழந்தேன்குருகு. (அள)

குருகிளவேய்த்தோண்மெலியக்கொங்கைமார்புல்கிக்
குருகினையார்கோடுகொடாமே—குருகிளரும்
போதார்கழனிப்புகலூரமர்ந்துறையும்
போதாகின்பொன்முடிக்கட்போது. (அஅ)

போதரங்கவார்குழலாரென்னவார்கன்னெஞ்சே
போதரங்கநீர்கரந்தபுண்ணியனைப்—போதரங்கக்
கானகஞ்சேர்சோதியேகைவிளக்காகின்றுங்
கானகஞ்சேர்வாற்கடிமைகல். (அகு)

கற்றுனஞ்சாடுகாவாலிகளந்தைக்கோன்
கற்றுனைக்கல்லாதகாளெல்லாங்—கற்று
னமரர்க்கமரரார்க்கடிமைபூண்டா
ரமரர்க்கமரராவார். (கo)

ஆவாமனிதராறிவிலரேயாதொன்று
மாவார்போற்காட்டியழிகின்று—ராவா
பகனுடிப்பாடிப்படர்சடைக்குப்பல்பூப்
பகனுடியேத்தார்பகர்ந்து. (கக)

பகனுட்டம்பாட்டையரும்பாட்டோடாட்டெல்லி
பகனுட்டம்பாழ்படுக்குமுச்சி—பகனுட்டங்
தாங்காருழுதெழுவார்தாழ்சடையார்தம்முடைய
தாங்காருழுதறலை. (கஉ)

தலையாலங்காட்டிற்பலிதிரிவரென்னுந்
தலையாலங்காடர்தாமென்னுந்—தலையாய
பாகீரதிவளரும்பல்சடையீர்வல்விடையீர்
பாகீரதிவளரும்பண்பு. (கூந)

பண்பாயநான்மறையான்சென்னிப்பலிதேர்ந்தான்
பண்பாயபைங்கொன்றைத்தாரருளான்—பண்பாற்
றிருமாலுமங்கைச்சிவற்கடிமைசெய்வான்
றிருமாலுமங்கைச்சிவன். (கூச)

சிவன்மாட்டுகவெழுதுநாணுகுமென்னுஞ்
சிவன்மேயசெங்குன்றுரென்னுஞ்—சிவன்மாட்டங்
காலிங்கனதினையுமாயிழையீரங்கொன்றை
பாலிங்கனதினையுமாறு. (கூடி)

ஆருவெங்கூற்றுதைத்தானைத்தோல்போர்த்துகந்தங்
காரூர்சடையீர்க்கமையாதே—யாரூத
வானினத்தார்தாந்தமணியிழையினூர்க்கடிமை
யானினத்தார்தாந்தவிர்ந்ததாட்டு. (கூசு)

ஆட்டுமரவாழிந்தாரெலும்பணிவா
ராட்டுமிடுபலிகொண்டாரமர—ராட்டுமோர்
போரேற்றூன்கொன்றையான்போந்தான்பலிக்கென்று
போரேற்றூன்போந்தான்புறம். (கூள)

புறந்தாழ்குழலார்புறனுரையஞ்சாதே
புறந்தாழ்புலிப்பொதுவுளாடி—புறந்தாழ்பொன்
மேற்றளிக்கோன்வெண்பிறையான்வெண்சுடர்போன்மேனியான்
மேற்றளிக்கோனென்றுரையான்மெய். (கூஅ)

மெய்யன்பகலாதவேதியன்வெண்புரிநூன்
மெய்யன்விரும்புவார்க்கெஞ்ஞான்றும்—வெய்ய
தூணையகலாநோக்கலாபோற்றிகலாநெஞ்சே
தூணியகலாகூறுவானூறு. (கூக)

நூருன்பயனுட்டின்னூறுமலர்சொரிந்து
தூருதொடிவதனின்மிக்கதே—நூரு
வுடையான்பரித்தவெரியுத்தமனேவெள்ளே
றுடையானேப்பாடலாலொன்று. (கூ00)

திருச்சிற்றம்பலம்.



உ

திருச்சிற்றம்பலம்.

பரணதேவநாயனர்

அருளிச்செய்த

சிவபெருமான்றிருவந்தாதி.

ஒன்றுரைப்பீர்போலப்பலவுரைத்திட்டோயாதே
யொன்றுரைப்பீராயினுறுதுணேயா—மொன்றுரைத்துப்
பேரரவம்பூண்டுபெருந்தலேயிலுண்டுழலும்
பேரரவம்பூணும்பிரான். (க)

பிரானிடபமால்பெரியமந்தாரம்வில்லுப்
பிரானிடபம்பேரொலிநாணுகம்—பிரானிடபம்
பேணுமுமைபெரியபுன்சடையின்மேலமர்ந்து
பேணுமுமையிடவம்பெற்று. (உ)

பெற்றும்பிறவிபிறந்திட்டொழியாதே
பெற்றும்பிறவிபிறந்தொழிமின்—பெற்றுங்
குழையணிந்தகோளரவக்கூற்றுதைத்தான்றன்னைக்
குழையணிந்தகோளரவீ. (ங)

நீயேயாளாவாயுநின்மலற்குநன்னெஞ்சே
நீயேயாளாவாயுநீள்வாளி—னீயே
வேறூர்புனற்சடையாவெங்களிடைமருதா
வேறூர்புனற்சடையாவென்று. (உ)

என்றுமலர்தூவியீசன்றிருநாம
மென்றுமலர்தூற்றியேயிருந்து—மென்றும்

புகலூராபுண்ணியனேயென். (ஙி)

என்னேயிவளுற்றமாலென்கொலின்கொன்றை
யென்னேயிவளொற்றியூரென்னு—மென்னே
தவளப்பொடியணிந்தசங்கரனேயென்னுந்
தவளப்பொடியானேச்சார்ந்து. (சு)

சார்ந்துரைப்பதொன்றுண்டுசாவாமூவாப்பெருமை
சார்ந்துரைத்ததத்துவத்தினுட்பொருளச்—சார்ந்துரைத்த
வாதியேயம்பலவாவண்டத்தையாட்கொள்ளு
மாதியேன்றென்பாலருள். (எ)

அருள்சோராதாரூர்தியாரூமலெய்தா
யருள்சோராதாரூர்தியாடி—யருள்சேரப்
பிச்சையேற்றுண்டுபிறர்கடையிற்கானிமிர்த்துப்
பிச்சையேற்றுண்டுழல்வாய்பேச்சு. (அ)

பேச்சுப்பெருகுவதென்பெண்ணையென்று
பேச்சுக்கடந்தபெருவெளியைப்—பேச்சுக்
குரையானேயூனுக்குயிரானேயென்றற்
குரியானேநன்னெஞ்சேயுற்று. (க)

உற்றுரையாய்நன்னெஞ்சேயோதக்கடல்வண்ண
னுற்றுரையாவண்ணமொன்றுணே—புற்றுரையா
யானேயுரித்தானேயப்பனேயெப்பொழுது
மானேயுரித்தானேயடைந்து. (கூ)

அடைந்துன்பாலன்பாயணிமணிகொண்டர்ச்சித்
தடைந்துன்பான்மேலுருத்தமாணிக்—கடைந்துன்பா
லவ்வமுதமூட்டியணிமலருஞ்சூழ்ந்தன்று
வவ்வமுதமாக்கிலுய்காண். (கக)

காணுய்கவாலிகதிர்முடிமேற்கங்கைதனைக்
காணுயக்காருருவிற்சேருமையைக்—காணு
யுடைதலைகொண்டூரூர்திரிவானேநச்சி
யுடைதலைகொண்டூரூர்திரி. (கஉ)

திரியும்புரமெரித்தசேவகனூர்செவ்வே
திரியும்புரமெரியச்செய்தார்—திரியு
மரியான்றிருக்கயிலையென்னுதார்மேனி
யரியான்றிருக்கயிலையாம். (கங)

ஆம்பரிசேசெய்தங்கழியாக்கை—யாம்பரிசே
யேத்தித்திரிந்தானேயெம்மானேயம்மானே
யேத்தித்திரிந்தானேயேத்து. (கச)

ஏத்துற்றுப்பார்த்தனெழில்வானடைவான்போ
லேத்துற்றுப்பார்த்தனிறைஞ்சுதலு—மேத்துற்றுப்
பாசுபதமன்றளித்தபாசூரான்பானீற்றூன்
பாசுபதமின்றளியென்பால். (கஞ)

பாலார்புனல்பாய்சடையானுக்கன்பாகிப்
பாலார்புனல்பாய்சடையானுள்—பாலாடி
யாடுவான்பைங்கணரவூர்வான்மேனிதீ
யாடுவானென்றென்றேறையாங்கு. (கசு)

ஆங்குரைக்கலாம்பொன்மலர்ப்பாதமீதன்றே
யாங்குரைக்கலாம்பொனணிதில்லை—யாங்குரைத்த
வம்பலத்துமண்டத்துமப்பாலுமாய்நின்ற
வம்பரத்துமண்டத்துமாம். (கஎ)

மாயனே யோர்பாகமமர்ந்தானே வானவரு
மாயவருமால்கடனஞ்சுண்டானே—மாய
வருவானே மாலையொளியானே வானி
னுருவானேயேத்தியுணர். (௪௮)

உணராவளகழலாவுற்றன்பாற்சங்க
முணராவளகழலெவட்டி—யுணரா
வளந்தானமேனியணியாரூரேசென்
றளந்தானேயாமாறுகண்டு. (௪௯)

கண்டிறந்துகாயெரியின்வீழ்ந்துகடிதோடிக்
கண்டிறந்துகாமன்பொடியாகக்—கண்டிறந்து
கானினுகந்தாடுங்கருத்தர்க்குக்காட்டினான்
கானினுகந்தாடுங்கருத்து. (௫0)

கருத்துடையவாதிகறையிடற்றெம்மீசன்
கருத்துடையகங்காளவேடன்—கருத்துடைய
வானேற்றானீற்றனனலாடியாமாத்தூ
ரானேற்றானீற்றனெரி. (௫௧)

எரியாடியேகம்பமென்னுதார்மேனி
யெரியாடியேகம்பமாகு—மெரியாடி
யீமத்திடுங்காடுதேருமிறைபணிப்ப
வீமத்திடுங்காடுதான். (௫௨)

தானையன்மாலாகிநின்றன்றனித்துலகிற்
றானையன்மாலாயதன்மையான்—றானைக்
கரைப்படித்தானன்மறையைத்தண்புலித்தோலாடைக்
கரைப்படித்தான்றன்பாதஞ்சார். (௫௩)

சாராவார்தாமுளரேற்சங்கரன்றன்மேனிமேற்
சாராவார்கங்கையுமைநங்கை—சார்வா
யாவமதுசெஞ்சடைமேலக்கொன்றையொற்றி
யாவமதுசெஞ்சடையின்மேல். (௫௪)

மேலாயதேவர்வெருவவெழுஞ்ச
மேலாயமின்றிவேறுண்பொழுதின்—மேலாய
மங்கையுமைவந்தடித்திலேவாணுரு
மங்கையுமைவந்தடித்து. (உடு)

அடித்தபொன்னம்பலமேசார்வுமதனு
ளடித்திருநட்டமஃதே—யடித்திரு
வானைக்காவாடுவதுமேலென்புணர்ப்பதுவு
மானைக்காவான்றனமைவு. (உசு)

அமைவும்பிறப்புமிறப்புமாமற்றுங்
கமைவும்பரமானவாதி—யமையுந்
திருவாலவாய்சென்றுசேராதுமாக்க
டிருவாலவாய்சென்றுசேர். (உஎ)

சென்றுசெருப்புக்காலாற்செல்லமலர்நீக்கிச்
சென்றுதிருமுடிவாய்நீர்வார்த்துச்—சென்றுதன்
கண்ணிடந்தன்றப்புங்கருத்தற்குக்காட்டினன்
கண்ணிடந்தன்றப்பாமைப்பார்த்து. (உஅ)

பார்த்துப்பரியாதேபானீறுபூசாதே
பார்த்துப்பரிந்தங்கம்பூணுதே—பார்த்திட்
டிடையானஞ்சோதாதேயுரைக்கைவிட்
டிடையானஞ்சோதாதாரூண். (உக)

ஊணென்றுமில்லையுறக்கில்லையுன்மாலி
னூணென்றுபேசவோர்சங்கிழந்தா—னூணென்றும்
விட்டானேவேள்வியுரந்தானேவெள்ளநீர்
விட்டானேபுன்சடைமேல்வேறு. (கூ0)

வேறுரைப்பன்கேட்டருளும்வேதநான்காறங்கம்
வேறுரைத்தமேனிவிரிசடையான்—வேறுரைத்த
பாதத்தாய்பைங்கணரவூர்வாய்பாரூரும்
பாதத்தாயென்னுமலர். (கூக)

மலரணைந்துகொண்டுமகிழ்வாயுன்பாத
மலரணைந்துமானயனமாகு—மலரணைந்து
மன்சக்கரம்வேண்டவாளாவளித்தனையால்
வன்சக்கரம்பரனேவாய்த்து. (கூ)

வாய்த்தவடியார்வணங்கமலரோன்மால்
வாய்த்தவடியுமுடியுங்காணர்—வாய்த்த
சலந்தரனைக்கொன்றிட்டுச்சங்கரனுரென்னே
சலந்தரனுய்ன்றவாதாம். (கூஉ)

தாமென்னநாமென்னவேறில்லதத்துறவிற்
ரூமென்னவேரூத்தனித்திருந்து—தாமென்
கழிப்பாலேசேருங்கறைமிடற்ரூரென்னே
கழிப்பாலேசேருங்கடன். (கூச)

கடனுகக்கைதொழுமின்கைதொழவல்லீரேற்
கடனுகைக்காரோணமேயார்—கடனாக
மாளவுரித்தாடுவார்நம்மேலவல்வினைநோய்
மாளவுரித்தாடுமால்வந்து. (கூஎ)

வந்தார்வானகழல்வார்வாடித்துகில்சோர்வார்
வந்தார்மூலமெலிவார்வார்குழல்கள்—வந்தார்
சூரிதருவாரைங்கொன்றைத்தாராரைக்கண்டு
சூரிதருவாரைங்கொன்றைத்தார். (கூசு)

தாராரனெனினுஞ்சடைமுடியான்சங்கரனந்
தாரான்றசமுகனேத்தோணெரித்துத்—தாராய
காளுங்கொடுத்தந்தவானவர்கடம்முன்னே
வாளுங்கொடுத்தான்மதித்து. (கூஏ)

மதியாருஞ்செஞ்சடையான்வண்கொன்றைத்தாரான்
மதியாருமாலுடையபாகன்—மதியாரு
மண்ணுமலேசாராராரோடுங்கூடாகி
பண்ணுமலேசர்வரால். (கூஅ)

ஆலநிழற்கீழிருப்பதுவுமாய்வதற
மாலமழுதுசெய்வதாடுவதீ—யாலந்
துறையுடையானூனையுரியுடையான்சோற்றுத்
துறையுடையான்சோராதசொல்லு. (நஉ)

சொல்லாயமின்றித்தாலிவின்றித்தூநெறிக்கட்
சொல்லாய்ப்பெருத்தசுடரொளியாய்ச்—சொல்லாய
வீரட்டத்தானைவிரவார்புரமட்ட
வீரட்டத்தானைவிரை. (சஐ)

விரையாருமத்தம்விரகாகச்சூடி
விரையாரும்வெள்ளெலும்புபூண்டு—விரையாரு
நஞ்சுண்டவாதிநலங்கழல்கள்சேராதார்
நஞ்சுண்டவாதிநலம். (சக)

நலம்பாயுமாக்கநலங்கொண்டலென்ற
னலம்பாயுமானன்குருவ—நலம்பாய்செய்
தார்த்தார்க்குமண்ணுமலையானிடந்
தார்த்தார்க்குமண்ணுமலை. (சஉ)

மலையார்கலையோடவாரோடக்கொங்கை
மலையார்கலைபோய்மாலாஞண்—மலையார்
கலையுடையான்வானின்மதியுடையான்காவாத்
தலையுடையானென்றுதொழுதாள். (சங)

தாளார்கமலமலரோடுதண்மலருந்
தாளாரவேசொரிந்தீதாமிருந்து—தாளார்
சிராமலையாய்சேமத்துணையேயென்றேத்துஞ்
சிராமலையார்சேமத்துளார். (சஙி)

ஆர்துணையாவாங்கிருப்பதம்பலவாவஞ்சலுமை
யார்துணையாவானையுரிமூடி—யார்துணையாம்
பூவணத்தாய்பூதப்படையாளிபொங்கொளியாய்
பூவணத்தாயென்னின்புகல். (சஙஙி)

புகலூருடையாய்பொறியரவம்பூணி
புகலூர்ப்புனற்சடையெம்பொன்னே—புகலூராய்
வெண்காடாவேலைவிடமுண்டாய்வெள்ளேற்றாய்
வெண்காடாவென்பேனேநான். (சசு)

ஞானுடையமாடேயென்ஞானச்சுடர்விளக்கே
ஞானுடையகுன்றமேநான்மறையாய்—ஞானுடைய
காடுடையாய்காலங்களாஞ்யனலாடுங்
காடுடையாய்காலமாஞ்ய். (சஎ)

ஆயன்றமரராழியாவகைசெய்தா
யாயன்றமரராழியாமை—யாயன்
றிருத்திஞன்செங்கண்விடையூர்வான்மேனி
திருத்திஞன்சேதுக்கரை. (சஅ)

கரையேனுமாதர்க்கருவானசேருக்
கரையேனுமாதுகரையாங்—கரையேனுங்
கோளிலியெம்மாதிகுறிபரவவல்லேயே
கோளிலிமெம்மாதிகுறி. (சஃ)

குறியார்மணிமிடற்றுக்கோலஞ்சேர்ஞானக்
குறியாகிநின்றகுணமே—குறியாகு
மாலங்காடெய்தாவடைவேன்மேலாடரவ
மாலங்காடெய்தாவடை. (கூ0)

அடையும்படைமழுவஞ்சூலமிலம்பங்கி
யடையுமிறப்பறுப்பதாஞ்—லடைய
மறைக்காடுசேருமஞ்ஞளரென்பாற்சேரா
மறைக்காடுசேர்மக்கடாம். (கூக)

தாமேயவாறுசமயமுதற்பரமுந்
தாமேயவாறுதழைக்கின்றூர்—தாமேற்
றழலுருவர்சங்கரவர்பொங்கரவம்பூண்ட
தழலுருவர்சங்கரரென்பார். (கூஉ)

பார்மேவுகின்றபலருருவர்பண்டரங்கர்
பார்மேவுகின்றபடிதலையர்—பார்மேல்
வலஞ்சுழியைச்சேர்வர்மலரடிகள்சேர்வார்
வலஞ்சுழியைச்சேர்வாகுவார். (திக)

வாரணிந்தகொங்கையுமையாண்மணவாளா
வாரணிந்தகொன்றைமலர்சூடி—வாரணிந்த
செஞ்சடையாய்சீர்கொள்சிவலோகாசேயொளியாய்
செஞ்சடையாய்செல்லநினே. (திச)

நினேமால்கொண்டோடிநெறியானதேடி
நினேமாலேநெஞ்சநினேய—நினேமால்கொண்
டீர்தேடியும்பாராலம்பரமாகாளாவென்
னூர்தேடியென்றுரைப்பானூர். (திஞ)

ஊர்வதுவுமானேறுடைதலையிலுண்பதுவு
மூர்வதுவுமெல்லுரகமூடிவர்கொ—லூர்வதுவு
மேகம்பமென்றுமிடைமருதைநேசத்தார்க்
கேகம்பமாய்நின்றவேறு. (திசு)

ஏறேயவாண்முதலேயேகம்பாவெம்பெருமா
னேறேறியூருமெரியாடி—யேறேய
வாதிவிடங்காகாறையண்டத்தாயம்மானே
யாதிவிடங்காவுமைகண்மாட்டு. (திஎ)

மாட்டும்பொருளேயுருவைவருகாலம்
வாட்டும்பொருளாய்மறையானே—வாட்டு
முருவானேச்சோதியுமைபங்காபங்கா
யுருவானசோதியுரை. (திஅ)

உரையாவிருப்பதுவுமுன்னேயேயூனி
னுரையாயுயிராய்ப்பொலிந்தா—யுரையாய
வம்பொனேசோதியணியாரூர்சேர்கின்ற
வம்பொனேசோதியேயாய்ந்து. (திக)

ஆய்ந்துன்றன் பாதமடையவருமென்மே
லாய்ந்தென்றன் பாசமலமறுத்—தாய்ந்துன்றன்
பாலணையச்செய்தபரமாபரமேட்டி
பாலணையச்செய்தபரம். (௫0)

பரமாயபைங்கட்சிரமேயப்பூண்ட
பரமாயபைங்கட்சிரமே—பரமாய
வாறடைந்தசெஞ்சடையாயைந்தடைந்தமெனியா
யாறடைந்தசெஞ்சடையாயன்பு. (௫௧)

அன்பேயுடையவரனேயணையாத
வன்பேயுடையவனலாடி—யன்பே
கழுமலத்துளாடுங்கரியுரிபோர்த்தானே
கழுமலத்துளாடுங்கரி. (௫௨)

கரியார்தாஞ்சேருங்கலைமறிகைக்கொண்டே
கரியார்தாஞ்சேருங்கவ்வலி—கரியாகி
நின்றகழிப்பாலேசேரும்பிராணமை
நின்றகழிப்பாலேசேர். (௫௩)

சேரும்பிராணமஞ்சிந்திக்கவல்லீரேற்
சேரும்பிராணமஞ்சிந்திக்கச்—சேரு
மலையான்மகளைமகிழ்ந்தாரூர்நின்ரூன்
மலையான்மகளைமகிழ்ந்து. (௫௪)

மகிழ்ந்தன்பர்மாகாளஞ்செய்யுமகளிர்
மகிழ்ந்தம்பரமாகிநின்ரூர்—மகிழ்ந்தங்க
மொன்ரூகிநின்றவுமைபங்கனெற்றியூ
ரொன்ரூகிநின்றவுமை. (௫௫)

உமைகங்கையென்றிருவருற்றவுணர்வு
மூமைகங்கையென்றிருவர்காணு—ருமைகங்கை
கார்மிடற்றம்மேனிக்கதிர்முடியான்கண்மூன்று
கார்மிடற்றம்மேனிக்கினி. (௫௬)

இனியவாகாணீர்களிப்பிறவியெல்லா
மினியவாவாகாமையற்று—மினியவா
ரூக்கைபலசெய்தவாமாத்தூரம்மானே
யாக்கைபலசெய்தவன்று. (கூஎ)

அன்றமாருய்யவமிர்தமவர்க்கருளி
யன்றவுணர்வீடவருள்செய்தோ—னன்றவுணர்
சேராமனின்றவடிகளடியார்க்குச்
சேராமனின்றசிவம். (கூஅ)

சிவனந்தஞ்செல்கதிக்கோர்கண்சேர்வதாக்குஞ்
சிவனந்தஞ்செல்கதிக்கோர்கண்ணுஞ்—சிவனந்தஞ்
சேருமுருவுடையீர்செங்காட்டங்குடிமேற்
சேருமுருவுடையீர்செல். (கூக)

செல்லுமளவுஞ்சிதையாமற்சிந்திமின்
செல்லுமளவுஞ்சிவனும்மைச்—செல்லுங்
திருமீச்சூர்க்கேறவேசெங்கணேறூருந்
திருமீச்சூரீசன்றிறம். (எ0)

திறமென்னுஞ்சிந்தைதெரிந்தும்மைக்காணுந்
திறமென்னுஞ்சிந்தைக்குமாமே—திறமென்னுஞ்
சித்தத்தீர்செல்வத்திருக்கடவூர்சேர்கின்ற
சித்தத்தீரேசெல்லுநீர். (எக)

நீரேயெருதேறுகின்மலரானீரு
நீரேநெடுவானினின்றீரு—நீரே
நெருப்பாயதோற்றத்துநீளாறும்பூண்டு
நெருப்பாயதோற்றநிலத்து. (எஉ)

நிலத்திவ்வுலகனைத்துநீரேயாய்நின்றீர்
நிலத்திவ்வுலகனைத்துநீரே—நிலத்தீரக்
கானப்பேரீர்கங்கைசூடினீர்கங்காளீர்
கானப்பேரீர்கங்கையீர். (எஊ)

ஈரமுடையவிளமதியஞ்சூடினீ
சீரமுடையசடையினீ—சீர
வருங்காலமாயினீரிவ்வுலகமெல்லாம்
வருங்காலமாயினீர்வாழ்வு. (எச)

வாழ்வார்மலரணைவார்வந்தவருநாகம்
வாழ்வார்மலரணைவார்வண்கங்கை—வாழ்வாய
தீயாடவாளுள்வான்வான்கழல்கள்சேராதார்
தீயாடவாளுளுமாறு. (எடி)

மாறுதவானையின்றோல்போர்த்துவளர்சடைமேன்
மாறுதரீருடையமாகாளர்—மாறு
விடுங்கையர்சேருமெழிலவாய்முன்னே
விடுங்கையர்சேர்வாகவீ. (எசு)

ஈயும்பொருளேயெமக்குச்சிவலோக
மீயும்பொருளேயிடுகாட்டி—னீயும்
படநாகம்பூணும்பரலோகீரென்னீர்
படநாகம்பூணும்படி. (எஎ)

படியேறும்பார்த்துப்பரத்தோடுங்கூட்டிப்
படியேறும்பார்த்துப்பரனெப்—படியேனைப்
பாருடையாய்பைங்கண்புலியதளாய்பானீற்றாய்
பாருடையாயாணுன்பரம். (எஅ)

பரமாயவிட்டுநின்பாதம்பணிந்தேன்
பரமாயவாதிப்பரனே—பரமாய
நீதியேநின்மலனேநேரார்புரமூன்று
நீதியேசெய்தாய்நினை. (எக)

நினையடைந்தேன்சித்தநிலையாகும்வண்ண
நினையடைந்தேன்சித்தநிமலா—நினையடைந்தேன்
கண்டத்தாய்காளத்தியானேகனலாருங்
கண்டத்தாய்காவாலிகா. (அ0)

காவார்பொழிற்கயிலையாதீகருவேயெங்
காவாய்ப்பொலிந்தகடவெளியே—காவாய
வேறுடையாயென்னையிடைமருதிலேயென்று
மேறுடையாய்யேகரி. (அக)

கரியானுநான்முகனுமாய்நின்றகண்ணன்
கரியாருங்கூற்றங்கனியே—கரியாருங்
காடுடையாம்காலங்களாளுய்கனலாடுங்
காடுடையாய்காலமானுய். (அஉ)

ஆனுயனுயவடலேறையாரூர்க்கோ
னனுயனுவமுதமேயானு—யானுய்
கவரெலும்போடேந்திகதநாகம்பூணி
கவரெலும்புதார்கைவளை. (அங)

வளைகொண்டாயென்னைமடவார்கண்முன்னே
வளைகொண்டாய்மாசற்றசோதி—வளைகொண்டாய்
மாற்ரூர்கதுவமதிலாரூர்சேர்கின்ற
மாற்ரூரூர்கின்றமயல். (அச)

மயலானதீருமருந்தாகுமற்று
மயலானுராரூர்மயரார்—மயலான
கண்ணியர்தம்பாகாகனியேகடிக்கொன்றை
கண்ணியலான்பாதமேகல். (அஙி)

கலைமான்கையேனப்பூண்காண்கயிலைமானின்
கலைமான்கறைகாண்கவாலி—கலைமானே
யாடுவதும்பாடுவதுங்காலனப்பொன்னம்பலத்து
ளாடுவதுமாடானரன். (அசு)

அரனேயணியாரூர்மூலட்டத்தானே
யரனேயடைந்தார்தம்பாவ—மரனே
யயனூர்தமங்கமடையாகக்கொண்டா
யயனுகமாகவடை. (அஎ)

அடையுந்திசையீசன்றிண்டோளாகாச
மடையுந்திருமேனியண்ட—மடையுந்
திருமுடிகால்பாதாளமாடைகடலங்கி
திருமுடிநீர்கண்கள்சுடர்மூன்று. (அஅ)

மூன்றரணமெய்தானேமூலத்தனிச்சுடரே
மூன்றரணமாய்நின்றமுக்கணனே—மூன்றரண
மாய்நின்றசோதியணியாரூர்சேர்கின்ற
வாய்நின்றசோதியறம். (அக)

அறமாய்வரேணுமடுகாடுசேர
வறமாஞரங்கமணிவ—ரறமாய
வல்வினைகள்வாராவெனுமருகலாரென்ன
வல்வினைகள்வாராதவாறு. (கo)

ஆறுடையர்நஞ்சுடையராடுமரவுடைய
ராறுடையர்காலமைமவுடைய—ராறுடைய
சித்தத்தீர்செல்வத்திருக்கயிலேசேர்கின்ற
சித்தத்தீரெல்லார்க்குஞ்சேர்வு. (கக)

சேர்வுமுடையர்செழுங்கொன்றைத்தாரார்நஞ்
சேர்வுமுடையரரவுடையர்—சேருந்
திருச்சாய்க்கட்டாடுவரேற்செய்தக்கவென்றுந்
திருச்சாக்காட்டேநின்னுருவு. (கஉ)

உருவுபலகொண்டொருவராய்நின்ரு
ருருவுபலவாமொருவ—ருருவு
பலவல்லவொன்றல்லபைஞ்ஞீலிமேயார்
பலவல்லவொன்றுப்பகர். (கங)

பகரப்பரியானேமேலூராதானேப்
பகரப்பரிசடைமேல்வைத்த—பகரப்
பரியானேச்சேருலகம்பல்லுயிர்களெல்லாம்
பரியானேச்சேருலகம்பண். (கச)

பண்ணுகப்பாடிப்பலிகொண்டாய்பாரேழும்
பண்ணுகச்செய்தபரஞ்சோதீ—பண்ணு
வெருதேறியூர்வாயெழில்வஞ்சியெங்க
ளெருதேறியூர்வாயிடம். (கூடு)

இடமாயவெவ்வுயிர்க்குமேகம்பமேயா
ரிடமாளுர்க்கீந்தவிறைவ—ரிடமாய
வீங்கோய்மலையாரெழிலார்சிராமலையா
ரீங்கோய்மலையாரெமை. (கூசு)

எமையாளவந்தாரிடரானதீர
வெமையாளுமெம்மையிமையோ—ரெமையாளும்
வீதிவிடங்கர்விடமதுண்டகண்டர்விடையூர்
வீதிவிடங்கர்விடையூர்தி. (கூஎ)

தீயானமேனியனேசெம்பவளக்குன்றமே
தீயானசோமற்செய்வானே—தீயான
செம்பொற்புரிசைத்திருவாரூராயெண்ணச்
செம்பொற்சிவலோகஞ்சேர். (கூஅ)

சேர்கின்றசிந்தைசிதையாமற்செய்வானே
சேர்கின்றசிந்தைசிதையாமற்—சேர்கின்ரு
மொற்றியூரானேயுறவாருமில்லையிளி
யொற்றியூரானேயுறும். (கூகூ)

உறுமுந்தமுன்னேயுடையாமலின்ன
முறுமுந்தமுன்னேயுடையாம—லுறுமுந்த
மோரைந்துரைத்துற்றுணர்வோடிருந்தொன்றை
யோரைந்துரைக்கவல்லார்க்கொன்று. (கஉ0)

ஒன்றைப்பரணருரைத்தவந்தாதிபல
வொன்றைப்பகரிலொருகோடி—யொன்றைத்
தவிராதுரைப்பார்தளராருலகிற்
றவிரார்சிவலோகந்தான்.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

இளம்பெருமானடிகள்

அருளிச்செய்த

சிவபெருமான்றிருமும்மணிக்கோவை.

அகவல்.

முதல்வன்வகுத்தமதலைமாடத்
திடவரையூன்றியகடவுட்பாண்டிற்
பள்ளிச்செம்புயலுள்விழுதுறீஇப்
புத்தேணிவந்தமுத்தமாச்சுட
றெறிவளியெடுப்பினுஞ்சிறுகடுக்குரற்கின்
னடினிழலளியவோவைத்தமுடிமிசை
யிலங்குவளைத்தனிப்போதுவிரித்த
வலங்குகதிரொலியனீயணிந்ததென்மாறை. (க)

வெண்பா.

மாறுதடுத்தமணிக்கங்கைதிங்களின்
கீறுதடுப்பக்கிடக்குமே—நீறுதித்த
செந்தாழ்வரையின்றிரள்போற்றிருமேனி
யெந்தாய்நின்சென்னியிடை. (உ)

கட்டளைக்கலித்துறை.

இடைதரில்யாமொன்றுணர்த்துவதுண்டிடையோர்சிமையத்
தடைதருமூரிமந்தாரம்விராய்நதிவெண்ணிலவின்
றுடைதருதுண்டங்கிடத்தினுந்தொண்டரொதுக்கியிட்ட
புடைதருபுல்லெருக்குஞ்செல்லுமோநின்புரிசடைக்கே. (ங)

அகவல்.

சடையே, நீரகந்தும்பிநெருப்புக்கலிக்குமே
யிடறே, நஞ்சகந்துவன்றியமிர்துபிலிற்றுமே

வடிவே, முளியெரிகவைஇத்தளிர்தயங்கும்மே
யடியே, மடங்கன்மதஞ்சீறிமலர்பழிக்கும்மே
யஃதான், றினையவென்றறிகிலம்யாமேமுனைதவத்
தலைமூன்றுவகுத்ததனித்தாட்
கொலையூன்றுகுடுமிகெடுவேலோயே. (சு)

வெண்பா.

வேலைமுகடும்விசும்பகடுங்கைகலந்த
காலைரெங்கேகரந்தனையான்—மாலைப்
பிறைக்கீறுகண்ணுதலாபெண்பாகாவையோ
விறைக்கூறுயெங்கட்கிது. (கூ)

கட்டளைக்கலித்துறை.

இதுநீரொழிமினிடைதந்துமையிமையத்தரசி
புதுநீர்மணத்தும்புலியதளேயுடைபொங்குகங்கை
முதுநீர்கொழித்தவிளமணன்முன்றின்மென்றோட்டதிங்கட்
செதுநீர்ததும்பத்திவளஞ்செய்செஞ்சடைத்தீவண்ணரே. (சூ)

அகவல்.

வண்ண, மைஞ்சுதலகவைஇப்பவளமால்வரை
மஞ்சுமிவிலகிப்பகல்செகுக்கும்மே
யென்னப்,பழமுடைச்சிறுகலத்திடுபலிபெய்வோ
ணெஞ்சகம்பிணிக்கும்வஞ்சமோவுடைத்தே
யஃதான்று,முளையெயிற்றுக்குரூஉயின்றுயிலெடுப்ப
நடுங்குதலைச்சிறுநிலாவிதிர்க்குங்கொடும்பிறைத்
தேமுறுமுதிர்ச்சடையிறைவ
மாமுறுகொள்கைமாயமோவுடைத்தே. (எ)

வெண்பா.

உடைதலையின்கோவையொருவடமோகொங்கை
புடைமலிந்தவெள்ளெருக்கம்போதோ—சடைமுடிமேன்
முன்னநாள்பூத்தமுகிணிலவோமுக்கண்ணு
வின்னநாள்கண்டதிவள். (அ)

கட்டளைக்கலித்துறை.

இவளப்பனிமாலிமையத்தணங்குகற்றைச்சடைமே
லவளப்புத்தேளிருலகிற்கரசியதுகொண்டென்னை
யெவளுக்குநீயல்லதியாரைமுன்னெய்திற்றெற்றேயிதுகா
தவளப்பொடிச்செக்கர்மேனிமுக்கண்ணுடைச்சங்கரனே. (க)

அகவல்.

கரதலநழைத்தமரகதக்கபாடத்
தயில்வழங்குகுடுமிக்கயிலாடகின்
னணங்குதயிலெடுப்பிற்பிணங்குநிலாப்பிணையல்
யாமேகண்டதுமிலமேதாமா
மூவாவெஃகமுமூரணு
மோவாதபயிற்றுமூலகமாலுளதே. (கஎ)

வெண்பா.

உளரொளியகங்கையொலிதிரைகண்மோத
வளரொளிதேய்ந்துள்வளைந்ததொக்குங்—கிளரொளிய
பேதைக்கருங்கட்பிணைவின்மணாளனூர்
கோதைப்பிறையின்கொழுந்து. (கக)

கட்டளைக்கலித்துறை.

கொழுந்திரட்டெண்ணிலவஞ்சிகின்கூரிருள்வார்பளிங்கின்
செழுந்திரட்குன்றகஞ்சென்றடைந்தாலொக்குந்தெவ்வர்நெஞ்சத்
தழுந்திரட்கண்டத்தவளப்பொடிச்செக்கர்மேனிநின்றே.
றெழுந்திரட்சோதிப்பிழம்புமென்னுள்ளத்திடங்கொண்டவே. ()

அகவல்.

கொண்டற்காரெயிற்றுச்செம்மருப்பிரூலின்
புண்படுசிமையத்துப்புலவுநாறுகுடுமி
வரையோன்மருகபுனலாள்கொழுந
விளையோன்றாதைமுதுகாட்டுப்பொருநின்

னீரூடுபொலங்கழல்பரவ
வேரூங்குகவர்க்குமோவீதருநெறியே. (கஉ)

வெண்பா.

நெறிவிரவுகொன்றைநெடும்படற்கீழ்க்கங்கை
யெறிதிரைகளீர்த்தெற்றவேறிப்—பொறிபிதிர
வீற்றராக்கண்படுக்குமிண்டைச்சடைச்சங்க
ணேற்றராற்றீருமிடர். (கச)

கட்டளைக்கலித்துறை.

இடர்தருதீவினைக்கெள்கிநைவார்க்குநின்னீரடியின்
புடைதருதாமரைப்போதுகொலாஞ்சரண்போழருவிப்
படர்தருகொம்பைப்பவளவண்ணுபருமாமுதையங்
கடைதருசெஞ்சுடர்க்கற்றையொக்குஞ்சடையந்தணனே. (கஙி)

அகவல்.

அந்தணுளர்செந்தொடையொழுக்கமு
மடலோர்பயிற்றுநின்சுடர்மொழியாண்மையு
மவுணர்நன்னுட்டிறைவனுகிக்
குறுநெடுந்தானபரப்பித்தறுகண்
மால்விடையடரத்தாணிமிர்ந்துக்க
காய்சினவரவுநாண்பற்றிநீயோர்
நெடுவரைநெளியவாங்கிச்
சுடுகணையெரிநிமிர்த்துத்துரந்தஞான்றே. (கசு)

வெண்பா.

ஞான்றபுனமாலைதோளலப்பநாண்மதிய
மீன்றிலவோடுமிவ்வருவான்—மூன்றியங்கு
மூதூர்வியன்மாடமூன்றெருகாற்றன்னருந்தீ
மீதூரக்கண்சிவந்தவேந்து. (கஎ)

கட்டளைக்கலித்துறை.

வேந்துக்கமாக்கடற்சூரன்முன்னுள்படவென்றிகொண்ட
சேந்தற்குத்தாதையிவ்வையமளந்ததெய்வத்திகிரி

யேந்தற்குமைத்துனத்தோழரின்றேன்மொழிவள்ளியென்னுங்
கூந்தற்கொடிச்சிதன்மாமன்வெம்மால்விடைக்கொற்றவனே. ()

அகவல்.

கொற்றத்துப்பிலொற்றையீன்ற
சுணங்கையஞ்செல்வத்தணங்குதருமுதுகாட்டுப்
பேய்முதிராயத்துப்பிணவின்கொழுநரின்
றேர்கழல்கவையியலங்கிதழ்த்தாமந்
தவழ்தருபுனலூலப்படுந
ரவலமாக்கடலழுந்தலோவிலரே. (கக)

வெண்பா.

இவர்கொலாமென்றிளஞாயிரசப்பலிக்கென்
றுலகெலாஞ்சென்றுழல்வரேனு—மலர்குலாந்
திங்கட்குறுந்தெரியற்றேவர்க்காட்செய்வதே
யெங்கட்குறுந்தெரியினீண்டு. (உ0)

கட்டளைக்கலித்துறை.

ஈண்டுமுற்றத்தொற்றைமால்விடையேறியையம்மூனாள்
வேண்டிமுற்றத்திரிந்தெங்கும்பெருதுவெறுங்கையவந்தார்
பூண்டவொற்றைச்செங்கணரமுங்கற்றைச்சடைப்புனலு
மீண்டவொற்றைப்பிறைக்கீளுமெப்போதுமென்னெஞ்சத்தவே. ()

அகவல்.

நெஞ்சிற்கொண்டவஞ்சமோவுடைத்தே
மடவோர்விரும்புநின்வீளையாட்டியல்போ
மருள்புரிகொள்கைநின்றெருளாமையோ
யாதாகியதோவெந்தைதீதியென்
றுடைதலேநெடுநிலாவெறியல்
கடைதலென்றருளிசூடியபொருளே. (உட)

வெண்பா.

பொருளாகயானிரந்தாற்புல்லெருக்கின்போது
மருளான்மற்றல்லாதார்வேண்டிற்—றெருளாத
பான்மருமான்மறிக்கைப்பைங்கட்பகடியான்
றான்மருண்பைங்கொன்றைத்தார். (உக)

கட்டளைக்கலித்துறை.

தாரிளங்கொன்றைநல்லேறுகடாவித்தலைமைமிக்க
வேரிளமென்முலைப்பொன்மலையாட்டிக்கெற்றேயிவனோர்
பேரிளங்கொங்கைப்பிணைவொடுங்கூடிப்பிறைக்கொழுந்தி
னோரிளந்துண்டஞ்சுமந்தையம்வேண்டியுழிதருமே. (உச)

அகவல்.

உழிதரன்மடிந்துகழுதுகண்படுக்கு
மிடருறுமுதுகாட்டுச்சீரியல்பெரும்
புகர்முகத்துளக்கையுரவோன்றூதை
நெடியோன்பாகநின்சுடர்மொழியாண்மை
பயிற்றுநாவலர்க்
கிடர்தருதீவினைகெடுத்தலோவெளிதே. (உடு)

வெண்பா.

எளியமென்றெள்கியிகழாதுளாளு
மளியமாட்செய்தாலுமையோ—தெளிவரிய
வள்கயிலைநீள்பொருப்பவான்றூய்மதிச்சடையாய்
கொள்கையிலையெம்மாற்குறை. (உசு)

கட்டளைக்கலித்துறை.

சூறையாப்பலியிவைகொள்கவென்கோல்வளையுங்கலையுந்
திறையாக்கொண்டாயினிச்செய்வதென்றெய்வக்கங்கைப்புனலிற்
பொறைபாயொருகடனஞ்சுண்டகண்டாபொடியணிந்த
விறையாவிடபிணக்காடசெம்மேனியெம்வேதியனே. (உஎ)

அகவல்.

வேதியர்பெருமவிண்ணோர்தலைவ
வாதிநான்முகத்தண்டவாண
செக்கர்நான்மறைப்புத்தேளுட
காய்சினமழவிடைப்பாகநின்
மூவிலைநெடுவேல்பாடு
நாவலம்பெருமைகல்குவோயெனவே. (உஅ)

வெண்பா.

எனவேயுலகெலாமென்றிளஞ்சேர
னனவேபலிதிரிதிநாளுஞ்—சினவேங்கைக்
கார்க்கயிலைநாடகளிற்றீருரியலாற்
போர்க்கயிலைபேசனீபொய். (உக)

கட்டளைக்கலித்துறை.

பொய்நீரூரைசெய்தீர்பொய்யோம்பலியெனப்போனபின்னை
யிந்நீள்கடைக்கென்றுவந்தறியீரினிச்செய்வதென்னே
செந்நீர்வளர்சடைத்திங்கட்பிளவொடுகங்கைவைத்த
முந்நீர்ப்பவளத்திரட்செக்கரொக்குமுதலவனே. (உ0)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

அதிராவடிகள்

அருளிச்செய்த

மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை.

அகவல்.

ஒருகெடுங்கங்கையிருங்குறும்பைம்புகர்
மும்மூகச்செந்நுதிகாலிணர்வெண்ணிணக்
குடற்புலவுகமழுமடற்கழுப்படையவன்
மதலைமாமதந்துவன்றியகதனுடைக்
கடதடக்கபோலத்தோரிடமருப்பிற்
கரண்டகவுதரத்துமுரண்டருகுழவிதன்
சேவடியுகளமல்ல
தியாவையுமிலமினியிருநிலத்திடையே. (க)

வெண்பா.

நிலந்துளங்கமேருத்துளங்கநெடுவான்
றலந்துளங்கச்சப்பாணிகொட்டுங்—கலந்துளக்கொள்
காமாரியீன்றகருங்கைக்கடதடத்து
மாமாரியீன்றமணி. (உ)

கட்டளைக்கலித்துறை.

மணிசிந்துகங்கைதன்மானக்குருளையைவாளரக்க
ரணிசிந்தவென்றவெம்மையர்க்கிளங்கன்றையங்கரும்பின்
றுணிசிந்தவாய்ப்பெய்தபோதகத்தைத்தொடர்ந்தோர்பிறவிப்
பிணிசிந்துகார்முளையைப்பிடித்தோர்க்கில்லைபேதுறவே. (ங)

அகவல்.

பேதுறுதகையமல்லதுதீதுறச்
செச்சார்க்குஞ்சிக்கருநிறத்தொக்கலுப்பண்

புக்கவணிரும்பொறித்தடக்கையு
மூணியபெருந்தோட்
கொட்டகாவிதேவிதன்
மட்டுகுதெரியலடிமணந்தனமே. (ச)

வெண்பா.

மேயவுருமிடற்றர்வெள்ளெயிற்றர்திண்சேனை
யோயமணியூசலாடின்றே—பாய
மழைசெவிக்காற்றுந்தியவாளமர்க்கணைந்தை
தழைசெவிக்காற்றுந்தத்தளர்ந்து. (ஞ)

கட்டளைக்கலித்துறை.

உந்தத்தளராவளைத்தனமுன்னமின்னைடைநெற்றிச்
சந்தத்தளராவொருதனித்தெவ்வர்தந்தாளிரியூர்
விந்தத்தளராமருங்கிற்கிளிபெற்றவேழக்கன்றின்
மந்தத்தளராமலர்ச்சரணங்கள்வழுத்துமின்னே. (ட)

அகவல்.

மின்னெடுங்கொண்டலந்தெடுமுழக்கத்,
தோவறவிளங்கியதுளக்கைக்கடவுள
யாமிகவழுத்துவதெவனெவனேற்
பிறந்தநிவ்வுலகின்பெருமூதாதை
யுரந்தருசிரமரிந்தவற்கேவரைந்தது
மேருச்சிமையத்துமீமிசை
வாரிச்செல்வன்மகண்மகன்மொழியே. (எ)

வெண்பா.

மொழியின்மறைமுதலேமுன்னையனத்தேறே
கழியவருபொருளேகண்ணே—தெழிய
கலாலயனேயெங்கள்கணபதியேயின்னே
யலாதையனேசூழாதென்னன்பு. (ஏ)

கட்டளைக்கலித்துறை.

அன்புதவச்சுற்றகாரழல்கொண்டெயின்மூன்றெரிய
வன்புதவந்துந்தைமாட்டுகின்றுன்மதஞ்சூழ்மருப்பிற்
கன்புதவக்காத்தாளமிட்டோடிக்கடுநடையிட்
டின்புதவச்சென்றுயேன்றுகாத்ததியம்புகவே. (கூ)

அகவல்.

கவவுமணிக்கேடகக்கங்கணக்கைவவனு
வறைகழலவுணரொடுபொருதஞான்றுநீற்
புழைக்கரமுயிர்த்தவழற்பேரூதை
விரைகனிகிறிமூரி
யஞ்சேறுபுலர்த்துமென்பர்
மஞ்சேறுகயிலமலகிழவோயே. (கo)

வெண்பா.

மலைசூழ்ந்திழிகின்றமாசுணப்பொற்பாறை
தலைசூழ்ந்துதானினைப்பதொக்குங்—கயிலைசூழ்
திரண்டகங்கொள்பேரறிவன்றிண்வயிற்றினும்பர்க்
கரண்டகங்கொள்காலுயிர்க்குங்கை. (கக)

கட்டளைக்கலித்துறை.

காலதுகையதுகண்ணதுதீயதுகார்மதநீர்
மேலதுகீழதுநூலதுவெற்பதுபொற்பமைதீம்
பாலதுதேனதுதானதுமென்மொழிப்பாவைமுப்பூண்
வேலதுவாளதுநான்மறைக்கின்றவிடுசுடர்க்கே. (கஉ)

அகவல்.

சுடர்ப்பிழம்புதழைத்தவழற்றனிநெடுவேற்
சேய்மூவுலகம்வலம்வரவேய
கொன்றையம்படலத்துன்றுசடைக்கடந்த
வோங்கிருந்தாதையவளாய்மாங்கனி

யள்ளற்றீஞ்சுவையருந்திய
வள்ளற்கிங்கென்மனங்கனிந்திடுமே. (கஉ)

வெண்பா.

இக்கயங்கொண்மூவலயஞ்சூழ்ந்தடவரைக
டிக்கயங்கள்பேர்ந்தாடச்செங்கீரை—புக்கியங்கு
தேனுடவண்டாடச்செங்கீரையாடின்றே
வானுடன்பெற்றவரை. (கக)

கட்டளைக்கலித்துறை.

பெற்றமெல்லோதிசிலம்பின்மகள்பெறப்பிச்சுகந்த
மற்றவள்பிச்சன்மயங்கன்முன்னேன்பின்னிணைமிகக்
கற்றவனேயன்புறங்காட்டிடைநடமாட்டுகந்தோ
செற்றவெண்டந்தத்தவனம்மையாட்கொண்டுசெய்தனவே. (கஉ)

அகவல்.

செய்தருபொலம்படைமொய்தருபரூஉக்
குரூஉ,வெள்ளெயிறுபொதிந்தவள்ளுகிர்த்திரள்வாய்ப்
பெருந்திரட்புழைக்கை
மண்முழைவழங்குந்திண்முரணேற்றின்
பனையடர்ப்பாகன்றனதிணையடி
நெடும்பொற்சரணமேத்த
வீடும்பைப்பௌவமினீங்கலமே. (கக)

வெண்பா.

அலங்கன்மணிகனகமுந்தியருவி
விலங்கன்மிசையிழிவதொக்கும்—பலன்கனிக
ளுண்டளைந்தகோன்மருடத்தொண்கடிக்கைத்தாதளைந்து
வண்டணைந்துசோருமதம். (கன)

கட்டளைக்கலித்துறை.

மதந்தந்தமென்மொழிமாமலையாட்டிமடங்கல்கொன்ற
மதந்தந்தமுக்கண்ணரற்குமுன்னீன்றவம்மாமலைபோன்

மதந்தந்தகும்பக்குழவிமந்தாரப்பொன்னுட்டிருந்து
மதந்தந்தசெம்மலன்றேவையமுய்யவளர்கின்றதே. (கஅ)

அகவல்.

வளர்தருகவட்டின்கிளைதொளிக்கற்பகப்
பொதும்பர்த்தும்பியொழிகின்றேச்சும்
பாரிடைக்குறுகடைத்தோடிஞாங்க
ரிட்டமாங்கனி
முழுவதும்விழுங்கியழுளைப்பனைத்தடக்கை
யெந்தையல்லதுமற்றியாவுள
சிந்தைசெய்யும்தேவதைநமக்கே. (கக)

வெண்பா.

கேளுற்றியான்றளரவொட்டுமேகம்புரிப்பூண்
வாளுற்றகேயூரவாளரக்கர்—தோளுற்
றறித்தெறிந்துகொன்றழித்தவங்கயங்கண்மீண்டே
யிறுத்தெறிந்துகொன்றழித்தவேறு. (உ0)

கட்டளைக்கலித்துறை.

ஏறுதழீஇயவெம்புத்தேண்மருகவெங்குந்தவள
நீறுதழீஇயவெண்டோளவன்செல்வவண்டுண்ணெக்க
வாறுதழீஇயகரதலத்தையரின்றன்னேயல்லால்
வேறுதழீஇத்தொழுமோவணங்காதவியன்சிரமே. (உக)

அகவல்.

சிரமே, விசும்புபோதவுயரியிரண்டசும்புபொழியும்மே
கரமே, வரைத்திரண்முரணியவிரைத்துவிழும்மே
புயமே, திசைவிளிம்புகிழியச்சென்றுசெறிக்கும்மே
யடியே, யிடுந்தொறுமிவ்வுலகம்பெயரும்மே
யாயினு,மஞ்சுடர்ப்பிழம்புதழீஇ
நெஞ்சகத்தொடுங்குமோநெடும்பனைச்சூரே. (உஉ)

வெண்பா.

சூர்தந்தபொற்குவட்டின்சூளிகையின்வானயிர்த்து
வார்தந்தெழுமதியமன்னுமே—சீர்தந்த
மாமதலைவான்மதியங்கொம்புவயிறுதித்த
கோமதலைவாண்மதியங்கொம்பு. (உசு)

(உச) (உடு) (உக) (உஎ) (உஅ) (உக) (சுஐ)

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

பட்டணத்துப்பிள்ளையார்

அருளிச்செய்த

கோயிலுன்மணிமாலை.

வெண்பா.

பூமேலயனறியாமோலிப்புறத்தசே
நாமேபுகழ்ந்தளவைநாட்டுவோம்—பாமேவு
மேத்துகந்தான்றில்லையிடத்துகந்தானம்பலத்தே
கூத்துகந்தான்கொற்றக்குடை. (க)

கட்டளைக்கலித்துறை.

குடைகொண்டிவ் வையமெலாங்குளிர்வித் தெரிபொற்றிகி
ரிப், படைகொண் டிகறெறும்பார்த்திவராவதிற் பைம்பொற்
கொன்றைத், தொடைகொண்ட வார்சடையம்பலத்தான் முரண்
டர்க்கேவல்செய்து, கடைகொண்டபிச்சைகொண்டுண்டிங்குவாழ்
தல்களிப்புடைத்தே. (உ)

ஆசிரியவிருத்தம்.

களிவந்தமூஉறிக்கன்மனத்தையெல்லாங்
கசியும்படிசெய்துகண்டறிவாரில்லா
வெளிவந்தடியேன்மனம்புகுந்ததென்ரூல்
விரிசடையும்வெண்ணீறுஞ்செவ்வானமென்ன
வொளிவந்தபொன்னிறமுந்தொன்னடமுங்காட்டி
முடையானுயர்தில்லையம்பலமொன்றல்லா
லெளிவந்தினிப்பிறர்பாற்சென்றவர்க்குப்பொய்கொண்
டிடைமிடைந்தபுன்மொழியாலிச்சையுரையோமே. (கூ)

இணைக்குறளாசிரியப்பா.

உரையின்வரையும்பொருளினளவு
மிருவகைப்பட்டவெல்லையுங்கடந்து
தம்மைமறந்துநின்னேநினைப்பவர்
செம்மைமனத்தினுந்தில்லைமன்றினுநட
மாடுமம்பலவாணநீடு
குன்றக்கோமான்றன்றிருப்பாவையை
நீலமேனிமாதிருத்தங்கையைத்
திருமணம்புணர்ந்தஞான்றுபெருமகின்
ரூதவிழ்கொன்றைத்தாருமேதமில்
வீரவெள்விடைக்கொடியும்போரிற்
றழங்குந்தமருகப்பறையுமுழங்கொலித்
தெய்வக்கங்கையாறும்பொய்தீர்
விரையாக்கலியெனுமாணையுரைநிரை
யாயிரம்வருத்தமாயிருமருப்பின்
வெண்ணிறச்செங்கண்வேழமும்பண்ணியல்
வைதிகப்புரவியும்வானநாடு
மையறுகனகமேருமால்வரையுஞ்
செய்வயற்றில்லையாகியதொல்பெரும்பதியுமென்
ரிரூபதிஞாயிரத்திருநெடுநாமமு

முரிமையிற்பாடித்திருமணப்பந்தரு
ளமரர்முன்புகுந்தறுகுசாத்திநின்
றமர்பெயரெழுதியவரிநெடும்புத்தகத்
தென்னையுமெழுதவேண்டுவனின்னரு
ளாணைவைப்பிற்காணுணவணுவும்
வானுறநிமிர்ந்துகாட்டுங்
கானில்வானுளம்புங்கருடனுதலினே. (ச)

வெண்பா.

ஆதரித்தமாலுமறிந்திலனென்றஃதறிந்தே
காதலித்தநாயேற்குங்காட்டுமே—போதகத்தோற்
கம்பலத்தானீணுகைகங்கணத்தான்றென்புலியூ
ரம்பலத்தான்செம்பொனடி. (டி)

கட்டளைக்கலித்துறை.

அடியொன்றுபாதலமேழிற்குமப்புறம்பட்டதிப்பான்
முடியொன்றிவ்வண்டங்களெல்லாங்கடந்ததுமுற்றும்வெள்ளப்
பொடியொன்றுதோளெட்டுத்திக்கின்புறத்தனபூங்கரும்பின்
செடியொன்றுதில்லைச்சிற்றம்பலத்தான்றன்றிருநடமே. (க)

ஆசிரியவிருத்தம்.

நடமாடியேழுலகுமுய்யக்கொண்ட
நாயகரோன்மறையோர்தங்களோடுங்
திடமாடமதிற்றில்லைக்கோயில்கொண்ட
செல்வரேயுமதருமைதேராவிட்டீ
ரிடமாடியிருந்தவளும்விலக்காவிட்டா
லென்போல்வார்க்குடனிற்கவியல்வதன்று
தடமாலைமுடிசாய்த்துப்பணிந்தவாளோர்
தஞ்சுண்டாவங்கருநீர்நஞ்சுண்டீரே. (எ)

நேரிசையாசிரியப்பா.

நஞ்சுமிழ்பகுவாய்வெஞ்சினமாசுணந்
தன்முதன்முருக்கநென்முதற்சுழ்ந்த
நீர்ச்சிறுபாம்புதன்வாய்க்கெதிர்வந்த
தேரையைவவ்வியாங்கியான்முன்
கருவிடைவந்தவொருநாட்டொடங்கி
மறவாமறலிமுறைபிறழ்பேழ்வா
யயிற்றலையன்னவெற்றிடைக்கிடந்தாங்
கருணையின்றியொருவயிரும்பற்குப்
பல்லுயிர்செகுத்துவல்லினருந்தி
யயர்த்தனனிருந்தும்போலும்பெயர்த்துநின்
றெண்டோள்வீசிக்கண்டோருருகத்
தொல்லெயிலுடித்ததில்லைமூதூ
ராடுமம்பலக்கூத்தனைப்
பாடுதல்பரவுதல்பணிதலோவிலமே. (அ)

வெண்பா.

இலவிதழ்வாய்வீழ்வாரிகழ்வாரவர்தங்
கலவிகடைக்கணித்துங்காணே—னிலகுமொளி
யாடகஞ்சேரம்பலத்தேயாளுடையார்நின்றூடு
நாடகங்கண்டன்பானநான். (கூ)

கட்டளைக்கலித்துறை.

நானேபிறந்துபயன்படைத்தேனயனுரணனெங்
கோனேயெனத்தில்லையம்பலத்தேநின்றுகூத்துகந்த
தேனேதிருவுள்ளமாகியென்றீமையெல்லாமறுத்துத்
தானேபுகுந்தடியேன்மனத்தேவந்துசந்திக்கவே. (கூ)

ஆசிரியவிருத்தம்.

சந்துபுனையவெதும்பிமலரணை
தங்கவெருவியிலங்குகலையொடு

சங்குகழலநிறைந்தவயலவர்
தஞ்சொனலியமெலிந்துகிளியொடு
பந்துகழல்கண்மறந்துதளிர்புரை
பண்டைநிறமுமிழந்துநிறையொடு
பண்புதவிரவனங்கனவஞெடு
நண்புபெருகவிளைந்தவினையன
நந்திமுழவுதழங்கமலைபெறு
நங்கைமகிழவணிந்தவாவுக
ணஞ்சுபிழியமுரன்றுமுயலக
னைந்துநரலவலைந்தபகிரதி
யந்திமதியொடணிந்துதிலைக
ரம்பொனணியுமரங்கினடநவி
லங்கணரசையடைந்துதொழுதிவ
ளன்றுமுதலெதிரின்றுவரையுமே. (கக)

நிலமண்டலவாசிரியப்பா.

வரையொன்றுநிறுவியரவொன்றுபிணித்துக்
கடறடவாகமிடலொடெம்வாங்கித்
திண்டோளாண்டதண்டாவமரர்க்
கமிர்துணவளித்தமுதுபெருங்கடவுள்
கடையுகஞ்சென்றகாலத்துநெடுநில
மாழிப்பரப்பிலாழ்வதுபொருஅ
தஞ்சேலென்றுசெஞ்சேலாகித்தன்
றெய்வவுதாத்துச்சிறுசெலுப்புரையிற்
பௌவமேழுபட்டதுபௌவத்தோ
லெருகுகுழத்தொருநாளுண்டது
மூலகமூன்றுமளந்துழியாங்கவ
னீரடிநிரம்பிற்றுமிலவேதெரி
லுரைப்போர்க்கல்லதவன்குறைவின்றே
யினையனுகியதனிமுதல்வானவன்

கேழற்றிருவுருவாகியாழத்
தடுக்கியவேழமெடுத்தனனெடுத்தெடுத்
தாழியூழிகீழுறக்கிளர்ந்துங்
காண்பதற்கரியநின்கழலும்வேண்டுபு
நிகிலலோகமுநெடுமறைத்தொருதியு
மகிலசராசரமனைத்துமுதவிய
பொன்னிறக்கடவுளன்னமாகிக்
காண்டிலாதநின்கதிர்நெடுமுடியு
நீங்கிவைகொண்டேங்காதுவிரும்பிச்
சிறியபொதுவின்மறுவின்றிவிளங்கி
யேவருங்காணவாடியதுவெனக்
கதிசயம்விளக்குமன்றேயதிசயம்
விளையாதுமொழிந்ததெந்தைவளையாது
கல்லினும்வலிதாதுகல்லிதிற்செல்லாது
தான்சிறிதாயினுமுள்ளிடைநிரம்ப
வான்பொயச்சமாயாவாசை
மிடைந்தனகிடப்பவிடம்பெறலருமையி
லவர்கள்வர்வல்லிதிற்புகுந்து
மண்மகன்றிகிரியிலெண்மடங்குசுழற்ற
வாடுபுகிடந்தபீடினைஞ்சத்து
ழைந்தனைபுகுந்துதழைந்தநின்சடையுஞ்
செய்யவாயுமையமர்கண்டமு
நெற்றியிற்றிகழ்ந்தவொற்றைநாட்டமு
மெடுத்தபாதமுந்தடுத்தசெங்கையும்
புள்ளியாடையுமொள்ளிதின்விளங்க
நாடகமாடுதிநம்பகூடும்
வேதநான்கும்விழுப்பெருமுனிவரு
மாதிநின்றிறமாதலின்மொழிவது
பெரியதிற்பெரியையென்றுமன்றே
சிறியதிற்சிறியையென்றுமன்றே

நிறைபொருண்மறைகணுன்குநின்னறைகழ
லிரண்டொடுமறிவினிலார்த்துவைத்த
மறையவர்தில்லைமன்றுகிழவோனே. (கஉ)

வெண்பா.

கிழவருமாய்நோய்மூப்புக்கீழ்ப்பட்டுக்காமத்
தழாவரும்போயோயுமாகண்டோ—மொழிதெரிய
வாயிஞலிப்போதேமன்றினடமாடு
நாயஞரென்றுரைப்போநாம். (கங)

கட்டளைக்கலித்துறை.

நாமத்திஞலென்றஞத்திருத்தேனறைமாமலர்சேர்
தாமத்திஞலுன்சரண்பணியேன்சார்வதென்கொடுநான்
வாமத்திலேயொருமானேத்தரித்தொருமானைவைத்தாய்
சேமத்திஞலுன்றிருத்தில்லைசேர்வதார்செந்நெறியே. (கச)

ஆசிரியவிருத்தம்.

நெறிதருகுழலேயறலென்பர்க
ணிழலெழுமதியநுதலென்பர்க
ணிலவினும்வெளிதுநகையென்பர்க
ணிறம்வருகலசமுலையென்பர்க
ளறிகுவதரிதிவிடையென்பர்க
ளடியிணைகமலமலரென்பர்க
ளவயவமினையமடமங்கைய
ரழகியரமையுமவரென்செய
மறிமழுவுடையகரனென்கிலர்
மறலியைமுனியுமரனென்கிலர்
மதிபொதிசடிலதரனென்கிலர்
மலமகண்மருவுபுயனென்கிலர்
செறிபொழினிலவுதில்லையென்கிலர்
திருநடவிலுமிறையென்கிலர்

சிவகதியருளுமரசென்கிலர்
சிலர்நரகுறுவரறிவின்றியே. (கஇ)

நேரிசையாசிரியப்பா.

அறிவிலொழுக்கமும்பிறிதுபடுபொய்யுங்
கடும்பிணித்தொகையுமிடும்பையீட்டமு
மீனையனபலசரக்கேற்றிவினையெனுந்
தொன்மீகாமனுய்ப்பவந்நிலக்
கருவெனுநெடுங்கொருதுறைநீத்தத்துப்
புலனெனுங்கோண்மீனலமந்துதொடரப்
பிறப்பெனும்பெருங்கடலுறப்புகுந்தலைக்குந்
துயர்த்திரையுவட்டிற்பெயர்ப்பிடமயர்த்துக்
குடும்பமென்னுநெடுங்கல்வீழ்த்து
நிறையெனுங்கூம்புமுரிந்துகுறையா
வுணர்வெனுநெடும்பாய்கீறிப்புணரு
மாயப்பெயர்ப்படுகாயச்சிறைக்கலங்
கலங்குபுகவீழாமுன்னமலங்கன்
மதியுடனணிந்தபொதியவிழ்சடிலத்துப்
பையரவணிந்ததெய்வநாயக
தொல்லெயிலுடைத்தநில்லைகாவல
வம்பலர்தும்பையம்பலவாணநின்
னருளெனுநலத்தார்பூட்டித்
திருவடிநெடுங்கரைசேர்த்துமாசெய்யே. (கசு)

வெண்பா.

செய்யதிருமேனிச்சிற்றம்பலவருக்கென்
றையல்வளைகொடுத்தல்சாலுமே—யையன்றேர்
சேயேவருமளவிற்சிந்தாதமாத்திரமே
தாயேமதுகையிற்சங்கு. (கஎ)

கட்டளைக்கலித்துறை.

சங்கிடத்தானிடத்தான்றனதாகச்சமைந்தொருத்தி
யங்கிடத்தாடில்லையம்பலக்கூத்தற்கவிர்சடைமேற்
கொங்கிடத்தார்மலர்க்கொன்றையென்றுயெங்கையீயுமொரு
பங்கிடத்தான்வல்லையேலில்லையேலுன்பசப்பொழியே. (கஅ)

ஆசிரியவிருத்தம்.

ஒழிந்ததெங்களுறவென்கொலோவெரியி
லொன்னலார்கள்புரமுன்னெரிந்தாள்
விழுந்தெரிந்துதுகளாகவென்றிசெய்த
வில்லிதில்லைகர்போலியார்
சுழிந்தவுந்தியிலழுந்திமேகலை
தொடக்கநின்றவர்நடக்கநொந்
தழிந்தசிந்தையினும்வந்ததாகிலுமொர்
சிந்தையாயொழிவதல்லவே. (கக)

நேரிசையாசிரியப்பா.

அல்லல்வாழ்க்கைவல்லிதிற்செலுத்தற்குக்
கைத்தேருழந்துகார்வருமென்று
வித்துவிதைத்தும்விண்பார்த்திருந்துங்
கிளையுடன்றவிரப்பொருளுடன்கொண்டு
மூளைமுதிர்பருவத்துப்பதியெனவழங்கியு
மருளாவயவரம்பிடைநடந்து
மிருளுறுபவ்வத்தெந்திரங்கடாஅய்த்
துன்றுதிரைப்பரப்பிற்குன்றுபார்த்தியங்கியு
மாற்றல்வேந்தற்குச்சோற்றுக்கடன்பூண்டுந்
தாளுழந்தோடியும்வாளுழந்துண்டு
மறியாவொருவனைச்செறிவந்துதெருட்டியுஞ்
சொற்பலபுனைந்துங்கற்றனகழறியுங்
குடும்பப்பாசநெடுந்தொடர்ப்பூட்டி
யைவரைந்திடத்தீர்ப்பகொய்திற்

பிறந்தாங்கிறந்துமிறந்தாங்குபிறந்துங்
கணத்திடைத்தோன்றிக்கணத்திடைக்கரக்குங்
கொப்புட்செய்கையொப்பின்மின்போ
லுலப்பில்யோனிக்கலக்கத்துமயங்கியு
நெய்யெரிவளர்த்துப்பெய்முகிற்பெயறருந்
தெய்வவேதியர்தில்லைமூதூ
ராடகப்பொதுவினுடகவிற்றுங்
கடவுட்கண்ணுதனடமுயன்றெடுத்த
பாதப்போதும்பாய்புலிப்பட்டு
மீதியாத்தசைத்தவெள்ளெயிற்றரவுஞ்
சேயுயரகலத்தாயிரங்குமி
மணிகிடந்தமைக்குமொருபேராரமு
மருள்பொதிந்தலர்ந்தருவாய்மலரு
நெற்றியிற்றிகழ்ந்தவொற்றைநாட்டமுங்
கங்கைவழங்குந்திங்கள்வேணியுங்
கண்ணிடைப்பொறித்துமனத்திடையழுத்தியாங்
குண்மகிழ்ந்துரைக்கவுறுதவஞ்செய்தன
னன்முகன்பதத்தின்மேனிகழ்பதந்தா
னுறுதற்கரியதுமுண்டோ
பெறுதற்கரியதோர்பேறுபெற்றேற்கே. (உ0)

வேண்பா.

பெற்றூர்பிடிக்கப்பிழைத்துச்செவிலியர்கள்
சுற்றூடவோடித்தொழாநிற்கு—மொற்றைக்கை
மாமறுகச்சீறியசிற்றம்பலத்தான்மான்றேர்போங்
கோமறுகிற்பேதைக்குழாம். (உக)

கட்டளைக்கலித்துறை.

பேதையெங்கேயினித்தேறியுய்வாள்பிரமன்றனக்குத்
தாதைதன்றூதையென்றேத்தும்பிரான்றண்புலிசைப்பிரான்

கோதையந்தாமத்தண்கொன்றைகொடானின்றுகொல்லவெண்
பூதையுங்காருந்துளியொடுங்கூடியுலாவியவே. [ணீ

ஆசிரியவிருத்தம்.

உலவுசலதிவாழ்விடமமர்தொழவுணிவன
துகருமொருவரூழியினுறுதியொருவராழிய
புலவுகமழ்கோடிகையுடையபுனிதர்பூசுரர்
புலிசையலர்செய்போதணிபொழிலினிழலின்வாழ்வதோர்
கலவமயிலனுர்சுருள்காரியகுழலினுர்குயில்
கருதுமொழியினுர்கடைநெடியவிழியினுரித
ழிலவிலழகியாரிடைகொடியின்வடிவினுர்வடி
வெழுதுமருமையாரெனதிதயமுழுதுமாள்வரே. (உக)

இணைக்குறளாசிரியப்பா.

ஆளெனப்புதிதின்வந்தடைந்திலமத்தனின்
ருளினேவறலியினியற்றி
வழிவழிவந்தமரபினமொழிவது
னைக்தெழுத்தவையெஞ்சிந்தையிற்கிடத்தி
னனவேபோலநாடொறும்பழகிக்
கனவிலுநவிற்றுங்காதலேம்வினைகெடக்
கேட்பதுநின்பெருங்கீர்த்திமீட்பது
நின்னெறியல்லாப்புன்னெறிபடர்ந்த
மதியினெஞ்சத்தைவலைந்துநிதியென
வருத்திசெய்திவ்வதருத்திரசாதனங்
காலையுமாலையுங்கால்பெயர்த்திவ்வதன்
னுலயம்வலம்வருதற்கேசால்பினிற்
கைகொடுகுயிற்றுவதையநின்னது
கோயிற்பல்பணிகுறித்தேயோயா
தருகிநின்னினைனந்தருவிசோரக்
கண்ணிற்காண்பதெவ்வுலகினுங்காண்பனவெல்லா
மீயாகிநின்றதோர்நிலையேனாயேன்

றலைகொடுசார்வதுன்சரண்வழியல்லா
லலைகடல்பிறழினுமடாதேயதனற்
பொய்த்தவவேடர்கைத்தகப்படுத்தற்கு
வஞ்சச்சொல்லின்வார்வலேபோக்கிச்
சமயப்படுகுழிசமைத்தாங்கமைவயின்
மானுடமாக்களேவலியப்புகுத்து
மானுவிரதத்தகப்படுத்தாழ்த்து
வளேவுணர்வெனக்குவருமோவுளர்த்தரு
நுரையுந்திரையுநொப்புறுகொட்பும்
வரையில்சிகரவாரியுங்குரைகடற்
பெருத்துஞ்சிறுத்தும்பிறங்குவதோன்றி
யெண்ணிலவாகியிருங்கடலடங்குந்
தன்மைபோலச்சராசரமனேத்து
நின்னிடைத்தோன்றிநின்னிடையடங்குமீ
யொன்றினுந்தோன்றுயொன்றினுமடங்காய்
வானேர்க்கரியாய்மறைகளுக்கெட்டாய்
நான்மறையாளர்நடுவுபுக்கடங்கிச்
செம்பொற்றில்லேழூ
ரம்பலத்தாடுமும்பர்நாயகனே. (உச)

வேண்பா.

நாயனேயவென்னப்பொருட்படுத்திநன்களித்துத்
தாயனேயனேயருளுந்தம்பிரான்—றூயவிரை
மென்றுழாய்மாலொடயன்றேடவியன்றில்லே
மன்றுளேயாடுமணி. (உஞ)

கட்டளைக்கலித்துறை.

மணிவாய்முகிழ்ப்பத்திருமுகம்வேர்ப்பவம்மன்றுக்கெல்லா
மணியாயருணடமாடும்பிரானேயடைந்துருகிப்
பணியாய்புலன்வழிபோதெஞ்சமேயினிப்பையப்பையப்
பிணியாய்க்கடைவழிசாதியெல்லோரும்பிணமென்னவே. (உசு)

ஆசிரியவிருத்தம்.

என்னுமினிமடவரலாய்செய்குவ
தினமாய்வண்டுகண்மலர்கிண்டித்
தென்னுவெனமுரல்பொழில்சூழ்தில்லையு
ளரனர்திருமுடியணிதாமந்
தன்னுலல்லதுதீராதென்னிடர்
தகையாதுயிர்கருமுகிலேறி
மின்னுநின்றதுதுளிவாடையும்வர
வீசாநின்றதுபேசாயே. (உ)

இணைக்குறளாசிரியப்பா.

பேசுவாழிபேசுவாழி
யாசையொடுமயங்கிமாசுறுமனமே
பேசுவாழிபேசுவாழி
கண்டனமறையுமுண்டனமலமாம்
பூசனைமாசாம்புணர்ந்தனபிரியு
நிறைந்தனகுறையுமூயர்ந்தனபணியும்
பிறந்தனவிறக்கும்பெரியனசிறுக்கு
மொன்றொன்றுருவழிநில்லாவன்றியுஞ்
செல்வமொடுபிறந்தோர்தேசொடுதிகழ்ந்தோர்
கல்வியிற்சிறந்தோர்கடந்திறன்மிகுந்தோர்
கொடையிற்பொலிந்தோர்படையிற்பயின்றோர்
குலத்தினுயர்ந்தோர்கலத்தினின்வந்தோ
ரெனையரெங்குலத்தினரிறந்தாரனையவர்
பேருநின்றிலபோலுந்தேரி
னீயுமஃதறிதியன்றேமாயப்
பேய்த்தேர்போன்றுநீப்பருமுறக்கத்துக்
கனவேபோன்றுநனவுபெயர்பெற்ற
மாயவாழ்க்கையைமதித்துக்காயத்தைக்
கல்லினும்வலிதாக்கருதிப்பொல்லாத்

தன்மையரிழிவுசார்ந்தனீயு
நன்மையிற்றிரிந்தபுன்மையையாதலி
னழுக்குடைப்புலன்வழியிழுக்கத்திலெழுகி
வளைவாய்த்தூண்டிலினுள்ளிரைவிழுங்கும்
பன்மீன்போலவு
மின்னுபுவிளக்கத்துவிட்டில்போலவு
மாசையாம்பரிசத்தியானைபோலவு
மோசையின்விளிந்தபுள்ளுப்போலவும்
வீசியமணத்தின்வண்டுபோலவு
மூறுவதுணராச்செறுவுழிச்சேர்ந்தனை
நூண்ணூனூற்றத்தன்னகப்படுக்கு
மறிவில்கீடத்துநுந்துழிபோல
வாசைச்சங்கிலிப்பாசத்தொடர்ப்பட்
டிடர்கெழுமனத்திலெடியற்றுவதறியாது
குடர்கெழுசிறையறைக்குறங்குகிடத்தி
கறவைநினைந்தகன்றெனவிரங்கி
மறவாமனத்துமாசறுமடியார்க்
கருள்சுரந்தளிக்குமற்புதக்கூத்தனை
மறையவர்தில்லைமன்றுளாடு
மிறையவனென்கிலையென்னினைந்தனையே. (உஅ)

வெண்பா.

னினையார்மெலியார்நிறையழியார்வாளார்ப்
புனைவார்க்குக்கொன்றைபொதுவோ—வனைவீரு
மெச்சியேகாணவியன்றில்லையானருளென்
பிச்சியோவாளப்பெறும். (உக)

கட்டளைக்கலித்துறை.

பெறுகின்றவெண்ணிலிதாயறும்பேறுறும்யானுமென்னை
யுறுகின்றதுன்பங்களாயிரகோடியுமோய்வொடுஞ்சென்

றிலுகின்றநாள்களுமாகிக்கிடந்தவிடுக்கணெல்லா
மறுகின்றனதில்லையாளுடையான்செம்பொனம்பலத்தே. (கூ0)

ஆசிரியவிருத்தம்.

அம்பலவரங்கணாடைந்தவர்தமக்கே
யன்புடையரென்னுமிதனுனையுரித்துக்
கம்பலமுவந்தருளுவீர்மதனன்வேவக்
கண்டருளுவீர்பெரியகாதலறியாதே
வம்பலர்நிரைந்துவசைபேசவொருமாடே
வாடையுயிரீரமணிமாமையுமிழந்தென்
கொம்பலமருந்தகைமைகண்டதகவின்றிக்
கொன்றையருளீர்கொடியரென்றருளுவீரே. (கூக)

இணைக்குறளாசிரியப்பா.

அருளுவாழியருளுவாழி
புரிசடைக்கடவுளருளுவாழி
தோன்றுழித்தோன்றிநிலைதவக்கறங்கும்
புற்புதச்செவ்வியின்மக்களியாக்கைக்கு
நினைப்பினுங்கடிதேயிளமைநீக்க
மனிதனுங்கடிதேமூப்பின்றொடர்ச்சி
யதனினுங்கடிதேகதமெனமரணம்
வாணுள்பருகியுடம்பைவறிதாக்கி
நாணுள்பயின்றநல்காக்கூற்ற
மினையதன்மையதிதுவேயிதனை
யெனதெனக்கருதியிதற்கென்றுதொடங்கிச்
செய்தனசிலவேசெய்வனசிலவே
செய்யாநிற்பனசிலவேயவற்றிடை
நன்றென்பசிலவேதீதென்பசிலவே
யொன்றினும்படாதனசிலவேயென்றிவை
கணத்திடைநினைந்துகளிப்பவுங்கலுழ்பவுங்

கணக்கில்கோடித்தொகுதியவைதா
மொன்றொன்றுணர்வுழிவருமோவனேத்து
மொன்றுவுணர்வுழிவருமோவென்றொன்று
தெளிவுழித்தேறல்செல்லேமளிய
மனத்தின்செய்கைமற்றிதுவேநீயே
யரியையாலவெம்பெருமதெரிவுறி
லுண்டாய்த்தோன்றுவயாவையுநீயே
கண்டனேயவைகினேக்காணுவதுதா
னின்வயின்மறைத்தோயல்லையுன்னே
மாயாய்மன்னினேநீயேவாழி
மன்னியுஞ்சிறுமையிற்கரந்தோயல்லே
பெருமையிற்பெரியோய்பெயர்த்துநீயே
பெருகியுஞ்சேணிடைகின்றேயல்லே
தேர்வோர்க்குத்தம்மினுமணியைநீயே
நண்ணியுமிடையொன்றின்மறைந்தோயல்லே
யிடையிட்டுகின்னேமறைப்பதுமில்லே
மறைப்பினுமதுவு
நீயேயாகிகின்றதொர்நிலையேயஃதான்று
நினேப்பருங்காட்சிகின்னிலையிதுவே
நினேப்புறுங்காட்சியெய்நிலையதுவே
யினிநனியிரப்பதொன்றுடையமனமருண்டு
புன்மையினினேத்துப்புலன்வழிபடாினு
கின்வயினினேந்தேமாகுதனின்வயி
னினேக்குமாகினேக்கப்பெறுதலினேத்தொன்று
நீயேயருளல்வேண்டுமேய்மூதிர்
கயிலைபுல்லெனவெறிவிசும்புவறிதாக
விம்பருய்யவம்பலம்பொலியத்
திருவளர்தில்லைமூதூ
ரருநடங்குயிற்றுமாதிவானவனே. (கூ)

வெண்பா.

வானேர்பணியமணியாசனத்திருக்கு
மானுதசெல்வத்தரசன்றே—மானுகம்
பந்திப்பார்நின்ருடுபைம்பொன்னினம்பலத்தே
வந்திப்பார்வேண்டாதவாழ்வு. (கூகூ)

கட்டளைக்கலித்துறை.

வாழ்வாகவுந்தங்கள்வைப்பாகவுமறையோர்வணங்க
வாள்வாய்திருத்தில்லையம்பலத்தாயுன்னேயன்றியொன்றைத்
தாழ்வாரறியாச்சடிலநஞ்சுண்டிலையாகிலன்றே
மாள்வார்சிலரையன்ருதெய்வமாகவணங்குவதே. (கூச)

ஆசிரியவிருத்தம்.

வணங்குமிடையீர்வறிதுவல்லியிடையாண்மேன்
மாசரமாரிபொழியப்பெறுமனத்தோ
டிணங்கியிவடானுமெலியப்பெறுமிடர்க்கே
யூதையெரிதூவியுலவப்பெறுமடித்தே
பிணங்கியரவோடுசடையாடநடமாடும்
பித்தரெனவும்மிதயமித்தனையுமோரீ
ரணங்குவெறியாடுமறியாடுமதுவீரு
மையலையுமல்லலையுமல்லதறியீரே. (கூடு)

நேரிசையாசிரியப்பா.

ஈரவேரித்தார்வழங்குசடிலத்துக்
குதிகொள்கங்கைமதியின்மீதசைய
வண்டியங்குவரைப்பினெண்டோட்செல்வ
வொருபாற்ருடுமொருபாற்குழையு
மிருபாற்பட்டமேனியெந்தை
யொல்லொலிப்பழனத்தில்லைமூதூ
ராடகப்பொதுவினுடகவிற்று
மிமையாகாட்டத்தொருபெருங்கடவுள்

வானவர்வணங்குந்தாதையானே
மதுமழைபொழியும்புதுமந்தாரத்துத்
தேனியங்கொருசிறைக்கானகத்தியற்றிய
தெய்வமண்டபத்தைவகையமளிச்
சிங்களஞ்சுமப்பவேறிமங்கைய
ரிமையாநாட்டத்தமையாநோக்கத்
தம்மார்புபருகச்செம்மாந்திருக்கு
மாஞ்செல்வத்துவாஞ்ஞரின்ப
மதுவேயெய்தினுமெய்துகதுமெனத்
தெறுசொலாளருறுசினந்திருகி
யெற்றியுமீர்த்துங்குற்றங்கொளீஇ
யீர்ந்தும்போழ்ந்துமெற்றுபுகுடைந்தும்
வார்ந்துங்குறைத்துமதாய்க்கீந்துஞ்
செக்குரற்பெய்துந்தீநீர்வாக்கியும்
புழுக்குடையழுவத்தழுக்கியல்சேற்றுப்
பன்னெடுங்காலமழுத்தியின்ஞ
வரையிறண்டத்துமாரூக்கடுந்துயர்
கிரயஞ்சேரினுஞ்சேர்கவுரையிடை
யேஞ்ஞரென்னேயாஞ்துவிரும்பி
கல்லனெனினுமென்கவவரே
யல்லனெனினுமென்கநில்லா
திருவொடுதிளைத்துப்பெருவளஞ்சிதையா
தின்பத்தழுந்தினுமழுந்துகவல்லாத்
துன்பந்துதையினுந்துதைகமுன்பி
லினமையொடுபழகிக்கழுமூப்புக்குறுகா
தென்றுமிருக்கினுமிருக்கவன்றி
யின்றேயிறக்கினுமிறக்கவொன்றினும்
வேண்டலுமிலனேவெறுத்தலுமிலனே
யாண்டகைக்குரிசினின்னடியரொடுங்குழுமித்
தெய்வக்கூத்தினின்செய்யபாதமு

மடையவுமணுகவும்பெற்ற
கிடையாச்செல்வங்கிடைத்தலானே. (கக)

வெண்பா.

ஆனேறேபோந்தாலழிவுண்டேயன்புடைய
நானேதான்வாழ்ந்திடினுநன்றன்றே—வானேங்கு
வாமாண்பொழிற்றில்லைமன்றைப்பொலிவித்த
கோமானேயித்தெருவேகொண்டு. (கஎ)

கட்டளைக்கலித்துறை.

கொண்டல்வண்ணத்தவனுன்முகனிந்திரன்கோமகுடத்
தண்டார்மிண்டித்தொழுமம்பலக்கூத்தனுக்கன்புசெய்யா
மிண்டார்மிண்டித்திரிவாரெனக்கென்னினிநானவன்றன்
ரெண்டர்தொண்டர்க்குத்தொழும்பாய்த்திரியத்தொடங்கினனே

ஆசிரியவிருத்தம்.

தொடரநைத்தங்கமுன்புளவாயின
தொழில்கண்மருத்தொன்றுமொன்றியிடாதொரு
சுளிவுதலைக்கொண்டுபுன்புலவாரிக
டுளையொழுகக்கண்டுசிந்தனையோய்வொடு
நடைகெடமுற்கொண்டபெண்டிர்பொருவொரு
நடலைநமக்கென்றுவந்தனபேசிட
நலியிருமற்கஞ்சியுண்டிவெறுவிழு
நரகவுடற்கன்புகொண்டலைவேனினி
யிடலொடியப்பண்டிலங்கையர்கோவெரு
வீரலினமுக்குண்டுபண்பலபாடிய
வீரகுசெவிக்கொண்டுமுன்புளதாகிய
வெகுளிதவிர்த்தன்றுபொன்றியிடாவகை
திடமருள்வைக்குஞ்செழுஞ்சுடரூறிய
தெளியமுதத்தின்கொழுஞ்சுவைதீடிய
திலகரிற்செம்பொனம்பலமேவிய
சிவனிவனிக்குந்தவஞ்சதராவதே. (கக)

நேரிசையாசிரியப்பா.

சதுர்முகன் றந்தைக்குக்க திர்விடுகடவு
ளாழிகொடுத்தபேரருள்போற்றி
முயற்சியொடுபணிந்தவியக்கர்கோனுக்கு
மாநிதியிரண்டுமாளுப்பெருவளத்
தளகையொன்றுதளர்வின்றிறுவிய
செல்வங்கொடுத்தசெல்வம்போற்றி
தாணிழலடைந்தமாணிக்காக
நாண்முறைபிறழாதுகோண்முறைவலித்துப்
பதைத்துவருங்கூற்றைப்படிமிசைத்தெறிக்க
வுதைத்துயிரளித்தவுதவிபோற்றி
குலகுலகுலந்தநிலையாத்தேவர்
படுபேரவலமிடையின்றிலக்கிக்
கடல்விடமருந்தினகருணைபோற்றி
தவிராச்சீற்றத்தவுணர்மூவெயி
லொல்லெனல்கொளுவியொருகொடிபொடிபட
வில்லொன்றுவஃதத்தவீரம்போற்றி
பூமென்கரும்பொடுபொடிபடநிலத்துக்
காமனைப்பார்த்தகண்ணுதல்போற்றி
தெய்வயாளிகைமுயன்றுகிழித்தெனக்
கரியொன்றுரித்தபெருவிறல்போற்றி
பண்டுபெரும்போர்ப்பார்த்தனுக்காகக்
கொண்டுநடந்தகோலம்போற்றி
வீரற்பதமொன்றில்வெள்ளிமலையெடுத்த
வரக்கனைநெரித்தவாண்மைபோற்றி
விலங்கல்விண்டுவிழுந்தெனமுன்னுட்
சலந்தரற்றடிந்ததண்டம்போற்றி
தாதையையெறிந்தவேதியச்சிறுவற்குப்
பரிகலங்கொடுத்ததிருவுளம்போற்றி

நின்முதல்வழிபடத்தன்மகற்றடிந்த
தொண்டர்மனையிலுண்டல்போற்றி
வெண்ணெயுண்ணவெண்ணுபுவந்து
நந்தாவிளக்கைநுந்துபுபெயர்த்த
தாவுபுல்லெலிக்குமூவுலகாள
நொய்திணிலளித்தகைவளம்போற்றி
பொங்குளையழல்வாய்ப்புகைவிழியொருதனிச்
சிங்கங்கொன்றசேவகம்போற்றி
வரிமிடற்றெறுழ்வலிமணியுருபகுவா
யுரகம்பூண்டவொப்பனைபோற்றி
கங்கையுங்கடுக்கையுங்கலந்துழியொருபாற்
றிங்கள்சூடியசெஞ்சடைபோற்றி
கடவுளிருவரடியுமுடியுங்
காண்டல்வேண்டக்கனற்பிழம்பாகி
நீண்டுநின்றநீளம்போற்றி
யாலம்பில்குநின்சூலம்போற்றி
கூறுதற்கரியநின்னேறுபோற்றி
யேகவெற்பன்மகிழ்மகட்கிடப்
பாகங்கொடுத்தபண்புபோற்றி
திருலைமாநகர்போற்றிதிருலையுட்
செம்பொனம்பலம்போற்றியம்பலத்
தாடுநாடகம்போற்றியென்றுங்
கென்றும்போற்றினுமென்றனக்கிறைவ
வாற்றலில்லையாயினும்
போற்றிபோற்றிநின்பொலம்பூவடிக்கே. (ச0)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டணத்துப்பிள்ளையார்

அருளிச்செய்த

திருக்கழுமலமும்மணிக்கோவை.

இணைக்குறளாசிரியப்பா.

திருவளர்பவளப்பெருவரைமணந்த
மரகதவல்லிபோலவொருகூ
றிமையச்செல்விபிரியாதுவிளங்கப்
பாய்திரைப்பரவைமீமிசைமுகிழ்த்த
வுலகதிர்ப்பரிதியாயிரந்தொகுத்த
வரன்முறைதிரியாதுமலர்மிசையிருந்தெனக்
கதிர்விடுநின்முகங்காண்டொறுங்காண்டொறு
மூதிராவிளமுலைமுற்றுக்கொழுந்தின்
றிருமுகத்தாமரைசெவ்வியின்மலரநின்
றையல்வாணுதற்றெய்வச்சிறுபிறை
யிளநிலாக்காண்டொறுமொளியொடும்புணர்ந்தநின்
செவ்வாய்க்குமுதஞ்செவ்விசெய்யநின்
செங்கைக்கமலமங்கைவனமுலை
யமிர்தகலசமமைவின்றேந்த
மலைமகடனதுநயனக்குவளைநின்
பொலிவிஞ்சுமலரமறையோர்
கழுமலநெறிநின்றுபொலிய
நாகர்நாடுமீமிசையமிதந்து
மீமிசையுலகங்கீழ்முதற்றழுந்திங்
கொன்றுவந்தருன்றுவெள்ளத்
துலகமூன்றுக்குங்கலகணுகி
முதலில்காலமினிதுவீற்றிருந்துழித்

தாதையொடுவந்தவேதியச்சிறுவன்
றளர்நடைப்பருவத்துவளர்பசிவருத்த
வன்ஞயோவென்றழைப்பமுன்னின்று
ஞானபோனகத்தருளட்டிக்குழைத்த
வாளுத்திரஞாயவன்வயினருள
வந்தண்முளிந்துதந்தாரியாரென
வவனைக்காட்டுவனப்பவாளர்
தோடுடையசெவியனென்றும்
பீடுடையபெம்மானென்றுங்
கையிற்சுட்டிக்காட்ட
வையநீவெளிப்பட்டருளினையாங்கே. (க)

வெண்பா.

அருளின்கடலடியேனன்பெனுமாறு
பொருளின்றிரள்புகலிநாத—னிருள்புகுதுங்
கண்டத்தானென்பாரைக்காதலித்துக்கைதொழுவா
ரண்டத்தார்நாமாரதற்கு. (உ)

கட்டளைக்கலித்துறை.

ஆணநான்கிற்குமப்பாலவனறியத்துணிந்த
காரணனென்முகனுக்கரியானெவாய்நிறைந்த
பூரணனெந்தைபுகலிப்பிரான்பொழிலத்தனைக்குங்
காரணனந்தக்கரணங்கடந்தகருப்பொருளே. (ங)

ஔணகீதமுளாசிரியப்பா.

கருமுதற்றொடங்கிப்பெருநாளெல்லாங்
காமம்வெகுளிகழிபெரும்பொய்யெனுங்
தூய்மையில்குப்பைதாலவின்றிக்கிடந்ததை
யரிதினிகழ்ந்துபோக்கிப்பொருதிறன்
மையிருணிறத்துமதனுடையடுசினத்
தைவகைக்கடாவும்யாப்பவிழ்த்தகற்றி
யன்புகொடுமெழுகியருள்விளக்கேற்றித்

துன்பவிருளைத்துரந்துமுன்புற
மெய்யெனும்விதானம்விரித்துகொய்ய
கீழ்மையிற்றொடர்ந்துகிடந்தவென்சிந்தைப்
பாழறையுனக்குப்பள்ளியறையாக்கிச்
சிந்தைத்தாமரைச்செழுமலர்ப்பூந்தவி
சென்தைதீயிருக்கவிட்டனனிந்த
நெடிநிலவுளாகமுமகதிர்வானமு
மடையப்பரந்தவாதிவெள்ளத்து
நுரையெனச்சிதறியிருசுடர்மிதப்ப
வரைபறித்தியங்குமாருதங்கடுப்ப
மாலும்பிரமனுமுதலியவானவர்
காலமிதுவெனக்கலங்காநின்றுழி
மற்றவருய்யப்பற்றியபுணையாய்
மிகுனிமிதந்தபுகலிநாயக
வருணனிசுரக்கும்பிரளயவிடங்கநின்
செல்வச்சிலம்புமெல்லெனமிழற்ற
வமையாக்காட்சியிமையக்
கொழுந்தையுமூடனேகொண்டிங்
கெழுந்தருளத்தகுமெம்பெருமானே. (சு)

வெண்பா.

மானுமழுவுந்திருமிடற்றில்வாழுமிரு
டானும்பிறையுந்தரித்திருக்கும்—வானவர்க்கு
வெள்ளத்தேதோன்றிக்கமழுமலத்தேவீற்றிருந்தென்
னுள்ளத்தேநின்றவொளி. (கி)

கட்டளைக்கலித்துறை.

ஒளிவந்தவாபொய்மனத்திருணீங்கவென்னுள்ளவெள்ளந்
தெளிவந்தவாவந்துதித்தித்தவாசிந்தியாததொரு
களிவந்தவாவன்புகைவந்தவாகடைசாரமையத்
தெளிவந்தவாநங்கழுமலவாணர்தமின்னருளே. (சு)

இணைக்குறளாசிரியப்பா.

அருள்பழுத்தளித்தகருணைவான்கனி
யாராவின்பத்தீராக்காத
லடியவர்க்கமிர்தவாரிதெடுநிலை
மாடக்கோபுரத்தாடகக்குடுமி
மழைவயிறுகிழிக்குங்கழுமலவாணன்
வழுவாக்காட்சிழுதிராவிளமுலைப்
பாவையுடனிருந்தபரமயோகி
யாஞென்றுணர்த்துவனெந்தைமேனு
ளகிலலோகமுமனந்தயோனியு
நிகிலமுந்தோன்றநினைந்தகாட்டொடுங்கி
யெனைப்பலயோனியுநினைப்பரும்பேதத்
தியாரும்யாவையுமெனக்குத்தனித்தனித்
தாயராகியுந்தந்தையராகியும்
வந்திலாதவரில்லையானவர்
தந்தையராகியுந்தாயராகியும்
வந்திராததுமில்லைமுந்து
பிறவாநிலனுமில்லையவ்வயி
னிறவாநிலனுமில்லைபிறிதி
லென்னைத்தின்ஞுவுயிர்களுமில்லையானவை
தம்மைத்தின்ஞுதொழிந்ததுமில்லையனைத்தே
காலமுஞ்சென்றதியானிதன்மேலினி
யிலைக்குமாறிலனேனாயே
னந்தாச்சோதிநின்னஞ்செழுத்துரவிலுந்
தந்திரம்பயின்றதுமிலனேதந்திரம்
பயின்றவர்ப்பயின்றதுமிலனேயாயினு
மியன்றதோர்பொழுதினிட்டதுமலராச்
சொன்னதுமந்திரமாகவென்னையு
மிடர்ப்பிறப்பிறப்பெனுமிரண்டின்
கடற்படாவகைகாத்தனின்கடனே. (ன)

வெண்பா.

கடலானகாமத்தேகாரூழ்வர்துன்ப
மடலாமுபாயமறியா—ருடலா
முழுமலத்தையோர்கிலார்முக்கட்பெருமான்
கழுமலத்தைக்கைதொழாதார். (அ)

கட்டளைக்கலித்துறை.

தொழுவாளிவள்வளைதோற்பாளிவளிடர்க்கேயலர்கொண்
டெழுவாளெழுகின்றதென்செயவோமென்மனத்திருந்தும்
கழுவாமணியைக்கழுமலவாணனைக்கையிற்கொண்ட
மழுவாளனைக்கண்டுவந்ததென்றூலொர்வசையில்லையே. (கு)

நேரிசையாசிரியப்பா.

வசையில்காட்சியிசைநனிவிளங்க
முன்னுணிகழ்ந்தபன்னீருலகத்து
வேறுவேறுபெயரினூறின்றியன்ற
மையறுசிறப்பிற்றெய்வத்தன்மைப்
புகலிநாயகவிகல்விடைப்பாக
வமைநாண்மென்றூளுமையாள்கொழுந
குன்றுகுனிவித்துவன்றூளவுணர்
மூவெயிலெரித்தசேவகத்தேவ
விளநிலாமுகிழ்க்கும்வளர்சடைக்கடவுளின்
னெற்றியிற்சிறந்தவொற்றைநாட்டத்துக்
காமனேவிழித்தமாமுதுதலைவ
னானவரறியாவாதியானே
கல்லாமனத்துப்புல்லறிவுதொடர
மறந்துநோக்கும்வெறுந்தண்ணுட்டத்துக்
காண்டொறுங்காண்டொறுமெல்லாமியாண்டை
யாயினும்பிறவுமென்னதும்பிறசது
மாவனபலவுமழிவனபலவும்

போவதும்வருவதுநிகழ்வதுமாகித்
தெண்ணீர்ஞாலத்துத்திரண்டமணலினு
மெண்ணில்கோடியெனப்பலவாகி
யில்லனவுளவாயுள்ளதுகாணுது
பன்னுளிருள்வயிற்பட்டேனன்னது
மன்னதாதலினகுமதென்னெனிற்
கட்புலன்றெரியாதுகொட்புறுமொருவர்க்குக்
குழிவழியாகிவழிகுழியாகி
யொழிவின்றொன்றிலொன்றுதடுமாற
வந்தாற்போலவந்ததெந்தையின்
றிருவருணோட்டங்கருணையிற்பெறலும்
யாவையுமெனக்குப்பொய்யெனத்தோன்றி
மேவருமேயமெய்யெனத்தோன்றினை
யோவியப்புலவன்சாயல்பெறவெழுதிய
சிற்பவிகற்பமெல்லாமொன்றித்
தவிராதுதடவினர்தமக்குச்
சுவராய்த்தோன்றுந்துணிவுபோன்றனவே. (கo)

வெண்பா.

எனவேயெழுந்திருந்தாளென்செய்வாளின்னஞ்
சினவேறுகாட்டுதிரேற்றீரு—மினவேகப்
பாம்புகலியானிமிரும்பன்னுச்சடைமுடிநம்
பூம்புகலியானிதழிப்போது. (கக)

கட்டளைக்கலித்துறை.

போதும்பெரூவிடிற்பச்சிலையுண்டுபுனலுண்டெங்கு
மேதும்பெரூவிடினெஞ்சுண்டன்றேயிணையாகச்செப்புஞ்
சூதும்பெரூமூலபங்கர்தென்ரூணிபுரேசர்வண்டின்
ரூதும்பெரூதவடித்தாமரைசென்றுசார்வதற்கே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டணத்துப்பிள்ளையார்

அருளிச்செய்த

திருவிடைமருதூர் மும்மணிக்கோவை.

இணைக்குறளாசிரியப்பா.

தெய்வத்தாமரைச்செவ்வியின்மலர்ந்து
வாடாப்புதுமலர்த்தோடெனச்சிவந்து
சிலம்புக்கழலுமலம்பப்புனைந்து
கூற்றினுற்றன்மாற்றிப்போற்றுது
வலம்புரிநெடுமோலெனமாகிநிலம்புக்
காற்றலினகழத்தோற்றுதுநிமிர்ந்து
பத்தியடியவர்பச்சிலையிடினு
மூத்திகொடுத்துமுன்னின்றருளித்
திகழ்ந்துளதொருபாற்றிருவடியகஞ்சேர்ந்து
மறுவில்கற்பகத்தருதளிர்வாங்கி
நெய்யிற்றேய்த்தசெவ்வித்தாகி
நூபுரங்கிடப்பினுநொந்துதேவர்
மடவரன்மகளிர்வணங்குபுவீழ்த்த
சின்னப்பன்மலர்தீண்டிடச்சிவந்து
பஞ்சியுமணிச்சமூமெஞ்சவெஞ்சாத்
திருவொடும்பொலியுமொருபாற்றிருவடி
நீலப்புள்ளிவாளுகிர்வேங்கைத்
தோலின்கலிங்கமேல்விரித்தசைத்து
நச்செயிற்றரவக்கச்சையாப்புறுத்துப்
பொலிந்துளதொருபாற்றிருவிடையிலங்கொளி
யரத்தவாடைவிரித்துமீதுறீஇ
யிரங்குமணிமேகலையொருங்குடன்சாத்திய
மருங்கிற்றூசுமொருபாற்றிருவிடை

செங்கணரவும்பைங்கணுமையுங்
கேழற்கோடும்வீழ்திரளக்கு
நுடங்குநூலுமிடங்கொண்டுபுனைந்து
தவளநீறணிந்ததோர்பவளவெற்பென்ன
வொளியுடன்றிகழுமொருபாலாகம்
வாரும்வடமுமேர்பெறப்புனைந்து
செஞ்சாந்தணிந்துகுங்குமமெழுதிப்
பொற்றூமரையின்முற்றுமுகிழென
வுலகேழீன்றுநிலையிற்றளரா
மூலையுடன்பொலியுமொருபாலாக
மயில்வாயரவம்வயின்வயினணிந்து
மூவிலைவேலும்பூவாய்மழுவுங்
தமருகப்பறையுமமர்தரத்தாங்கிச்
சிறந்துளதொருபாற்றிருக்கரஞ்செறிந்த
சூடகம்விளங்கியவாடகக்கழங்குட
னெம்மென்பந்துமம்மென்கிள்ளையுந்
தரித்ததிகழுமொருபாற்றிருக்கர
மிரவியுமெரியும்விரவியவெம்மையி
னெருபால்விளங்குந்திருவடிகாட்ட
நங்மாணின்செவ்வித்தாகிப்
பாலிற்கிடந்தநீலம்போன்று
குண்டுநீர்க்குவளையிற்குளிர்ந்துநிறம்பயின்
றெம்மனோர்க்கடித்தவெம்மைநோய்க்கிரங்கி
யுலகேழ்புரக்குமொருபாலுட்ட
கொச்சிப்பூவும்பச்சைமத்தமுங்
கொன்றைப்போதுமென்றுணர்த்தும்பையுங்
கங்கையாறும்பைங்கட்டலையு
மரவுமதியமும்விரவித்தொடுத்துச்
சூடாமாலைசூடிப்பீடுகெழு
கெருப்பிற்றிரித்தனையவுருக்கிளர்சடிலமொடு

நான்முகங்கரந்தபானிறவண்ணங்
காணுவண்ணங்கருத்தையுங்கடந்து
சேணிகந்துளதேயொருபாற்றிருமுடிபேணிய
கடவுட்கற்பின்மடவரன்மகளிர்
கற்பகவனத்துப்பொற்பூவாங்கிக்
கைவைத்துப்புனைந்ததெய்வமாலை
நீலக்குழன்மிசைவாஇமேனிவந்து
வண்டுக்தேனுங்கிண்டுதிளைப்பத்
திருவொடுபொலியுமொருபாற்றிருமுடி
யினையவண்ணத்துனைவருங்காட்சி
யிருவயினுருவுமொருவயிற்றுகி
வலப்பானுட்டமிடப்பாலுக்க
வாணுதல்பாகநாணுதல்செய்ய
வலப்பாற்றிருக்கரமிடப்பால்வனமுலை
தைவந்துவருடமெய்ம்மயிர்பொடித்தாங்
குலகமேழும்பன்முறையீன்று
மருதிடங்கொண்டவொருதனிக்கடவுணின்
றிருவடிபரவுதும்யாமேதெடுநா
ளிறந்தும்பிறந்துமிளைத்தனமறந்துஞ்
சிறைக்கருப்பாசயஞ்சேரா
மறித்தும்புகாவாழ்வுபெறற்பொருட்டே. (சு)

வெண்பா.

பொருளுங்குலனும்புகழுந்திறனு
மருளுமறிவுமனைத்து—மொருவர்
கருதாவென்பார்க்குங்கறைமிடற்றுய்தொல்லை
மருதாவென்பார்க்குவரும். (உ)

கட்டளைக்கலித்துறை.

வருந்தேனிறந்தும்பிறந்துமயக்கும்புலன்வழிபோய்ப்
பொருந்தேனரகிற்புகுகின்றிலேன்புகழ்மாமருதிற்

பெருந்தேன்முகந்துகொண்டுபிறிதொன்றிலாசையின்றி
யிருந்தேனினிச்சென்றிரவேஞருவரையாதொன்றுமே. (கூ)

நேரிசையாசிரியப்பா.

ஒன்றிஞடொன்றுசென்றுமுகிறடவி
யாடுகொடிநுடங்கும்பீடுகெழுமாளிகை
தெய்வக்கம்மியர்கைம்முயன்றவருத்த
வோவதூற்செம்மைப்பூவியல்வீதி
குயிலெனமொழியுமயிலியலாயத்து
மான்மாறவிழிக்குமாஞச்செல்வத்
திடைமருதிடங்கொண்டிருந்தவெந்தை
சுடர்மழுவலங்கொண்டிருந்ததோன்ற
லாரணன்தொடராப்பூரணபுராண
நாரணனறியாக்காரணக்கடவுள்
சோதிச்சுடரொளியாதித்தனிப்பொரு
ளேகநாயகயோகநாயக
யாஞென்றுணர்த்துவதுளதேயான்முன்
னனந்தலோயுலகத்தனந்தயோனியிற்
பிறந்துழிப்பிறவாதுகறங்கெனச்சுழன்றுழித்
தோற்றும்பொழுதினீற்றுத்துன்பத்
தியாயுறுதுயரமுமியானுறுதுயரமு
மிறக்கும்பொழுதினறப்பெருந்துன்பமு
நீயேதறிகுநர்யாரேயதனு
லியானினிப்பிறத்தலாற்றேனஃதான்
றுற்பவந்துடைத்தனிற்பிடித்தல்லது
பிறிதொருநெறியினில்லையக்நெறிக்கு
வேண்டலும்வெறுத்தலுமாண்டொன்றிற்படரா
வுள்ளமொன்றுடைமைவேண்டுமஃதன்றி
யையம்புலனேவலாணைவழிநின்று
தானலதொன்றைத்தானெனநினையு

மிதுவென துள்ளமாதலினி துகொடு
நின்னே நினைப்பதெங்ஙனமுன்னங்
கற்புணையாகக்கடனீர்நீந்தின
றெற்பிறருளரோவிறைவகற்பங்
கடத்தல்யான்பெறவும்வேண்டுங்கடத்தற்கு
நினைத்தல்யான்பெறவும்வேண்டுநினைத்தற்கு
நெஞ்சுநெறிநிற்கவும்வேண்டுநஞ்சுபொதி
யுறையெயிற்றுரகம்பூண்ட
கறைகெழுமிடற்றெங்கண்ணுதலோயே. (சு)

வெண்பா.

கண்ணென்றுநந்தமக்கோர்காப்பென்றுங்கற்றிருக்கு
மெண்ணென்றுமூலவெழுத்தென்று—மொண்ணை
மருதவப்பாவென்றுமுனைவாழ்த்தாரேன்மற்றுங்
கருதவப்பாலுண்டோகதி. (இ)

கட்டளைக்கலித்துறை.

கதியாவதுபிறிதியாதொன்றுமில்லைகளேவரத்தின்
பொதியாவதுசுமந்தான்விழப்போமிதுபோனபின்னர்
விதியாமெனச்சிலர்சோவதல்லாலிதைவேண்டுநெர்யார்
மதியாவதுமருதன்கழலேசென்றுவாழ்த்துவதே. (சு)

நேரிசையாசிரியப்பா.

வாழ்ந்தனமென்றுதாழ்ந்தவர்க்குதவாது
தன்னுயிர்க்கிரங்கிமன்னுயிர்க்கிரங்கா
துண்டிப்பொருட்டாற்கண்டனவெஃகி
யவியடுநர்க்குச்சுவைபகர்ந்தேவி
யாராவுண்டியயின்றனராகித்
தூராக்குழியைத்தூர்த்துப்பாரா
விழுப்பமுங்குலனுமொழுக்கமுங்கல்வியுந்
தன்னிற்சிறந்தன்மூதாளரைக்
கூஉய்முன்னின்றுதன்னேவல்கேட்குஞ்

சிரு அர்த்தொகு தியினு ரு அப்பேசியும்
பொய்யொடுபுன்மை தன்புல்லர்க்குப்புகன் று
மெய்யுமான மூமேன்மையுமொரீஇத்
தன்னேத்தேறிமுன்னேயோர்கொடுத்த
ஈன்மனேக்கிழத்தியாகியவங்கிலச்
சாவுழிச்சாஅந்தகைமையளாயினு
மேவுழிமேவல்செல்லாதுகாவலொடு
கொண்டோளொருத்தியுண்டிவேட்டிருப்ப
வெள்ளுக்கெண்ணெய்போலத்தள்ளாது
பொருளினளவைக்குப்போகம்விற்றுண்ணு
மருளின்மடந்தையராகந்தோய்ந்து
மாற்றல்செல்லாதுவேற்ரூர்மனேவயிற்
கற்புடைமடந்தையர்பொற்புனிகேட்டுப்
பிழைவழிபாராதுநுழைவழிநோக்கியு
நச்சிவந்தநல்கூர்மாந்தர்தம்
விச்சையிற்படைத்தவெவ்வேறுகாட்சியி
னகமலர்ந்தீவார்போலமுகமலர்ந்
தினிதுமொழிந்தாங்குதவுதலின்றி
நாளுநாளுநாள்பலகுறித்தவர்
தாளிஞற்றலுந்தவிர்த்துக்கேளிகழ்ந்
திகமும்பரமுமில்லேயென்று
பயமின்றெழுகிப்பட்டிமைபயிற்றி
மின்னினனேயதன்செல்வத்தைவிரும்பித்
தன்னேயுமொருவராகவுன்னு
மேனேயோர்வாழும்வாழ்க்கையுனேமலர்ந்
தியோசனேகமழுமுற்பலவாவியிற்
பாசடைப்பரப்பிற்பானிறவன்னம்
பார்ப்புடன்வெருவப்பகுவாய்வாளேகள்
போர்த்தொழில்புரியும்பொருகாவிரியு
மருதமுஞ்சூழ்ந்தமருதவாண

சுருதியுந்தொடராச்சுருதிநாயக
பத்தருக்கெய்ப்பினில்வைப்பெனவுதவு
மூத்தித்தாளமூவாமுதல்வனின்
றிருவடிபிடித்துவெருவரல்விட்டு
மக்களுமனைவியுமொக்கலுந்திருவும்
பொருளெனனினையாதுன்னருளினினைந்
திந்திரச்செல்வமுமெட்டுச்சித்தியும்
வந்துழிவந்துழிமறுத்தனரொதுங்கிச்
சின்னச்சீரைதுன்னற்கோவண
மறுதற்கிளொடுபெறுவதுபுனைந்து
சிதவலோடொன்றுதவுழியெடுத்தாங்
கிடுவோருளரெனினிலையினின்றயின்று
படுதரைப்பாயலிற்பள்ளிமேவியோவாத்
தகவெனுமரிவையைத்தழீஇமகவெனப்
பல்லுயிரனைத்தையுமொக்கப்பார்க்குநின்
செல்வக்கடவுட்டொண்டர்வாழ்வும்
பற்றிப்பார்க்கினுற்றநாயேற்குக்
குளப்படிநீருமளப்பருந்தன்மைப்
பிரளயசலதியுமிருவகைப்பொருளு
மொப்பினுமொவ்வாத்துப்பிற்றூதலி
னின்சீரடியார்தஞ்சீரடியார்க்
கடிமைபூண்டுநெடுநாட்பழகி
மூடலையாக்கையொடுபுடைபட்டொழுகியவர்
காற்றலையேவலென்னுய்த்தலையேற்றுக்
கண்டதுகாணினல்லதொன்
றுண்டோமற்றெனக்குள்ளதுபிறிதே. (எ)

வெண்பா.

பிறிந்தேனாகம்பிறவாதவண்ண
மறிந்தேனாங்கவேளம்பிற்—செறிந்த

பொருதவட்டவிற்பிழைத்துப்போந்தேன்புராணன்
மருதவட்டந்தன்னுளேவந்து. (அ)

கட்டளைக்கலித்துறை.

வந்திக்கண்டாயடியாரைக்கண்டான்மறவாதுநெஞ்சே
சிந்திக்கண்டாயரன்செம்பொற்கழறிருமாமருதைச்
சந்திக்கண்டாயில்லையாயினமன்றமர்தாங்கொடுபோ
யுந்திக்கண்டாய்நிரயத்துன்னைவீழ்த்தியுழக்குவரே. (க)

நேரிசையாசிரியப்பா.

உழப்பின்வாராவுறுதிகளுளவோ
கழப்பின்வாராக்கையறவுளவோ அதனால்
நெஞ்சப்புனத்துவஞ்சக்கட்டையை
வேரறவகழ்ந்துபோக்கித்தூர்வைசெய்
தன்பென்பாத்திகோலிமுன்புற
மெய்யெனுமெருவைவிரித்தாங்கையில்
பத்தித்தனிவித்திட்டுநித்தலு
மார்வத்தெண்ணீர்பாய்ச்சிநேர்நின்று
தடுக்குநர்க்கடங்காதிடுக்கண்செய்யும்
பட்டியஞ்சினுக்கஞ்சியுட்சென்று
சாந்தவேலிகோலிவாய்ந்தபின்
ஞானப்பெருமூலைநந்தாதுழுதுத்துக்
கருணையிளந்தளிர்காட்டவருகாக்
காமக்குரோதக்களையறக்களைந்து
சேமப்படுத்துழிச்செம்மையிலைங்கி
மெய்ம்மயிர்ப்புளகமுகிழ்த்திட்டம்மெனக்
கண்ணீரரும்பிக்கடிமலர்மலர்ந்துபுண்ணிய
வஞ்செழுத்தருங்காய்தோன்றிநஞ்சுபொதி
காளகண்டமுங்கண்ணெருமூன்றுந்
தோளொருநான்குஞ்சுடர்முகமைந்தும்

பவளநிறம்பெற்றுத்தவளநீறுபூசி
யறுசுவையதனினுமுறுசுவையுடைத்தாய்க்
காணினுங்கேட்பினுங்கருதினுங்களிதருஞ்
சேணுயர்மருதமாணிக்கத்தீங்கனி
பையப்பையப்பழுத்துக்கைவர
வெம்மனோர்களினி தினருந்திச்
செம்மாந்திருப்பச்சிலரி தின்வாராது
மனமெனும்புனத்தைவறும்பாழாக்கிக்
காமக்காடுமூடித்தீமைசெய்
யைம்புலவேடராறலைத்தொழுக
வின்பப்பேய்த்தேரெட்டாதோடக்
கல்லாவுணர்வெனும்புல்வாயலமர
விச்சைவித்துருத்துழியானெனப்பெயரிய
நச்சுமாமரநனிமிகமூளத்துப்
பொய்யென்கவடுகள்போக்கிச்செய்யும்
பாவப்பஃறழைபரப்பிப்பூவெனக்
கொடுமையரும்பிக்கடுமைமலர்ந்து
துன்பப்பல்காய்தூக்கிப்பின்பு
மரணம்பழுத்துநரகிடைவீழ்ந்து
தமக்கும்பிறர்க்குமுதவா
திமைப்பிற்கழியுமியற்கையோருடைத்தே. (கo)

வெண்பா.

உடைமணியினோசைக்கொதுங்கியரவம்
படமொடுங்கப்பையவேசென்றங்—கிடைமருத
ரையம்புகுவதணியிழையார்மேலநங்கன்
கையம்புகவேண்டிக்காண். (கக)

கட்டளைக்கலித்துறை.

காணீர்கதியொன்றுங்கல்லீரெழுத்தஞ்சும்வல்லவண்ணம்
பேணீர்திருப்பணிபேசீரவன்புகழாசைப்பட்டுப்

பூணீருருத்திரசாதனரீறெங்கும்பூசுகிலீர்
வீணீரொளிதோமருதப்பிரான்கழன்மேவுதற்கே. (கஉ)

நேரிசையாசிரியப்பா.

மேவியபுன்மயிர்த்தொகையோவம்மயிர்
பாவியதோலின்பரப்போதோலிடைப்
புகவிட்டுப்பொதிந்தபுண்ணேபுண்ணிடை
யூறுமுதிரப்புனலோகூறுசெய்
திடையிடைநிற்குமெலும்போவெலும்பிடை
முடைகெழுமூளைவிழுதோவழுவழுத்
துள்ளிடையொழுகுவழும்போமெள்ளகின்
றூரும்புழுவினெழுங்கோரிடை
வைத்தமலத்தின்குவையோவைத்துக்
கட்டியநரம்பின்கயிறுவடம்பிற்குட்
பிரியாதொறுக்கும்பிணியோதெரியா
தின்னதியானென்றறியேனென்னே
யெங்குந்தேடினன்யாதிலுங்காணேன்முன்னம்
வரைத்தனிவில்லாற்புரத்தையழலூட்டிக்
கண்படையாகக்காமனையொருநா
ளுண்பொடியாகநோக்கியண்டத்து
வீயாவமரர்வீயவந்தெழுந்த
தீவாய்நஞ்சைத்திருவமுதாக்கி
யிருவர்தேடிவெருவரநிமிர்ந்து
பாலனுக்காகக்காலனைக்காய்ந்து
சந்தனசரளசண்பகவகுள
கந்தனவனத்திடைஞாயிறுவழங்காது
கவமணிமுகிழ்த்தபுதுவெயிலெறிப்ப
வெண்ணெருங்கோடியிருடிகணங்கட்குப்
புண்ணியம்புரக்கும்பொன்னிசூழ்ந்த
திருவிடைமருதபொருவிடைப்பாக

மங்கைபங்ககங்கைநாயகனின்
றெய்வத்திருவருள்கைவந்துகிடைத்தலின்
மாயப்படலங்கீறித்தூய
ஞானநாட்டம்பெற்றபின்யானு
நின்பெருந்தன்மையுங்கண்டேன்காண்டலு
மென்னேயுங்கண்டேன்பிறரையுங்கண்டே
னின்னிலையனேத்தையுங்கண்டேனென்னே
நின்னைக்காணுமாந்தர்
தன்னேயுங்காணுத்தன்மையோரே. (கூ)

வெண்பா.

ஓராதேயஞ்செழுத்துமுன்னுதேபச்சிலையு
நேராதேநீருமிரப்பாதே—யாராயோ
வெண்ணுவாருள்ளத்திடைமருதர்பொற்பாத
நண்ணுவாமென்னுமதுநாம். (கூ)

கட்டளைக்கலித்துறை.

நாமேயிடையுள்ளவாறறிவாமினிநாங்கள்சொல்ல
லாமேமருதன்மருதவனத்தன்னமன்னவரைப்
பூமேலணிந்துபிழைக்கச்செய்தாரொருபொட்டுமிட்டார்
தாமேதளர்பவரைப்பாரமேற்றுதறக்கதன்றே. (கூ)

நேரிசையாசிரியப்பா.

அன்றினர்புரங்களழலிடையவியக்
குன்றுவளைத்தெய்தகுன்றுக்கொற்றத்து
றுண்பொடியணிந்தவெண்டோட்செல்வ
கயிலைநடந்தனையவுயர்நிலைதோன்றுட்
பிறைசெறிந்தன்னவிருகோட்டொருதிமிற்
பானிறச்செங்கண்மால்விடைப்பாக
சிமையச்செங்கோட்டிமையச்செல்வன்

மணியெனப்பெற்றவணியியலன்னம்
வெள்ளைச்சிறுநகைக்கிள்ளைப்பிள்ளை
குயிலெனப்பேசுமயிலிளம்பேடை
கதிரொளிநீலங்கமலத்துமலர்ந்தன
மதாரிநெடுங்கண்மானின்கன்று
வருமுலைதாங்குந்திருமார்புவல்லி
வையமேழும்பன்முறையீன்ற
வையதிருவயிற்றம்மைப்பிராட்டி
மறப்பருஞ்செய்கையறப்பெருஞ்செல்வி
யெமையாளுடையவுமையாணங்கை
கடவுட்கற்பின்மடவரல்கொழுந
பவளமால்வரைப்பணைக்கைபோந்தனைய
தழைசெவியெண்டோட்டலைவன்றந்தை
பூவலர்குடமிச்சேவலம்பதாகை
மலைதுளைபடுத்தகொலைகெழுகூர்வே
லமரர்த்தாங்குங்குமரன்றுதை
பொருதிடங்கொண்டபொன்னிபுரக்கு
மருதிடங்கொண்டமருதவாண
னின்னதுகுற்றமுளதோநின்னினைந்
தெண்ணருங்கோடியிடர்ப்பகைகடந்து
கண்ணுறுசீற்றத்துக்காலனைவதையா
திறப்பையும்பிறப்பையுமிகந்துசிறப்பொடு
தேவராவின்கன்றெனத்திரியாப்
பாவிகடமதேபாவம்யாதெனின்
முறியாப்பெறுக்கன்முப்பழங்கலந்த
வறுசுவையடிசிலட்டினிதிருப்பப்
புசியாதொருவன்பசியால்வருந்துத
லயினியின்குற்றமன்றுவெயிலின்வைத்
தாற்றியதெண்ணீர்நாற்றமிட்டிருப்ப
மடாஅவொருவன்விடாஅவேட்கை

தெண்ணீர்க்குற்றமன்றுகண்ணகன்று
தேந்துளிசிதறிப்பூந்துணர்துறுமி
வாலுகங்கிடந்தசோலைகிடப்ப
வெள்ளிடைவெயிலிற்புள்ளிவெயர்பொடிப்ப
வடிபெயர்த்திடுவாலெருவ
னெடிதுவருந்துதனிழற்றீங்கன்றே. (கசு)

வெண்பா.

அன்றென்றுமாமென்றுமாறுசமயங்க
ளொன்றென்றொடொவ்வாதுரைத்தாலு—மென்று
மொருதனேயேநோக்குவாருள்ளத்திருக்கு
மருதனேயேநோக்கிவரும். (கஎ)

கட்டளைக்கலித்துறை.

நோக்கிற்றுக்காமனுடல்பொடியாகநுதிவிரலாற்
றாக்கிற்றரக்கன்றலைகீழ்ப்படத்தன்சுடர்வடிவா
ளோக்கிற்றுத்தக்கன்றலையுருண்டோடச்சலந்தரனைப்
போக்கிற்றுயர்பொன்னிசூழ்மருதாளுடைப்புண்ணியமே. (கஅ)

நேரிசையாசிரியப்பா.

புண்ணியபுராதனபுதுப்பூங்கொன்றைக்
கண்ணிவேய்ந்தகைலாயக
காளகண்டகந்தனைப்பயந்த
வாளரிநெடுங்கண்மலையாள்கொழுந
பூதநாதபொருவிடைப்பாக
வேதகீதவிண்ணோர்தலைவ
முத்திநாயகமூவாமுதல்வ
பத்தியாகிப்பணைத்தமெய்யன்பொடு
நொச்சியாயினுங்கரந்தையாயினும்
பச்சிலையிட்டுப்பரவுந்தொண்டர்

கருவிடைப்புகாமற்காத்தருள்புரியுந்
திருவிடைமருதநிரிபுராந்தக
மலர்தலையுலகத்துப்பலபலமாக்கண்
மக்களேமனைவியையொக்கலையொரீஇ
மனையும்பிறவுந்துறந்துனிவருங்
காடுமலையும்புக்குக்கோடையிற்
கைம்மேனிமிர்த்துக்காலொன்றூன்றிமுடக்கி
யைவகைநெருப்பினழுவத்துநின்று
மாரிநாளிலும்வார்பனிநாளிலு
நீரிடைமூழ்கிநெடிதுகிடந்துஞ்
சடையைப்புனைந்துந்தலையைப்பறித்து
மூடையைத்துறந்துமுண்ணுதுழன்றுங்
காயுங்கிழங்குங்காற்றுதிர்சருகும்
வாயுவும்நீருமவ்வனவருந்தியுங்
களரிலுங்கல்லிலுங்கண்படைகொண்டுந்
தளர்வுறுமியாக்கையைத்தளர்வித்தாங்கவ
ரம்மைமுத்தியடைவதற்காகத்
தம்மைத்தாமேசாலவுமொறுப்ப
ரீங்கிவைசெய்யாதியாங்களெல்லாம்
பழுதின்றுயர்ந்தவெழுநிலைமாடத்துஞ்
செந்தாதுதிர்ந்தநந்தனவனத்துந்
தென்றலியங்குமுன்றிலகத்துந்
தண்டாச்சித்திரமண்டபமருங்கிலும்
பூவிரிதரங்கவாவிக்கரையிலு
மயிற்பெடையாலக்குயிற்றியகுன்றிலும்
வேண்டுழிவேண்டுழியாண்டாண்டிட்ட
மருப்பினியன்றவாளரிசமந்த
விருப்புறுகட்டின்மீமிசைப்படுத்த
வைவகையமளியணைமேற்பொங்கத்
தண்மலர்கமழுமவ்வெண்மடிவிரித்துப்

பட்டினுட்பெய்தபதநுண்பஞ்சி
னெட்டணையருகாக்கொட்டைகள்பரப்பிப்
பாயன்மீதுபரிபுரமிழற்றச்
சாயலன்னத்தின்றளர்நடைபயிற்றிப்
பொற்றூரணத்தைச்சுற்றியதுகிலென
வம்மென்குறங்கிஞெம்மென்கலிங்கங்
கண்ணுமனமுங்கவற்றப்பண்வர
விரங்குமணிமேகலைமருங்கிற்கிடப்ப
வாடரவல்குலரும்பெறனுசுப்பு
வாடவீங்கியவனமுலைகதிர்ப்ப
வணியியல்கமுகையலங்கரித்ததுபோன்
மணியியலாரங்கதிர்விரித்தொளிர்தர
மணிவளைதாங்கியவணிகெழுமென்றோள்
வரித்தசாந்தின்மிசைவிரித்துமீதிட்ட
வுத்தரீயப்பட்டொருபாலொளிர்தர
வள்ளைவாட்டியவொள்ளிருகாதொடு
பவளத்தருகாத்தளநிரைத்தாங்
கொழுகிநீண்டகுமிழொன்றுபதித்துக்
காலன்வேலுங்காமபாணமு
மாலகாலமுமனைத்துமிட்டமைத்த
விரண்டுநோட்டமும்புரண்டுகடைமிளிர்தர
மதியெனமாசறுவதனம்விளங்கப்
புதுவிரையலங்கல்குழன்மிசைப்பொலியு
மஞ்சொன்மடந்தையராகந்தோய்ந்துஞ்
சின்னம்பரப்பியபொன்னின்கலத்தி
னறுசுவையடிசில்வறிதினிதருந்தா
தாடினர்க்கென்றும்பாடினர்க்கென்றும்
வாடினர்க்கென்றும்வரையாதுகொடுத்தும்
பூசுவனபூசியும்புனைவனபுனைந்துந்
தூசுகல்லனதொடையிற்சேர்த்தியு

மைந்துபுலன்களுமாரவார்ந்து
மைந்தருமொக்கலுமகிழுமனமகிழ்ந்
திவ்வகைமிருந்தோமாயினுமவ்வகை
மந்திரவெழுத்தைந்தும்வாயிடைமறவாது
சிந்தைதின்வழிசெலுத்தலினந்த
முத்தியுமிழந்திலமுதல்வவத்திற
• நின்னதுபெருமையன்றேவென்னெனின்
வல்லாஞருவன்கைம்முயன்றெறியினு
மாட்டாவொருவன்வாளாவெறியினு
நிலத்தின்வழாவக்கல்லேபோ
னலத்தின்வழார்நின்னுமகவின்றேரே. (கக)

வெண்பா.

காமகவிற்றூய்மனனேகாரியர்கடோடோய்ந்து
காமகவிற்றிக்கழிந்தொழிய—லாமோ
பொருதவனத்தானேயுரிபோர்த்தருளுமெங்கண்
மருதவனத்தானேவளர்ந்து. (உ0)

கட்டளைக்கலித்துறை.

வளையார்பசியின்வருந்தார்பிணியின்மதனனம்புக்
கிளையார்தனங்கண்டிரங்கிநில்லாரிப்பிறப்பினில்வந்
தளையாநரகினுக்கென்கடவார்பொன்னலர்ந்தகொன்றைத்
தளையாரிடைமருதன்னடியாரடிசார்ந்தவரே. (உக)

நேரிசையாசிரியப்பா.

அடிசார்ந்தவர்க்குமுடியாவின்ப
நிறையக்கொடுப்பினுங்குறையாச்செல்வ
மூலமூலவுமுடிவுமிகந்து
காலமூன்றையுங்கடந்தகடவு
ளுளக்கணுக்கல்லாதூன்கணுக்கொளித்துத்
தளக்கறநிமிர்ந்தசோதித்தனிச்சுட

பொறுப்புத்தூளியினிருசெவிக்கெட்டா
தூறுப்பினின்றெழுதருமுள்ளத்தோசை
வைத்தநாவின்வழிமறுத்தகத்தே
திக்கித்தூறுந்தெய்வத்தேற
றுண்டத்தூளியிற்பண்டைவழியன்றி
யறிவினுறுதியாற்ற
மேனியதன்மையுமெய்தாதெவற்றையுந்
தானேயாகிநின்றதற்பர
தோற்றுவதெல்லாந்தன்னிடைத்தோற்றித்
தோற்றபிறிதிற்றோற்றுச்சுடர்மூளா
விரிசடைமீமிசைவெண்மதிகிடப்பினு
மிருள்புரைகண்டத்தேகநாயக
சுருதியுமிருவருந்தொடர்ந்துநின்றலமர
மருதிடங்கொண்டமருதமாணிக்க
வுமையாள்கொழுநவொருமூன்றுகிய
விமையாநாட்டத்தென்றனிநாயக
வடியேனுறுகுறைமுனியாதுகேண்மதி
நின்னடிபணியாக்கன்மனக்கயவரொடு
நெடுநாட்பழகியகொடுவினையீர்ப்பக்
கருப்பாசயமெனுமிருட்சிறையறையிற்
குடரென்சங்கிலிபூண்டுதொடர்பட்டுக்
கூட்டுச்சிறைப்புழுவினீட்டுமலத்தழுந்தி
யுடனேவருந்திநெடுநாட்கிடந்து
பல்பிணிப்பெயர்பெற்றல்லற்படுத்துந்
தண்டலாளர்மிண்டிவந்தலைப்ப
வுதரநெருப்பிற்பதைபதைபதைத்தும்
வாதமத்திகையின்மோதமொத்துண்டுங்
கிடத்தனிற்றனடத்தல்செல்லா
திடங்குறைவாயிலின்மூடங்கியிருந்துழிப்
பாவப்பகுதியிலிட்டுக்காவற்

கொடியோரைவரையேவிஞ்சிய
வாசைத்தளையிலென்னையுமுடலையும்
பாசப்படுத்திப்பையெனவிட்டபின்
யானும்போந்துதீதினுக்குழன்றும்
பெரியோர்ப்பிழைத்தும்பிறர்பொருள்வௌவியும்
பரியாதொழிந்தும் பல்லுயிர்செகுத்தும்
வேற்றோர்மனையர்தோற்றம்புகழ்ந்தும்
பொய்பலகூறியும்புல்லினம்புல்லியு
மைவருங்கடுப்பவவாவதுகூட்டி
யீண்டினகொண்டுமீண்டுவந்தூழி
யிட்டுழியிடாதுபட்டுழிப்படாஅ
திந்நாளிக்கணெய்திப்பன்னுள்
வாடுபுகிடப்பேன்வீடுநெறிகாணே
னின்னையடைந்தவடியாரடியார்க்
கென்னையுமடிமையாகக்கொண்டே
யிட்டபச்சிலைகொண்டொட்டியறிவித்
திச்சிறைபிழைப்பித்தினிச்சிறைபுகாமற்
காத்தருள்செய்யவேண்டுந்
தீத்திரண்டன்னசெஞ்சடையோனே. (ஊ)

வேண்பா.

சடைமேலொருத்திசமைந்திருப்பமேனிப்
புடைமேலொருத்திபொலிய—விடையேபோய்ச்
சங்கேகலையேமருதற்குத்தான்கொடுப்ப
தெங்கேயிருக்கவிவள். (ஊ)

கட்டளைக்கலித்துறை.

இருக்குமருதினுக்குள்ளிமையோர்களுநான்மறையு
நெருக்குநெருக்கத்துநீளகத்துச்சென்றுமீளவொட்டாத்
திருக்குமருத்தைவர்தீமையுந்தீர்த்துச்செவ்வேமனத்தை
யொருக்குமொருக்கத்தினுள்ளேமுளைக்கின்றவொண்சுடரே. ()

நேரிசையாசிரியப்பா.

சுடர்விடுசூலப்படையினையென்றும்
விடையுகந்தேறியவிமலனென்று
மூண்ணுநஞ்சமுண்டானெயென்றுங்
கண்ணுற்காமனைக்காய்ந்தானெயென்றுந்
திரிபுரமெரித்தசேவகனென்றுங்
கரியுரிபோர்த்தகடவுளென்று
மூரகம்பூண்டவுரவோயென்றுஞ்
சிரகஞ்செந்தழலேந்தினையென்றும்
வலந்தருகாலனைவதைத்தனையென்றுஞ்
சலந்தரனுடலந்தடிந்தனையென்று
மயன்சிரமொருநாளரிந்தனையென்றும்
வியந்தவாளரக்கனைமிதித்தனையென்றுந்
தக்கன்வேள்விதகர்த்தனையென்று
மூக்கிரப்புலியுரியுடுத்தனையென்று
மேனமுமன்னமுமெட்டாதிளைப்ப
வானங்கீழ்ப்படவளர்ந்தனையென்றுஞ்
செழுநீர்ஞாலஞ்செகுத்துயிருண்ணு
மழல்விழிக்குறளாயமுக்கினையென்று
மினையனவினையனவெண்ணில்கோடி
னினைவருங்கீர்த்தினின்வயிற்புகழ்த
றளக்குறுசிந்தையேன்சொல்லளவாதலி
னளப்பரும்பெருமைநின்னளவலதாயினு
மென்றன்வாயிற்புன்மொழிகொண்டு
னின்னைநோக்குவனுதலினென்னை
யிடுக்கண்களாயவல்லற்பதித்தா
வெழுநிலைமாடத்துச்செழுமுகிலுறங்க
வடித்துத்தட்டியெழுப்புவபோல
நுண்டுகிற்பதாகைகொண்டுகொண்டுகைப்பத்
துயிலினீங்கிப்பயிலுவீதித்

திருமருதமர்ந்ததெய்வச்செழுஞ்சுட
ரருள்சுரந்தளிக்குமற்புதக்கூத்த
கல்லாலெறிந்தபொல்லாப்புத்த
னின்னினேன்தெறிந்தவனு
லன்னவன்றனக்குமருள்பிழைத்தின்றே. (உடு)

வேண்பா.

இன்றிருந்தாலோயிறக்குந்தொழிலுடைய
புன்றலையமாக்கள்புகழ்வரோ—வென்றிமழு
வாளுடையான்றெய்வமருதுடையானேயென
யாளுடையான்செம்பொனடி. (உசு)

கட்டளைக்கலித்துறை.

அடியாயிரந்தொழிலாயினவாயிரமாயிரம்பேர்
முடியாயிரங்கண்ணாயிரமூவாயிரமுற்றுநீறணிந்த
தொடியாயிரங்கொண்டதோளிரண்டாயிரமென்றுநெஞ்சே
படியாயிராப்பகற்றென்மருதாளியைப்பற்றிக்கொண்டே. (உள)

நேரிசையாசிரியப்பா.

கொண்டலினிருண்டகண்டத்தெண்டோட்
செவ்வானுருவிற்பையரவார்த்த
சிறுபிறைகிடந்தநெறிதருபுன்சடை
மூவாமுதல்வமுக்கட்செல்வ
தேவதேவதிருவிடைமருத
மாசறுசிறப்பின்வானவராடும்
பூசத்தீர்த்தம்புரக்கும்பொன்னி
யயிராவணத்துறையாடுமப்ப
கைலாயவாணகெளரிநாயக
நின்னேவணங்கிப்பொன்னடிபுகழ்ந்து
பெரும்பதம்பிழையாவரம்பலபெற்றே
ரிமையாநெடுங்கணுமையாணங்கையு
மழைக்கட்டடத்துப்புழைக்கைப்பிள்ளையு

மமரர்த்தாங்குங்குமரவேளுஞ்
சுரிசங்கேந்தியதிருநெடுமாலும்
வான்முறைபடைத்தநான்முகத்தொருவனுங்
தாரகற்செற்றவீரக்கன்னியும்
பூவின்கிழத்தியுநாவின்மடந்தையும்
பீடியர்தோற்றத்துக்கோடியுருத்திரரு
மாஞப்பெருந்திறல்வானோர்தலைவனுஞ்
செயிர்தீர்நாற்கோட்டயிராவதமும்
வாம்பரியருக்கர்தாம்பன்னிருவருஞ்
சந்திரனொருவனுஞ்செந்தீக்கடவுளு
நிருதியுஞ்சமனுஞ்சுருதிகணுன்கும்
வருணனும்வாயுவுமிருநிதிக்கிழவனு
மெட்டுநோகமுமட்டவசுக்களு
மூன்றுகோடியான்றமுனிவரும்
வசிட்டனுங்கபிலனுமகத்தியன்முனும்
தும்புருநாரதரென்றிருதிறத்தரும்
வித்தகப்பாடன்முத்திறத்தடியருந்
திருந்தியவன்பிற்பெருந்துறைப்பிள்ளையு
மத்தருசெல்வத்தவமதித்தருளிய
சித்தமார்சிவவாக்கியதேவரும்
வெள்ளைநீறுமெய்யிற்கண்டு
கள்ளன்கையிற்கட்டவிழ்ப்பித்து
மோடும்பன்னரியுளைகேட்டரனைப்
பாடினவென்றுபடாம்பலவளித்துங்
குவளைப்புனலிற்றவளையரற்ற
வீசன்றன்னையேத்தினவென்று
காசும்பொன்னுங்கலந்துதூவியும்
வழிபடுமொருவன்மஞ்சனத்தியற்றிய
செழுவிதையெள்ளத்தின்னக்கண்டு
பிடித்தலுமவனிப்பிறப்புக்கென்ன

விடித்துக்கொண்டவனெச்சிலநுகர்ந்து
மருதவட்டத்தொருதனிக்கிடந்த
தலையைக்கண்டுதலையுறவணங்கி
யும்மைப்போலவெம்மித்தலையுங்
கிடக்கவேண்டுமென்றடித்தடித்திரந்துங்
கோயின்முற்றத்துமீமிசைக்கிடப்ப
வாய்த்தென்றுநாய்க்கட்டமெடுத்துங்
காம்பவிழ்த்துதிர்ந்தகனியுருக்கண்டு
வேம்புகட்கெல்லாம்விதானமமைத்தும்
விரும்பினகொடுக்கைபரம்பரற்கென்று
புரிகுழற்றேவியைப்பரிவுடன்கொடுத்த
பெரியவன்பின்வரகுணதேவரு
மினையதன்மையரெண்ணிறந்தோரே
யனையவர்நிற்கயானுமொருவன்
பத்தியென்பதோர்பாடுமின்றிச்
சுத்தனையினுந்தோன்றுக்கடையேனின்னே
யிறைஞ்சிலனையினுமேத்திலனையினும்
வருந்திலனையினும்வாழ்த்திலனையினுங்
கருதியிருப்பன்கண்டாய்பெருமை
நின்னுலகனைத்துநன்மைதீமை
யானவைநின்செயலாதலி
னனேயமையுநலமில்வழிக்கே. (உஅ)

வெண்பா.

வழிபிழைத்துநாமெல்லாம்வந்தவாசெய்து
பழிபிழைத்தபாவங்களெல்லாம்—பொழில்சூழ்
மருதிடத்தானென்றுருகால்வாய்கூப்பவேண்டா
கருதிடத்தானில்லாகரந்து. (உக)

கட்டளைக்கலித்துறை.

காத்தினின்மாலவன்கண்கொண்டுநின்கழல்போற்றுநல்ல
வாத்தினையீயுமருதவப்பாமதியொன்றுமில்லேன்
சேத்தினுமாயென்றன்சிந்தையுளாகிவெண்காடனென்னுந்
தாத்தினுமாயதுநின்னடியாந்தெய்வத்தாமரையே. (கூ)

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

பட்டணத்துப்பிள்ளையார்

அருளிச்செய்த

திருவேகம்பமுடையார் திருவந்தாதி.

மெய்த்தொண்டர்செல்லுநெறியறியேன்மிகநற்பணிசெய்
கைத்தொண்டர்தம்மிலுநற்றொண்டுவந்திலனுண்பதற்கே
பொய்த்தொண்டுபேசிப்புறம்புறமேயுன்னைப்போற்றுகின்ற
வித்தொண்டனேன்பணிகொள்ளுதியோகச்சியேகம்பனே. (க)

ஏகம்பனேயென்னையாள்பவனேயிமையோர்க்கிரங்கிப்
போகம்பன்னலுங்கொடுக்கின்றநாயகபொங்குமைவாய்
நாகம்பொன்னரமெனப்பொலிவுற்றுன்னைநீறணியு
மாகம்பொன்மாமலையொப்பவனேயென்பலுதரித்தே. (உ)

தரித்தேன்மனத்துன்றிகழ்தருநாமந்தடம்பொழில்வாய்
வரித்தேன்முரல்கச்சியேகம்பனேயென்றன்வல்வினையை
யரித்தேனுனைப்பணியாதவரேழைமைகண்டவரைச்
சிரித்தேனுனக்கடியாரடிபூணத்தெளிந்தனனே. (ங)

தெளிதருகின்றதுசென்றெண்மனங்கின்றிருவடிவந்
தளிதருகின்னருட்கையமினியில்லையந்திச்செக்க
ரொளிதருமேனியெம்மேகம்பனேயென்றுகந்தவர்தாட்
டளிதருசூளியென்றன்றலைமேல்வைத்ததன்மைபெற்றே. (ச)

பெற்றுகந்தேனெனன்றுமர்ச்சனைசெய்யப்பெருகுகின்சீர்
கற்றுகந்தேனென்கருத்தினிதாக்கச்சியேகம்பத்தின்
பற்றுகந்தேறுமுகந்தவனேபடராகக்கச்சின்
சுற்றுகந்தேர்விடைமேல்வருவாய்கின்றுணையடியே. (டு)

அடிகின்றசூழலகோசரமாலுக்கயற்கலரின்
மூடிகின்றசூழ்முடிகாண்பரிதாயிற்றுக்கார்முகிலி
னீடிகின்றசூழ்குரலேறுடையேகம்பயாமெங்ஙனே
வடிகின்றசூலப்படையுடையாயைவணங்குவதே. (கு)

வணக்கந்தலைகின்றிருவடிக்கேசெய்யுமையல்கொண்டோ
ரிணக்கன்றிமற்றோரிணக்கறிவோமல்லம்வல்லரவின்
குணக்குன்றவில்லிகுளிர்கச்சியேகம்பங்கூடினல்லாற்
கணக்கன்றுமற்றொருதேவரைப்பாடுங்கவிநலமே. (எ)

கலந்தாராவெனன்றுசொல்லுவன்கேண்மினல்லீர்களன்பு
கலந்தாளுர்கச்சியேகம்பங்கண்டுகனற்றிகிரி
சலந்தாளுகமொழிக்கவைத்தாய்தக்கன்வேள்வியெல்லா
நிரந்தாமாகச்செய்தாயென்றுபூசித்துகின்மின்களே. (அ)

மின்களென்றார்சடைகொண்டலென்றார்கண்டமேனிவண்ணம்
பொன்களென்றார்வெளிப்பாதிதம்பொன்னடிபூண்டுகொண்ட
வென்களென்றாலும்பிரிந்தறியார்கச்சியேகம்பத்தான்
றன்களென்றாருலகெல்லாநிலைபெற்றதன்மைகளே. (கூ)

தன்மையிற்குன்றூத்தவத்தோரிமையவர்தாம்வணங்கும்
வன்மையிற்குன்றமதிற்கச்சியேகம்பர்வண்கயிலைப்
பொன்மயிற்சாயலுஞ்சேயரிக்கண்ணும்புரிகுழலு
மென்மையிற்சாயுமருங்குலுங்காதல்வீளைத்தனவே. (கூ)

தனமிட்டுமைதழுவத்தழும்புற்றவர்தம்மடியார்
மனம்விட்டகலாமதிற்கச்சியேகம்பர்வான்கயிலைச்
சினம்விட்டகலாக்களிறுவிஞைவியோர்சேயனையார்
புனம்விட்டகலார்பகலாம்பொழுதும்பூங்கொடியே. (கக)

பூங்கொத்திருந்தழையார்பொழிற்கச்சியேகம்பர்பொற்பார்
கோங்கத்திருந்தகுமிக்கயிலையெம்பொன்னெருத்தி
பாங்கொத்திருந்தனையாரணங்கேபடர்கல்லருவி
யாங்கத்திருந்திழையாடிவந்தாற்கண்டடிவருத்தே. (கஉ)

வருத்தந்தருமெய்புங்கையிற்றழையுமவன்மாவினவுங்
கருத்தந்தரிக்குநடக்கவின்றையகழனினையத்
திருத்தந்தருளுந்திகழ்கச்சியேகம்பர்சீர்க்கயிலத்
துருத்தந்திருப்பதன்றிப்புனங்காக்குந்தொழிலெமக்கே. (கங)

எம்மையுமெம்மைப்பணிகொள்ளுங்கம்பரெழிற்கயிலை
யும்மையுமானிடமிப்புனத்தேவிற்றுவந்தமைத்தர்
தம்மையுமானையுஞ்சிந்தையுநோக்கங்கவர்வவென்றூ
வம்மையுமம்மலர்க்கண்ணும்பெரியீரருளுமினே. (கச)

அருளேத்தருகம்பரம்பொற்கயிலையுளெம்மையரம்
பிருளேக்கரிமறிக்கும்மிவரையருறுத்தியெய்ய
வெருளக்கலகணேதன்னெடும்போயினவில்லிமைக்கு
மருளேத்தருசொல்லியெங்கோவிலையுண்டிவ்வையகத்தே. (கஙி)

வையார்முழுப்படையேகம்பரீங்கோய்மலைப்புனத்து
ளய்யாவருகலேயேனங்கரிதொடர்வேட்டையெல்லாம்
பொய்யானவையர்மனத்ததெம்பூங்கொடிகொங்கைபொரூப்
பையாரரவிடையாயிற்றுவந்துபரிணமித்தே. (கசு)

பருமுத்துதிர்த்திடுஞ்சீர்மத்தயானநுதல்பகுந்திட்
டுருமொத்தகண்குரற்சீயந்திரிநெறியோங்குவைவாய்ப்
பொருமுத்தலேவேற்படைக்கம்பர்பூங்கயிலைப்புனத்துட்
டருமுத்தனகைத்தன்னசையால்வெற்பசார்வரிதே. (கஎ)

அரிதன்றிருக்கண்ணிடகிரம்பாயிரம்போதணிய
வரிதன்றிருவடிக்கர்ச்சித்தகண்ணுக்கருளுகம்ப
ரரிதன்றிருக்கங்குலியாலழிந்தகயிலையல்லிங்
கரிதென்றிருப்பதெம்பால்வெற்பவெம்மையர்க்கஞ்சுதுமே. (கஅ)

அஞ்சரத்தான்பொடியாய்விழத்தீவிழித்தன்புசெய்வோர்
நெஞ்சரத்தாழ்வுகந்தோர்கச்சியேகம்பர்நீள்கயிலைக்
குஞ்சரத்தாழ்வரைவீழநுங்கொம்புய்யக்கும்பமூழ்கும்
வெஞ்சரத்தாரனவோவல்லவோவிவ்வியன்மூரசே. (கக)

சேய்தந்தகைமையுமைகணவன்றிருவேகம்பத்தான்
ரூய்தந்தையாயுயிர்காப்போன்கயிலத்தயங்கிருள்வாய்
வேய்தந்ததோளிநம்மூசலொடும்விரைவேங்கைதன்னைப்
பாய்தந்துபூசலுண்டாங்கொண்டதோசைபகடுவந்தே. (உ0)

வந்தும்மணம்பெறிற்பொன்னனையீர்மன்னுமேகம்பர்தம்
மூந்துமருவிக்கயிலமலையுயர்தேனிழிச்சித்
தந்துமலர்கொய்துந்தண்டினைமேயுங்கிளிகடிந்துஞ்
சிந்தும்புகர்மலைகைசுமிச்சாரற்றிரிகுவனே. (உக)

திரியப்புரமெய்தவேகம்பனூர்திகழுங்கயிலைக்
கிரியக்குறவர்பருவத்திடதாளம்வினையோம்
விரியச்சுருண்முதலானுமடைந்தோம்விரைவிரைந்து
பிரியக்கதிர்முற்றினீர்பெற்றதென்னங்குப்பேசுமினே. (உஉ)

பேசுகையாவருமைக்கணியாரென்றுபித்தரெங்கும்
பூசுகையார்திருமேற்றெழிலேகம்பர்பொற்கயிலைத்
தேசுகையார்சிலைவெற்பன்பிரியும்பரிசிலரைக்
கூசுகையாதுமில்லாக்குலமேவங்கைப்பெயர்நும்மையே. (உங)

பெயராநலத்தெழிலேகம்பனூர்பிறைதோய்கயிலை
பெயராதிருக்கப்பெருகிளிகாள்புனமேபிரிவின்
றுயராவ்வருத்திமனமுமிங்கோடித்தொழுதுசென்ற
தயராதுரையும்வெற்பற்கடியேற்கும்விடைதமினே. (உச)

தம்மைப்பிறவிக்கடல்கடப்பிப்பவர்தாம்வணங்கு
மும்மைத்திருக்கண்முகத்தெழிலேகம்பர்மொய்கயிலை
யம்மைக்கருங்கண்ணிதன்னுடின்பந்தருந்தண்புனமே
யெம்மைக்கவலைசெயச்சொல்லியோவல்லியெய்தியதே. (உஙு)

இயங்குந்திரிபுரமெய்தவேகம்பரெழிற்கயிலைத்
தயங்குமலர்ப்பொழில்காடையலாடருவித்தடங்காண்
முயங்குமணியறைகாண்மொழியீரொழியாதுநெஞ்ச
மயங்கும்பரிசுபொன்னூர்சென்றசூழல்வகுத்தெமக்கே. (உசு)

வகுப்பாரிவர்போன்மணத்துக்குநாண்மணந்தன்னுடின்ப
மிகுப்பார்களாருயிரொன்றுமிருவரைவிள்ளக்கள்வாய்
நெகுப்பான்மலர்கொண்டுநின்னூர்கிடக்கநிலாவுகம்பர்
தொகுப்பான்மணிசிந்தருவிக்கயிலைச்சூழ்புனத்தே. (உஎ)

புனங்குழையாதென்றுமென்றினைகொய்ததும்போகலுற்ற
கனங்குழையாடற்பிரியநமக்குறுங்கையறவான்
மனங்குழையாவருங்கண்கனிபண்பலபாடுந்தொண்ட
ரினங்குழையாத்தொழுமேகம்பரிக்கயிலாயத்துளே. (உஅ)

உள்ளம்பெரியரல்லாச்சிறுமானுடரூற்றசெல்வங்
கள்ளம்பெரியசிறுமனத்தார்க்கன்றிக்கங்கையென்னும்
வெள்ளம்பெரியசடைத்திருவேகம்பர்விண்ணரணந்
தள்ளம்பெரிகொண்டமைத்தாரடியவர்சார்வதன்றே. (உகூ)

அன்றும்பகையடர்க்கும்பரிமாவுமதவருவிக்
குன்றும்பதாதியுந்தேருங்குலவிக்குடைநிழற்கீழ்
நன்றும்பொலியினுங்கம்பர்நன்னீறுநுதற்கிலரே
லென்றும்மரசுமுரசும்பொலியாவிருநிலத்தே. (ஙo)

நிலத்திமையோரிற்றலையாய்ப்பிறந்துமறையொடங்கம்
வலத்திமைப்போதும்பிரியாரெரிவளர்த்தாலும்வெற்பன்
குலத்துமையோர்பங்கர்கச்சியுளேகம்பங்கூடித்தொழு
கலத்தமையாதவர்வேட்டுவர்தம்மினடிப்படையே. (ஙக)

படையாலுயிர்கொள்றுதின்றுபசுக்களோப்போலச்செல்லு
டையாலறிவின்றிநட்பிடைப்பொய்த்துக்குலங்களினுங்
கடையாய்ப்பிறக்கினுங்கச்சியுளேகம்பத்தெங்களையா
ளுடையான்கழற்கன்பரேலவர்யாவர்க்குமுத்தமரே. (௨௨)

உத்துங்கயானையுரியார்விரலாலரக்கன்சென்னி
பத்துங்கையானவிருபதுஞ்சோர்தரவைத்திலய
மொத்துங்கையாலவன்பாடக்கயிலையினூடுகைவா
ளெத்துங்கையானென்றுகந்தளித்தார்கச்சியேகம்பரே. (௨௩)

அம்பரங்காலனனீர்நிலந்திங்களருக்கனணு
வம்பரங்கொள்வதொர்வேழத்துரியவன்றன்னுருவா
மெம்பரன்கச்சியுளேகம்பத்தானிடையாதடைவா
னம்பரன்றன்னடியாரறிவார்கட்குநற்றுணையே. (௨௪)

துணைத்தாமரையடியும்பவளத்திரணன்குறங்கும்
பணைத்தோளகலமுங்கண்டத்துநீலமுமண்டத்துமின்
பிணைத்தாலனசடையுந்திருமுக்கணும்பெண்ணொர்பக்கத்
தணைத்தாரெழிற்கம்பரெங்கள்பிராணர்க்கழகியவே. (௨௫)

அழகறிவிற்பெரிதாகியவேகம்பரத்தர்கொற்றம்
பழகறிவிற்பெரியோர்தமைப்பற்றலர்பற்றுமன்பின்
குழகரிவேற்பினுளொன்றறியாரறியாமைதெய்வங்
கிழகெறியப்பட்டலந்தாருலகிற்கிடந்தனரே. (௨௬)

கிடக்குமொருபாலிரைக்கின்றபாம்பொருபான்மதியந்
தொடக்குண்டிலங்குமலங்குந்திரைக்கங்கைசூடுங்கொன்றை
வடக்குண்டுகட்டத்தலைமாலைவாளானமலந்தவெம்போர்
கடக்கும்விடைத்திருவேகம்பர்கற்றைச்சடைமுடியே. (௨௭)

கற்றைப்பவளச்சடைவலம்பூக்கமழ்கொன்றையந்தார்
மூற்றுற்றிலாமதியின்கொழுந்தேகம்பர்மொய்குழலா
மற்றைத்திசையின்மணிப்பொற்கொழுந்தத்தரங்கழுநீர்
தெற்றிப்பொலிகின்றசுட்டழகாகித்திகழ்தருமே. (௨௮)

தருமருட்டன்மைவலப்பாற்கமலக்கணைற்றியின்மேற்
றிருமலர்க்கண்பிளவின்றிகழுற்றழல்செல்வக்கம்பர்
கருமலர்க்கண்ணிடப்பாலதுலங்கனிமதத்து
வருமுதற்பொட்டணங்குக்குயர்ந்தோங்குமலர்க்குழலே. (நக)

மலர்ந்தபடத்துச்சியைந்தினுஞ்செஞ்சுடர்மாமணிவிட்
டலர்ந்தமணிக்குண்டலம்வலக்காதினிலாடிவரு
நலந்திருநீள்வயிரம்வெயிற்பாயநகுமணிகள்
கலந்தசெம்பொன்மகரக்குழையேகம்பர்காதிடமே. (சo)

காதலெக்கும்வலத்தோள்பவளக்குன்றமங்குயர்ந்து
போதலெக்கும்பனிப்பொன்மலைற்றின்பொலியகலந்
தாதலெக்குங்குழல்சேர்பணைத்தோணுஞ்சாந்தணிந்து
சூதலெக்கும்முலைமார்பிடமேகம்பர்சுந்தரமே. (சக)

தரம்பொற்பழியுமுலகட்டியெய்த்துத்தரந்தளரா
வுரம்பொற்புடையதிருவயிரூம்வலமும்பர்மும்மைப்
புரம்பொற்பழித்தகம்பர்க்குத்தரத்திடம்பூண்முலையு
நிரம்பப்பொரூதுதளரிளவஞ்சியுநேர்வுடைத்தே. (சஉ)

உடைப்புலியாடையின்மேலுரகக்கச்சுவீக்கிமுஞ்சி
வடத்தொருகோவணந்தோன்றுமரைவலமற்றையல்குற்
றொடக்குறுகாஞ்சித்தொடுத்தவரசிலைதூணுடுகி
லடற்பொலியேறுடையேகம்பமேயவடிகளுக்கே. (சங)

அடிவலப்பாலதுசெந்தாமரையொத்தகிர்கழல்சூழ்ந்
திடிகுரற்கூற்றினெருத்திறவைத்ததிளந்தளிரின்
படியிடப்பாலதுபஞ்சுறவஞ்சுஞ்சிலம்பணிந்த
வடிவுடைத்தார்கச்சியேகம்பமேயவரதருக்கே. (சச)

தருக்கவற்றுன்மிக்கமுப்புரமெய்தயன்றன்றலையை
நெருக்கவற்றோடமழுவாள்விசைத்ததுநெற்களென்றும்
பருக்கவற்றுங்கச்சியேகம்பரத்தர்தம்பாம்புகளின்
றிருக்கவற்றுலிட்டருளுங்கடகத்திருக்கரமே. (சடு)

கரத்தத்தமருகத்தோசைகெத்தண்டமீபிளப்ப
வரத்தத்தபாதநெரித்திட்டவனிதலநெரியத்
தரத்தத்திசைகளுக்கப்புறம்போர்ப்பச்சடைவிரித்து
வரத்தைத்தருகம்பராவெல்லியுமாநடமே. (சசு)

நடனம்பிரானுகந்துய்யக்கொண்டானென்றுநன்மறையோ
ருடன்வந்துமுவாயிரவரிறைஞ்சிநிறைந்தவுண்மைக்
கடன்னறிமற்றறியாத்தில்லையம்பலங்காளத்தியூ
மிடமெம்பிரான்கச்சியேகம்பமேயாற்கினியனவே. (சஎ)

இனியவரின்ஞரவரையொப்பார்பிறரென்னவொண்ணுத்
தனியவர்தையலுடனுமவர்தருமம்பணித்த
முனியவரேறுமுகந்தமுக்கண்ணவர்சண்டியன்புக்
கினியவர்காய்மழுவாட்படையார்கச்சியேகம்பரே. (சஅ)

பரவித்தனினையக்கச்சியேகம்பர்பண்ணுமையல்
வரவித்தனையுள்ளதெங்கறிந்தேன்முன்னவர்மகனூர்
புரவித்தனையடிக்கக்கொடிதாய்விடியாவிரலி
லரவித்தனையுங்கொண்டார்மடவார்முன்றிலாட்டிடவே. (சகூ)

இடவஞ்சுறுக்கெனப்பாயுமுஞ்சென்னிநகுதலைகண்
டிடவஞ்சுவர்மடவாரிரிகின்றனரேகம்பத்தீர்
படமஞ்சுவாயதுநாகமிரைக்குமதனுக்குமுற்
படவஞ்சுவரெங்குனேபலிவந்திடும்பாங்குகளே. (இo)

பாங்குடைகோட்புலியின்னதள்கொண்டூர்நும்பாரிடங்க
டாங்குடைகொள்ளப்பலிகொள்ளவந்தீர்தடங்கமலம்
பூங்குடைகொள்ளப்புனற்கச்சியேகம்பங்கோயில்கொண்டீ
ரீங்கிடைகொள்ளக்கலைகொள்ளவந்தீரிடைக்குயின்றே. (இக)

இடைக்குயின்றேற்குயிணைமுலையாய்முதியார்கடஞ்சொற்
கடைக்கணன்றுங்கச்சியேகம்பரையங்கொளக்கடவும்
விடைக்குமுன்றேற்றகில்லேனின்றினியிந்தமொய்குழலார்
கிடைக்குமுன்றேற்றஞ்சங்கிதுவோதக்கிறித்துவமே. (இஉ)

நிறிபலபேசிச்சதிரானடந்துவிடங்குபடக்
குறிபலபாடிக்குளிர்கச்சியேகம்பரையங்கொள்ள
நெறிபலவார்குழலார்மெலிவுற்றநெடுந்தெருவிற்
செறிபலவெள்வளைபோயினதாயர்கடேடுவரே. (நிக)

தேடுற்றிலகள்ளநோக்கந்தெரிந்திலசொற்கண்முடி
கூடுற்றிலகுழல்கொங்கைபொடித்திலகூறுமிவண்
மாடுற்றிலமணியின்மடவல்குலுமற்றிவள்பா
ஞடுற்றிலவெழிலேகம்பனூர்க்குள்ளகல்கிடத்தே. (நிச)

கல்கும்புகழ்க்கடவூர்நன்மறையவனுய்யநண்ணிக்
கொல்கின்றகூற்றைக்குமைத்தவெங்கூற்றங்குளிர்திரைகண்
மல்குந்திருமறைக்காட்டமிர்தென்றுமலைமகடான்
புல்கும்பொழிற்கச்சியேகம்பமேவியபொன்மலையே. (நிங)

மலையத்தகத்தியனர்ச்சிக்கமன்னிவடகயிலை
நிலையத்தமரர்தொழவிருந்தானெடுமேருவென்னுஞ்
சிலையத்தன்பைம்பொன்மதிற்றிருவேகம்பத்தான்றிகழ்நீ
ரலையத்தடம்பொன்னிசூழ்திருவையாற்றருமணியே. (நிசு)

மணியாரருவித்தடவிமயங்குடகொல்லிகல்லின்
றிணியாரருவியினுர்த்தசிராமலையைவனங்க
ளணியாரருவிகவர்கிளியோப்புமின்சாரல்விந்தம்
பணிவாரருவினைதீர்க்குமேகம்பர்பருப்பதமே. (நிஎ)

பருப்பதங்கார்தவழ்மந்தரமிந்திரநீலம்வெள்ளை
மருப்பதங்கார்கருங்குன்றியங்கும்பரங்குன்றம்வில்லார்
நெருப்பதங்காகுதிநாறுமகேந்திரமென்றிவற்றி
லிருப்பதங்காவுகந்தான்கச்சியேகம்பத்தெம்மிறையே. (நிஅ)

மிறைத்தார்புரமெய்தவில்லிமைகல்லிமவான்மகட்கு
மறைத்தார்கருங்குன்றம்வெண்குன்றஞ்செங்குன்றமன்னற்குன்ற
நிறைத்தார்நெடுங்குன்றநீள்கழுக்குன்றமென்றீவினைகள்
குறைத்தார்முதுகுன்றமேகம்பர்குன்றென்றுகூறுமினே. (நிகூ)

கூறுமின்றொண்டர்குற்றேவலெய்த்தானந்துருத்தியம்போர்
சேறுமின்வேள்விக்குடிதிருத்தோணிபுரம்பழன
மாறுமின்போல்சடைவைத்தவனூரிடைமருதென்
றேறுமினீரெம்பிரான்கச்சியேகம்பமுன்னினீனின்தே. (கூ0)

நினைவார்க்கருளும்பிரான்றிருச்சோற்றுத்துறைநியமம்
புனைவார்சடையோன்புகலூர்புறம்பயம்பூவணநீர்
புனைவார்பொழிற்றிருவெண்காடுபாச்சிலதிகையென்று
நினைவார்தருநெஞ்சினீர்க்கச்சியேகம்பநண்ணுமினே. (கூக)

கண்ணிப்பரவுந்திருவாவடுதுறைநல்லநல்லூர்
மண்ணிற்பொலிகடம்பூர்கடம்பந்துறைமன்னுபுன்கூ
ரெண்ணற்கரியபராய்த்துறையேர்கொளத்திர்கொள்பாடி
கண்ணிப்பிறைச்சடையோன்கச்சியேகம்பங்காண்மின்சென்றே.

சென்றேறிவிண்ணுறுமண்ணுமலைதிகழ்வல்லமென்பூ
வின்றேறல்பாய்திருமாற்பேறுபாசூரெழிலழுந்தூர்
வன்றேரவன்றிருவிற்பெரும்பேறுமதிலொற்றியூர்
நின்றேர்தருகச்சியேகம்பமேயார்நிலாவியவே. (கூஉ)

நிலாவுபுகழ்த்திருவோத்தூர்திருவாமாத்தூர்நிறைநீர்
சூலாவுசடையோன்புலிவலம்வில்வலங்கொச்சைதொண்டர்
குலாவுதிருப்பனங்காடுநன்மாகறல்கூற்றம்வந்தா
லிலாயென்றடியார்க்கருள்புரியேகம்பராலயமே. (கூச)

ஆலெயங்கார்க்கருகாவைகச்சூர்திருக்காரிகரை
வேலெயங்கேறுதிருவான்மியூர்திருவூறன்மிக்க
சோலெயங்கார்திருப்போந்தைமுக்கோணந்தொடர்கடுக்கை
மாலெயன்வாழ்திருவாலங்காடேகம்பம்வாழ்த்துமினே. (கூஎ)

வாழப்பெரிதெமக்கின்னருள்செய்யுமலர்க்கழலோர்
தாழச்சடைத்திருவேகம்பர்தம்மைத்தொழாதவர்போய்
வாழப்பறச்சுரமாற்றுதளிரடிபூங்குழலெம்
மேழைக்கிடையிறுக்குங்குயபாரமியக்குறினே. (கூக)

உறுகின்றவெவ்வழலக்கடமிக்கொடிக்குன்பின்வரப்
பெறுகின்றவண்மையினுலயபேரருளேகம்பனுர்
நறுகின்றமென்மலர்த்தண்பொழிற்கச்சியைச்சூழ்ந்திளையோர்
குறுகின்றபூங்குவளைக்குறுந்தண்பணையென்றுகொளே. (சுள)

கொள்ளுங்கடுங்கதிரிற்கள்ளிதீச்சிலவேயுலறி
விள்ளும்வெடிபடும்பாலையென்பாவைவிடலைபின்னே
தெள்ளும்புனற்கச்சியுட்டிருவேகம்பர்சேவடியை
புள்ளும்மதுமறந்தாரெனப்போவதுரைப்பரிதே. (சுஅ)

பரிப்பருந்திண்மைப்படையதுகானெனிற்சிறகு
விரிப்பருந்துக்கிரையாக்கும்வெய்யேனுஞ்சல்செஞ்சடைமேற்
றரிப்பருந்திண்கங்கையார்திருவேகம்பமன்னபொன்னே
வரிப்பருந்திண்சினைக்கேயுமாயின்மறைகுவனே. (சுக)

வனவரித்திண்புலியின்னதளேகம்பமன்னருளே
யெனவரிற்பொன்னணங்கென்னணங்கிற்கெனைழிற்கழங்குந்
தனவரிப்பந்துங்கொடுத்தெனைப்புல்லியுமிற்பிரிந்தே
பினவரிக்கல்லதர்செல்வதெங்கேயொல்குமேமழைநெஞ்சே. (எ0)

நெஞ்சார்தரவின்பஞ்செய்கழலேகம்பர்கச்சியன்னுள்
பஞ்சாரடிவைத்தபாங்கிவையாங்கவள்பெற்றெடுத்த
வெஞ்சார்வொழியத்தன்பின்செலமுன்செல்வெடுவெடென்ற
வஞ்சாவடுதிறற்காளைதன்போக்கிவையந்தத்திலே. (எக)

இலவவெங்கானுனேயல்லாற்றெழுஞ்சரணேகம்பனுர்
நிலவுஞ்சடாளிவெய்யவனேதண்மலர்மிதித்துச்
செலவும்பருக்கைகுளிரத்தளிரடிசெல்சுரத்துன்
னுலவுங்கதிர்தணிவித்தருள்செய்யுன்னுறுதுணைக்கே. (எஉ)

துணையொத்தகோவையும்போலெழிற்பேதையுந்தோன்றலுமுன்
னிணையொத்தகொங்கையொடேயொத்தகாதலொடேகினரே
யணையத்தரேறுத்தகாளையைக்கண்டனமற்றவரேற்
பிணையொத்தநோக்குடைப்பெண்ணிவடன்னெடும்பேசுமினே. ()

மின்னலிக்கும்வணக்கத்திடையாளையுமீளியையு
மென்னலிப்பாக்கைவந்தெய்திடுவீரெம்மனையிற்கண்டீர்
பின்னரிப்போக்கருங்குன்றுகடந்தவரின்றுகம்பர்
மன்னரிதேர்ந்துதொழுங்கச்சிநாட்டிடைவைகுவரே. (எச)

உவரச்சொல்வேடுடைக்காடுகந்தாடியவேகம்பனு
ரவரக்கன்போனவிமானத்தையாயிரமுண்மைசுற்றுக்
துவரச்சிகரச்சிவாலயஞ்சூலந்துலங்குவிண்மேற்
கவரக்கொடிதூளக்குங்கச்சிகாணினுங்கார்மயிலே. (எடி)

கார்மிக்ககண்டத்தெழிற்றிருவேகம்பர்கச்சியின்வா
யோர்மிக்கசெற்றெழினென்னடுவோரொலிபொன்மலைபோற்
போர்மிக்கசெந்நெல்குவிப்போரொலிகருப்பாலையொலி
நீர்மிக்கமாக்கடலின்னெலியேயொக்குநேரிழையே. (எகூ)

நேர்த்தமையாமைவிறற்கொடுவேடர்நெஞ்சுரத்தைப்
பார்த்தமையாலிமைதீந்தகண்பொன்னேபகட்டிரிவை
போர்த்தமையாலுமைநோக்கருங்கம்பர்கச்சிப்பொழிலுட்
சேர்த்தமையாலிமைப்போதணிசீதஞ்சிறந்தனவே. (எஎ)

நிறைவண்டுபாடுங்கமலக்கிடங்கிவைசெம்பழுக்காய்
நிறைகொண்டபாளைக்கமுகின்பொழிலிவைதீங்கனியின்
பொறைகொண்டவாழைப்பொதும்புவைபுன்சடையேகம்பனூர்
நிறைகொண்டபூங்கச்சிநாடெங்குமிவ்வண்ணநன்னுதலே. (எஅ)

நன்னுதலார்கருங்கண்ணுஞ்செவ்வாயுமிவ்வாறெனப்போய்
மன்னிதழார்திருநீலமுமாம்பலும்பூப்பவள்ளை
யென்னவெலாமொப்புக்காதென்றுவீற்றிடுமேகம்பனூர்
பொன்னுதலார்விழியார்கச்சிநாட்டெளிப்பொய்கையுளே. (எகூ)

உள்வார்குளிரிநெருங்கிக்கருங்கிடங்கிட்டநன்னீர்
வள்வாளைகளொடுசெங்கயன்மேய்கின்றவெங்களாயாட்
கொள்வார்பிறவிகொடாதவேகம்பர்குளிர்குவளை
கள்வார்தருகச்சிநாட்டெழிலேரிகளப்பரப்பே. (அ0)

பரப்பார்விசும்பிற்படிந்தகருமுகிலன்னநன்னீர்
தரப்பாசிகண்மிகுபண்பொடுசேம்படர்தண்பணைவாய்ச்
சுரப்பாரெருமைமலர்தின்னத்துன்னுகராவொருத்தல்
பொரப்பார்பொலிதுதலாய்செல்வக்கம்பர்தம்பூங்கச்சியே. (அக)

கச்சார்முலைமலைமங்கைகண்ணுரவெண்ணுன்கறமும்
வைச்சார்மகிழ்திருவேகம்பர்தேவிமகிழவிண்ணோர்
விச்சாதரர்தொழுகின்றவிமானமுந்தன்மமரு
வச்சாலையும்பரப்பாக்கணிமாடங்களோங்கினவே. (அஉ)

ஓங்கினவூரகமுள்ளகமும்பருருகிடமாம்
பாங்கினினின்றதரியுறைபாடகந்தெவ்விரிய
வாங்கினவாட்கண்ணிமற்றவர்மைத்துனிவான்கவிக
டாங்கினகாட்டிருந்தாளதுதன்மனேயாயிழையே. (அங)

இழையாரரவணியேகம்பர்தெற்றிவிழியின்வந்த
பிழையாவருணம்பிராட்டியதின்னபிறங்கலுன்னு
றுழையாவருதிரிசூலத்தணேக்கரும்பொன்கடுக்கைத்
தழையார்பொழிலுதுபொன்னேமக்குத்தளர்வில்லையே. (அச)

தளராமிகுவெள்ளங்கண்டுமையோடித்தமைத்தழுவக்
கிளையார்வளைக்கைவடுப்படுமீங்கோர்கிறிபடுத்தார்
வளமாப்பொழிற்றிருவேகம்பமற்றிதுவந்திறைஞ்சி
புளராவதுபடைத்தோமடவாயிவ்வுலகத்துள்ளே. (அஉ)

உலவியமின்வடம்வீசியுருமதிர்வுண்முழங்கிச்
சலவியமாமதம்பாய்முகில்யானைகள்வானில்வந்தாற்
சுலவியவார்குழல்பின்னரென்பாரிரெனினேங்கு
நிலவியவேகம்பர்கோயிற்கொடியன்னநீர்மையனே. (அஎ)

நீரென்னிலுமமுங்கண்முகில்காணெஞ்சமஞ்சலையென்
றூரென்னிலுந்தமராயுரைப்பாரமராவதிக்கு
நேரென்னிலுந்தருங்கச்சியுளேகம்பர்நீண்மதில்வாய்ச்
சேரென்னிலுந்தங்கும்வாட்கண்ணிதானன்பர்தேர்வரவே. (அஏ)

வரங்கொண்டிமையோர்கலங்கொள்ளுமேகம்பர்கச்சியன்னுய்,
பரங்கொங்கைதாவன்மினீர்முத்தமன்பர்தந்தேரின்முன்னே,தரங்
கொண்டுபூக்கொண்டு கொன்றைபொன்னுகத்தண் காந்தள்கொத்
தின், கரங்கொண்டு பொற்சுண்ண மேந்தவும் போந்தன கார்
முகிலே. (அஅ)

கார்முகமாரவண்கைக்கொண்டகம்பர்கழலெழுது
போர்முகமாப்பகைவெல்லச்சென்றூர்கினையார்புணரி
நீர்முகமாகவிருண்செறந்ததுநேரிழைநா
மார்முகமாகவினைக்கடனீந்துமயர்வுயிர்ப்பே. (அக)

உயிராயினவன்பர்தேர்வரக்கேட்டுமுன்வாட்டமுற்ற
பயிராரர்புயல்பெற்றதென்னநம்பல்வளபான்மைகளாந்
தயிரார்பானெய்யொடுமொடியவேகம்பர்தம்மருள்போற்
கையிராவளையுந்தக்கச்சிறுத்தனகார்மயிலே. (கo)

கார்விடைவண்ணத்தனன்றேழ்தழுவினுமின்றுதனிப்
போர்விடைபெற்றெதிர்மாண்டாரெனவண்டர்போதவிட்டார்
தார்விடையேகம்பர்கச்சிப்புறவிடைதம்பொனண்பூண்
மார்விடைவைகல்பெறுவார்தழுவமழவிடையே. (கக)

விடைபாய்கொடுமையெண்ணுதுமேலாங்கன்னிவேற்கருங்கட்
கடைபாய்மனத்தினங்காளையர்புல்கொலிகம்பர்கச்சி
மடைபாய்வயலிளமுல்லையின்மான்கன்றொடான்கன்றினங்
கண்டபாய்தொறும்பதிமன்றிற்கடல்போற்கலந்தெழுமே. (கஉ)

எழுமலர்த்தண்பொழிலேகம்பர்கச்சியிருங்கடல்வாய்க்
கொழுமணப்புன்னைக்குரவான்மணற்குன்றிற்பாதர்கொம்பே
செழுமலர்ச்சேலல்லவாளல்லவேலல்லநீலமல்ல
முழுமலர்க்கூரம்பினோரிரண்டாலுமுகத்தனவே. (கங)

முகம்பாகம்பண்டமும்பாகமென்றேதியமூதுரையை
யுகம்பார்த்திரேலென்னலமுயரேகம்பர்கச்சிமுன்னீ

சகம்பாகவார்வினளவில்லையென்னின்பவளச்செவ்வாய்
சகம்பாற்பொழிற்பெற்றநாமுற்றவாகொள்கநன்மயலே. (கூச)

மயக்கத்தால்லிருட்கொல்லுஞ்சுறவொடெறிமகர
மியக்கத்திடுசுழியோதங்கழிகிளரக்கழித்தார்
துயக்கத்தவர்க்கருளாக்கம்பர்கச்சிக்கடலர்பொன்னூன்
மூயக்கத்தகல்வுபொருள்கொண்கநீர்வருமூர்க்கஞ்சுமே. (கூடு)

மேயிரைவைகக்குருகுணராமதுவுண்டுபுன்னை
மீயிரைவண்டோதமர்புக்கடியவிரிகடல்வாய்ப்
பாயிரைதாகங்கொண்டோன்றொழுங்கம்பர்கச்சிப்பவ்வநீர்
தூயிரைகானன்மற்றுரறிவார்நர்துறைவர்பொய்யே. (கூசு)

பொய்வருநெஞ்சினர்வஞ்சனையாரையும்போகவிடா
மெய்வரும்பேரருளேகம்பர்கச்சிவிரையினவாய்க்
கைவரும்புள்ளொடுசங்கினமார்ப்பநஞ்சேர்ப்பர்தின்டே
ரவ்வருதாமங்களினம்வந்தார்ப்பவணைகின்றதே. (கூஎ)

இன்றுசெய்வோமிதனீற்றிருவேகம்பர்க்கெத்தனையு
கன்றுசெய்வோம்பணிகாளையென்றுள்ளிநெஞ்சேயுடலிற்
சென்றுசெயாரைவிடுத்துணாளும்விடாதடிமை
கின்றுசெய்வாரவர்தங்களினீணைறிகாட்டுவரே. (கூஅ)

காட்டிவைத்தார்தம்மையாங்கடிப்பூப்பெய்யக்காதல்வெள்ள
மீட்டிவைத்தார்தொழுமேகம்பரேதுமிலாதவெம்மைப்
பூட்டிவைத்தார்தமக்கன்பதுபெற்றுப்பதிற்றுப்பத்துப்
பாட்டிவைத்தார்பரவித்தொழுதாமவர்பாதங்களே. (கூக)

பாதம்பரவியொர்பித்துப்பிதற்றிலும்பல்பணியு
மேதம்புகுதாவகையருளேகம்பரேத்தெனவே
போதம்பொருளாற்பொலியாதபுன்சொற்பனுவல்களும்
வேதம்பொலியும்பொருளாமெனக்கொள்வர்மெய்த்தொண்டரே.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டணத்துப்பிள்ளையார்

அருளிச்செய்த

திருவொற்றியூரொருபாவொருபது.

அகவல்.

இருநிலமடந்தையல்பினினுடித்த
பொருகடன்மேகலைமுகமெனப்பொலிந்த
வொற்றிமாநகருடையோயுருவின்
பெற்றியொன்றுகப்பெற்றேரியாசை
யின்னின்பிறக்கந்துன்னுநின்சடையே
மன்னியவண்டநின்சென்னியின்வடிவே
பாவகன்பரிதிபனிமதிதன்னெடு
மூவகைச்சுடருநின்னுதனேர்காட்டந்
தண்ணெளியாரந்தாராகணமே
விண்ணவர்முதலாவேறேரிடமாக்
கொண்டுறைவிசும்பேகோலநின்னுக
மெண்டிசைதிண்டோளிருங்கடலுடையே
யணியுடையல்குலவனிமண்டலமே
மணிமுடிப்பாந்தணின்ருளிணைவழக்கே
யொழியாதோடியமாருதமுயிர்ப்பே
வழுவாவோசைமூழுதுநின்வாய்மொழி
வானவர்முதலாமன்னுயிர்ப்பரந்த
ஞானமின்ஞானத்தொகுதிநின்னுணர்வே
நெருங்கியவுலகினினீர்மையுநிற்றலுஞ்
சுருங்கலும்விரிதலுந்தோற்றநிற்றேழிலே
யமைத்தலுமழித்தலுமாங்கதன்பெயர்ச்சியு
மிமைத்தலும்விழித்தலுமாகுநின்னியல்பே
யென்றிவைமுதலாவியல்புடைவடிவினை

டொன்றியதுப்புருவிருவகையாகி
மூத்திறக்குணத்துநால்வகைப்பிறவி
யத்திறத்தைம்பொறியறுவகைச்சமயமோ
டேழுலகாகியெண்வகைமூர்த்தியோ
டேழியோடேழியெண்ணிறந்தோங்கி
யெவ்வகையளவினிற்கூடினின்
றவ்வகைப்பொருளுநீயாகியவிடத்தே. (க)

இடத்துறைமாதரோடிருடம்பென்று
நடத்தினைகள்ளிருணவிற்றினையென்றும்
புலியதளென்பொடுபூண்தோயென்றும்
பலிதிரிவாழ்க்கைபயின்றீரூயென்று
மருவமுமுருவமுமாளுயென்றுந்
திருவமர்மாலொடுதிசைமுகனென்று
மூளனேயென்றுமிலனேயென்றுந்
தளரானென்றுந்தளர்வோனென்று
மாதியென்றுமசோகினனென்றும்
போதியிற்பொலிந்தபுராணனென்று
மின்னவைமுதலாத்தாமறியளவையின்
மன்னியதூலின்பன்மையுண்மயங்கிப்
பிணங்குமாந்தர்பெற்றிமைநோக்கி
யணங்கியவவ்வவர்க்கவ்வவையாகியடையப்
பற்றியபளிங்குபோலு
மொற்றிமாநகருடையோயுருவே. (உ)

உருவாமூலகுக்கொருவனுகிய
பெரியோய்வடிவின்பிறிதிங்கின்மையி
னெப்பொருளாயினுமிங்குளதாமெனி
ணப்பொருளுனக்கேயவயவமாதலின்
மூன்னியமூவெயின்முழங்கெரியூட்டித்
தொன்னீர்வையகந்துயர்கெடச்சூழ்ந்ததும்

வேள்விமூர்த்திதன்றலையினைவிடுத்தது
நீள்விசும்பாளிதன்றேரினைநெரித்தது
மோங்கியமறையோர்க்கொருமுகமொழித்ததும்
பூங்கணைவேளைப்பொடிபடவிழித்ததுந்
திறல்கெடவரக்கனைத்திருவிரலுறுத்ததுங்
குறைபடக்கூற்றினைக்குறிப்பினிலடர்த்தது
மென்றிவைமுதலாவாள்வினையெல்லா
நின்றுழிச்சிறந்தநின்செயலாதலி
னுலகாத்தொல்புகழொற்றியூர
பகர்வோர்நினக்குவேறின்மைகண்டவர்
நிகழ்ச்சியினிகழினல்லது
புகழ்ச்சியிற்படுப்பரோபொருளுணர்ந்தோரே. (கூ)

பொருளுணர்ந்தோங்கியபூமகன்முதலா
விருடிணையாக்கையிலியங்குமன்னுயி
ருருவினுமுணர்வினுமுயர்வினும்பணியினுந்
திருவினுந்திறலினுஞ்செய்தொழில்வகையினும்
வெவ்வேறுகிவினையொடும்பிரியா
தொவ்வாப்பன்மையுண்மற்றவரொழுக்க
மன்னியவேலையுள்வான்றிரைபோல
நின்னிடையெழுந்துநின்னிடையாகியும்
பெருகியுஞ்சுருங்கியும்பெயர்ந்துந்தோன்றியும்
•விரவியும்வேறுய்நின்றனைவிளக்க
மோவாத்தொல்புகழொற்றியூர
மூவாமேனிமுதல்வநின்னருள்
பெற்றவரறியினல்லது
மற்றவரறிவரோநின்னிடைமயக்கே. (சு)

மயக்கமில்சொன்னீயாயினுமற்றவை
துயக்கநின்றிரமறியாச்சூழலு
முறைவிடமுள்ளமாயினுமற்றது

கறைபடவாங்கேகரந்தகள்ளமுஞ்
செய்வினையுலகினிற்செய்வோயெனினு
மவ்வினைப்பயனீயணுகாவணிமையு
மினத்திடையின்பம்வேண்டிநிற்பணிவோர்
மனத்திடைவாரியாகியவனப்பு
மன்பினடைந்தவர்க்கணிமையுநாடொறு
மென்பினையுருக்குமியற்கையவாதலிற்
கண்டவர்தமக்கேயுனுடலழித
லுண்டெனவுணர்ந்தனமொற்றியூர
மன்னியபெரும்புகழ்மாதவத்
துன்னியசெஞ்சடைத்தூமதியோயே. (இ)

தூமதிசடைமிசைசூடுதலுநெறி
யாமதியானெனவமைத்தவாறே
யறனுறுவாகியவானேறுதல
விறைவனியானெனவியற்றுமாறே
யதவவளவனெனநின்றமையாக்கும்
பொதுநிலையானெனவுணர்த்தியபொருளே
முக்கணனென்பதுமுத்தீவேள்வியிற்
றொக்கதென்னிடையென்பதோர்சுருக்கே
வேதமான்மறியேந்துதன்மற்றத
னீதனானெனநவிற்றுமாறே
மூவிலையொருதாட்சூலமேந்துதன்
மூவரும்யானெனமொழிந்தவாறே
யெண்வகைமூர்த்தியென்பதிவ்வுலகினி
லுண்மையானெனவுணர்த்தியவாறே
நிலநீர்தீவளியுயர்வானென்று
மூலவாத்தொல்புகழுடையோயென்றும்
பொருளுநற்பூதப்படையோயென்றுந்
தெருளநின்றுலகினிற்றெருட்டுமாறே
மீங்கிவைமுதலாவண்ணமும்வடிவு

மோங்குநின்பெருமையுணர்த்தவுமுணராத்
தற்கொலிமாந்தர்தம்மிடைப்பிறந்த
சொற்பொருள்வன்மையிற்சுழலுமாந்தர்க்
காதியாகியவறுதொழிலாள
போதலோவாவொற்றியூர
சிறுவர்தஞ்செய்கையிற்படுத்து
மூறுவலித்திருத்திமுகப்படுமளவே. (சு)

அளவினிலிறந்தபெருமையையாயினு
மெனதுளமகலாதொடுங்கினின்றுளையே
மெய்யினையிறந்தமெய்யினையாயினும்
வையகமுழுதுநின்வடிவெனப்படுமே
கைவலத்திலேநீயெனினுங்காத்தல்
செய்வோர்வேண்டுஞ்சிறப்பொழியாயே
சொல்லியவகையாற்றுணையலையாயினு
நல்லுயிர்க்கூட்டகாயகனீயே
யெங்குமுள்ளோயெனினும்வஞ்சனை
தங்கியவவரைச்சாராய்நீயேயஃதான்று
பிறவாப்பிறவியைபெருகாப்பெருமையை
துறவாத்துறவியைதொடராத்தொடர்ச்சியை
நுகராநுகர்ச்சியைநுணுகாநுணுக்கினை
யகலாவகற்சியையணுகாவணிமையை
செய்யாச்செய்கையைசிறவாச்சிறப்பினை
வெய்யதணியைவிழுமியைநொய்யை
செய்யபசியைவெளியைகரியை
யாக்குதியழித்தியானபல்பொரு
ணீக்குதிதொகுத்திநீங்குதியடைதி
யேனையவாகியவெண்ணில்பல்குண
நினைதொறுமயக்குநீர்மையவாதலி
னேங்குகடவுடித்தவொற்றியூர
வீங்கிதுமொழிவார்யாரர்தாவஞ்

சொன்னிலேசருங்கினல்லது
நின்னியலறிவோரியாரிருநிலத்தே. (எ)

நிலத்திடைப்பொறையாயவாவினீண்டு
சொலத்தகுபெருமைத்தூராவாக்கை
மெய்வளியையொடுபித்தொன்றுக
வைவகைநெடுங்காற்றுங்குடனடிப்பா
ரையெனுமுரையேநாடொறும்வளுப்ப
திரையுடைத்தோலேசெழுந்திரையாகக்
கூடியகுருதிநீரினுணிறைந்து
மூடியவிருமலோசையின்முழங்கிச்
சுடுபசிவெகுளிச்சுறவினமெறியக்
குடரெனுமரவக்கூட்டம்வந்தொலிப்ப
வூன்றடியெலும்பினுட்டிடலடைந்து
தோன்றியபல்பிணிப்பின்னகஞ்சுழலக்
கால்கையினரம்பேகண்டமாக
மேதகுநிணமேமெய்ச்சாலாக
முழக்குடைத்துலேயேமுகங்களாக
வழுக்குடைமூக்காரூதம்வந்தொலிப்ப
விப்பரிசியற்றியவுடலிருங்கடலுட்
டுப்புரவென்னுஞ்சுழித்தலைப்பட்டுழி
யாவாவென்றுநின்னருளினைப்பெற்றவர்
நாவாயாகியநாதநின்பாத
மூந்திச்சென்றுமுறைமையின்வணங்கிச்
சிந்தைக்கூம்பினைச்செவ்விதினிறுத்தி
யுருகியவார்வப்பாய்விரித்தார்த்துப்
பெருகியன்றையெனுங்கயிற்றிடைப்பிணித்துத்
துன்னியசுற்றத்தொடர்க்கயிறறுத்து
மன்னியவொருமைப்பொறியினைமுறுக்கிக்
காமப்பாரெனுங்கடவெளியற்ற
தூமச்சோதிச்சுடர்க்குறிறுத்திச்

சுருங்காவுணர்ச்சித்துடுப்பினேத்துழாவி
நெருங்காகவளவீனீள்கறையேற்ற
வாங்கயாத்திரைபோக்குதிபோலு
மோங்குகடலுடுத்தவொற்றியூரோயே. (அ)

ஒற்றியூரவுலவாநின்குணம்
பற்றியாரப்பரவுதல்பொருட்டா
வென்னிடைப்பிறந்தவின்னுப்புன்மொழி
நின்னிடையணுகாநீர்மையவாதலி
னுவலித்தழுதலினகன்றவம்மனே
கேவலஞ்சேய்மையிற்கேளாளாயினும்
பிறித்தற்கறியபெற்றியதாகிக்
குறைவினிலார்த்துங்குழவியதியல்பினே
யறியாதெண்ணிலுழிப்பிறவியின்
மயங்கிக்கண்ணிலர்கண்பெற்றுங்கே
தாய்தலைப்படநின்றுளிணைவணக்கம்
வாய்தலையறியாமயக்குறும்வினையேன்
மல்கியவின்பத்தேதொடன்கூடிய
வெல்லையிலவாவினிலியற்றியவாகக்
கட்டியநீயேயவிழ்க்கினல்ல
தெட்டனையாயினுமியானவிழ்க்கறியேன்
றுன்னிடையிருளனுந்தூற்றிடையொதுங்கி
வெள்ளிடைகாணவிருப்புறுவினையேன்
றந்தையுந்தாயுஞ்சாதியுமறிவுஞ்
சிந்தையுந்திருவுஞ்செல்கதித்திறனுந்
துன்பமுந்துறவுந்தூய்மையுமறிவு
மின்பமும்புகழுமிவைபலபிறவுஞ்
சுவையொளியூரோசைநாற்றந்தோற்ற
மென்றிவைமுதலாவிளங்குவவெல்லா
மொன்றநின்னடிக்கேயொருங்குடன்வைத்து
நின்றனன்றமியேனின்னடியல்லது

சார்வுமற்றின்மையிற்றளர்ந்தோர்காட்சிச்
சேர்விடமதனைத்திறப்படநாடி
யெய்துதற்கரியோயானினிச்
செய்வதுமறிவனேதெரியுங்காலே. (கூ)

காலற்சீறியகழலோய்போற்றி
மூலத்தொகுதிமுதல்வபோற்றி
யொற்றிமாநகருடையோய்போற்றி
மூற்றுமாகியமுதல்வபோற்றி
யணைதொறுஞ்சிறக்குமயிர்தேபோற்றி
யிணைபிரிதில்லாவீசபோற்றி
யார்வஞ்செய்பவர்க்கணியோய்போற்றி
தீர்விலின்சுவைத்தேனேபோற்றி
வஞ்சனைமாந்தரைமறுத்தோய்போற்றி
நஞ்சினையமிர்தாகயந்தோய்போற்றி
விரிகடல்வையகவித்தேபோற்றி
புரிவுடைவனமாய்ப்புணர்ந்தோய்போற்றி
காணமுன்பொருள்கருத்துறைசெம்மைக்
காணியாகியவவனேபோற்றி
வெம்மைதண்மையென்றிவைகுணமுடைமையிற்
பெண்ணுடாணெனும்பெயரோய்போற்றி
மேவியவவர்தமைவீட்டினிற்படுக்கும்
தீபமாகியசிவனேபோற்றி
மாலோய்போற்றிமறையோய்போற்றி
மேலோய்போற்றிவேதியபோற்றி
சந்திரபோற்றிதழலோய்போற்றி
யிந்திரபோற்றியிறைவபோற்றி
யமராபோற்றியழகாபோற்றி
குமராபோற்றிகூத்தாபோற்றி
பொருளேபோற்றிபோற்றியென்றுனை
நாத்தழும்பிருக்கவிற்றினல்ல
தேத்துதற்குரியோரியாரிருநிலத்தே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பியாண்டார்நம்பி

அருளிச்செய்த

திருநாரையூர்

விநாயகர் திருவிரட்டைமணிமாலை.

என்னேநினைந்தடிமைகொண்டென்னிடர்கெடுத்துத்
தன்னேநினையத்தருகின்றான்—புன்னே
விரசுமகிழ்சோலைவியனாரையூர்முக்க
ணரசுமகிழத்திருமுகத்தான். (க)

முகத்தாற்கரியனென்றுலந்தனையேமுயன்றவர்க்கு
மிகத்தான்வெளியனென்றேமெய்ம்மையுன்னும்விரும்படியா
ரகத்தான்றிகழ்திருநாரையூரம்மான்பயந்தவெம்மா
னுகத்தானவன்றனுடலம்பிளந்தவொருகொம்பனே. (உ)

கொம்பனையவள்ளிகொழுநன்குறுகாமே
வம்பனையமாங்கனியைநாரையூர்—நம்பனையே
தன்னவலஞ்செய்துகொளுந்தாழ்தடக்கையாயென்னெய்
பின்னவலஞ்செய்வதேனேபேசு. (ங)

பேசுத்தகாதெனப்பேயெருதும்பெருச்சாளியுமென்
றேசத்தகும்படியேறுவதேயிமையாதமுக்கட்
கூசத்தகுந்தொழினுங்கையுநுந்தையுநீயுமிந்தத்
தேசத்தவர்தொழுநாரைப்பதியுட்சிவக்களிறே. (ச)

களிறுமுகத்தவனுய்க்காயஞ்செந்தீயி
லெளிறுமுருக்கொண்டதென்னே—யளறுதொறும்
பின்னுரையூராரலாரும்பெரும்படிகர்
மன்னுரையூரான்மகன். (ஞ)

மகத்தினின்வானவர்பற்கண்சிரந்தோணெரித்தருளுஞ்
சுகத்தினிணீள்பொழிஞரைப்பதியுட்சுரன்மகற்கு
மூகத்ததுகையந்தக்கையதுமூக்கந்தமூக்கதனி
னகத்ததுவாயந்தவாயதுபோலுமமருப்பே. (சு)

மருப்பையொருகைக்கொண்டுநாரையூர்மன்னும்
பொருப்பையடிபோற்றத்துணிந்தா—னெருப்பை
யருந்தவெண்ணுகின்றவெறும்பன்றேயவரை
வருந்தவெண்ணுகின்றமலம். (எ)

மலஞ்செய்தவல்வினைநோக்கியுலகைவலம்வருமப்
புலஞ்செய்தகாட்சிக்குமரற்குமுன்னேபுரிசடைமேற்
சலஞ்செய்தநாரைப்பதியரன்றன்னைக்கனிதரவே
வலஞ்செய்துகொண்டமதக்களிறேயுன்னைவாழ்த்துவனே. (அ)

வனஞ்சாயவல்வினைநோய்நீக்கிவனசத்
தனஞ்சாயலைத்தவருவானன்ரூ—வினஞ்சாயத்
தேரையூர்நம்பர்மகன்றிண்டோணெரித்தருளு
நாரையூர்நம்பர்மகனும். (கூ)

நாரணன்முன்பணிந்தேத்தநின்றெல்லைநடாவியவத்
தோரணவுந்திருநாரையூர்மன்னுசிவன்மகனே
காரணனேயெங்கணபதியேநற்கரிவதனா
வாரணமுண்பொருளேயென்பவர்க்கில்லையல்லல்களே. (கo)

அல்லல்களைந்தான்றனம்பொனுலகத்தி
னெல்லைபுகுவிப்பானீண்டுழுவர்—நெல்லல்களை
செங்கழுநீர்கட்குந்திருநாரையூர்ச்சிவன்சேய்
கொங்கெழுதாரைங்கரத்தகோ. (கக)

கோவிற்கொடியநமன்றமர்கூடாவகைவிடுவன்
காவிற்றிகழ்திருநாரைப்பதியிற்கரும்பனைக்கை
மேவற்கரியவிருமதத்தொற்றைமருப்பின்மூக்க
ணேவிற்புருவத்திமையவன்ரூன்பெற்றயானையையே. (கஉ)

யானேத்தியவெண்பாவென்னினேந்தடிமை
தானேசனர்த்தனற்குரல்கிஞன்—றேனே
தொடித்தபொழிஞரையூர்ச்சூலம்வலனேந்தி
யெடுத்தமதமுகத்தவேறு. (கக)

எறியசீர்வீரணக்குடியேந்திழைக்கும்மிருந்தே
ஞறியபூந்தார்க்குமரற்குமுன்னினேநண்ணலரைச்
சிறியவெம்பணைச்சிங்கத்தினுக்கிளையானேவிண்ணோர்
வேறியல்வாற்றெழுஞாரைப்பதியுள்விநாயகனே. (கச)

கனமதில்சூழ்ஞாரையூர்மேவிக்கசிந்தார்
மனமருவினன்பயந்தவாய்ந்த—சினமருவு
கூசாரம்பூண்டமுகக்குஞ்சரக்கன்றென்றூர்க்கு
மாசாரமோசொல்லுவான். (கஞ)

வானிற்பிறந்தமதிதவழும்பொழின்மாட்டளிசூழ்
தேனிற்பிறந்தமலர்த்திருஞாரைப்பதிதிகழுங்
கோனிற்பிறந்தகணபதிதன்னேக்குலமலையின்
மானிற்பிறந்தகளிறென்றுரைப்பரிவ்வையகத்தே. (கசு)

வையகத்தாரேத்தமதிஞரையூர்மகிழ்ந்து
பொய்யகத்தாருள்ளம்புகலொழிந்து—கையகத்தோர்
மாங்கனிதன்கொம்பண்டம்பாசமழுமல்குவித்தா
னுங்கனிருஞ்சிந்தையமர்வான். (கஎ)

அமராவமரர்தொழுஞ்சரணரைப்பதியமர்ந்த
குமராகுமரற்குமுன்னவனேகொடித்தேரவுணர்
தமராசறுத்தவன்றன்னுழைத்தோன்றினனேயெனின்
நமராமனத்தவராழ்நரகத்திலழுந்துவரே. (கஅ)

அவமதியாதுள்ளமேயல்லலறநல்ல
தவமதியாலேத்திச்சதுர்த்தோ—ரவமதியாங்
கொம்பன்விநாயகன்கொங்கார்பொழில்சூழ்ஞாரையூர்
கம்பன்சிறுவன்சீர்ஞாம். (கக)

நாந்தனமாமனமேத்துகீண்டாயென்றுநாண்மலராற்
றூந்தனமாகவிருந்தனுரைப்பதிதன்னுளே
சேர்ந்தனனேயைந்துசெங்கையனேநின்றிரண்மருப்பை
யேந்தினனேயென்னையாண்டவனேயெனக்கென்னையனே. (உ0)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பியாண்டார்நம்பி

அருளிச்செய்த

கோயிற்றிருப்பண்ணியர்விருத்தம்.

நெஞ்சந்திருவடிக்கீழ்வைத்தநீண்மலர்க்கண்பனிப்ப
வஞ்சங்கடிந்துன்னேவந்தித்திலேனன்றுவானருய்ய
நஞ்சங்கருந்துபெருந்தகையேநல்லதில்லைநின்ற
வஞ்செம்பவளவண்ணவருட்கியானினியாசென்பதே. (க)

என்புந்தழுவியவூனுநெகவகமேயெழுந்த
வன்பின்வழிவந்தவாரமிர்தேயடியேனுரைத்த
வன்புன்மொழிகள்பொறுத்திகொலாம்வளர்தில்லைதன்னுண்
மின்புன்மிளிர்சடைவீசிநின்றாடியவிண்ணவனே. (உ)

அவநெறிக்கேவிழப்புக்கவிந்நானழுந்தாமைவாங்கித்
தவநெறிக்கேயிட்டதத்துவனேயத்தவப்பயனுஞ்
சிவநெறிக்கேயென்னையுய்ப்பவனேசெனனந்தொறுஞ்செய்
பவமறுத்தாள்வதற்கோதில்லைநட்டம்பயில்கின்றதே. (ஙு)

பயில்கின்றிலேனின்றிறத்திருநாமம்பனிமலர்த்தார்
மூயல்கின்றிலேனுன்றிருவடிக்கேயப்பமுன்னுதில்லை
யியல்கின்றநாடகச்சிற்றம்பலத்துளெந்தாயிங்கனே
யயர்கின்றநானெங்ஙனேபெறுமாறுநின்னருளே. (ச)

அருதிக்குவிம்மிநிவந்ததோவெள்ளிக்குவடதஞ்சு
பருதிக்குழவியுமிழ்கின்றதேயொக்கும்பற்றுவிட்டோர்
கருதித்தொழுகழற்பாதமுங்கைத்தலஞான்குமெய்த்த
சுருதிப்பதமுழங்குந்தில்லைமேயசுடரினுக்கே. (கூ)

சுடலைப்பொடியும்படுதலைமாலையுஞ்சூழ்ந்தவென்பு
மடலைப்பொலிமலர்மாலைமென்மேண்மேன்மயிர்க்கயிறு
மடலைப்பொலியயின்மூவிலைவேலுமணிகொடில்லை
விடலைக்கென்னுணக்கழகிதுவேதவிளைத்தத்தையே. (கூ)

வேதமுதல்வன்றலையுந்தலையாயவேள்விதன்னு
ணாதனவனைச்சனற்றலையுந்தக்கனுர்தலையுங்
காதியதில்லைச்சிற்றம்பலத்தான்கழல்சூழ்ந்துநின்று
மாதவரென்னுமறைமொழியாலேவழுத்துவதே. (எ)

வழுத்தியசிர்த்திருமாலுலகுண்டுவன்பாம்புதன்னின்
கழுத்தருகேதுயின்றனுக்கப்பாற்தலைக்கங்கணமாச்
செழுத்திரணீர்த்திருச்சிற்றம்பலத்தான்றிருக்கையிட
வழுத்தியகல்லொத்தனனுயனுகியமாயவனே. (அ)

மாயவன்முந்நீர்த்துயின்றவனன்றுமருதிடையே
போயவன்காணுதபூங்கழனல்லபுலத்தினர்நெஞ்
சேயவன்சிற்றம்பலத்துணின்றருங்கழலெவர்க்குந்
தாயவன்றன்பொற்கழலென்றலைமறைநன்னிழலே. (க)

கிழல்படுபூணெடுமாலயன்காணுமைநீண்டவரே
தழல்படுபொன்னகலேந்தித்தமருகந்தாடித்தமைத்
தெழில்படவீசிக்கரமெறிநீர்த்தில்லையம்பலத்தே
குழல்படுசொல்வழியாடுவர்யாவர்க்குங்கூத்தினையே. (கo)

கூத்தனென்றுந்தில்லைவாணனென்றுங்குழுமிட்டிமையோ
ரேத்தனென்றுஞ்செவிமாட்டிசையாதேயிசெணங்கை
மூத்தவன்பெண்டீர்குணலையிட்டாலுமுகினிறத்த
சாத்தனென்றூலம்வருமோவிவளுக்குத்தண்ணெனவே. (கக)

தண்ணற்புனற்றில்லைச்சிற்றம்பலந்தன்னின்மன்னிநின்ற
விண்ணுளானைக்கண்டநாள்விருப்பாயென்னுடன்முழுதுங்
கண்ணுங்கிலோதொழக்கையாங்கிலோதிருநாமங்கள்கற்
றெண்ணும்பரிசெங்கும்வாயாங்கிலோவெனக்கிப்பிறப்பே. (கஉ)

பிறவியிற்பெற்றபயனென்றுகண்டிடலம்பேரொலிநீர்
நறவியல்பூம்பொழிற்றில்லையுணடகமாடுகின்ற
துறவியல்சோதியைச்சுந்தரக்கூத்தனைத்தொண்டர்தொண்ட
ருறவியல்வாற்கண்கள்கண்டகண்டின்பத்தையுண்டிடவே. (கங)

உண்டேனவரருளாரமிர்தத்தினையுண்டலுமே
கண்டேனெடுத்தகழலுங்கனலுங்கவித்தகையு
மொண்டேன்மொழியினைநோக்கியநோக்குமொளிநகையும்
வண்டேன்மலர்த்தில்லையம்பலத்தாமணியினையே. (கச)

மணியொப்பனதிருமான்மகுடத்துமலர்க்கமலத்
தணியொப்பனவவன்றன்முடிமேலடியேனிடர்க்குத்
துணியச்சமைந்தநல்லீர்வாளனையனசூழ்பொழில்க
டிணியத்திகழ்தில்லையம்பலத்தான்றன்றிருந்தடியே. (கஙி)

அடியிட்டகண்ணினுக்கோவவனன்பினுக்கோவவுணர்
செடியிட்டவான்றுயர்சேர்வதற்கோதில்லையம்பலத்து
மூடியிட்டகொன்றைநன்முக்கட்பிரானன்றுலூவுலகு
மடியிட்டகண்ணனுக்கீந்ததுவாய்ந்தவரும்படையே. (கசு)

படைபடுகண்ணிதன்பங்கதென்றில்லைப்பரம்பரவல்
விடைபடுகேதகவிண்ணப்பங்கேளென்விதிவசத்தாற்
கடைபடுசோதிபிறக்கினுநீவைத்தருளுகண்டாய்
புடைபடுகிங்கிணித்தாட்செய்யபாதமென்னுள்புகவே. (கஎ)

புகவுகிர்வாளெயிற்றுனிலங்கீண்டுபொறிகலங்கி
யிகவுகுமாற்கரும்பாதத்தனேல்வியன்றில்லைதன்னு
ணகவுகுலாமதிக்கண்ணியற்கங்கணனென்றனன்றுந்
தகவுகொலாந்தகவன்றுகொலாமென்றுசங்கிப்பனே. (கஅ)

சங்கோர்கரத்தன்மகன்றக்கன்ரூனவர்நான்முகத்தோன்
செங்கோலவிந்திரன்ரூடலையூர்வேள்விசீரூடல
மங்கோலவெவ்வழலாயிட்டழிந்தெரிந்தற்றனவா
லெங்கோனெழிற்றில்லைக்கூத்தன்கடைக்கண்சிவந்திடவே. (கக)

ஏவுசெய்மேருத்தடக்கையெழிற்றில்லையம்பலத்து
மேவுசெய்மேனிப்பிரானன்றியங்கணர்மிக்குளரே
காவுசெய்காளத்திக்கண்ணுதல்வேண்டும்வரங்கொடுத்துத்
தேவுசெய்வான்வாய்ப்புனலாட்டியதிறல்வேடுவனே. (உ0)

வேடனென்ரூள்வில்விசயற்குவெங்கணையன்றளித்த
கோடனென்ரூள்குழைக்காதனென்ரூளிடக்காதிலிட்ட
தோடனென்ரூடொருசீர்த்தில்லையம்பலத்தாடுகின்ற
சேடனென்ரூண்மங்கையங்கைச்சரிவளைசிந்தினவே. (உக)

சிந்திக்கவுமுரையாடவுஞ்செம்மலராற்கழல்கள்
வந்திக்கவுமனம்வாய்கரமென்னும்வழிகள்பெற்றுஞ்
சந்திக்கிலர்சிலர்தெண்ணர்தண்ணர்தில்லையம்பலத்து
ளந்திக்கமர்திருமேனியெம்மான்றனருள்பெறவே. (உஉ)

அருடருசீர்த்தில்லையம்பலத்தான்றனருளினன்றிப்
பொருடருவானத்தரசாதலிற்புழுவாதனன்ரூஞ்
சுருடருசெஞ்சடையோனருளேற்றுறவிக்குரன்ரு
மிருடருகீழ்நரகத்துவீழுமிருஞ்சிறையே. (உங)

சிறைப்புளவாம்புனல்சூழ்வயற்றில்லைச்சிற்றம்பலத்துப்
பிறைப்பிளவார்சடையோன்றிருநாமங்களேபிதற்ற
பிறைப்புளவாகிவெண்ணீறணிந்தோடேந்தும்வித்தகர்தம்
முறைப்புளவோவயன்மாலிலுடும்பர்தாயகற்கே. (உச)

அகழ்சூழ்மதிற்றில்லையம்பலக்கூத்தவடியமிட்ட
முகிழ்சூழிலையுமுகைகளுமேயுங்கொல்கற்பகத்தின்
றிகழ்சூழ்மலர்மழைதூவித்திறம்பயில்சிந்தையராய்ப்
புகழ்சூழிமையவர்போற்றித்தொழுதினபூங்கழற்கே. (உஙி)

பூந்தண்பொழில்சூழ்புலியூர்ப்பொலிசெம்பொனம்பலத்து
வேந்தன்றனக்கன்றியாட்செய்வதென்னேவிரிதுணிமே
லாந்தண்பழையவிழையன்பாகியபண்டைப்பறைச்
சேந்தன்கொடுக்கவதுவந்திருவமிர்தாகியதே. (உசு)

ஆகங்கனகனேக்கீறியகோளரிக்கஞ்சிவிண்ணோர்
பாகங்கனங்குழையாயருளாயெனத்தில்லைப்பிரான்
வேகந்தருஞ்சிம்புள்விட்டாரிவெங்கதஞ்செற்றிலனேன்
மோகங்கலந்தன்றுலந்ததன்றோவித்தமூவுலகே. (உஎ)

மூவுலகத்தவரேத்தித்தொழுதில்லைமூக்கட்பிராற்
கேவுதொழிற்செய்யப்பெற்றவர்யாரெனிலேர்விடையாய்த்
தாவுதொழிற்பட்டெடுத்தனன்மாலயன்சாரதியா
மேவிரதத்தொடுபூண்டதொன்மாமிக்கவேதங்களே. (உஅ)

வேதகச்சிந்தைவிரும்பியவன்றில்லையம்பலத்து
மேதகக்கோயில்கொண்டோன்சேயவன்வீரணக்குடிவாய்ப்
போதகப்போர்வைப்பொறிவாளரவரைப்பொங்குசினச்
சாதகப்பெண்பிளேதன்னையன்றந்ததலைமகனே. (உக)

தலையவன்பின்னவன்றூய்தந்தையிந்தத்தராதலத்து
நிலையவரீக்குதொழில்புரிந்தோனடுவாகிநின்ற
கொலையவன்சூலப்படையவனலைத்தெழுகொழுந்து
னிலையவன்காண்டற்கருந்தில்லையம்பலத்துள்ளிறையே. (ஈ0)

இறையுந்தெளிகிலர்கண்டுமெழிற்றில்லையம்பலத்து
ளறையும்புனற்சென்னியோனருளாலன்றுகரிமே
னிறையும்புகழ்த்திருவாரூரனுநிறைதார்ப்பரிமே
னறையுங்கமழ்தொங்கல்வில்லவனும்புக்கநல்வழியே. (ஈக)

நல்வழிநின்றூர்பகைநன்றுநொய்யருறவிலென்னுஞ்
சொல்வழிகண்டனம்யாந்தொகுசீர்த்தில்லையம்பலத்து
வில்வழிதானவரொரித்தோன்வியன்சாக்கியனூர்
கல்வழிநேர்நின்றளித்தனன்காண்கசிவகதியே. (ஈஉ)

கதியேயடியவரெய்ப்பினில்வைப்பாக்கருதிவைத்த
திதியேநிமிர்புன்சடையமிர்தேநின்னேயென்னுள்வைத்த
மதியேவளர்தில்லையம்பலத்தாய்மகிழ்மாமலையாள்
பதியேபொறுத்தருளாய்கொடியேன்செய்தபல்பிழையே. (கக)

பிழையாயினவேபெருக்கிநின்பெய்கழற்கன்புதன்னி
னுழையாதசிந்தையினேனேயுமந்தாகினித்துவலை
முழையார்தருதலைமாலைமுடித்தமுழுமுதலே
புழையார்கரியுரித்தோன்றில்லைதாதபொறுத்தருளே. (கச)

பொறுத்திலனேனும்பன்னஞ்சினப்பொங்கெரிவெங்கதத்தைச்
செறுத்திலனேனுநந்தில்லைப்பிரானத்திரிபுரங்கள்
கறுத்திலனேனுங்கமலத்தயன்கதிர்மாமுடியை
யறுத்திலனேனுமமரருக்கென்கொலடுப்பனவே. (கஞ)

அடுக்கியசீலையராயகலேந்தித்தசையெலும்பி
லொடுக்கியமேனியொணிரப்பாரொள்ளிரணியனை
நடுக்கியமாநரசிங்கனேச்சிம்புளதாய்நரல
விடுக்கியபாதன்றன்றில்லைதாழாவிட்டவேழையரே. (கசு)

ஏழையென்புன்மைகருதாதிடையறுவன்பெனக்கு
வாழிநின்பாதமலர்க்கேமருவவருளுகண்டாய்
மாழைமென்னோக்கிதன்பங்கவளர்தில்லையம்பலத்துப்
போழிளந்திங்கள்சடைமுடிமேல்வைத்தபுண்ணியனே. (கஎ)

புண்ணியனேயென்றுபோற்றிசெயாதுபுலன்வழியே
கண்ணியனேற்கினியாதுகொலாம்புகலென்னுள்வந்திட்
டண்ணியனேதில்லையம்பலவாவலர்திங்கள்வைத்த
கண்ணியனேசெய்யகாமன்வெளுப்பக்கறுத்தவனே. (கஅ)

கறுத்தகண்டாவண்டவாணவருபுனற்கங்கைசடை
செறுத்தசிந்தாமணியேதில்லையாயென்னேத்தீவினைக
ளொறுத்தல்கண்டாற்சிரியாரோபிறரென்னுறுதுயரை
யறுத்தல்செய்யாவிடினுர்க்கோவருஞ்சொலரும்பழியே. (கக)

பழித்தக்கவுமிகழான்றில்லையான்பண்டுவேட்டுவனும்
பழித்திட்டிறைச்சிகலையனளித்தவிருக்குழங்கன்
மொழித்தக்கசீரதிபத்தன்படத்திட்டமீன்முழுது
மிழித்தக்கவென்னுதமிர்துசெய்தானென்றியம்புவரே. (சம)

வரந்தருமாறிதன்மேலுமுண்டோவயற்றில்லைதன்னுட்
புரந்தரன்மாரெழுகின்றபிரான்புலைப்பொய்மையிலே
திரந்தரமாய்நின்றவென்னையுமெம்மையிற்றன்னடியார்
தரந்தருவான்செல்வத்தாழ்த்தினன்பேசருந்தன்மையிதே. (சக)

தன்ரூடரித்தாரியாவர்க்குமீளாவழிதருவான்
குன்ரூமதிற்றில்லைமூதூர்க்கொடிமேல்விடையுடையோன்
மன்ரூடவும்பின்னுமற்றவன்பாதம்வணங்கியங்கே
யொன்ரூரிரண்டில்விழுவரந்தோசிலவூமர்களே. (சஉ)

களைகணிலாமையுந்தன்பொற்கழறுணையாதன்மையுந்
துலைகணிலாமுகக்கைக்கரிப்போர்வைச்சுரனினையான்
றலைகணிலாமலர்க்கொன்றையன்றண்புலியூரதென்றேன்
வலைகணிலாமைவணங்குமநங்கன்வரிசிலையே. (சங)

வரித்தடந்திண்சிலைமன்மதனுதலுமாழிவட்டந்
தரித்தவன்றன்மகனென்பதோர்பொற்புந்தவநெறிக
டெரித்தவன்றில்லையுட்சிற்றம்பலவன்றிருப்புருவ
நெரித்தலுங்கண்டதுவெண்பொடியெயன்றிறின்றிலவே. (சச)

றின்றிலவேவிசயன்னுருஞ்சிந்தைகளிப்புறநீ
டென்றில்லைமாநடமாடும்பிரான்றன்றிருமலைமேற்
றன்றலையானடந்தேறிச்சரங்கொண்டிழிந்ததென்பர்
கன்றினையேவிளமேலெறிந்தார்த்தகரியவனே. (சஙி)

கருப்புருவத்திருவார்த்தைகள்கேட்டலுங்கண்பனியேன்
விருப்புருவத்தினெடுள்ளமுருகேன்விதிர்விதிரே
னிருப்புருவச்சிந்தையென்னைவந்தாண்டதுமெவ்வணமோ
பொருப்புருவப்புரிசைத்தில்லையாடல்புரிந்தவனே. (சசு)

புரிந்தவன்பின்றியும்பொய்மையிலேயுந்திசைவழியே
வரிந்தகங்கைம்மலர்சென்னியிற்கூப்பில்வியநமனூர்
பரிந்தவனூர்புகலில்லபதிமூன்றெரியவம்பு
தெரிந்தவெங்கோன்றன்றிரையார்புனல்வயற்சேண்டில்லையே. ()

சேண்டில்லைமாநகர்த்திப்பியக்கூத்தனைக்கண்டுமன்பு
பூண்டிலகின்னைமறந்திலையாங்கவன்பூங்கழற்கே
மாண்டிலையின்னம்புலன்வழியேவந்துவாழ்ந்திடுவான்
மீண்டனையென்னையென்செய்திடவோசிந்தைதீர்விளம்பே. (சஅ)

விளைவைத்தளர்வித்தவிண்டுவந்தாமரைமேலயனு
மளவிற்கறியாவகைநின்றவன்றுமடுக்கல்பெற்ற
தளர்விற்றிருநகையாளுநின்பாகங்கொறண்புலியூர்க்
களவிற்கனிபுரையுங்கள்ளவார்சடைக்கங்கையனே. (சக)

கங்கைவலமிடம்பூவலங்குண்டலந்தோடிடப்பாற்
றங்குங்கரம்வலம்வெம்மழுவீயிடம்பாந்தள்வலஞ்
சங்கமிடம்வலந்தோலிடமாடைவலமக்கிட
மங்கஞ்சரியம்பலவன்வலங்காணிடமணங்கே. (கo)

அணங்காடகக்குன்றமாதறவாட்டியவாலமர்ந்தாட்
டிணங்காயவன்றில்லையெல்லமிதித்தலுமென்புருகா
வணங்காவழுத்தாவிழாவெழும்பாவைத்தவாமதர்த்த
குணங்காணிவளென்னவென்றுகொலாம்வந்துகூடுவதே. (கக)

கூடுவதம்பலக்கூத்தனடியார்குழுவுதொறுந்
தேடுவதாங்கவனுக்கமச்செவ்வழியவ்வழியே
யோடுவதுள்ளத்திருத்துவதொண்சுடரைப்பிறவி
வீடுவதாகநினையவல்லோர்செய்யும்வித்தகமே. (கஉ)

வித்தகச்செஞ்சடைவெண்மதிக்கார்நிறக்கண்டத்தெண்டோண்
மத்தகக்கைம்மலைப்போர்வைமதிற்றில்லைமன்னனைத்தஞ்
சித்தகக்கோயிலிருத்துந்திறத்தாகமிகர்க்கல்லாற்
புத்தகப்பேய்களுக்கெங்கித்தேவரான்பொன்னடிரே. (கங)

பொன்னம்பலத்துறைபுண்ணியனென்பர்புயன்மறந்த
கன்னன்மைதீரப்புனிற்றுக்கலிக்காமற்கன்றுபுன்கூர்
மன்னுமழைபொழிந்தீரறுவேலிகொண்டாங்கவற்கே
பின்னும்பிழைதவிர்ந்தீரறுவேலிகொள்பிஞ்ஞகனே. (நிச)

நேசனல்லேனினேயென்வினைதீர்க்குந்திருவடிக்கீழ்
வாசகன்மாமலரிட்டிறைஞ்சேனென்றன்வாயதனூற்
றேசனென்னுனேபொன்னூர்திருச்சிற்றம்பலநிலவு
மீசனென்னேன்பிறப்பென்னுய்க்கழியுங்கொலென்றனக்கே. ()

தனந்தலைசக்கரம்வானத்தலைமைகுபேரன்றக்கன்
வனந்தலையேறடர்த்தோன்வாசவனுயிர்ப்பல்லுடலூர்
சினந்தலைகாலன்பகல்காமன்றுனவர்தில்லைவிண்ணு
ரினந்தலைவண்ணருளான்முனிவாற்பெற்றிகந்தவரே. (நிசு)

அவமதித்தாழ்நரகத்திலிடப்படுமாதர்களுந்
தவமதித்தெப்பிலென்னவிண்ணுலுந்தகைமையரு
நவநிதித்தில்லையுட்சிற்றம்பலத்துநடம்பயிலுஞ்
சிவநிதிக்கேநினையாருநினைந்திட்டசெல்வருமே. (நிஎ)

வருவாசகத்தினின்முற்றுணர்ந்தோனவண்டில்லைமன்னுத்
திருவாதவூர்ச்சிவபாத்தியன்செய்திருச்சிற்றம்பலப்
பொருளார்தருதிருக்கோவைகண்டேயுமற்றப்பொருளைத்
தெருளாதவுள்ளத்தவர்கவிபாடிச்சிரிப்பிப்பரே. (நிஅ)

சிரித்திட்டசெம்பவளத்தின்றிரளுஞ்செழுஞ்சடைமேல்
விரித்திட்டபைங்கதிர்த்திங்களும்வெங்கதப்பாந்தளுந்தீத்
தரித்திட்டவங்கையுஞ்சங்கச்சுருளுமென்னெஞ்சினுள்ளே
தெரித்திட்டவாதில்லைச்சிற்றம்பலத்துத்திருநடனே. (நிகூ)

நடஞ்செய்சிற்றம்பலத்தான்முனிவென்செய்யுங்காமனன்று
கொடுஞ்சினத்தீவிழித்தாற்குக்குளிர்ந்தனன்விற்கொடும்பூண்
விடுஞ்சினத்தானவர்வெந்திலர்வெய்தெனவெங்கதத்தை
யொடுங்கியகாலனுந்நாணின்றுதையுணவிட்டனனே. (கூ0)

விட்டங்கொளிமணிப்பூண்டிகழ்வன்மதன்மெய்யுரைக்கி
லிட்டங்கரியனல்லானல்லனம்பலத்தெம்பரன்மேற்
கட்டங்கியகணையெய்தலுந்தன்னேப்பொன்னூர்முடிமேற்
புட்டங்கினன்மகனுமென்றுபார்க்கப்பொடிந்தனனே. (சுக)

பொடியேர்தருமேனியனுகிப்பூசல்புகவடிக்கே
கடிசேர்கணேகுளிப்பக்கண்டுகோயிற்கருவியில்லா
வடியேபடவமையுங்கணேயென்றவரகுணன்றன்
முடியேதருகழலம்பலத்தாடிதன்மொய்கழலே. (சுஉ)

கழலும்பசுபாசராமிமையோர்தங்கழல்பணிந்திட்
டழலுமிருக்குந்தருக்குடையோரிடப்பால்வலப்பாற்
றழலுந்தமருகமும்பிடித்தாடிசிற்றம்பலத்தைச்
சுழலுமொருகாலிருகால்வரவல்லதோன்றல்களே. (சுஙு)

தோன்றலைவெண்மதிதாங்கியைத்துள்ளியமாலயற்குத்
தான்றலைபாதங்கள்சார்வரியோன்றன்னேச்சார்ந்தவர்க்குத்
தேன்றலையான்பாலதுகலந்தாலன்னசீரனேச்சீர்
வான்றலைநாதனேக்காண்பதென்றேதில்லைமன்றிடையே. (சுச)

மன்றங்கமர்திருச்சிற்றம்பலவவடவனத்து
மின்றங்கிடைக்குந்திருநாடகமாடக்கொல்வெண்டரங்கந்
துன்றங்கிளர்கங்கையானேசுசினத்தீயரவக்
கன்றங்கடைசடைமேலடையாவிட்டதைதவமே. (சுஞ)

தவனேத்தவத்தவர்க்கன்பனேத்தன்னடியெற்குதவுஞ்
சிவனேச்சிவக்கத்திரிபுரத்தைச்சிவந்தானேச்செய்ய
வவனேத்தவளத்திருநீறனேப்பெருநீர்கரந்த
பவனேப்பணியுமிலும்பண்டைவல்வினேபற்றறவே. (சுசு)

பற்றறமுப்புரம்வெந்ததுபைம்பொழிற்றில்லைதன்னுட்
செற்றருமாமணிக்கோயிலினின்றதுதேவர்கணஞ்
சுற்றருகின்புகழேத்தித்திரிவதுசூழ்சடையோய்
புற்றரவாட்டித்திரியுமதுவொருபுல்லனவே. (சுஎ)

புல்லறிவின்மற்றைத்தேவரும்பூம்புலியூருணின்ற
வல்லெறிமாமதிக்கண்ணியனேப்போலருளுவரே
கல்லெறிந்தானுந்தன்வாய்நீர்கதிர்முடிமேலுகுத்த
நல்லறிவாளனுமீளாவழிசென்றுணர்ணினரே. (சுஅ)

நண்ணியதீவினைநாசஞ்செலுத்திநமனுலகத்
தெண்ணினைநீக்கியிமையோருலகத்திருக்கலுற்றீர்
பெண்ணினெர்பாகத்தன்சிற்றம்பலத்துப்பெருநடனைக்
கண்ணினைபார்தரக்கண்டுகையாரத்தொழுமின்களே. (சுக)

கைச்செல்வமெய்திடலாமென்றுபின்சென்றுகண்குழித்தல்
பொய்ச்செல்வர்செய்திடும்புன்மைகட்கேயென்றும்பொன்றலில்
வச்செல்வமெய்திடவேண்டுதியேதில்லையம்பலத்து [லா
ளிச்செல்வன்பாதங்கருதிரந்தேனுன்னையென்னெஞ்சமே. (எ೦)

திருச்சிற்றம்பலம்.



திருச்சிற்றம்பலம்.

நம்பியாண்டார்நம்பி

அருளிச்செய்த

திருத்தொண்டர்திருவந்தாதி.



பொன்னிவடகரைசேர்நாரையூரிற்புழைக்கைமுக
மன்னனறுபத்துமூவர்பதிதேமரபுசெயல்
பன்னவத்தொண்டத்தொகைவகைபல்குமந்தாதிதனைச்
சொன்னமறைக்குலநம்பிபொற்பாதத்துணைதுணையே.

தில்லைவாழந்தணர்.

செப்பத்தகுபுகழ்த்தில்லைப்பதியிற்செழுமறையோ
ரொப்பப்புவனங்கண்மூன்றினுமும்பரினூரெரித்த
வப்பர்க்கமுதத்திருநடர்க்கந்திப்பிறையணிந்த
தப்பர்க்குரிமைத்தொழில்புரிவோர்தமைச்சொல்லுதுமே. (க)

திருநீலகண்டக்குயவநாயனார்.

சொல்லச்சிவன்றிருவாணைதன்னுமொழிதோணசையை
யொல்லைத்துறந்துருமூத்ததற்பின்னுமைகோனருளால்
வில்லைப்புரைநுதலாளொடிளமைபெற்றின்பமிக்காண்
றில்லைத்திருநீலகண்டக்குயவனஞ்செய்தவனே. (உ)

இயற்பகைநாயனார்.

செய்தவர்வேண்டியதியாதுங்கொடுப்பச்சிவன்றவனுய்க்
கைதவம்பேசினின்காதலியைத்தருகென்றலுமே
மைதிகழ்கண்ணியையீந்தவன்வாய்ந்தபெரும்புகழ்வந்
தெய்தியகாவிரிப்பூம்பட்டினத்துளியற்பகையே. (ங)

இளையான்குடிமாறநாயனார்.

இயலாவிடைச்சென்றமாதவற்கின்னமுதாவிதைத்த
வயலார்முளைவித்துவாரிமனையலக்கால்வறுத்துச்
செயலார்பயிர்விழுத்தீங்கறியாக்குமவன்செழுநீர்க்
கயலாரிளையான்குடியுடைமாறனெங்கற்பகமே. (ச)

மெய்ப்பொருணாயனார்.

கற்றநன்மெய்த்தவன்போலொருபொய்த்தவன்காய்சினத்தாற்
செற்றவன்றன்னையவனைச்செறப்புகலுந்திருவாய்
மற்றவன்றத்தாநமரேயெனச்சொல்லிவானுலகம்
பெற்றவன்சேதிபன்மெய்ப்பொருளாமென்றுபேசுவரே. (ஞ)

விறன்மிண்டநாயனார்.

பேசும்பெருமையவ்வாரூரனையும்பிரானவனு
மீசன்றனையும்புறகுதட்டென்றவனீசனுக்கே
நேசனெனக்கும்பிரான்மனேக்கேபுகநீதென்றல்
வீசும்பொழிற்றிருச்செங்குன்றமேயவிறன்மிண்டனே. (சு)

அமர்நீதிநாயனார்.

மிண்டும்பொழிற்பழையாறையமர்நீதிவெண்பொடியின்
மூண்டந்தரித்தபிராற்குகல்லூரின்முன்கோவணநேர்
கொண்டிங்கருளென்றுதன்பெருஞ்செல்வமுந்தன்னையுந்தான்
றுண்டமதிறுதலாளையுமீந்ததொழிலினனே. (எ)

சுந்தாழார்த்தீநாயனார்.

தொழுதும்வணங்கியுமாலயன்றேடருஞ்சோதிசென்றூங்
கெழுதுந்தமிழ்ப்பழவாவணங்காட்டியெனக்குன்குடி
முழுதுமடிமைவந்தாட்செயெனப்பெற்றவன்மூரறே
னெழுகுமலரினற்றூரெம்பிரானம்பியாரூரனே. (அ)

எறிபத்தநாயனார்.

ஊர்மதின்மூன்றட்டவுத்தமற்கென்றூருயர்தவத்தோன்
றூர்மலர்கொய்யாவருபவன்றண்டின்மலர்பறித்த
வூர்மலைமேற்கொளும்பாகருடறுணியாக்குமவ
னேர்மலிமாமதில்சூழ்கருவூரிலெறிபத்தனே. (க)

ஏனாதிநாதநாயனார்.

பத்தனையேனுதிநாதனைப்பார்நீடெயினைதன்னு
ளத்தனைத்தன்னுடமர்மலைந்தானெற்றிநீறுகண்டு
கைத்தனிவாள்வீடொழிந்தவன்கண்டிப்பநின்றருளு
மித்தனையீழக்குலதீபனென்பரிந்நிலத்தே. (கஎ)

கண்ணப்பநாயனார்.

நிலத்திற்றிகழ்திருக்காளத்தியார்திருநெற்றியின்மே
னலத்திற்பொழிதருகண்ணிற்குருதிகண்டுண்ணடுங்கி
வலத்திற்கடுங்கணையாற்றன்மலர்க்கண்ணிடந்தப்பிலுன்
குலத்திற்கிராதனுங்கண்ணப்பனுமென்றுகூறுவரே. (கக)

தண்டியக்கலயநாயனார்.

வெய்ந்தகயிறுதன்கண்டத்திற்பூட்டியெழிற்பணந்தாட்
சாய்ந்தசிவனிலத்தானென்பர்காதலிதாலிகொடுத்
தாய்ந்தற்றுங்குலியங்கொண்டனற்புகைகாலனேமுன்
காய்ந்தவாற்கிட்டதென்கடவூரிற்கலயனேயே. (கஉ)

மானக்கஞ்சாறநாயனார்.

கலசமுலைக்கன்னிகாதற்புதல்விகமழ்குழலே
நலசெய்தவத்தவன்பஞ்சவடிக்கிவைநல்கெனலு
மலசுமெனக்கருதாதவள்கூந்தலரிந்தளித்தான்
மலைசெய்மதிற்கஞ்சைமானக்கஞ்சாறனெனும்வள்ளலே. (கங)

அரிவாட்டாயநாயனார்.

வள்ளற்பிராற்கமுதேந்திவருவோனுகலுமிங்கே
வெள்ளச்சடையாயமுதுசெய்யாவிடிலென்றலையைத்
தள்ளத்தருமென்றுவாட்பூட்டியதடங்கையினன்கா
ணள்ளற்பழனக்கணமங்கலத்தரிவாட்டாயனே. (கச)

ஆனாயநாயனார்.

தாயவன்யாவுக்குந்தாழ்சடைமேற்றனித்திங்கள்வைத்த
தூயவன்பாதந்தொடர்ந்துதொல்சீர்தூளியாற்பரவும்
வேயவன்மேன்மழநாட்டுவிரிபுனன்மங்கலக்கோ
னாயனானாயனென்னையுவந்தாண்டருளினனே. (சஎ)

சுந்தரமூர்த்திநாயனார்.

அருட்டுறையத்தற்கடிமைப்பட்டேனினியல்லனென்னும்
பொருட்டுறையாவதென்னேயென்னவல்லவன்பூங்குவளை
யிருட்டுறைநீர்வயனவற்பதிக்கும்பிரானடைந்தோர்
மருட்டுறைநீக்கிநல்வான்வழிகாட்டிடவல்லவனே. (கசு)

மூர்த்திநாயனார்.

அவந்திரிகுண்டமணுவதின்மாள்வனென்றன்ரூலவாய்ச்
சிவன்றிருமேனிக்குச்செஞ்சந்தனமாச்செழுமுழங்கை [ஞூர்
யுவந்தொளிர்பாறையிற்றேய்த்துலகாண்ட வொண்மூர்த்திதன்
கிவந்தபொன்மாடமதுராபுரியென்னுநீள்பதியே. (கஎ)

முருகநாயனார்.

பதிகந்திகழ்தருபஞ்சாக்கரம்பயிலுவினன்சீர்
மதியஞ்சடையாற்கலர்தொட்டணிபவன்யான்மகிழ்ந்து
துதியங்கழற்சண்பைநாதற்குத்தோழன்வன்ரொண்டனம்பொன்
னதிகம்பெறும்புகலூர்முருகன்னெனுமந்தணனே. (கஅ)

உருத்திரபசுபதிநாயனார்.

அந்தாழ்புனறன்னிலல்லும்பகலுங்கின்ரூதரத்தா
லுந்தாதவன்பொருத்திரஞ்சொல்லிக்கருத்தமைந்த
பைந்தாருருத்திரபசுபதிதன்னற்பதிவயற்கே
நந்தார்திருத்தலூரென்றுரைப்பரிந்நானிலத்தே. (கக)

திருநாளைப்போவார்நாயனார்.

நாவார்புகழ்த்தில்லையம்பலத்தானருள்பெற்றுநாளைப்
போவானவனும்புறத்திருத்தொண்டன்றன்புன்புலைபோய்
மூவாயிரவர்களைகூப்பமுனியாயவன்பதிதான்
மாவார்பொழிறிகழாதனூரென்பரிம்மண்டலத்தே. (உ0)

திருக்குறிப்புத்தொண்டநாயனார்.

மண்டும்புனற்சடையான்றமர்தூசெற்றிவாட்டும்வகை
விண்டுமழைமுகில்வீடாதொழியின்யான்வீவனென்னு
மிண்டம்படர்பாறைமுட்டுமெழிலார்திருக்குறிப்புத்
தொண்டன்குலங்கச்சியேகாலியர்தங்கடொல்குலமே. (உக)

சண்டேசுரநாயனார்.

குலமேறியசேய்ஞலூரிற்குரிசில்குரைகடல்சூழ்
தலமேறியவிறற்சண்டிகண்டீர்தந்தைதாளிரண்டும்
வலமேறியமழுவாலெறிந்தீசன்மணிமுடிமே
னலமேறியபால்சொரிந்தலர்சூட்டியசன்னிதியே. (உஉ)

சுந்தரமூர்த்திநாயனார்.

நியார்தருத்திதென்வேள்விக்குடியாய்நினைமறந்த
மதியேற்கறிகுறிவைத்தபுகர்ப்பின்னைமாற்றிடென்று
தியாவருள்சொன்னவாறறிவாரிடைப்பெற்றவன்கா
னதியார்புனல்வயனலூவலர்கோனென்னுநற்றவனே. (உங)

திருநாவுக்கரசுநாயனார்.

கற்றவனல்லூர்ச்சிவன்றிருப்பாதந்தன்சென்னிவைக்கப்
பெற்றவன்மற்றிப்பிறப்பறவீரட்டர்பெய்கழற்று
ணற்றவனுற்றவிடமடையாரிடவொள்ளமுதாத்
தற்றவனுமூரினுவக்கரசெனுந்தாமணியே. (உச)

மணியினமாமறைக்காட்டுமெருந்தினைவண்மொழியாற்
றிணியனநீள்கதவந்திறப்பித்தனதெண்கடலிற்
பிணியனகன்மிதப்பித்தனசைவப்பெருநெறிக்கே
யணியனநாவுக்கரையர்பிரான்றனருந்தமிழே. (உரு)

தலச்சிறைநாயனார்.

அருந்தமிழாகரன்வாதிலமணைக்கழுதுதிமே
லிருந்தமிழ்நாட்டிடையேற்றுவித்தோனெழிற்சங்கமல்லவத்த

பெருந்தமிழ்மீனவன்றன்ன திகாரிபிரசமல்கு
ருருந்தவிழ்சாரண்மணமேற்குடிமன்குலச்சிறையே. (உக)

பெருமிழலைக்குறும்பநாயனார்.

சிறைநன்புனற்றிருநாவலூராளிசெழுங்கயிலைக்
கிறைநன்கழலேயெய்துமிவனருள்போற்றவின்றே
பிறைநன்முடியனடியடைவேனென்றுடல்பிரிந்தா
னறைநன்மலர்த்தார்மிழலைக்குறும்பனெனுநம்பியே. (உஎ)

காரைக்காலம்மையார்.

ஈம்பன்றிருமலைநான்மிதியேனென்றுதாளிரண்டு
மூம்பர்மிசைத்தலையானடந்தேறவுமைகலுஞ்
செம்பொன்னுருவனென்னம்மையெனப்பெற்றவள்செழுந்தேன்
கொம்பினுருகாரைக்காலினின்மேயகுலதனமே. (உஅ)

அப்பூதியடிகளையனார்.

தனமாவதுதிருநாவுக்கரசின்சரணமென்னு
மனமார்புனற்பந்தர்வாழ்த்திவைத்தாங்கவன்வண்டமிழ்க்கே
யினமாத்தனதுபெயரிடப்பெற்றவனெங்கள்பிரா
னனமார்வயற்றிங்களூரினில்வேதியனப்பூதியே. (உக)

திருநீலநக்கநாயனார்.

பூதிப்புயத்தர்புயத்திற்சிலந்திபுகலுமஞ்சி
யூதித்துமிந்தமனேவியைநீப்பவுப்பாலவெல்லாம்
பேதித்தெழுந்தனகாணென்றுபிஞ்ஞகன்காட்டுமவ
னீதித்திகழ்சாத்தைநீலநக்கன்னெனும்வேதியனே. (உஉ)

நமிநந்தியடிகளையனார்.

வேதமறிக்கரத்தாரூரரற்குவிளக்குநெய்யைத்
நீதுசெறியமண்கையரட்டாவிடத்தெண்புனலா
லேதமறுகவருகென்றன்றுவிளக்கெரித்தா
னுதனெழிலேமப்பேறூரதிபனமிந்தியே. (ஊக)

சுந்தரமூர்த்திநாயனார்.

ஐந்திக்குநம்பெருமாற்குஞல்லாரூரினுயகற்குப்
பந்திப்பரியனசெந்தமிழ்பாடிப்படர்புனலிற்
சிந்திப்பரியனசேவடிபெற்றவன்சேவடியே
வந்திப்பவன்பெயர்வன்றொண்டனென்பரிவ்வையகத்தே. (கூஎ)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

வையமகிழயாம்வாழவமணர்வலிதாலைய
வையன்பிரமபுரத்தரற்கம்மென்குதலைச்செவ்வாய்
பையவிழற்றும்பருவத்துப்பாடப்பருப்பதத்தின்
றையலருள்பெற்றனனென்பர்ஞானசம்பந்தனையே. (கூக)

பந்தார்விரலியர்வேள்செங்கட்சோழன்முருகனல்ல
சந்தாரகலத்துநீலநக்கன்பெயர்தான்மொழிந்து
கொந்தார்சடையர்பதிகத்திலிட்டடியேன்கொடுத்த
வந்தாதிகொண்டபிரானருட்காழியர்கொற்றவனே. (கூச)

ஏயர்கோன்கலிக்காமநாயனார்.

கொற்றத்திறலெந்தைதந்தைதன்றந்தையெங்கூட்டமெல்லாந்
தெற்றச்சடையாய்நினதடியேற்கிழவன்றொண்டனே
மற்றிப்பிணிதவிர்ப்பானென்றுடைவாளுருவியச்சோய்
செற்றுத்தவிர்கலிக்காமன்குடியேயர்சிர்க்குடியே. (கூசு)

திருமூலநாயனார்.

குடிமன்னுசாத்தனூர்க்கோக்குலமேய்ப்போன்குரம்பைபுக்கு
மூடிமன்னுகூனற்பிறையாளன்றன்னைமுழுத்தமிழின்
படிமன்னுவேதத்தின்சொற்படியேபரவிட்டெனுச்சி
யடிமன்னவைத்தபிரான்மூலனுகின்றவங்கணனே. (கூசூ)

தண்டியடிகளாயனார்.

கண்ணார்மணியொன்றுமின்றிக்கயிறுபிடித்தரற்குத்
தண்ணார்புனற்றடந்தொட்டவர்தன்னைநுமமணர்

கண்ணுங்கிழப்பவமணர்கலக்கங்கண்டம்மலர்க்கண்
விண்ணுயகனிடைப்பெற்றவனூர்விறற்றண்டியே. (நஎ)

ழர்க்கநாயனர்.

தண்டலைசூழ்திருவேற்காட்டர்மன்னற்குகவற்றூற்
கொண்டவல்லாயம்வன்சூதரைவென்றுமூன்கொண்டபொருண்
மூண்டுநன்னீற்றனடியவர்க்கீபவன்மூர்க்கனென்பார்
நண்டலைநீரொண்குடந்தையின்மேவுநற்சூதனேயே. (நஅ)

சோமாசிமாறநாயனர்.

சூதப்பொழிலம்பரந்தணன்சோமாசிமாறனென்பான்
வேதப்பொருளஞ்செழுத்தும்விளம்பியல்லான்மொழியா
னீதிப்பரன்மன்னுநித்தநியமன்பரவையென்னு
மாதுக்குக்காந்தன்வன்றொண்டன்றனக்குமகிழ்துணையே. (நக)

சுந்தரமூர்த்திநாயனர்.

துணையுமளவுமில்லாதவன்றன்னருளேதுணையாக்
கணையுங்கதிர்நெடுவேலுங்கறுத்தகயல்லிணையும்
பிணையுங்கர்த்தகட்சங்கிலிபேரமைத்தோளிரண்டு
மணையுமவன்றிருவாரூரனுகின்றவற்புதனே. (ச0)

சாக்கியநாயனர்.

தகடனவாடையன்சாக்கியன்மாக்கற்றடவரையின்
மகடனந்தாக்கக்குழைந்தநிண்டோளர்வண்கம்பர்செம்பொன்
நிகழ்தருமேனியிற்செங்கலெறிந்துசிவபுரத்துப்
புகழ்தரப்புக்கவனூர்சங்கமங்கைபுவனியிலே. (சக)

சிறப்புலிநாயனர்.

புவனியிற்பூதியுஞ்சாதனமும்பொலிவார்ந்துவந்த
தவநியமர்க்குச்சிறப்புச்செய்தற்றுவகாரணனு
மவனியிற்கீர்த்தித்தென்னுக்கூரதிபனருமறையோன்
சிவனியமந்தலைநின்றதொல்சீர்ஞ்சிறப்புலியே. (சஉ)

சிறுத்தொண்டநாயனார்.

புலியின தளைடைப்புண்ணியற்கின்னமுதாத்தனதோ
ரொலியின்சதங்கைக்குதலைப்புதல்வனுடறுணித்துக்
கலியின்வலிகெடுத்தோங்கும்புகழ்ச்சிறுத்தொண்டன்கண்டீர்
மலியும்பொழிலொண்செங்காட்டங்குடியவர்மன்னவனே. (சஙூ)

சோமான்பெருமாணயனார்.

மன்னர்பிரானெதிர்வண்ணனுடலுவரூறிநீரூர்
தன்னர்பிரான்றமர்போலவருதலுந்தான்வணங்க
வென்னர்பிரானடிவண்ணனெனவடிச்சோனென்னுந்
தென்னர்பிரான்கழறிற்றறிவானெனுஞ்சேரலனே. (சசி)

சேரற்குத்தென்னவலர்பெருமாற்குச்சிவனளித்த
வீரக்கடகரிமுன்புதன்பந்தியிவுளிவைத்த
வீரற்குவென்றிக்கருப்புவில்வீரனெவெற்றிகொண்ட
சூரற்கெனதுள்ளநன்றுசெய்தாயின்றுதொண்டுபெட்டே. (சஙி)

கணநாதநாயனார்.

தொண்டரையாக்கியவரவர்க்கேற்றதொழில்கள்செய்வித்
தண்டர்தங்கோனக்கணத்துக்குநாயகம்பெற்றவன்காண்
கொண்டல்கொண்டேறியமின்னுக்குக்கோலமடல்கடொறுங்
கண்டல்வெண்சோறளிக்குங்கடற்காழிக்கணநாதனே. (சஙூ)

கூற்றுவநாயனார்.

நாதன்றிருவடியேமுடியாகக்கவித்துநல்ல
போதங்கருத்திற்பொறித்தமையாலதுகைகொடுப்ப
வோதந்தழுவியஞாலமெல்லாமொருகோலின்வைத்தான்
கோதைநெடுவேற்களப்பாளனுகியகூற்றுவனே. (சஎ)

கூந்தாழார்த்தீநாயனார்.

கூற்றுக்கெவனுபுகறிருவாரூரன்பொன்முடிமே
லேற்றுத்தொடையலுமின்னடைக்காயுமிதருமக்

கோற்றொத்துகூனனுங்கூன்போய்க்குருடனுங்கண்பெற்றமை
சாற்றித்திரியும்பழமொழியாயித்தாணியிலே. (சஅ)

பொய்யடிமையில்லாதபுலவர்.

தாணியிற்பொய்ம்மையிலாத்தமிழ்ச்சங்கமதிற்கபிலர்
பாணர்கக்கீரர்முதனூற்பத்தொன்பதுபல்புலவோ
ரருணமக்கீயுந்திருவாலவாயான்சேவடிக்கே
பொருளமைத்தின்பக்கவிபலபாடும்புலவர்களே. (சக)

புகழ்ச்சோழநாயனார்.

புலமன்னியமன்னைச்சிங்களராடுபொடிபடுத்த
குலமன்னியபுகழ்க்கோகனாதன்குலமுதலோ
னலமன்னியபுகழ்ச்சோழனதென்பர்குசுடர்வாள்
வலமன்னியவெறிபத்தனுக்கீந்ததொர்வண்புகழே. (சO)

நாசிங்கமுனையரையநாயனார்.

புகழும்படியெம்பரமேதவர்க்குநற்பொன்னிடுவோ
னிகழும்படியோர்தவன்மடவார்புனைகோலமெங்கு
நிகழும்படிகண்டவனுக்கிரட்டிபொன்னிட்டவனீ
டிகழமுடிசாசிங்கமுனையரசன்றிறமே. (சக)

அதிபத்தநாயனார்.

திறமமர்மீன்படுக்கும்பொழுதாங்கொருமீன்சிவற்கென்
றுறவமர்மாகடற்கேவிடுவோனொருநாட்கனக
சிறமமர்மீன்படினின்மலற்கென்றுவிட்டோன்கமலம்
புறமமர்நாகையதிபத்தனுகியபொய்யிலியே. (சஉ)

கலிக்கம்பநாயனார்.

பொய்யைக்கடிந்தநம்புண்ணியர்க்காட்பட்டுத்தன்னடியான்
சைவத்திருவுருவாய்வரத்தானவன்றுன்கழுவ
வையத்தவர்முன்புவெள்கிநீர்வாராவிடமனைவி
கையைத்தடிந்தவன்பெண்ணுடகத்துக்கலிக்கம்பனே. (சங)

கலியநாயனார்.

கம்பக்கரிக்குஞ்சிலந்திக்குநல்கியகண்ணுதலோ
னும்பர்க்குராதற்கொளிவிளக்கேற்றற்குடலிலனுய்க்
கும்பத்தயிலம்விற்றுஞ்செக்குழன்றுங்கொள்கூலியினு
னம்பற்கெரித்தகலியொற்றிமாநகர்ச்சக்கிரியே. (இச)

சத்திநாயனார்.

கிரிவில்லவர்தம்மடியரைத்தன்முன்புகீழ்மைசொன்ன
திருவில்லவரையங்காவரிவோன்றிருந்தாரைவெல்லும்
வரிவில்லவன்வயற்செங்கழுநீரின்மருவுதென்ற
றெருவில்விரைகமழுந்தென்வரிஞ்சைத்திகழ்சத்தியே. (இடி)

ஐயடிகள்காடவர்கோனயனார்.

சத்தித்தடக்கைக்குமரனற்றூதைதன்னுனமெல்லா
மூத்திப்பதமொரொர்வெண்பாமொழிந்துமுடியாசா
மத்திற்குமும்மைநன்றூலரற்காயையமேற்றலென்னும்
பத்திக்கடலேயடிகளாகின்றநம்பல்லவனே. (இசு)

சுந்தாழர்த்திநாயனார்.

பல்லவைசெங்கதிரோனேப்பறித்தவன்பாதம்புகழ்
சொல்லவன்றென்புகலூரான்பாற்றுய்யசெம்பொன்கொள்ள
வல்லவனுட்டியத்தான்குடிமாணிக்கவண்ணனுக்கு
கல்லவன்றன்பதிகாவலூராகின்றநன்னகரே. (இஎ)

கணம்புல்லநாயனார்.

கன்னகராயவிருக்குவேளூர்தனினல்குரவாய்ப்
பொன்னகராயநற்றில்லேபுகுந்துபுலீச்சரத்து
மன்னவராயவரற்குநற்புல்லால்விளக்கெரித்தான்
கன்னவிரூளெந்தைதந்தைபிரானெங்கணம்புல்லனே. (இக)

காரிநாயனார்.

புல்லனவாகாவகையுலகத்துப்புணர்ந்தனவுஞ்
சொல்லினவுந்நயமாக்கிச்சுடர்பொற்குவடுதனி
வில்லனவாழ்த்திவிளங்குங்கயிலைபுக்கானென்பராற்
கல்லனமாமதில்சூழ்கடவூரினிற்காரியையே. (நக)

நெடுமாறநாயனார்.

கார்த்தண்முகிற்கைக்கடற்காழியர்பெருமாற்கெதிரா
யார்த்தவமணரழிந்ததுகண்டுமற்றுங்கவரைக்
கூர்த்தகழுவினுதிவைத்தபஞ்சவனென்றுரைக்கும்
வார்த்தையதுபண்டுநெல்வேலியில்வென்றமாறனுக்கே. (சஅ)

வாயிலார்நாயனார்.

மாறுவருளரன்றன்னேமனவாலயத்திருத்தி
யாறுவறிவாமொளிவிளக்கேற்றியகமலர்வாம்
வீறுமலரளித்தன்பெனுமெய்யமிர்தங்கொடுத்தான்
வீரூர்மயிலையுள்வாயிலானென்றுவிளம்புவரே. (சக)

முனையடுவார்நாயனார்.

என்றுவிளம்புவர்நீரேதிபன்முனையடுவோ
னென்றுமமருளழிந்தவர்க்காக்கூலியேற்றெறிந்து
வென்றுபெருஞ்செல்வமெல்லாங்கனகான்மேருவென்னுங்
குன்றுவளைத்தசிலையான்றமர்க்குக்கொடுத்தனனே. (சஉ)

சுந்தாமூர்த்திநாயனார்.

கொடுத்தான்மூதலிகொள்பிள்ளைக்குயிரன்றுபுக்கொளியூர்த்
தொடுத்தான்மதுரகவியவிநாசியைவேடர்சுற்றம்
படுத்தான்றிருமுருகன்பூண்டியினிற்பராபரத்தேன்
மடுத்தானவனெண்பர்வன்றொண்டனுகின்றமாதவனே. (சங)

கழற்சிங்கநாயனார்.

மாதவத்தோர் தங்கள்வைப்பினுக்காரூர்மணிக்குவைத்த
போதினைத்தான்மோந்ததேவிதன்மூக்கையரியப்பொற்கை
காதிவைத்தன்றேவரிவதென்றுங்கவள்கைதடிந்தா
ஞதமொய்த்தார்வண்டுகிண்டுபைங்கோதைக்கழற்சிங்கனே. (சுச)

இடங்கழிநாயனார்.

சிங்கத்துருவனேச்செற்றவன்சிற்றம்பலமுகடு
கொங்கிற்கனகமணிந்தவாதித்தன்குலமுதலோன்
றிங்கட்சடையர்தமரதென்செல்வமெனப்பறைபோக்
கெங்கட்கிறைவனிருக்குவேளூர்மன்னிடங்கழியே. (சுடி)

செருத்துணைநாயனார்.

கழிநீள்கடனஞ்சயின்றூர்க்கிருந்தகடிமலரை
மொழிநீள்புகழ்க்கழற்சிங்கன்றன்றேவிமுன்மோத்தலுமே
யெழினீள்குமிழ்மலர்மூக்கரிந்தானென்றியம்புவராற்
செழுநீர்மருகனன்னுட்டமர்தஞ்சைச்செருத்துணையே. (சுக)

புகழ்த்துணைநாயனார்.

செருவிலிபுத்தூர்ப்புகழ்த்துணைவையஞ்சிறுவிலத்தா
லுருவலிகெட்டுணைவின்றியுமைகோனமஞ்சனஞ்செய்
தருவதோர்போதுகைசோர்ந்துகலசம்விழுத்தரியா
தருவரைவில்லியருளுநிதியதுபெற்றனனே. (சுஎ)

கோட்புலிநாயனார்.

பெற்றமுயர்த்தோன்விரையாக்கலிபிழைத்தோர்தமது
சுற்றமறுக்குந்தொழிற்றிருநாட்டியத்தான்குடிக்கோன்
குற்றமறுக்குநங்கோட்புலிநாவற்குரிசிலருள்
பெற்றவருட்கடலென்றுலகேத்தும்பெருந்தகையே. (சுஅ)

சுந்தரமூர்த்திநாயனார்.

தகுமகட்பேசிஞான்வீயவேநூல்போனசங்கிலிபாற்
புகுமணக்காதலிலொற்றியூருறைபுண்ணியன்றன்
மிகுமலர்ப்பாதம்பணிக்தருளாலிவ்வியனுலக
நகும்வழக்கேநன்மையாப்புணர்ந்தாலுவலூரரசே. (அக)

பத்தராய்ப்பணிவார்கள்.

அரசினையாரூரமர்பிரானையடிபணிந்திட்
டுலரசெய்தவாய்தடுமாறியுரோமபுளகம்வந்து
கரசரணதியவயவங்கம்பித்துக்கண்ணருவி
சொரிதருமங்கத்திலெர்பத்தரென்றுதொகுத்தவரே. (எ0)

பரமனையேபாடுவார்.

தொகுத்தவடமொழிதென்மொழியாதொன்றுதோன்றியதே
மிகுத்தவியலிசைவல்லவகையில்விண்டோயுநெற்றி
வகுத்தமதிற்றில்லையம்பலத்தான்மலர்ப்பாதங்கண்மே
லுகுத்தமனத்தொடும்பாடவல்லோரொன்பருத்தமரே. (எக)

சீத்தத்தைச்சிவன்பாலேவைத்தார்.

உத்தமத்தானத்தறம்பொருளின்பமொடியெறிந்து
வித்தகத்தானத்தொருவழிக்கொண்டுவிளங்கச்சென்னி
மத்தம்வைத்தான்றிருப்பாதகமலமலரிணைக்கீழ்ச்
சித்தம்வைத்தாரென்பர்வீடுபேறெய்தியசெல்வர்களே. (எஉ)

திருவாரூர்ப்பிறந்தார்கள்.

செல்வர்திகழ்திருவாரூர்மதில்வட்டத்துட்பிறந்தார்
செல்வன்றிருக்கணத்துள்ளவரேயதனுற்றிகழச்
செல்வம்பெருகுதென்னூர்ப்பிறந்தவர்சேவடியே
செல்வநெறியுறுவார்க்கணித்தாயசெழுநெறியே. (எஊ)

முப்பொழுதுந்திருமேனிதீண்டுவார்.

நெறிவார்சடையரைத்தீண்டிமுப்போதுநீடாகமத்தி
னறிவால்வணங்கியர்ச்சிப்பவர்நம்மையுமாண்டமரர்க்
கிறையாய்முக்கண்ணுமெண்டோளுந்தரித்தீரில்செல்வத்தொடு
மூறைவார்சிவபெருமாற்குறைவாயவுலகினிலே. (எச)

முழுநீறுபூசியமுனிவர்.

உலகுகலங்கினுமூழிதிரியினுமுள்ளொருகால்
விலகுதலில்லாவியதுபெற்றநல்வித்தகர்கா
ணிலகில்பெருங்குணத்தாரூரமர்ந்தவரனடிக்கீ
ழிலகுவெண்ணீறுதம்மேனிக்கணியுமிறைவர்களே. (எடி)

அப்பாலுமடிச்சார்ந்தார்.

வருக்கமடைத்துநன்னூவலூர்மன்னவன்வண்டமிழாற்
பெருக்குமதுரத்தொகையிற்பிறைசூடிபெய்கழற்சே
யொருக்குமனத்தொடப்பாலடிச்சார்ந்தவரென்றுலகிற்
றெரிக்குமவர்சிவன்பல்கணத்தோர்நஞ்செழுந்தவரே. (எசு)

சுந்தரமூர்த்திநாயனார்.

செழுநீர்வயன்மூதுகுன்றினிற்செந்தமிழ்பாடிவெய்ய
மழுநீடடக்கையனீந்தபொன்னுக்குக்கொள்ளாதுவந்தப்
பொழிநீடருதிருவாரூரில்வாசியும்பொன்னுங்கொண்டோன்
கெழுநீள்புகழ்த்திருவாரூரனென்றுநாங்கேட்பதுவே. (எஎ)

பூசலார்நாயனார்.

பதுமநற்போதன்னபாதத்தரற்கொருகோயிலையான்
கதுமெனச்செய்குவதென்றுகொலாமென்றுகண்டுயிலா
ததுமனத்தேயெல்லிதோறுநினைந்தருள்பெற்றதென்பர்
புதுமணத்தென்றலுலாவின்றவூர்தனிற்பூசலையே. (எஅ)

மங்கையர்க்கரசியார்.

பூசலயிற்றென்னனூர்க்கனலாகப்பொருமையினால்
வாசமலர்க்குழற்பாண்டிமாதேவியாமானிகண்டீர்
தேசம்விளங்கத்தமிழாகரர்க்கறிவித்தவரா
ஞசம்வினைத்தாளருகந்தருக்குத்தென்னூட்டகத்தே. (எசு)

நேசநாயனூர்.

நாட்டமிட்டன்றரிவந்திப்பவெல்படைநல்கினர்தந்
தாட்டரிக்கப்பெற்றவனென்பர்சைவத்தவரையிற்
கூட்டமெக்கப்படங்கோவணநெய்துகொடித்துநன்மை
மீட்டமெக்காம்மீலிச்சாலியநேசனேயிம்மையிலே. (அ0)

கோச்செங்கட்சோழநாயனூர்.

மைவைத்தகண்டனெறியன்றிமற்றோர்நெறிசருதாத்
தெய்வக்குடிச்சோழன்முன்புசிலந்தியாய்ப்பந்தர்செய்து
சைவத்தருவெய்திவந்துதரணிநீடாலயங்கள்
செய்வித்தவன்றிருக்கோச்செங்கணனெனுஞ்செம்பியனே. (அக)

செம்பொனணிந்துசிற்றம்பலத்தைச்சிவலோகமெய்தி
நம்பன்கழற்கீழிருந்தோன்குலமுதலென்பர்நல்ல
வம்புமலர்த்தில்லையீசனேச்சூழமறைவளர்த்தா
னிம்பரறுந்தெங்கற்கோச்செங்கணனெனுநித்தனேயே. (அஉ)

திருநீலகண்டயாழ்ப்பாணநாயனூர்.

தனேயொப்பருமெருக்கத்தம்புலியூர்த்தகும்புகழோ
னினேயொப்பருந்திருநீலகண்டப்பெரும்பாணனீள்
சினேயொப்பலர்பொழிற்சண்பையர்கோன்செந்தமிழொடிசை
புனேயப்பரனருள்பெற்றவனென்பரிப்பூதலத்தே. (அக)

சடையநாயனூர்.

தலம்விளங்குந்திருநாவலூர்தன்னிற்சடையனென்னுங்
குலம்விளங்கும்புகழோனேயுரைப்பர்குவலயத்தி

னலம்விளங்கும்படிநாம்விளங்கும்படிநற்றவத்தின்
பலம்விளங்கும்படியாரூரனேமுன்பயந்தமையே. (அச)

இசைஞானியார்.

பயந்தாள்கறுவுடைச்செங்கண்வெள்ளைப்பொள்ளநீள்பனைக்கைக்
கயந்தானுகைத்தநற்காளையையென்றுங்கபாலங்கைக்கொண்
டயந்தான்புகுமரனூரர்புனிதவரன்றிருத்தா
ணையந்தாடனதுள்ளத்தென்றுமுரைப்பதுஞானியையே. (அடி)

சுந்தரமூர்த்திநாயனார்.

ஞானவாரூரரைச்சேரரையல்லதுகாமறியோ
மானவவாக்கையொடும்புக்கவரைவளரொளிப்பூண்
வானவராலுமருவற்கரியவடகயிலைக்
கோனவன்கோயிற்பெருந்தவத்தோர்தங்கள்கூட்டத்திலே. (அசு)

திருத்தொண்டத்தொகையிலுள்ள
கூட்டவடியார்கள், தனியடியார்கள்.

கூட்டமொன்பானெடுபத்துமூன்றுதனிப்பெயரா
வீட்டும்பெருந்தவத்தோரெழுபத்திரண்டாம்வினையை
வாட்டுந்தவத்திருத்தொண்டத்தொகைபதிஞென்றின்வகைப்
பாட்டுந்திகழ்திருநாவலூராளிபணித்தனனே. (அஎ)

திருத்தொண்டத் தொகைப்பதிகக்
கவிகளின் முதற்குறிப்பு.

பணித்தநற்றொண்டத்தொகைமுதற்றில்லையிலைமலிந்த
வணித்திகழ்மும்மைதிருநின்றவம்பரூர்வார்கொண்டீசீ
ரினைத்தநற்பொய்யடிமைகறைக்கண்டன்கடல்சூழ்ந்தபின்
மணித்திகழ்சொற்பதத்தர்மன்னியசீர்மறைநாவனையே. (அஅ)

நூற்பயன்.

ஓடிடும்பஞ்சேந்திரியமொடுக்கியென்னூழ்வினைகள்
ஓடிடும்வண்ணநின்றெத்தவஞ்செய்தனன்வானினுள்ளோர்
சூடிடுஞ்சீர்த்திருப்பாதத்தர்தொண்டத்தொகையினுள்ள
சேடர்தஞ்செல்வப்பெரும்புகழ்ந்தாதிசெப்பிடவே. (அ)

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

நம்பியாண்டார்நம்பி

அருளிச்செய்த

ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி.

பார்மண்டலத்தினிற்பன்னிருபேரொடுமன்னிநின்ற
நீர்மண்டலப்படப்பைப்பிரமாபுரநீறணிந்த
கார்மண்டலக்கண்டத்தெண்டடந்தோளண்கருணைபெற்ற
தார்மண்டலமணிசம்பந்தன்மேவியதண்பதியே. (க)

பதிகப்பெருவழிகாட்டப்பருப்பதக்கோன்பயந்த
மதியத்திருமுதல்பங்கனருள்பெறவைத்தவெங்க
ணிதியைப்பிரமாபுரநகர்மன்னனெயென்னுடைய
கதியைக்கருதவல்லோரமராவதிகாப்பவரே. (உ)

காப்பயில்காழிக்கவுணியர்தீபற்கென்காரணமா
மாப்பழிவாசாவகையிருப்பேனென்னமாரனென்னே
பூப்பயில்வாளிகளஞ்சுமென்னெஞ்சரங்கப்புகுந்த
வேப்பயில்வார்சிலைகால்வளையாநிற்குமீண்டிரவே. (ங)

இரவும்பகலுநின்பாதத்தலரென்வழிமுழுதும்
பரவும்பரிசேயருளுகண்டாயிந்தப்பாரகத்தே
விரவும்பரமதகோளரியேகுடவெள்வளைக
டாளஞ்சொரியுங்கடல்புடைசூழ்ந்ததராய்மன்னனே. (ச)

மன்னியமோகச்சுவையொளியூறுசைநாற்றமென்றிப்
பன்னியவைந்தின்பதங்கடந்தோர்க்குந்தொடர்வரிய
பொன்னியல்பாடகக்கிங்கிணிப்பாதநிழல்புகுவோர்
துன்னியகாவமர்சண்பையர்நாதற்குத்தொண்டர்களே. (ஙி)

தொண்டினஞ்சூழச்சுரிகுழலார்தம்மனந்தொடர
வண்டினஞ்சூழவருமிவன்போலுமயிலுகுத்த
கண்டினஞ்சூழ்ந்தவளைபிரம்போர்கழுவாவுடலம்
விண்டினஞ்சூழக்கழுவினவாக்கியவித்தகனே. (ஞ)

வித்தகம்பேசிநம்வேணுத்தலைவனேவாணிகர்த்து
முத்தகங்காட்டுமுறுவனல்லார்தமனமணைய
வுய்த்தகம்போந்திருந்துள்ளவுமில்லாதனவுமுறு
புத்தகம்போலுமுதுபுலைப்பாணன்புணர்க்கின்றதே. (ட)

புணர்ந்தநன்மேகச்சிறுநுண்ணெளியிற்சிறகொதுக்கி
யுணர்ந்தனர்போலவிருந்தனையாலுலகம்பரசுங்
குணந்திகழ்ஞானசம்பந்தன்கொடிமதிற்கொச்சையின்வாய்
மணந்தவர்போயினரோசொல்லுவாழிமடக்குருகே. (ண)

குருந்தலர்முல்லையங்கோவலரேற்றின்கொலமருப்பா
லருந்திறலாகத்துழுதசெஞ்சேற்றருகாசனிதன்
பெருந்திறமாமதிற்சண்பைநகரன்னபேரமைத்தோட்
டிருந்திழையார்வம் முரசே. (கூ)

முரசங்கறையமுன்னேரணீடமுழுநிதியின்
பரிசங்கொணர்வானமைகின்றனர்பலர்பார்த்தினிநீ
யரிசங்கணைதலென்னுமுன்கருதருகாசனிதன்
சுரிசங்கணைவயற்றந்தநகரன்னதூமொழிக்கே. (கo)

மொழிவதுசைவசிகாமணிமூரித்தடவரைத்தோ
டொழுவதுமற்றவன்றாமலர்ப்பாதங்கடாமங்கமழ்ந்
தெழுவதுகூந்தலம்பூந்தாமரையினியாதுகொலோ
மொழிவதுசேரி மாதர்முறுவலித்தே. (கச)

வலிகெழுகுண்டர்க்குவைகைக்கரையன்றுவான்கொடுத்த
கலிகெழுதிண்டோட்கவுணியர்தீபன்கடலுடுத்த
வொலிதருநீர்வையகத்தையுறையிட்டதொத்துதிரு
மலிதருவார்பனியாமடமாதினைவாட்டுவதே. (கஉ)

வாட்டுவர்தத்தந்துயரைவன்கேழலின்பின்புசென்ற
வேட்டுவர்கோலத்துவேதத்தலைவனைமெல்விரலாற்
றீட்டியல்காதனிவனென்றுதாதைக்குச்சூழ்விசும்பிற்
காட்டியகன்றின்கழற்றிறமானவைகற்றவரே. (கஙு)

அவர்சென்றணுகுவர்மீள்வதிங்கன்னையருகர்தம்மைத்
தவர்கின்றதண்டமிழ்ச்சைவசிகாமணிசண்பையென்னப்
பவர்கின்றநீள்கொடிக்கோபுரம்பல்கதிரோன்பரியைக்
கவர்கின்றசூலத்தொடுநின்றுதோன்றுங்கடிநகரே. (கசு)

கரங்கெடப்பண்டுதிண்டேர்மிசைநின்றுகான்மறைகள்
பகரங்கழலவனைப்பதிஞாயிரம்பதிக
மகரங்களர்கடல்வையந்துயர்கெடவாய்மொழிந்த
நிகரங்கிலிகலிக்காழிப்பிரானென்பர்நீணிலத்தே. (கஞ)

நிலமேறியமருப்பிற்றிருமாலுநிலம்படைத்த
சூலமேறியமலர்க்கோகனதத்தயனுங்கொழிக்குஞ்
சலமேறியமுடிதாள்கண்டிலர்தந்தைகாணவன்று
கலமேறியபுகழ்ச்சம்பந்தன்சாட்டியனாதனையே. (கரு)

ஞானதனிப்பள்ளிசூழ்நகர்கானகமாக்கியஃதே
போதின்மலிவயலாக்கியகோனமர்பொற்புகலி
யோதநெடுங்கடல்வாருங்கயலோவிலக்குளது
காதினளவுமிளிர்கயலோசொல்லுகாரிகையே. (சன)

கைம்மையினினின்கழல்பரவாதகண்டார்க்கிவளேர்
வன்மையனேயென்னும்வண்ணநடித்துவிழுப்பொருளோ
டிம்மையில்யானெய்துமின்பங்கருதித்திரிதருமத்
தன்மையினேற்குமருளுதியோசொல்லுசம்பந்தனே. (கஅ)

பந்தாரணிவிரற்பங்கயக்கொங்கைப்பவளச்செவ்வாய்க்
கொந்தார்நறுங்குழற்கோமளவல்லியைக்கூறருஞ்சீர்
நந்தாவிளக்கினேக்கண்டதுநானெப்பொழுதுமுன்னுஞ்
சந்தாரகலத்தருகாசனிதன்றடவரையே. (கக)

வரைகொண்டமாமதிற்சண்பைத்தலைவனேவாழ்த்தலர்போ
னிரைகொண்டுவானோர்கடைந்தினஞ்சகிழக்கொலா
நுரைகொண்டுமெய்ப்பரத்துள்ளஞ்சுழலநொந்தோரிரவுந்
திரைகொண்டலமருமிவ்வகன்ஞாலஞ்செறிகடலே. (உ0)

கடலன்னபொய்மைகள்செய்யினும்வெய்யகடுநரகத்
திடநமனேவுதற்கெவ்விடத்தானிருஞ்செந்தமிழாற்
றிடமன்னுமாமதிற்சண்பைத்தலைவன்செந்தாமரையின்
வடமன்னுநீண்முடியானடிப்போதவைவாழ்த்தினமே. (உக)

வாழ்த்துவதெம்பரமேயாகுமந்தத்துவையமுந்நீ
ராழ்த்தியகாலத்துமாழாததுவரன்சேவடியே
யேழ்த்தியஞானசம்பந்தற்கிடமிசைத்தும்பிகொம்பர்க்
காத்திகழ்கேதகம்போதகமீனுங்கழுமலமே. (உஉ)

மலர்பயில்வாட்கண்ணிகேள்கண்ணிநீண்முடிவண்கமலப்
பலர்பயில்கீர்த்திக்கவுணியர்தீபன்பகைவரென்னத்
தலைபயில்பூம்புனங்கொய்திடுமேகணியார்புலம்ப
வலர்பயிலாமுன்பறித்தனமாகிலரும்பினையே. (உங)

அரும்பினவன்பில்லெயர்ச்சனையில்லெயரனெறியே
விரும்பினமாந்தர்க்குமெய்ப்பணிசெய்கிலம்பொய்க்கமைந்த
விரும்பினவுள்ளத்தினேற்கெங்ஙனேவந்துதேர்பட்டதாற்
கரும்பனநீள்வயல்சூழ்காழிநாதன்கழலடியே. (உச)

அடியாலலர்மித்தாலரத்தம்பில்கமிர்தமின்றிக்
கொடியாஞெடும்பின்னடந்தெவ்வாறலர்கோகனகக்
கடியார்நறுங்கண்ணிஞானசம்பந்தன்கருதலர்சேர்
வெடியாவிடுவெம்பரற்சுறாறுவியன்சுரத்தே. (உஙி)

சுரபுரத்தார்தந்துயருக்கிரங்கிச்சுரார்கடங்கள்
பரபுரத்தார்தந்துயர்கண்டருளும்பரமன்மன்னு
மரபுரத்தானடியெய்துவனென்பதவனடிசேர்
சிரபுரத்தானடியாரடியேனென்னுந்திண்ணனவே. (உசு)

திண்ணனவார்சென்றநாட்டிடையில்லைகொறீந்தமிழோர்
கண்ணெனவோங்குங்கவுணியர்தீபன்கைபோற்பொழிந்து
விண்ணினவாய்மூல்லைமெல்லரும்பீனமற்றியாமெலிய
வெண்ணினநாள்வழுவாதிரைத்தோடியெழுமுகிலே. (உஎ)

எழுவாண்மதியால்வெதுப்புண்டலமந்தெழுந்துவிம்மித்
தொழுவாடனக்கின்றருளுங்கொலாந்தொழுசீரைவைகைக்
குழுவாயெதிர்ந்தவுறிகைப்பறிதலைக்குண்டர்தங்கள்
கழுவாவுடலங்கழுவினவாக்கியகற்பகமே. (உஅ)

கற்பாநறவமணிகொழித்துந்துமலைச்சிலம்பா
நற்பாமொழியெழின்ஞானசம்பந்தன்புறவமன்ன
விற்பாறுதலிதன்மென்மூலையின்னிளஞ்செவ்விகண்டிட்
டிற்பாவிடும்வண்ணமெண்ணுகின்றுளம்மவெம்மனேயே. (உக)

எம்மனேயாயெந்தையாயென்னேயாண்டென்றுயர்தவிர்த்த
செம்மலர்நீண்முடிஞானசம்பந்தன்புறவமன்னீர்
வெம்மூனேவேலென்னவென்னமிளிர்ந்துவெளுத்தரிபோன்
றும்மனவோவல்லவோவந்தெனுள்ளத்தெளிர்வனவே. (கூ0)

ஒளிறுமணிப்பணிநாட்டுமுலகத்துமும்பருள்ளும்
வெளிறுபடச்சிலநிற்பதுண்டேமிண்டிமீனுகளு
மளறுவயற்சண்பைநாதனுமுதப்பதிகமென்னுங்
களிறுவிடப்புகுமேற்றொண்டர்பாடுங்கவிதைகளே. (கூக)

கவிக்குத்தகுவனகண்ணுக்கினியனகேட்கிலின்பஞ்
செவிக்குத்தகுவனசிந்தைக்குரியனபைந்தளை
கவிக்கட்சிறுமியர்மூற்றின்முகந்துதஞ்சிற்றிலொறுங்
குவிக்கத்திரைபரக்குங்கொச்சைநாதன்குரைகழலே. (கூஉ)

கழல்கின்றவெங்கணையந்தியுமன்றிலுங்கால்பரப்பிட்
டிழல்கின்றதென்றலும்வந்திங்கடர்ப்பவன்றூயிழைக்காற்
சுழல்கின்றநஞ்சந்தணித்தவன்றன்னைத்தொடர்ந்துபின்போ
யுழல்கின்றநெஞ்சமிங்கென்னேவினியின்றுறுகின்றதே. (கூகூ)

உறுகின்றவன்பிலொடொத்தியதாளமுழுஞ்ஞருகிப்
பெறுகின்றவின்பும்பிறைநுதன்மூண்டமுங்கண்டவரைத்
தெறுகின்றவாறென்னசெய்தவமோவந்தென்சிந்தையுள்ளே
துறுகின்றபாதன்கழுமலம்போலுந்துடியிடைக்கே. (கூச)

இடையுமெழுதாதொழியலுமாயினவண்டுகளின்
புடையுமெழுதிலும்பூங்குழலொக்குமப்பொன்னனையா
ணடையுநகையுந்தமிழாகரன்றன்புகலிநற்றே
ணடையுமொழியுமெழுதிடிற்சாலவதிசயமே. (கூடு)

மேனுட்டமரர்தொழவிருப்பாரும்வினைப்பயன்க
டானாட்டருநரகிற்றளர்வாருந்தமிழர்தங்கள்
கோனுட்டருகர்குழாம்வென்றகொச்சையர்கோன்கமலப்
பூநாட்டடிபணிந்தாருமல்லாதபுலையருமே. (கூசு)

புலையடித்தொண்டனைப்பூசுரனுக்கிப்பொருகயற்கண்
மலைமடப்பாவைக்குமாநடமாடுமணியையென்றன்
றலையிடைப்பாதனைக்கற்றூங்குரைத்தசம்பந்தனென்னு
மூலையிடைப்பொன்கொண்டுசங்கிழந்தாளென்றன்மொய்குழலே.

குழலியலின்கவிஞானசம்பந்தன்குரைகழல்போற்
கழலியல்பாதம்பணிந்தேனுனையுங்கதிரவனே
தழலியல்வெம்மைதணித்தருணீதணியாதவெம்மை
யழலியல்கானடந்தாள்வினையேன்பெற்றவாரணங்கே. (கூஅ)

அணங்கமர்யாழ்முரித்தாண்பனெண்பனையாக்கியமண்
கணங்கழுவேற்றிக்கவிடந்தீர்த்துக்கதவடைத்துப்
பிணங்கலைநீரெதிரோடஞ்செலுத்தினவெண்பிறையோ
டிணங்கியமாடச்சிரபுரத்தான்றனிருந்தமிழே. (ஙூ)

இருந்தண்புகலிகோலக்காவெழிலாவடுதுறைசீர்
பொருந்துமரத்துறைபோனகந்தாளநன்பொன்சிவிகை
யருந்திடவொத்தமுத்தீசையவேறவரனளித்த
பெருந்தகைசீரினையெம்பரமோகின்றுபேசுவதே. (சுO)

பேசுந்தகையதன்றேயின்றுமன்றுந்தமிழ்விரகன்
றேசமுழுதுமழைமறந்தூண்கெடச்செந்தழற்கை
யீசன்றிருவருளாலெழில்வீழிமிழலையின்வாய்க்
காசின்மழைபொழிந்தானென்றிஞ்ஞாலங்கவின்பெறவே. (சுக)

பெறுவதுநிச்சயமஞ்சனெஞ்சேபிரமாபுரத்து
மறுவறுபொற்கழன்ஞானசம்பந்தனேவாழ்த்துதலால்
வெறியுறுகொன்றைமறியுறுசெங்கைவிடையெடுத்த
பொறியுறுபொற்கொடியெம்பெருமானமர்பொன்னுலகே. (சுஉ)

பொன்னார்மதில்சூழ்புகலிக்கரசையருகர்தங்க
டென்னுட்டரணட்டசிங்கத்தினையெஞ்சிவனிவனென்
றந்நாள்குதலைத்திருவாய்மொழிகளருளிச்செய்த
வென்னுனையைப்பணிவார்க்கில்லகாண்கயமாலயமே. (சுங)

மாலையொப்பாகும்பிறைமுன்புகின்றுமணிகுறுக்கு
வேலையைப்பாடணைந்தாங்கெழின்மன்மதன்விற்குனித்த
கோலையெப்போதும்பிடிப்பன்வடுப்படுகொக்கினஞ்சூழ்
சோலையைக்காழித்தலைவன்மலரின்றுசூடிடினே. (சுச)

சூதெற்றூர்த்தமிழாகரன்றன்பொற்சுடர்வரைத்தோள்
கூடுதற்கேசற்றகொம்பினீயுங்கொடும்பகைகின்
ரூடுதற்கேயத்தனைக்குனேயெங்கின்னையாடரவம்
வாடிடக்காருமறுவும்படுகின்றவாண்மதியே. (சுஙி)

மதிக்கத்தகுமுதன்மாதொடுமெங்கண்மலையில்வைகித்
துதிக்கத்தகுசண்பைநாதன்சுருதிகடந்துழவோர்
பதிக்கக்கமலமுகிழ்த்ததண்டேனுண்டுபிண்டிவரால்
குதிக்கக்குருகிரியுங்கொச்சைநாடுருகுமினே. (சக)

குறுமனமுன்கலவாத்தமிழாகரன்கொச்சையன்ன
நறுமலர்மென்குழலாயஞ்சலெம்மூர்நகுமதிசென்
றுறுமனையொண்சுவரோவியக்கிள்ளைக்குறும்பதியிற்
சிறுமிகள்சென்றிருந்தங்கையைநீட்டுவர்சேயிழையே. (சஎ)

இழைவளராகத்துஞானசம்பந்தனிருஞ்சுருதிக்
கழைவளர்குன்றுகடத்தலுங்காண்பீர்கடைசியர்நீண்
முழைவளர்ஈண்டுபடத்தடஞ்சாலிமுத்துக்கிளைக்கு
மழைவளர்நீள்குடிமிப்பொழில்சூழ்ந்தவளவயலே. (சஅ)

வயலார்மருகற்பதிதன்னில்வாளரவாற்கடியுண்
டயலாவிழுந்தவனுக்கிரங்கியறிவழிந்த
கயலார்கருங்கண்ணிதன்றுயர்தீர்த்தகருணைவெள்ளப்
புயலார்தருகையினனென்னைத்தோன்றிடும்புண்ணியமே. (சக)

புண்ணியநாடுபுகுவதற்காகப்புலனடக்கி
யெண்ணியசெய்தொழினிற்பதெல்லாருமின்றியானெனக்கு
நண்ணியசெய்தொழின்ஞானசம்பந்தனேநந்தமர்நீர்க்
கண்ணியன்மாடக்கழுமலத்தானைக்கருதுவதே. (கூ)

கருதத்தவவருளீந்தருண்ஞானசம்பந்தன்சண்பை
யிரதக்கிளிமொழிமாதேகலங்கலிவருடலம்
பொருதக்கழுநிரையாக்குவனுந்தமர்போர்ப்படையேன்
மருதச்சுனையிற்பொதும்பருளேறிமறைகுவனே. (கக)

மறைமுழங்குங்குழலார்கலிகாட்டவயற்கடைஞர்
பறைமுழங்கும்புகலித்தமிழாகரன்பற்றலர்போற்
றுறைமுழங்குங்கரிசீறிமடங்கல்சுடர்ப்பளிங்கி
னறைமுழங்கும்வழிநீவரிற்சாலவரும்பழியே. (கஉ)

பழிக்கேதகுகின்றதின்றிப்பிறைபல்கதிர்விழுந்த
வழிக்கேதிகழ்தருசெக்கரைக்கொச்சைவயவரென்னு
மொழிக்கேவிரும்பிமுளரிக்கலமருமோவியர்தங்
கிழிக்கேதருமுருவத்திவள்வாட்டிடக்கீள்கின்றதே. (நிக)

கீளரிக்குன்றத்தரவமுமிழ்ந்தகிளர்மணியின்
வாளரிக்கும்வைகைமாண்டனரென்பர்வயற்புகலித்
தாளரிக்கும்மரியானருள்பெற்றபரசமய
கோளரிக்குந்நிகராத்தமிழ்நாட்டுள்ளகுண்டர்களே. (நிச)

குண்டகழ்சூழ்தருகொச்சைத்தலைவன்றன்குன்றகஞ்சேர்
வண்டகமென்மலர்வில்லியன்னீர்வரிவிற்புருவக்
கண்டகவாளிபடப்புடைவீழ்செங்கலங்கலொடும்
புண்டகக்கேழல்புகுந்ததுண்டோநுங்கள்பூம்புனத்தே. (நிஞ)

புனத்தெழுகைம்மதக்குன்றமதாயங்கொர்புண்கலையாய்
வனத்தெழுசந்தனப்பைந்தழையாய்வந்துவந்தடியேன்
மனத்தெழுபொற்கழன்ஞானசம்பந்தன்வண்கொச்சையன்ஞள்
கனத்தெழுகொங்கைகளாயல்குலாய்த்திவர்கட்டுரையே. (நிசு)

கட்டதுவேகொண்டுகள்ளுண்டுநுங்கைகளாற்சுணங்கை
யிட்டதுவேயன்றியெட்டனேத்தானிவளுள்ளுறுநோய்
விட்டதுவேயன்றிவெங்குருநாதன்றன்பங்கயத்தின்
மட்டவிழ்தார்கொண்டுசூட்டுமின்பேதைமகிழ்வுறவே. (நிஎ)

உறவும்பொருளுமொண்போகமுங்கல்வியுங்கல்வியுற்ற
துறவுந்துறவிப்பயனுமெனக்குச்சுழிந்தபுனற்
புறவும்பொழிலும்பொழில்சூழ்பொதும்புந்தும்பவண்டி
னறவும்பொழிலெழிற்காழியர்கோன்றிருநாமங்களே. (நிஅ)

காமுகந்தேத்தியஞானசம்பந்தனேநண்ணலர்போ
லேமுகவெஞ்சரஞ்சிந்திவல்லிஞ்சியிடிபடுக்கத்
தீமுகன்தோன்றிகடோன்றத்தளவமுகையரும்பக்
காமுகம்பூமுகங்காட்டிநின்றூர்த்தனகாரினமே. (நிக)

காரங்கணைபொழிற்காழிக்கவுணியர்தீபனல்லூர்ச்
சீரங்கணைநற்பெருமணந்தன்னிற்சிவபுரத்து
வாரங்கணைகொங்கைமாதொடும்புக்குறும்போதுவந்தா
ராரங்கொழிந்தனர்பெற்றதல்லாலவ்வரும்பதமே. (கூ0)

அரும்பதமாக்குமடியரொடஞ்சலித்தார்க்கரிய
பெரும்பதமெய்தலுற்றீர்வந்திறைஞ்சுமின்பேரரவம்
வரும்பதநான்மறைக்காழித்தலைவன்மலர்க்கமலத்
தரும்பதஞானசம்பந்தனென்னுனதன்ரூளிணையே. (கூக)

தாளின்சரணந்தருஞ்சண்பைநாதன்றரியலர்போற்
கீளின்மலங்கவிலங்கேபுகுந்திடுங்கெண்டைகளும்
வாளுந்தொலையமதர்த்திருகாதினளவும்வந்து
மீளுங்கருங்கண்ணிமின்புரியாவைத்தமென்னகையே. (கூஉ)

நகுகின்றமுல்லைநண்ணுரெரிகண்டத்தவர்க்கவர்ந்த
மிருகின்றநன்னிதிகாட்டினகொன்றைவிரவலரூர்
புகுகின்றதீயெனப்பூத்தனதோன்றிபுறவமன்கைத்
தகுகின்றகோடல்களன்பரின்றெய்துவர்கார்மயிலே. (கூங)

மயிலேந்தியவள்ளறன்னையளிப்பமதிபுணர்ந்த
வெயிலேந்தியசண்பைநாதனுலகத்தெதிர்ப்பவர்யார்
குயிலேந்தியபொழிற்கொங்கேந்தியகொம்பினம்புதழீஇ
யயிலேந்தியமலர்கண்டுளனுய்வந்தவண்ணலுக்கே. (கூச)

அண்ணன்மணிவளைத்தோளருகாசனிசண்பையன்ன
பெண்ணினமிர்தநல்லாள்குழலுற்றம்படையொடும்பூஞ்
சுண்ணந்துதைந்தவண்டேகண்டதுண்டுகொறுங்கொலிநீர்த்
தண்ணம்பொழிலெழிற்காசினிபூத்தமென்ரூதுகளே. (கூஙி)

தாதுகற்ரூய்த்தநஞ்சன்னுசியார்சடலம்படித்துத்
தூதையிற்சிக்கங்கரஞ்சேர்த்துவாளாதுலுக்குநின்நீர்
போதியிற்புத்தர்கள்வம்மின்புகலியர்கோனன்னநாட்
காதியிட்டேற்றுங்கழுத்திறம்பாடிக்களித்திடவே. (கூசு)

களியுறுதேன்மூர்க்கவுணியர்தீபன்கருதலர்போல்
வெளியுறுஞாலம்பகலிழந்தால்விரையார்கமலத்
தளியுறுமென்மலர்த்தாதளைந்தாழியமைப்பவருந்
துளியுறுவாடையிதாமடமானைத்துவள்விப்பதே. (சுஎ)

தேறும்புனற்றில்லைச்சிற்றம்பலத்துச்சிறந்துவந்துள்
ளூறுமமிர்தைப்பருகிட்டெழுவதொருட்களிப்புக்
கூறும்வழிமொழிதந்தெனைவாழ்வித்தவன்கொழுந்தே
ஞறுமலங்கற்றமிழாகரனென்னுடன்னிதியே. (சுஅ)

நிதியுறுவாரறனின்பம்வீடெய்துவரென்னவேதந்
துதியுறுநீள்வயற்காழியர்கோனைத்தொழாரினைய
கதியுறுநீர்தெளித்தஞ்சலெனவண்ணலன்றுவெஞ்
மதியுறுவாணுதல்பாதம்பணிந்தனண்மன்னனேயே. (சுகூ)

மன்னங்கனைசெந்தமிழாகரன்வெற்பில்வந்தொருவ
ரன்னங்களஞ்சன்மினென்றடர்வேழத்திடைவிலங்கிப்
பொன்னங்கலசாவகையெடுத்தாற்கிவள்பூணழுந்தி
யின்னந்தழும்புளவாம்பெரும்பாலுமவ்வேந்தலுக்கே. (எ0)

வந்துமுலகுறுவீரொழினீலகக்கற்குமின்பப்
பூந்தண்புகலூர்முருகற்குந்தோழனைப்போகமார்ப்பைக்
காந்துங்கனலிற்குளிர்படுத்துக்கடற்கூடலின்வாய்
வேந்தின்றுயர்தவிர்த்தானெயப்போதும்விரும்புமினே. (எக)

விரும்பும்புதல்வனெமெய்யரிந்தாக்கியவின்னமிர்த
மரும்பும்புனற்சடையாயுண்டருளென்றடிபணிந்த
விரும்பின்சுடர்க்களிற்றுன்சிறுத்தொண்டனையேத்துதிரேற்
சுரும்பின்மலர்த்தமிழாகரன்பாதத்தொடர்வெளிதே. (எஉ)

எளிவந்தவாவெழிற்பூவரைஞாண்மணித்தார்சமுங்கத்
துளிவந்தகண்பிசைந்தேங்கலுமெங்களரன்றுணையாங்
கிளிவந்தசொல்லிபொற்கிண்ணத்தின்ஞானவமிர்தளித்த
வளிவந்தபூங்குஞ்சியின்சொற்சிறுக்கன்றனரருளே. (எங)

அருளுந்தமிழாகரனின்னலங்கறந்தென்பெயரச்
சுருளுங்குழலியற்கீந்திலையேமுன்புதூங்குகரத்
துருளுங்களிற்றினெடோட்டருவானையருளியன்றே
மருளின்மொழிமடவாள்பெயரென்கண்வருவிப்பதே. (எச)

வருவாருருவின்வழிவழிவைத்தவனமருந்துந்
திருவாரிருந்தசெழுங்கர்ச்செவ்வித்திருவடிக்கா
டருவான்றமிழாகரன்கரம்போற்சலம்வீசக்கண்டு
வெருவாவணங்கொண்டல்கண்மிண்டிவானத்துமின்னியவே. ()

மின்னுர்குமிஞெடுவெற்பகங்கொங்கில்வீழ்பனிநோய்
தன்னுர்வழிகெட்டழிந்தமைசொல்லுவர்காணிறையே
மன்னுர்பரிசனத்தோர்மேற்புகலுமெவர்க்குமிக்க
ரன்னவலர்பெருமானருகாசனிகல்கிடவே. (எக)

கல்கென்றடியினிணைபணியார்சண்பைநம்பெருமான்
பல்கும்பெரும்புகழ்பாடகில்லார்சிலர்பாழ்க்கிறைத்திட்
டொல்குமுடம்பினராய்வழிதேடிட்டிடறிமுட்டிப்
பீல்குமிடமறியார்கெடுவாருறுபேய்த்தனமே. (எஎ)

தனமேதருபுகழ்ச்சைவசிகாமணிதன்னருள்போன்
மனமேபுகுந்தமடக்கொடியேமலர்மேலிருந்த
வனமேயமிர்தக்குமுதச்செவ்வாயுங்களாயமென்னு
மினமேபொலியவண்டாடெழிற்சோலையுளெய்துகவே. (எஅ)

உகட்டித்துமோட்டுவராலினமேதிமுலையுரிஞ்ச
வகட்டிற்சொரிபாறடநிறைகொச்சைவயத்தரசைத்
தகட்டிற்றிகழ்மணிப்பூண்டமிழாகரன்றன்னையல்லாற்
பகட்டிற்பொலியினும்வேண்டேனெருவரைப்பாடுதலே. (எக)

பாடியசெந்தமிழாற்பழங்காசுபரிசில்பெற்ற
நீடியசீர்த்திருஞானசம்பந்தனிறைபுகழா
னேடியபூந்திருநாவுக்கரசோடெழின்மிழலைக்
கூடியகூட்டத்தினுளுளதாய்திக்குவலயமே. (அ0)

வலையத்திணிதோண்மிசைமழவேற்றிமனைப்புறத்து
நிலையெத்தனைபொழுதோகண்டுதாரனைநீதிகெட்டார்
குலையக்கழுவின்குழுக்கண்டவன்றிகழ்கொச்சையன்ன
நிலையொத்தவாணுதன்முன்போன்மலர்கதிருக்கண்களே. (அக)

கண்ணூர்திருநுதலோன்கோலக்காவிற்கரகொடியாற்
பண்ணூர்தரப்பாடுசண்பையர்கோன்பாணிகொந்திடுமென்
றெண்ணுவெழுத்தஞ்சுமிட்டபொற்றூளங்களீயக்கண்டு
மண்ணூர்சிலர்சண்பைநாதனேயத்தார்வருந்துவதே. (அஉ)

வருந்துங்கொலாங்கழன்மண்மிசையேகிடினென்றுமென்றூர்த்
திருந்தும்புகழ்ச்சண்பைஞானசம்பந்தற்குச்சீர்மணிகள்
பொருந்துஞ்சிவிகைகொடுத்தனன்காண்புணரித்திகழ்ஞ்
சருந்தும்பிரானம்மரத்துறைமேயவரும்பொருளே. (அங)

பொருளெனவெண்ணெத்தன்பொற்கழல்காட்டிப்புகுந்தெனக்கிங்
கருளியசீர்த்திருஞானசம்பந்தனருளிலர்போல்
வெருளினமானின்மென்னோக்கியைவிட்டெழுநிதியின்
றிரளினையாதரித்தன்னன்றுசாலவென்சிந்தனைக்கே. (அச)

சிந்தையைத்தேனைத்திருவாவடுதுறையுட்டிகழு
மெந்தையைப்பாடலிசைத்துத்தொலையாநியமெய்தித்
தந்தையைத்தீத்தொழின்மூட்டியகோன்சரண்சார்விலரே
னிந்தையைப்பெற்றெழியாதிரந்தேகரீட்டுவரே. (அடு)

ரீட்டுவரோதத்தொடேறியசங்கெருமுளரித்
தோட்டுவெண்முத்தஞ்சொரிசண்பைநாதற்றிருழாதவரில்
வேட்டுவர்வேட்டதண்ணீரினுக்குண்ணீருணக்குழித்த
காட்டுவரூறல்பருகுங்கொலாமெங்கனங்குழையே. (அசு)

குழைக்கின்றகொன்றைபொன்போலமலரநுங்கூட்டமெல்லா
மழைக்கின்றகொண்டலியம்பொன்னிலையன்றூர்வரவு
பிழைக்கின்றதுகொலென்றஞ்சியொண்சண்பைப்பிரான்புறவத்
திழைக்கின்றகூடன்முடியவெண்ணுதவிளங்கொடிக்கே. (அஎ)

கொடித்தேரவுணர்குழாமனலூட்டியகுன்றவில்லி
யடித்தேர்கருத்தினருகாசனியையணியிழையார்
முடித்தேர்கமலங்கவர்வான்முரிபுருவச்சிலையால்
வடித்தேர்நயனக்கணையினேகோத்துவளைத்தனரே. (அஅ)

வளைபடுதண்கடற்கொச்சைவயவன்மலர்க்கழற்கே
வளைபடுநீண்முடிவார்புனலூரன்றனீரிலங்கு
வளைபடுகண்ணியர்தம்பொதுத்தம்பலகாறுமிந்த
வளைபடுகிங்கிணிக்கான்மைந்தன்வாயின்மணிமுத்தமே. (அக)

முத்தனவெண்ணகையார்மயன்மாற்றிமுறைவழுவா
தெத்தனைகாலநின்றேத்துமவரினுமென்பணிந்த
பித்தனையெங்கள்பிரானையினவதெளிதுகண்டீ
ரத்தனைஞானசம்பந்தனைப்பாதமடைந்தவர்க்கே. (கo)

அடைத்தமாமறைக்காடர்தங்கோயிற்கதவினையன்
றுடைத்தபாணன்றன்யாழின்னெலியையுரகவிடங்
துடைத்தநாணியபுரத்துக்கிறைவன்சுடரொளிவாய்
படைத்தமைந்தனைவள்ளாற்பரசுபணித்திடவே. (கக)

பணிபடுநுண்ணிடைபாதம்பொரூபலகாதமென்று
தணிபடுமின்சொற்களாற்றவிர்த்தேற்குத்தழலுமிழ்கான்
மணிபடுபொற்கழன்ஞானசம்பந்தன்மருவலர்போற்
றுணிபடுவேலன்னகண்ணியென்னெஞ்சுதோன்றியதே. (கஉ)

தோன்றறன்னெடுனேகியசுந்தரப்பூண்முலையை
யீன்றவரேயிந்தவேந்திழையாரவரிவ்வளவில்
வான்றவர்சூழ்ந்தமிழாகரன்றன்வடவரையே
போன்றபொன்மாடக்கழுமலநாடுபொருந்துவரே. (கங)

பொருந்திஞானத்தமிழாகரன்பதிபொற்புரிசை
திருந்தியதோணிபுரத்துக்கிறைவன்றிருவருளாற்
கருந்தடநீரெழுகாலியிற்காகூகழுமலமென்
றிருந்திடவாமென்றுவானவராகியியங்கியதே. (கச)

இயலாதனபலசிந்தையராயியலுங்கொலென்று
மூயலாதனவேமுயன்றுவன்மோகச்சுழியழுந்திச்
செயலார்வமைமதிற்காழியர்கோன்றிருநாமங்களுக்
கயலாரெனப்பலகாலங்கள்போக்குவராதர்களே. (கூடு)

ஆதரவும்பயப்பும்மிவளெய்தினளென்றயலார்
மாதரவஞ்சொல்லியென்னைநகுவதுமாமறையி
னோதரவம்பொலிகாழித்தமிழாகரனெடன்றே
தீதரவம்படவன்னையென்னுபலசெப்புவதே. (கூக)

செப்பியவென்னதவமுயன்றேனல்லசெந்தமிழா
லொப்புடைமாலத்தமிழாகரனேயுணர்வுடையோர்
கற்புடைவாய்மொழியேத்தும்படிகதறிட்டிவர
மற்படுதொல்லைக்கடல்புடைசூழ்தருமண்ணிடையே. (கஎ)

மண்ணிற்றிகழ்சண்பைநாதனேவாதினில்வல்லமணப்
பண்ணைக்கழுவினுதிவைத்தெம்பந்தவினையறுக்குங்
கண்ணைக்கதியைத்தமிழாகரனேயெங்கற்பகத்தைத்
திண்ணற்றெருடையற்கவுணியர்தீபனைச்சேர்ந்தனமே. (கூஅ)

சேரும்புகழ்த்திருஞானசம்பந்தனேயானுரைத்த
பேருந்தமிழ்ப்பாவிவைவல்லவர்பெற்றவின்புலகங்
காருந்திருமிடற்றீயருளாயென்றுகைதொழுவர்
நீருமலருங்கொளாகெடுமாலும்பிரமனுமே. (கூக)

பிரமாபுரம்வெங்குருசண்பைதோணிபுகலிகொச்சை
சிரமார்புரநற்புறவந்தராய்காழிவேணுபுரம்
வரமார்பொழிற்றிருஞானசம்பந்தன்பதிக்குமிக்க
பரமார்கழுமலம்பன்னிருநாமமிப்பாரகத்தே. (க00)

பாரகலத்துன்பங்கடந்தமராற்பணியு
மேரகலம்பெற்றுலுமின்னுதாற்—காரகிலின்
றூமங்கமழ்மாடத்தோணிபுரத்தலைவ
னுமஞ்செவிக்கிசையாநாள்.

—o:o:o—

திருச்சிற்றம்பலம்.

நம்பியாண்டார்நம்பி

அருளிச்செய்த

ஆளுடையபிள்ளையார்

திருச்சண்பைவிருத்தம்.

பாலித்தெழிறங்குபார்முகமுய்யப்பறிதலையோர்
மாலுற்றழுந்தவவதரித்தோன்மணிநீர்க்கமலத்
தாலித்தலர்மிசையன்னடப்பவணங்கிதென்னுச்
சாலித்தலைபணிசண்பையர்காவலன்சம்பந்தனே. (க)

கொங்குதங்குங்குஞ்சிகூடாப்பருவத்துக்குன்றவில்லி
பங்குதங்கும்மங்கைதன்னருள்பெற்றவன்பைம்புணரிப்
பொங்குவங்கப்புனல்சேர்த்தபுதுமணப்புன்னையின்கீழ்ச்
சங்குதங்கும்வயற்சண்பையர்காவலன்சம்பந்தனே. (உ)

குவளைக்கருங்கட்கொடியிடைதன்பந்தவிரவன்று
துவளத்தொலிடந்தீர்த்ததமிழின்றொகைசெய்தவன்
றிவளக்கொடிக்குன்றமாளிகைச்சூளிகைச்சென்னியின்வாய்த்
தவளப்பிறைதங்குசண்பையர்காவலன்சம்பந்தனே. (ங)

கள்ளம்பொழினனிபள்ளித்தடங்கடமாக்கியஃதே
வெள்ளம்பணிசெய்தலாக்கியவித்தகன்வெண்குருகு
புள்ளொண்டவளப்புரிசங்கொடாலக்கயலுகளத்
தள்ளந்தடம்புனற்சண்பையர்காவலன்சம்பந்தனே. (ச)

ஆறதேறுஞ்சடையானருண்மேவவவனியர்க்கு
வீறதேறுந்தமிழால்வழிகண்டவன்மென்கிளிமாந்
தேறல்கோதித்தூறுசண்பகந்தாவிச்செழுங்கமுகின்
றூறதேறும்பொழிற்சண்பையர்காவலன்சம்பந்தனே. (ஞ)

அந்தமுந்தும்பிறவித்துயர்தீரவானடிக்கே
பந்தமுந்துந்தமிழ்செய்தபராபரன்பைந்தடத்தேன்
வந்துமுந்திநந்தமுத்தங்கொடுப்பவயற்கயலே
சந்தமுந்தும்பொழிற்சண்பையர்காவலன்சம்பந்தனே. (கூ)

புண்டலைக்குஞ்சரப்போர்வையர்கோயிற்புகவடைக்கு
மொண்டலைத்தண்டமிழ்க்குண்டாசனியும்பர்பம்பிமின்னுங்
கொண்டலைக்கண்டுவண்டாடப்பெடையொடுங்கொக்குறங்குந்
தண்டலைக்குண்டகழ்ச்சண்பையர்காவலன்சம்பந்தனே. (எ)

எண்டலைக்குந்தலைவன்கழல்சூடியெனுள்ளம்வெள்ளங்
கண்டலைப்பத்தன்கழறந்தவன்கதிர்முத்தநத்தம்
விண்டலைப்பத்தியிலோடும்விரவியிளிர்பவளந்
தண்டலைக்குங்கடற்சண்பையர்காவலன்சம்பந்தனே. (அ)

ஆறுமண்டப்பண்டுசெஞ்சொனடாத்தியமண்முழுதும்
பாறுமண்டக்கண்டசைவசிகாமணிபைந்தடத்த
சேறுமண்டச்சங்குசெங்கயறேமாங்கனிசிதறிச்
சாறுமண்டும்வயற்சண்பையர்காவலன்சம்பந்தனே. (கூ)

விடந்திளைக்கும்மரவல்குன்மென்கூந்தல்பெருமணத்தின்
வடந்திளைக்குங்கொங்கைபுல்கியமன்மதன்வண்கதலிக்
கடந்திளைத்துக்கழுநீர்புல்கியொல்கிக்கரும்புரிஞ்சித்
தடந்திளைக்கும்புனற்சண்பையர்காவலன்சம்பந்தனே. (கo)

பாலித்தகொங்குகுவளைகள்ளம்பொழில்கீழ்ப்பரந்து
வாலிப்பவாறதேறுங்கழனிச்சண்பையந்தமுந்து
மேலிட்டபுண்டலைக்குஞ்சரத்தெண்டலைக்குந்தலைவன்
கோலிட்டவாறுவிடந்திளைக்கும்மரவல்குலையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பியாண்டார்நம்பி

அருளிச்செய்த

ஆளுடையபிள்ளையார்

திருமும்மணிக்கோவை.

ஆசிரியப்பா.

திங்கட்கொழுந்தொடுபொங்கரவுதிளைக்குங்
கங்கைப்பேரியாற்றுக்கடவரக்கலுழியி
னிதழியின்செம்பொனிருகரைசிதறிப்
புதலெருக்குமலர்த்தும்புரிபுன்சடையோன்
றிருவருள்பெற்றவிருபிறப்பாளன்
மூத்தீவேள்விநான்மறைவளர
வைவேள்வுயர்த்தவறுதொழிலாள
னேழிசையரசையெண்டிசையறியத்
தண்டப்படுத்ததண்டமிழ்விரகன்
காழிநாடன்கவுணியர்தலைவன்
மாமழைநோக்கிமலைமகள்புதல்வன்
றிருந்தியபாடல்விரும்பினர்க்கல்லது
கடிந்தயருட்புகக்கைவிளிக்கும்மிக்
கெடும்பிறவிக்கடனீந்துவதரிதே. (க)

வெண்பா.

அரியோடொன்முகத்தோனதிசயர்க்கெல்லாந்
தெரியாமைசெந்தழலாய்நின்ற—வொருவன்சீர்
தன்றலையின்மேற்றரித்தசம்பந்தன்றாளிணைக
ளென்றலையின்மேலிருக்கவென்று. (உ)

கட்டளைக்கலித்துறை.

என்றுமடியவருள்ளத்திருப்பனவிவ்வுலகோர்
சென்றுமலர்கொடுசூவித்துதிப்பனநல்லசங்கத்
தொன்றும்புலவர்கள்யாப்புக்குரியனவொண்கலியைப்
பொன்றுங்கவுணியன்சைவசிகாமணிபொன்னடியே. (கூ)

ஆசிரியப்பா.

அடுசினக்கடகரியதுபடவுரித்த
படர்சடைக்கடவுடன்றிருவருளதுற்பிறந்தது
கழுமலமென்னுங்கடிநகரதுவேவளர்ந்தது
தேங்கமழ்வாவிச்சிலம்பரையன்பெறு
பூங்குழன்மாதிடுபோனகமுண்டேபெற்றது
குழகனேப்பாடிக்கோலக்காப்புக்
கழகுடைச்செம்பொற்ருளமவையேதீர்த்தது
தாதமர்மருகற்சடையனேப்பாடிப்
பேதுறுபெண்ணின்கணவனேவிடமேயடைத்த
தரைசோடிசையாவணிமறைக்காட்டிக்
குரைசேர்குடமிக்கொழுமணிக்கதவேயறிற்
றத்தியுமாவுத்தவிரவாத்துறை
முத்தின்சிவிகைமுன்னுட்பெற்றேபாடிற்
றருமறையோத்தூராண்பனேயதனேப்
பெருகிறமெய்தும்பெண்பனேயாவேகொண்டது
பூவிடுமதுவிற்பொறிவண்டுழலு
மாவடுதுறையிற்பொன்னுயிரமேகண்ட
துறியொடுபீலியொருகையிற்கொள்ளும்
பறிதலேச்சமணேப்பல்கழுமிசையேற்ற
தமிழ்ச்சுவையேயறிந்தானடிபரவுந்
தமிழ்ச்சுவையறியாத்தம்பங்களேயேறினந்த
தள்ளற்பழனக்கொள்ளம்பூ
ரிக்கரையோடமக்கரைச்செலவேமிக்கவ

ஞானசம்பந்தமருத்துயக்கொளவல
ஞானசம்பந்தனிஞ்ஞாலத்திடையே. (ச)

வெண்பா.

லத்துக்குமேலாறுநீலகத்துச்சித்
தலத்துக்குமேலேதானென்பர்—சொலத்தக்க
சுத்தர்கள்சேர்காழிச்சுரன்ஞானசம்பந்தன்
பத்தர்கள்போய்வாழும்பதி. (ஞ)

கட்டளைக்கலித்துறை.

பதிகம்பலபாடிநீடியபிள்ளைபாசுதரற்
கதிகம்மணுக்கனமணர்க்குக்காலனவதரித்த
மதியந்தவழ்மாடமாளிகைக்காழியென்றுரல்வணங்கா
மொதியம்பணைபோல்விழுவர்தோசிலஞ்மர்களே. (ட)

ஆசிரியப்பா.

கவளமாளிகைத்திவளுமியானையின்
கவுட்டலக்கும்பத்
தும்பர்ப்பதணத்தம்புதந்திலக்கும்
பெருவளந்தழீஇத்திருவளர்புகலி
விளங்கப்பிறந்தவளங்கொள்சம்பந்தன்
கருதியஞ்செவ்விச்சுருதியஞ்சிலம்பிற்
றேமருதினைவளர்காமருபுனத்து
மும்மதஞ்சொரியும்வெம்முகக்கைம்மா
மூரிமருப்பிற்சீரியமுத்துக்
கொடுஞ்சிலைவளைத்தகொடுஞ்சரந்தாங்கி
முற்படவந்தமுயன்றங்குதவிசெய்
வெற்பனுக்கலது
சுணங்கணிமென்முலைச்சுரிகுழன்மாதினை
மணஞ்செயமதிப்பதாமக்குவன்பதியே. (ஏ)

வெண்பா.

பழியொன்றுமோராதேபாயிடுக்கிவாளா
கழியுஞ்சமண்கையர்தம்மை—யழியத்
தரந்தரங்கச்செற்றுன்சுரும்பரற்றும்பாத
நிரந்தரம்போய்நெஞ்சேநினை. (அ)

கட்டளைக்கலித்துறை

நினையாதரவெய்திமேகலைகெக்குவளைசரிவா
டனையாவவென்றின்றருளுதியேதடஞ்சாலிவயற்
கனையாவருமேதிகன்றுக்கிரங்கித்தன்கால்வழிபா
னனையாவருங்காழிமேவியசீர்ஞானசம்பந்தனே. (கூ)

ஆசிரியப்பா.

தனமலிகமலத்திருவெனுஞ்செல்வி
விருப்பொடுதிளைக்கும்வீயாவின்பத்
தாடகமாடீடுதென்புகலிக்
காமருகவினுர்க்குணியர்தலைவ
பொற்பமர்தோளாற்றமிழ்விரக
மலைமகள்புதல்வகலைபயிலுவனினது
பொங்கொளிமார்பிற்றங்கியதிருரீ
ருதரித்திறைஞ்சியபேதையர்கையில்
வெள்வளைவாங்கிச்செம்பொன்கொடுத்தலிற்
பிள்ளையாவதுதெரிந்ததுபிறர்க்கே. (கo)

வெண்பா.

பிறவியெனும்பொல்லாப்பெருங்கடலைநீந்தத்
துறவியெனுந்தோற்றுணிகண்டீர்—நிறையுலகிற்
பொன்மாலைமார்பன்புனற்காழிச்சம்பந்தன்
றன்மாலைஞானத்தமிழ். (கக)

கட்டளைக்கலித்துறை.

ஞானந்திரளையிலேயுண்டனேயென்றுநாடறியச்
சோனந்தருகுழலார்சொல்லிடாமுன்சுரும்புகட்குப்
பானந்தருபங்கயத்தார்கொடுபடைச்சால்வழியே
கூனந்தருள்வயல்சூழ்காழிமேவியகொற்றவனே. (௧௨)

ஆசிரியப்பா.

அவனிதலநெரியவெதிரெதிர்மலைஇச்
சொரிமதக்களிற்றுமத்தகம்போழ்ந்து
செஞ்சேறுடிச்செல்வனவரியேயெஞ்சாப்
படவரவுச்சிப்பருமணிபிதுங்கப்
பிடரிடைப்பாய்வனபேழ்வாய்ப்புலியேயிடையிடைச்
செறியிருளுருவச்சேண்விசும்பதனிற்
பொறியெனவிழுவனபொங்கொளிமின்னே
யுறுசினவரையாலுந்தியகலுழிக்
கரையாலுழல்வனகரடியின்கணனேயிரையார்
பொருகடலுதைந்தசுரிமுகச்சங்கு
செங்கயல்கிழித்தபங்கயமலரின்
செம்மடனிறையவெண்முத்துதிர்க்கும்
பழனக்கழனிக்கழுமலநாடன்
வைகையிலமணரைவாதுசெய்தறுத்த
சைவசிகாமணிசம்பந்தன்வெற்பிற்
சிறுகிடையவடன்பெருமூலைபுணர்வா
னெறியினில்வரலொழிநீமலையோனே. (௧௩)

வெண்பா.

மலைத்தலங்கண்மீதேதறிமாதவங்கள்செய்து
முலைத்தலங்கணீத்தாலுமூப்பர்—கலைத்தலைவன்
சம்பந்தற்காளாய்த்தடங்காழிகைகூப்பித்
தம்பந்தந்தீராததாம். (௧௪)

கட்டளைக்கலித்துறை.

தாமரைமாதவிசேறியான்முகன்றன்பதிபோற்
காமருசீர்வளர்காழிசண்டகவித்திறத்து
காமருமாதவர்போலழகித்துல்வில்லிபின்னே
நீர்மருவாதசரத்தெங்ஙனேகுமெனேரிழையே. (கஇ)

ஆசிரியப்பா.

இழைகெழுமென்முலையிதழிமென்மலர்கொயத்
தழைவரவொசித்ததடம்பொழிலிதுவேகாமர்
சனைகுடைந்தேதறித்துகிலதுபுனையின்
றெனையுங்கண்டுவெள்கிடமிதுவேதினைதொறும்
பாய்தினியிரியப்பையவந்தேறி
யாயவென்றிருக்குமணிப்பரணிதுவேயீதே
யின்புறுசிறுசொல்லவைபலவியற்றி
யன்புசெய்தென்னையாட்கொளுமிடமேபொன்புரை
தடமலர்க்கமலக்குடியிலிருந்து
நற்றொழில்புரியுமான்முகனுட்டைப்
புற்கடைகழீஇப்பொங்குசராவத்து
நெய்த்துடுப்பெடுத்தமுத்தீப்புகையா
னெடொறுமறைக்குஞ்சேடுறுகாழி
யெண்டிசைநிறைந்ததண்டமிழ்விரக
னலங்கலந்தோங்கும்விலங்கலின்மாட்டுப்
பூம்புனமதனிற்காம்பனதோளி
பஞ்சிற்றிருந்தடிநோவப்போயினை
வஞ்சித்திருந்தமணியறையிதுவே. (கக)

வெண்பா.

வேழங்களெய்பவர்க்குவில்லாகுதிக்கால
மாழங்கடன்முத்தம்வந்தலைக்கு—நீள்வயல்சூழ்

வாய்ந்ததிவண்மாடமதிற்காழிக்கோன்சிலம்பிற்
சாய்ந்ததுவண்டழையோதான். (கஎ)

கட்டளைக்கலித்துறை.

தழைக்கின்றசீர்மிகுஞானசம்பந்தன்றடமலைவா
யணைக்கின்றமஞ்ஞைக்கலந்தனகோடலம்பெய்திவா
னிழைக்கின்றதந்தரத்திந்திரசாபனின்னெண்ணமொன்றும்
பிழைக்கின்றதில்லைநற்றேர்வந்துதோன்றிற்றுப்பெய்வளியே. ()

ஆசிரியப்பா.

வளைகான்மந்திமாமரப்பொந்தில்
விளைதேனுண்டவேணுவின்றுணியாற்
பாறையிற்றுயில்பனைக்கைவேழத்தை
யுந்தியெழுப்புமந்தண்சிலம்பவரீதிங்
கென்னையரிங்குவருவர்பலரே
யன்னைகாணிலலர்தூற்றும்மேபொன்னேர்
சிறுபரற்கரந்தவிளிகுரற்கிங்கிணி
சேவடிபுல்லிச்சில்குரலியற்றி
யழுதுண்செவ்வாயருவிதூங்கத்
தாளம்பிரியாத்தடக்கையசைத்துச்
சிறுகூத்தியற்றிச்சிவனருள்பெற்ற
நற்றமிழ்விரகன்பற்றலர்போல
விடுங்கியமனத்தொடுமொடுங்கியசென்று
பரிதியுங்குடகடற்பாய்ந்தனன்
கருதிநிற்பதுபிழைகங்குலிப்புனத்தே. (கக)

வெண்பா.

தேம்புனமேயுன்னைத்திரிந்துதொழுகின்றேன்
வாம்புகழ்சேர்சம்பந்தன்மாற்றலர்போற்—றேம்பி
யழுதகண்ணுளென்னுதணிமலையர்வந்தாற்
றொழுதகண்ணுளென்றுசொல்லு. (கூ)

கட்டளைக்கலித்துறை.

சொற்செறிநீள்கவிசெய்தன்றுவைகையிற்றொல்லமணர்
பச்செறியாவண்ணங்காத்தசம்பந்தன்பயில்சிலம்பிற்
கற்செறிவார்சுனைநீர்குடைந்தாடுங்கனங்குழையை
யிற்செறியாவணங்காத்திலைவாழியிரும்புனமே. (உக)

ஆசிரியப்பா.

புனலறவறந்தபுன்முளிசுரத்துச்
சினமலிவேடர்செஞ்சரமுரீஇப்
படைலக்குளம்பின்முடுகுநாற்றத்
தாதிமரவினகடுதீயப்
பாதகையின்பஞ்சுரங்கேட்டுக்
கள்ளியங்கவட்டிடைப்பள்ளிகொள்ளும்
பொறிவரிப்புறவேயுறவலகாணீரறைகமழ்
தேம்புனல்வாவித்திருக்கழுமலத்துப்
பையரவசைத்ததெய்வநாயகன்
றன்னருள்பெற்றபொன்னணிக்குன்ற
மானசம்பந்தமண்மிசைத்துறந்த
ஞானசம்பந்தனேயவார்கிளைபோல்
வினையெனிருக்குமனபிரியாத
வஞ்சிமருங்குலஞ்சொற்கிளை
யேதிலன்பின்செலவிலக்காதொழிந்தனை
யாதலிற்புறவேயுறவலீரே. (உஉ)

வெண்பா.

அலைகடலின்மீதோடியந்நாளர்வீசும்
வலைகடலில்வந்தேறுசங்க—மலர்கடலை
வெண்முத்தவிழ்வயல்சூழ்வீங்குபுனற்காழியே
யொண்முத்தமிழ்பயந்தாளூர். (உக)

கட்டளைக்கலித்துறை.

ஊரும்பசும்புரவித்தேரொளித்ததொளிவிசும்பிற்
கூருமிருளொடுகோழிகண்டுஞ்சாகொடுவினையேற்
காருமுணர்ந்திலர்ஞானசம்பந்தனந்தாமரையின்
ரூருந்தருகிலனெங்ஙனம்யான்சங்குதாங்குவதே. (உஅ)

ஆசிரியப்பா.

தேமலிகமலப்பூமலிபடப்பைத்
தலைமுகடேறியிளவெயிற்காயுங்
கவடிச்சிறுகாற்கர்க்கடகத்தைச்
சுவடிச்சியங்குஞ்சுனரிமுதுகைத்
துன்னியெழுந்துசென்னென்மோதுங்
காழிநாட்டுக்கவுணியர்குலத்தை
வாழத்தோன்றியவண்டமிழ்விரகன்
றெண்டிரைக்கடல்வாய்க்
காண்டகுசெவ்விக்களிறுகளுகுத்த
மூட்டைமுன்கவரும்பெட்டையங்குருகே
வாடையடிப்பவைகறைப்போதிற்
றனிநீபோந்துபனிநீரொழுகக்
கூதிக்குளிர்ந்துபேசாதிருந்து
மேனிவெளுத்தகாரணமுரையா
யிங்குத்தணந்தெய்திறுமரு
மின்னம்வந்திலரோசொல்லிளங்குருகே. (உஇ)

வெண்பா.

குருகும்பணிலமுங்கூனந்துஞ்சேலும்
பெருகும்வயற்காழிப்பிள்ளை—யருகந்தர்
மூன்கலங்கஈட்டமுடைகெழுமியாலின்னம்
புன்கலங்கல்வைகைப்புனல். (உக)

கட்டலைக்கலித்துறை.

புனமாமயில்சாயல்கண்டுமுன்போகாகிளிபீரியா
வினமான்விழியொக்குமென்றுவிட்டேகாவிருநிலத்துக்
கனமாமதிற்காழிஞானசம்பந்தன்கடன்மலைவாய்த்
தினைமாதிவள்காக்கவெங்கேவிளையுஞ்செழுங்கதிரே. (உஎ)

ஆசிரியப்பா.

கதிர்மதிதுழையும்படர்சடைமகுடத்
தொருத்தியைக்காந்தவிருத்தனைப்பாடி
முத்தின்சிவிகைமுன்னுட்பெற்ற
வத்தன்காழிநாட்டுறையணங்கோமொய்த்தெழு
தாமரையல்லித்தவிசிடைவளர்ந்த
காமருசெல்வக்கனங்குழையவளோமீமருத்
தருவளர்விசும்பிற்றவநெறிகலக்கு
முருவளர்கொங்கையுருப்பசிதானே
வாருணக்கொம்போமதனன்கொடியோ
வாரணியத்துளருந்தெய்வமதுவோ
வண்டமர்குழலுங்கெண்டையங்கண்ணும்
வஞ்சிமருங்குங்கிஞ்சுகவாயு
மேந்திளமூலையுங்காந்தளங்கையு
மோவியர்தங்களொண்மதிகாட்டும்
வட்டிகைப்பலகைவான்றுகிலிகையா
லியக்குதற்கரியதோருருவுகண்டென்னை
மயக்கவந்துதித்ததோர்வடிவிதுதானே. (உஅ)

வெண்பா.

வடிக்கண்ணியாளையிவ்வான்சுரத்தினூடே
கடிக்கண்ணியாலெங்கண்டோம்—வடிக்கண்ணீர்
மாம்பொழில்சேர்வைகையமண்மலைந்தான்வண்காழிப்
பூம்பொழிலேசேர்ந்திருப்பார்புக்கு. (உக)

கட்டளைக்கலித்துறை.

குருந்துந்தாளமும்போல்வண்ணவெண்ணைகைக்கொய்மலர்தான்
பொருந்துந்திரள்புயத்தண்ணல்சம்பந்தன்பொற்றுமரைக்கா
லிருந்துந்திரள்கொங்கைமங்கையைவாட்டினேவானகத்தே
திருந்துந்திரண்முகின்முந்திவந்தேறுதிங்கட்கொழுந்தே. (ஈ0)

தீருச்சிற்றம்பலம்.

ஓ

திருச்சிற்றம்பலம்.

நம்பியாண்டார்நம்பி

அருளிச்செய்த

ஆளுடையபிள்ளையார் திருவுலாமாலை.

திருந்தியசீர்ச்செந்தாமரைத்தடத்துச்சென்றே
ரிருந்தணிளமேதிபாயப்—பொருந்திய
புள்ளிரியப்பொங்குகயல்வெருவப்பூங்குவளைக்
கள்ளிரியச்செங்கழுநீர்கால்சிதையத்—துள்ளிக்
குருகிரியக்கூனிறவம்பாயக்களிறு
முருகுவிரிபொய்கையின்கண்மூழ்க—வெருவுற்ற
கோட்டகத்துப்பாய்வாளைகண்டலவன்கூசிப்போய்த்
தோட்டகத்தசெந்நெற்றுறையடையச்—சேட்டகத்த
காவிமுகமலரக்கார்நீலங்கண்படுப்ப
வாவிக்கணெய்தலலமர—மேவிய
வண்ணத்துயிலிழப்பவஞ்சிறைசேர்வண்டினங்க
டின்னுந்துணையிழப்பச்சூழ்கிடங்கின்—மன்னிய
வள்ளைகைகாட்டவண்குமுதம்வாய்காட்டத்
தெள்ளுபுனற்பங்கயங்கடேன்காட்ட—மெள்ள
நிலவுமலரணையினின்றிழிந்தசங்க

மிலகுகதிர்நித்திலங்களீன—வுலவிய
மல்லைப்பழனத்துவார்பிரசமீதழிய
வொல்லைவரம்பிடறியோடிப்போய்ப்—புல்லிய
பாசடையச்செங்கெற்படரொளியாற்பல்கதிரோன்
றேசடையவோங்குசெறுவுகளு—மாசினீர்
கித்திலத்தின்சாயுங்கழ்மரகதத்தோலுந்
தொத்தொளிசெம்பொற்றுழிற்பரிய—மொய்த்த
பவளத்தின்செவ்வியும்பாங்கணையவோங்கித்
திவளக்கொடிமருங்கிற்சேர்த்தித்—துவளாமைப்
பட்டாடைகொண்டுடுத்துப்பைந்தோடிலங்குகுழை
யிட்டமைந்தகண்ணுளிளங்கமுகும்—விட்டொளிசேர்
கண்களழல்சிதறிக்காய்சினத்தவாய்மதத்துத்
தண்டலையினீழற்றறியணைந்து—கொண்ட
கொலைபுரியாநிர்மையவாய்க்கொம்புவளைத்தேந்தி
மலையுமரவடிவங்கொண்டாங்—கிலைதெருங்கு
சூதத்திரளுந்தொகுகனிகளானிவந்த
மேதகுசீர்த்தெங்கின்வியன்பொழிலும்—போதுற்
றினமொருங்குசெவ்வியவாயின்றேன்றதும்பு
கனிதெருங்குதிண்கதலிக்காடு—நனிவிளங்கு
நாற்றத்தாலெண்டிசையும்வந்துலவுஞ்சிறப்ப
வூற்றுமடித்தவுயர்பலவு—மாற்றமரு
மஞ்சலெழில்வனமுமாதுலையின்வார்பொழிலு
மிஞ்சியிளங்காவினீட்டமு—மெஞ்சாத
கூந்தற்கமுகுங்குளிர்பாடலத்தெழிலும்
வாய்ந்தசீர்ச்சண்பகத்தின்வண்காடு—மேந்தெழிலார்
மாதவியும்புன்னையுமன்னுமலர்க்குரவுங்
கேதகையுமெங்குங்கெழீஇப்—போதி
னிளந்தென்றல்வந்தசைப்பவெண்டிசையும்வாசம்
வளந்துன்றுவார்பொழிலின்மாடே—யிளந்தெங்கு
மாலையொலியுமரிவார்குரலொலியுஞ்

சோலைக்கிளிமிழற்றுஞ்சொல்லொலியு—மாலு
மறுபதங்களார்ப்பொலியுமான்றபொலிவெய்தி
யுறுதிரைநீர்வேலையொலிப்ப—வெறிகமழு
நந்தாவனத்தியல்புநற்றவத்தோர்சார்விடமு
மந்தமில்சீராரழகினுன்—முந்திப்
புகழ்வாருந்தன்மையதாய்ப்பூதலத்துளோங்கி
நிகழ்விடங்குஞ்சூழ்கிடப்பநேரே—திகழ
மூவாநிரைத்துமூரிச்சிறைவகுத்துமொய்த்த
புளகத்தின்பாம்புரிசூழ்போகி—வளர
வீரும்பதணஞ்சேரவிருத்தியெழுஞ்சின்
மருங்கணையவட்டாலையிட்டுப்—பொருந்தியசீர்த்
தோமரமுந்தொல்லைப்பொறிவீசியந்திரமுங்
காமரமுமெப்பிழையுங்கைகலந்து—மீமருவும்
வெங்கதிரோன்றேர்விலங்குமிக்குயர்ந்தமேருப்போன்
றங்கனகத்திஞ்சியணிபெற்றுப்—பொங்கொளிசேர்
மாளிகையுமன்னியசீர்மண்டபமுமொண்டலத்த
சூளிகையுந்துற்றெழுந்ததெற்றிகளும்—வாளொளிய
நாடகசாலையுநன்பொற்கபோதகஞ்சேர்
பீடமைத்தமாடத்தின்பெற்றியுங்—கேடி
லுருவுபெறவகுத்தவம்பலமுமோங்கு
தெருவுவகுத்தசெய்குன்று—மருவினிய
சித்திரக்காவுஞ்செழும்பொழிலும்வாவிகளு
நித்திலஞ்சேர்நீணிலக்களமு—மெத்திசையுந்
துன்னியெழில்சிறப்பச்சோதிமலர்மடந்தை
மன்னிமகிழ்ந்துறையும்வாய்மைத்தாய்ப்—பொன்னு
மரகதமுநித்திலமுமாமணியும்பேணி
யிரவலர்கட்கெப்போதுமீந்துங்—கரவாது
கற்பகமுங்காருமெனக்கற்றவர்க்குநற்றவர்க்குந்
தப்பாக்கொடைவளர்க்குஞ்சாயாத—செப்பத்தாற்
பொய்ம்மைகடிந்துபுகழ்புரிந்துபூதலத்து

மெய்ம்மைதலைசிறந்துமேதக்கு—முண்மை
மறைபயில்வார்மன்னுவியாகரணக்கேள்வித்
துறைபயில்வார்தொன்னூல்பயில்வார்—முறைமையினு
லாகமங்கள்கேட்பாரருங்கலைநூலாதரித்துப்
போகமொடுங்காப்பொருடெய்ப்பார்—சோகமின்றி
நீதிநிலையுணர்வார்நீணிலத்துளம்புலனுங்
காதல்விடுதவங்கள்காமுறுவா—ராதி
யருங்கலைநூலோதுவாராதரித்துவென்றிக்
கருங்கலியைநீங்கக்கனல்வகுப்பா—ரொருங்கிருந்து
காமநூல்கேட்பார்கலைஞானங்காதலிப்பா
ரோமநூலோதுவாருத்தரிப்பார்—பூமன்னு
ஞான்முகனேயன்னசீர்நாணூற்றுவர்மறையோர்
தாமன்னிவாழுந்தகைமைத்தாய்—நாமன்னு
மாரணங்குமற்றையருந்ததியும்போன்மடவா
ரோரணங்குமாடத்தினிதிருந்து—சீரணங்கு
வீணைபயிற்றுவார்யாழ்பயில்வார்மேவியசீர்ப்
பாணம்பயில்வார்பயனுறுவார்—பேணியசீர்ப்
பூவைக்குப்பாட்டுரைப்பார்பொற்கிளிக்குச்சொற்பயில்வார்
பாவைக்குப்பொன்பூணேந்துபண்புறுவா—ராயெங்கு
மங்கையர்கள்கூட்டமுமன்னுசிரூர்குழுவும்
பொங்குலகமெல்லாம்பொலிவுடையத்—தங்கிய
வேதவொலியும்விழாவொலியுமெல்லியலார்
கீதவொலியுங்கிளர்ந்தோங்கு—மாதரார்
பாவையொலியும்பறையொலியும்பல்சனங்கண்
மேவுமொலியும்வியனகரங்—காவலர்கள்
பம்பைத்துடியொலியும்பௌவப்படையொலியுங்
கம்பக்களிற்றொலியுங்கைகலந்து—நம்பிய
கார்முழக்குமற்றைக்கடன்முழக்கும்போற்கலந்த
சீர்முழக்கமெங்குஞ்செவிடுபடப்—பார்வீளங்கு
செல்வநிறைந்தவூர்சீரிற்றிகழ்ந்தவூர்

மல்குமலர்மடந்தைமன்னுமூர்—சொல்லினிய
ஞாலத்துமிக்கஆர்காணூற்றுவர்களூர்
வேலொத்தகண்ணூர்விளங்குமூ—ராலித்து
மன்னிருகால்வேலிவளர்வெள்ளத்தும்பரொடும்
பன்னிருகானீரின்மிதந்தவூர்—மன்னும்
பிரமனூர்வேணுபுரம்பேரொலிநீர்ச்சண்பை
யரன்மன்னுதண்காழியம்பொற்—சிரபுரம்
பூந்தராய்கொச்சைவயம்வெங்குருப்பொங்குபுனல்
வாய்ந்தகற்றேணிபுரமறையோ—ரேய்ந்த
புகலிகழுமலம்பூம்புறவமென்றிப்
பகர்கின்றபண்பிற்றதாகித்—திகழ்கின்ற
மல்லைச்செழுநகரமன்னவும்வல்லமண
ரொல்லைக்கழுவிலுலக்கவு—மெல்லையிலா
மாதவத்தோர்வாழவும்வையகத்தோரூய்யவு
மேதக்கவானோர்வியப்பவு—மாதியாம்
வென்றிக்கலிகெடவும்வேதத்தொலிமிகவு
மொன்றிச்சிவனடியாரோங்கவுந்—தன்றிய
பன்னுதமிழ்ப்பதிஞரூயிரநற்பனுவன்
மன்னுபுவியவர்க்குவாய்ப்பவு—முன்னிய
சிந்தனையாற்சீராரகவுணியர்க்கோர்சேயென்ன
வந்தங்கவதரித்தவள்ளலை—யந்தமில்சீர்
ஞானச்சுடர்விளக்கைநற்றவத்தோர்கற்பகத்தை
மானமறையவற்றின்வான்பொருளை—யானசீர்த்
தத்துவனித்தனைச்சைவத்தவராசை
வித்தகத்தாலோங்குவிடலையை—முத்தமிழின்
செஞ்சொற்பொருள்பயந்தசிங்கத்தைத்தெவ்வருயி
ரஞ்சத்திகழ்ந்தவடலுருமை—யெஞ்சாமை
யாதிச்சிவனருளாலம்பொன்செய்வட்டிலிற்
கோதிலமிர்தநுகர்குஞ்சரத்தைத்—தீதறுசீர்க்
காலத்தொகுதியுரான்மறையின்காரணமூ

மூலப்பொருளுமுழுதுணர்ந்த—சீலத்
திருஞானசம்பந்தனென்றுலகஞ்சேர்ந்த
வொருநாமத்தாலுயர்ந்தகோவை—வருபெருநீர்ப்
பொன்னிவளநாடனேப்பூம்புகலிநாயகனே
மன்னர்தொழுதிறைஞ்சுமாமணியை—முன்னே
நிலவுமுருகற்குநீலநக்கற்குந்
தொலைவில்புகழ்ச்சிறுத்தொண்டற்குங்—குலவிய
தோழமையாய்த்தொல்லைப்பிறப்பறுத்தசுந்தரனே
மாழையொண்கண்மாதர்மதனனேச்—சூழொளிய
கோதைவேற்றென்னன்றன்கூடற்குலகரில்
வாதிலமணர்வலிதொலையக்—காதலாற்
புண்கெழுவுசெம்புனலாறுடப்பொருதவரை
வண்கழுவிற்றைத்தமறையோனே—யொண்கெழுவு
ஞாலத்தினரறியமன்னுநனிபள்ளியது
பாலதனெய்தலாக்கியுங்—காலத்து
நீரெதிர்ந்துசென்றுநெருப்பிற்குளிர்படைத்தும்
பாரெதிர்ந்தபல்விடங்கடீர்த்துமுன்—னேரெழுந்த
யாழைமுரித்துமிருங்கதவந்தானடைத்துஞ்
சூழ்புனலிலோடத்தொழில்புரிந்தும்—தாழ்பொழில்சூழ்
கொங்கிற்பனிநோய்பரிசனத்தைத்தீர்ப்பித்தும்
துங்கப்புரிசைதொகுமிழலை—யங்கதனி
னீத்தன்செழுங்காசுகொண்டுநிகழ்செல்வாயின்
முத்தின்சிவிகைமுதல்கொண்டு—மத்தகுசீர்
மாயிருஞாலத்துமன்னுவடதுறைபுக்
காயிரஞ்செம்பொனதுகொண்டு—மாய்வரிய
மாண்புதிகழெம்பெருமான்மன்னுதிருவோத்தூரி
லாண்பனைகள்பெண்பனைகளாக்கியும்—பாண்பரிசிற்
கைப்பாணியொத்திக்காழிக்கோலக்காவிற்பொற்
சப்பாணிகொண்டதராதலத்து—ளெப்பொழுது
நீக்கரியவின்பத்திராகமிருக்குக்குற

ணேக்கரியபாசுரம்பல்பத்தோடு—மாக்கரிய
யாழ்முரிசக்கரமாற்றீரடிமுக்காலும்
பாழிமையாற்பாரகத்தோர்தாமுய்ய—ஊழி
யுரைப்பமரும்பல்புகழாலோங்கவுமைகோனைத்
திருப்பதிகம்பாடவல்லசேயை—லிருப்போடு
ணண்ணுபுகழ்மறையோர்சாற்பத்தெண்ணுபிரவ
ரெண்ணின்முனிவரரீட்டத்துப்—பண்ணமரு
மோலக்கத்துள்ளிருப்பவொண்கோயில்வாயிலின்கட்
கோலக்கடைகுறுகிக்கும்பிட்டாங்—காலும்
புகலிவளாகருட்பூசுரர்புக்காங்
கிகலில்புகழ்பரவியேத்திப்—புகலிசேர்
வீதியெழுந்தருளவேண்டுமெனவிண்ணப்ப
மாதரத்தாற்செய்யவவர்க்கருளி—நீதியார்
கேதகையுஞ்சண்பகமுமோங்கிடத்திக்கிழத்தாழ்ந்த
மாதவியின்போதைமருங்கணைத்துக்—கோதி
லிருவேலிதன்னையிடையிருத்தியீண்டு
மருவோடுமல்லிகையைவைத்தாங்—கருகே
கருமுகையைக்ககலக்கவைத்துக்கழுநீர்ப்
பெருகுபிளவிடையேபெய்து—முருகியலும்
புன்னகந்தன்னைப்புணரவிருவாச்சி
தன்னையேமுல்லைதலையெடுப்ப—மன்னிய
வண்செருந்திவாய்நெகிழ்ப்பமௌவலலர்படைப்பத்
தண்குருந்தமாடுதலையிறக்க—வொண்கமலத்
தாதடித்தகண்ணியாற்றண்ணறுங்குஞ்சிமேற்
போதடித்தகோலம்புனைவித்துக்—காதிற்
கனவயிரகுண்டலங்கள்சேர்த்திக்கழுத்தி
னினமணியினாரமிலகப்—புனைகனகத்
தொத்தடித்தபூஞ்சரிகைச்சோதிசேர்தாளிம்பம்
வைத்தமணிக்கண்டிகைபூண்டு—முத்தடித்த
கேயூரந்தோண்மேற்கிடத்திக்கினர்பொன்னின்

வாய்மைபெறுநூல்வலந்திகழ—வேயுந்
தமனியத்தின்முழ்வடமுந்தண்டாளக்கோப்புஞ்
சிமையவரைமார்பிற்சேர்த்தி—யமைவுற்ற
வெண்ணீற்றிருஞெண்களபமட்டித்துமேவுதொழி
லொண்ணூற்கலிங்கமுடல்புனைந்து—திண்ணெக்கிற்
காற்றுருமோகுன்றுகடலோவடவுருமோ
கூற்றுருவோவென்னக்கொதித்தெழுந்து—சீற்றத்
தழல்விழித்துகின்றெதிர்ந்துதாலவட்டம்வீசிப்
புழைதடக்கைகொண்டெறிந்துபொங்கி—மழைமதத்தாற்
பூத்தகடதடத்துப்போகமிகப்பொலிந்த
காத்திரத்ததாகிக்கலித்தெங்குங்—கோத்த
கொடுநிகளம்போக்கிநிமிர்கொண்டெழுந்துகோபித்
திடிவண்டையிட்டுக்கலித்து—முடுகி
நெடுநிலத்தைத்தானுழக்கிநின்றுநிகர்சீத்
திடிபெயரத்தாளந்திலுப்பி—யடுசினத்தாற்
கன்றமுகம்பருகிக்கையெடுத்தாராய்ந்து
வென்றிமருப்புருவவெய்துயிர்த்—தொன்றிய
கூடமரணழித்துக்கோபுரங்களைக்குத்தி
நீடுபொழிலைநிகரழித்—தோடிப்
பணப்பாகரைப்பரிந்துகுத்திப்பறித்த
கிணப்பாகைள்விசும்பின்வீசி—யணைப்பரிய
வோடைக்கருங்களிற்றையொண்பரிக்காரர்கடா
மாடணையக்கொண்டுவருதலுமே—கூடி
நயந்துருமாற்கொடித்துநட்பளித்துச்சென்று
வியந்தணுகிவேட்டந்தணித்தாங்—குயர்ந்த
வுடற்றாயவாசிதனைப்பற்றிமேல்கொண்டாங்
கடற்கூடற்சந்தியணுகி—யடுத்த
பயில்பலவும்பேசிப்படுபுரசைநீக்கி
யயர்வுகெடவணைத்துத்தட்டி—யுயர்தரு
தண்டுபோரோசையின்கட்டாள்கோத்துச்சீர்ச்சிறுத்

தொண்டர்பிறகணையத்தோன்றுதலு—மெண்டிசையும்
பல்சனமுமாவும்படையும்புடைகிள
வொல்லொலியாலோங்குகடல்கிள—மல்லற்
பரித்தூரங்கொட்டப்படுபணிலமார்ப்பக்
கருத்தோடிசைகவிஞர்பாட—விரித்த
குடைபலவுஞ்சாமரையுந்தொங்கல்களுங்கூடிப்
புடைபரந்துபொக்கம்படைப்பக்—கடைபடு
வீதியணுகுதலும்வெள்வளையாருண்மகிழ்ந்து
காதல்பெருகிக்கலந்தெங்குஞ்—சோதிசே
ராடரங்கின்மேலுமணிமாளிகைகளிலுஞ்
